.C A. 153

# அரசியல் உலகில் அண்ணா

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1



பாபு பதிப்பகம்,
168, ஜோன்சு சாலை, சைதை சென்னை-15.

மலிவுப் பதிப்பு:

முதல் பதிப்பு 1973

விலை ரூபாய் 4-00

அச்சிட்டோர்:

அல்லி அச்சகம், காஞ்சிபுரம்-3.

தொலைபேசி: 2970

# முன்னுரை

தமிழகத்தின் தனிப்பெரும் தலைவனும், தமிழர் சமுதாயம் என்றென்றும் மறக்கமுடியாத மாபெரும் மேதையுமான **பேரறிஞர் அண்ணா** அவர்கள் நம்மை எல்லாம் விட்டு சென்று இத்துடன் ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டன. என்றாலும் மனித குலத்தின் மாணிக்கமான அவரின் திருவுருவம் இன்னும் நெஞ்சத்தை விட்டு சிறிதேனும் குறைந்துவிட வில்லை. உருவத்தால் நம்மையெல்லாம் விட்டுச் சென்றாலும் உள்ளத்தால் என்றென்றும் நீங்காத நினைவு பெற்று நிரந்தரமாக வாழ்கின்ற உத்தமராகி விட்டார் அண்ணா அவர்கள்.

அயராமல் உழைத்த அவர் உள்ளம் இன்று அலைகடல் ஓரத்திலே அமைதிபெற்று உறங்கினாலும் தன் எண்ணத்தையும் எழுத்தையும் நமக்களித்து தம்பியர்தம் சேனையினால் தமிழரின் சமுதாயம் நலம் பெறவும், வளம் பெறவும் அவ்வப்பொழுது உணர்வூட்டிக் கொண்டுதான் இருக்கிறது. "இறந்தும் வாழ் கின்றான் இவன் பெற்ற புகழ் இரவாநிலை எய்தில்" என்பதற் கிணங்க அண்ணா அவர்கள் நம்மை விட்டு மறைந்து போனாலும் பெற்ற பெரும் புகழின் காரணமாக அவர் என்றென்றும் நம் இதய உணர்வோடு வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார் அத்தகு அரிய புகழ் படைத்த அமரரின் அருங்குணங்கள் தமிழரின் உளம் நிரப்பும் நறுமணங்கள் அவருடைய கல்லூரி சொற்பொழிவுகள், சட்ட மன்ற சொற்பொழிவுகள், இலக்கிய மன்ற சொற்பொழிவு கள் ஆகியவைகளெல்லாம் இணைத்து இந்நூலுக்கு "அரசியல் உலகில் அண்ணா" என்ற தலைப்பில் வெளியிடுகின்றேன். அதற்கு தங்களது ஆதரவினை எதிர்நோக்கும்,

அன்பன்,

**சி. என். ஏ. பாபு**



# மதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் சீரிய பகுத்தறிவாளர் ஆவார். நமது இயக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே வெகுவாசப் படித்து எதையும் ஆழமாக எழுதவும் பேசவும் செய்வார். அண்ணாவின் ஆழ்ந்த சிந்தனையும், தெளிவும் நாடறிந்த ஒன்றாகும். அவரது கருத்துக்களை அவரது மகன் பாபு அவர்கள் தொகுத்து. இன்றுள்ள இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு நூல் வெளிவருவது குறித்துமிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மனதாரப் பாராட்டுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி

26—12—72

**மு. கருணாநிதி,**
**முதல்வர்.**



சென்னை-9.

அரசியலைப் பற்றி அக்கறையே இல்லாது, அலட்சியப் போக்கில் ஆமைகளாய் அடங்கிக் கிடந்த தமிழக மக்களைத் தட்டி எழுப்பி, அரசியல் தெளிவூட்டி, மக்களாட்சியில் மாண்பினைக் காப்பதில் வழிகாட்டும் உயர்நிலைக்குத் தமிழக மக்களை உயர்த்தியவர் பேரறிஞர் அண்ணா. அரசியல் உலகில் விந்தைகள் பல புரிந்து வெற்றிக் கொடி நாட்டியவர்.

சமுதாயச் சீர்திருத்தமே அரசியல் சீர்திருத்தத்திற்கும் அடிப்படை என்பதைத் தெளிந்து, சமுதாயத்திற்கு விழிப்பூட்டி, அரசியலில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்திப் பொருளாதாரப் புரட்சிக்கு வழிகாணும் ஓர் புதிய அரசையும் அமைத்துச் சென்றார் அண்ணா.

தமிழக அரசியலை என்றென்றும் இயக்கும் சக்தி அண்ணா தான் என்பதை வரலாறு கோடிட்டுக் காட்டுகிறது. மொழி ஆதிக்கத்தை முறியடித்துத் தமிழ் மொழியின் உரிமையைக் காக்கும் இருமொழித் திட்டத்தை நாட்டில் அமுல்படுத்திவிட்டுச் சென்றுவிட்ட அண்ணாவின் அரசியல் சாதனை இந்திய அரசியலில் ஓர் வியத்தகு சாதனையாகும்.

"அரசியல் உலகில் அண்ணா" எனும் நூலை வெளியிட்டு அண்ணாவின் அரசியல் பற்றித் தெளிவுரை தருகிற பாபு பதிப்பகத்தின் முயற்சி வெல்க; அண்ணாவின் அரசியல் நெறி வெல்க; வளர்க; என விரும்பி வேண்டி வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

**மு. கருணாநிதி**

பெறுநர் :

**பாபு பதிப்பகம்,**
*168, ஜோனசு சாலை சென்னை-15.*

ராணி அண்ணாதுரை, M.L.C.,

9. அவன்யு சாலை,
சென்னை-34.

"பாபு பதிப்பகத்தின்" சார்பில் எனது நான்காவது இளைய செல்வன் பாபு தன் தந்தை அவர்கள் அரசியல் உலகில் வழங்கி யிருக்கின்ற அறிவுரைகளை தொகுத்து அவற்றை "அரசியல் உலகில் அண்ணா" என்ற புத்தகமாக வெளியிடுவதில் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி கண்டு உளமார மகிழ்ச்சியடைகிறேன், தமிழ் மரபிற்கும்—தமிழ் மக்களுக்கும் அவர் ஆற்றியிருக்கின்ற அருந்தொண்டுகள் எண்ணிலடங்காதென்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை! அதேபோன்று அரசியல் உலகிலும் அவர் கற்றுத்தந்த பாடங்கள் எத்துணை எத்துணையோ! அவைகளை யெல்லாம் நினைவுபடுத்திக் கொள்ளுகின்ற வகையிலே அவர் ஆற்றியிருக்கின்ற பேருரைகளை தொகுத்து இப்புத்தகத்தில் வெளியிட்டிருப்பதில் பெரிதும் பாராட்டி மகிழ்ச்சியடைகிறேன்.

ராணி அண்ணாதுரை

**இரா. நெடுஞ்செழியன்,**
**கல்வி அமைச்சர்.**



சென்னை-9.

'அரசியல் உலகில் அண்ணா' என்ற தலைப்பில் நூல் வெளியிடப்படுவதறிந்து உவகையெய்துகின்றேன். அறிஞர் அண்ணா அவர்கள், அரசியல், பொருளாதாரம், சமுதாயம் என்னும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய பீடு பெற்றவர். சமுதாயத் துறையில் அறிஞர் அண்ணா அவர்கள், இருபதாம் நூற்றாண்டில் ஆற்றிய தொண்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். தமிழர்கள் தங்கள் மொழியின் தொன்மை மறந்து, பண்பாட்டுச் சிறப்பை உன்னி இரும்பூது கொள்ளாது வீணே வாழ்ந்த வேளையில், தமிழர்தம் பெருமையை உணர்த்தித் தமிழர்கள் தலை நிமிரச் செய்தார். எழுத்தாற்றல், பேச்சுத் திறத்தால் மறுமலர்ச்சியை உருவாக்க, இளைஞர்கள் சமுதாயத்தை எழுச்சி கொள்ளச் செய்து நாட்டை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல வகை கண்டார். அறிஞர் அண்ணா அவர்கள் அமைத்த அரசியல் வழி, அண்ணல் காந்தியடிகளின் நெறியை, முறையைக் கொண்டதாகும். வன்முறை தவிர்த்து, நேரிய அரசியல் கொள்கை வழிச் சென்று, மக்களின் நலம் பேணும் சமதர்ம சமுதாய அமைப்பை உருவாக்கும் உயரிய குறிக்கோளை அடைய வழி கண்டார் அண்ணா. அரசியலில் சகிப்புத் தன்மையையும் மாற்றுக் கருத்துக் கொண்டோரிடம் தனிப்பட்ட பகைமையைக் காட்டாத அன்பு நெறியையும் தமிழக அரசியலில் புகுத்திய பெருந்தகையாளர் அண்ணா.

அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் உலகைத் தெளிவு படுத்திட வெளிவரும் இந்நூல். பயனுள்ள பனுவலாக அமைய வாழ்த்துகிறேன்.

**இரா. நெடுஞ்செழியன்**

பெறுநர் :

**திரு சி. என். ஏ. பாபு,**
சென்னை.

# அமுது

— கவி. வில்லிபுத்தன் —

முத்துக்கு மூத்த முத்தமிழ் உலகின்
முன்விழி திறந்து முழுஒளி வழங்கிய
புத்தம் புதிய பகலவன் போன்ற
புனிதன்! மணித்தமிழ் மன்னவன்! "காஞ்சி"
தத்துவச் செல்வன்! தருமத்தின் பேரொளி!
சரித்திரப் "பெரியார்" உடலுயிர் மூச்சு!
புத்தனைப் போன்றவன்! பொதிகைத் தங்கப்
புதையல்! மக்கள் போற்றும் தலைவன்!
இத்தரை போற்றும் பொதுமறைப் புலவன்,
இலட்சியம் தாங்கிய இலட்சிய வாதி!
கத்துகடல் தரும் முத்தினை யொத்த
கருத்தினை வழங்கிய சொல்லின் கழனி!
முத்தமிழ் நாவலர் பாவலர்! கலைஞர்!
மூதறிவாளர் தம் முதல் முன்னோடி!
மெத்தப் படித்தவன் ஆணவ மில்லா;
மேதையோர் போற்றும் மேதையாம்! மூத்தோன்!
தித்திக்கும் பேச்சு செயலில் அடக்கம்
சொல்லில் பிழைகள் தவழாக் கருத்துக்
கொத்துக் கனிபோல் குலுங்கும் புதுமை
குலுங்கி வழங்கும் அறிவுரை ஆற்றல்!
கத்தியைத் தீட்டும் கயவனைக் கூடப்,
புத்தியைத் தீட்டு! எனப் புகன்றவன்! அவனே!
சத்திய வழியில் கொள்கையை வளர்த்த
தத்துவ ஞானி தமிழகத் தலைமகன்!
உத்தமன் மக்கள் உயிரெனும் கலைவன்!
உலகியல் அனுபவ இலக்கணச் சித்தன்,
சித்தம் முழுதும் தியாகத்தின் ரேகை
திரண்டெழும் கொள்கை அறிவியல் முழக்கம்!
இத்தகு புகழ்மிகு "எங்கள் அண்ணன்"
எழுதிய கருத்தினைப் பொக்கிஷ மாக்கி
முத்தமிழ் நதியில் முழு நீராட்டி
முக்கனித்தோட்டம் தாய்த் திருநாட்டில்
அத்திப்பூ! போல பூத்தது! எழுந்த
"அரசியல் உலகில் அண்ணா!" எனும் பெயர்
முத்திரைசூட வைத்திடும் "பாபு"
பதிப்பகம் வாழி! வாழிய! நாளும்.

# மொழிப் பிரச்சினையில் விழிப்புணர்வு தேவை

## 5—9—60-ல் சென்னை சட்டசபையில் மொழிப் பிரச்சினை பற்றி சி. என். ஏ. ஆற்றிய உரை.

மொழிப் பிரச்சினைபற்றி நம்முடைய சட்டமன்றத்திலே இதற்கு முன்னுல் இரண்டொருமுறை விவாதித்திருந்தபோதிலும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பரபரப்பான நிசழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்ற எதிரொலிகள், இதன்மேல் எழுந்த அரசியல் விவாதங்கள் பொதுமக்கள் உள்ளத்திலும் பரவியிருக்கும் காரணத்தினுல் மொழிப் பிரச்சினை சட்டமன்றத்திலே இப்போது கவனிக்கப்படுவது பொருத்தமானது என்று கருதுகிறேன். அவ்வளவு பொருத்தமான விவாதத்தில் நாங்கள் கலந்து கொள்ளக் கடைசி நேரத்தில் மறுத்துவிடுவார்களோ என்று அச்சப்பட்டேன். ஆனுல் இன்று காலையில் நிதியமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்.

நான் வரவேற்கிறேன் அவர்கள் இதில் கலந்துகொள்வதை என்று. ஆனுல் இதில் எங்கள் கருத்தைச் சொல்வதன்மூலம், எங்கள் பிரிவினைக் கொள்கை விஷயத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்குமோ என்ற எண்ணமும், ஒன்றுபட்ட இந்தியாவை ஆதரிக்கிருேம் என்ற எண்ணமும் தொனிக்கப் பேசினுர்கள். எங்களுடைய கட்சி விஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அக்கறையை நான் நன்றியறிதலோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது எங்கள் மூலாதாரக் கருத்துக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு பார்த்துக்கொள்ள போதுமான திறமை எங்களிடம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு எப்பொழுதாவது எங்கள் திறமையில் குறை ஏற்பட்டால் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் நண்பர் என்ற முறையில் அது சரியல்ல என்று எடுத்துச் சொல்லி எங்கள் கட்சிககு நிதி அமைச்சர் வலியூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

ஏனென்ருல் இந்த மொழிப்பிரச்சினைபற்றிப் பேசும் நேரத்தில் யாரும் ஒளிவு மறைவு இல்லாமல், இந்த ஒரு விஷயத்திலாவது, பேசுவது நல்லதென்று கருதுகிறேன். இந்த மொழிப் பிரச்சினை யில், இன்றையதினம் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளாகக் கவனிக்க வேண்டும். இதில் திராவிட இயக்கத்தை நடத்தும் எங்கள் கட்சிகளுக்கு இருந்திருக்கிற அக்கரையையும் உண்மையிலேயே கூர்ந்து கவனிக்கவேண்டும். காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக ஆவதற்கு முன்னுலேயே, இந்தி தேசிய மொழி, என்று சொல்லி நாட்டில் இந்தி பிரசாரத்தில் நீண்ட காலத்திற்கு முன்னுலேயே இறங்கி, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இந்தியாவுக்கு இந்தியே பொது மொழி; சுயராஜ்யம் அடைந்த பிறகு செய்யப்போகும் முதல் காரியம் அதுவே என்று வலியுறுத்தி வந்திருக்கிருர்கள். அந்த நேரத்திலெல்லாம், நாங்கள் நடத்திவரும் தமிழ் இயக்கமோ, திராவிட இயக்கமோ, இந்திக்குக் கணிசமான எதிர்ப்பினை நடத்தி வந்திருப்பதில் ஒரு ஒருமைப்பாடு இருக் கிறது. 25 ஆண்டுகளாக, காங்கிரஸ் கட்சியிலும் இதில் ஒருமைப் பாடு இருக்கிறது என்ருலும், காலத்திற்குக் காலம், எதிர்ப்புணர்ச் சிக்குத் தக்கபடி மாறுதல் அடைந்திருக்கிறது. மாறுதல் என்று சொல்லும்பொழுது, குறை சொல்லுகிறேன் என்று யாரும் கருத வேண்டாம்; மாறுதல் வளர்ச்சிக்கு அடையாளம், அவர்கள் உலகத்தை அறிந்து கொண்டார்கள் என்பதற்கு அந்த அவர்கள் பண்பினை எடுத்துக் காட்டுகிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியான பிறகு, இந்தி மொழி யைப் பரப்ப ஏற்படுத்திய குழுக்கள் மூன்று, அரசியல் நிர்ணய சட்டசபை ஒன்று; அப்பொழுது அங்கு பேசப்பட்டதையெல்லாம் கனம் நிதியமைச்சர்கள் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன். அதன் பிறகு காங்கிரஸ் (ஒர்க்கிங் கமிட்டி) செயற்குழுவில் தீர்மானித்திருக்கிருர்கள். இன்னென்று இந்திக்கு சாகித்ய சம்மேளனம் என்ற இந்திக் குழுவிலும் செய்திருக்கிருர்கள். ஆகா, மூன்று தனித்தனிக் குழுக்களிலே கவனிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை அரசியல் நிர்ணய சபையிலே வந்த நேரந் திலே, அந்த சபையில் நமது நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்து இருந்திருக்கிருர்கள். அந்த விவாதம் நடைபெற்ற குறிப்பேடு

களை ஆவலோடு படித்துப் பார்த்தேன். விஷயங்கள் சுவையுள்ளது என்பதற்காக மட்டுமல்ல, சூடான விஷயங்களும் அதில் அடங்கி யிருக்கின்றன. அப்பொழுது நம் நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்தார்களே அவர்கள் இந்தியைக் கையாள்வதுப்பற்றி என்ன பேசியிருக்கிறார்கள் என்று துருவித் துருவிப் பார்த்தேன். வருத்தப்பட்டேன்; மிகச் சிக்கலான ஒரு பிரச்சினை விவாதத்திற்கு வந்து உறுப்பினர்கள் தம்கருத்தினை திட்டவட்டமாக எடுத்துச் சொன்னபோது நிதியமைச்சர் ஒருவித கருத்தையும் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள். அதில் நழுவிக் கொண்டார்கள் என்று சொன்னால், அது சரியல்ல என்று சொல்லக்கூடும். ஆனால் மொழிப்பிரச்சினை வரலாற்றில், ஒரு முக்கியமான பாகம் எழுதப் படாமல் போய்விட்டது. என்ன பேசினார்கள் விவாதத்தில்? நடை முறையில் கொண்டு வருவது பற்றி? என்று பார்த்தால் ஒன்றுமில்லை. நடுவே ஒரு விளக்கம் கொடுத்தார்கள் என்பதைத் தவிர.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் ஒரு சமயம் அங்கே முதல் அமைச்சராக இருந்தவர். இன்றையதினம் இந்திய துறைத்தனத்தில் அமைச்சராக இருக்கும் டாக்டர் சுப்பராயன், இவர்கள் எல்லாம் பேசிய நேரத்திலே நமது நிதியமைச்சர் பேசாமல் இருந்ததைப் பார்த்து மிக்க வருத்தப்பட்டேன். (குறுக்கீடு) கௌரவமாக பேசவில்லை என்று சொன்னேன். சான்ஸ் கிடைக்கவில்லை என்று லால்குடி உறுப்பினர் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லத் தேவையில்லை. இந்தச் சிக்கலான முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்ட நேரத்திலே, அவர்கள் காட்டவேண்டிய அக்கறையைக் காட்டாமலே இருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 300 திருத்தங்கள் கொடுக்கப்பட்டு திரு கோபாலசுவாமி ஐயங் கார் கொடுத்த அதிகார பூர்வமான தீர்மானம் விவாதிக்கப்பட்ட நேரத்திலே நம் சட்டசபையிலே விவாதிப்பது போலல்லாமல் திருத்தம் திருத்தமாக விவாதிக்காமல் ஒட்டு மொத்தமாக எல்லாத் திருத்தங்களையும் எடுத்துக் கொண்டு யார் யார் என் னென்ன கருத்தைச் சொல்லவேண்டுமோ அவைகளைப் பேசினார் கள். அப்படி பேசும்போது, தங்கள் தங்கள் தீர்மானங்கள் மீதும் பேசி, எற்படுத்திய ஒரு குழப்பத்தை தவிர, இந்திய துணைக் கண்டத்திற்கு ஆட்சி மொழியாக என்ன மொழி இருக்கவேண்டும் என்ற ஒரு பிரச்சினையில் காட்டப்பட வேண்டிய ஆவல்

செலுத்தப்படவேண்டிய அக்கறை காட்டப்படவில்லை; செலுத்தப் படவில்லை; காட்டப்படவேண்டிய திறமை காட்டப்படவில்லை. இப்பொழுது படித்துப் பார்த்தாலும் நிதியமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். முன்பு ஒருமுறை இந்த சபையில் குறிப்பிட்டேன். இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைத்த காரணத்தால், விடுதலை பெற்றுத்தந்தவர்கள் என்ற விருது பெற்றவர்கள் என்ற எண்ணத்திலும், இந்த நாட்டை நடத்துவதற்கும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்ற எண்ணத்தோடும் அங்கே கூடியிருக்கும் நேரத்திலே ஒருவருக்கொருவர் அன்புரைகளைப் பரிமாறிக் கொள்ளும் பொழுது, எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்காமல் செய்த முடிவுதான் இந்த இந்தி ஆட்சி மொழி என்று இருக்கும் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் சட்டத்திலே அந்தப் பதினேழாவது பிரிவு நல்ல முறை யிலே திருத்தி அமைக்கப்படாத வரையில் அதிலே புதிய கண்ணோட்டம் செலுத்தப்படாத வரை காலத்திற்கேற்ப மாற்றி யமைக்காத வரை, இந்தச் சிக்கல்கள், இந்தப் பிரச்சினை, குழப்பங்கள், நிச்சயமாக மீண்டும் மீண்டும் தலை தூக்கிக்கொண்டு தான் இருக்கும். அஸ்ஸாம் அளவுக்குச் செல்லவில்லை என்றாலும் தமிழன் போக்கு விவாத அளவோடு நிற்குமா என்று இப்பொழுதுப் பேச்சுத் தேவையில்லை என்றாலும், மொழி வெறி, மொழி ஆதிக்கம் காரணமாக குழப்பம் ஏற்படும் நேரத்தில், யாராலும் எதையும் தடுக்கமுடியாது. விரும்பத்தகாத விளைவு கள் நிச்சயமாக ஏற்பட்டே தீரும் ஆகையால், இந்தியாவுக்கு ஆட்சி மொழி இந்தியே என்று தீர்மானித்து, சரியான சூழ்நிலை நிலையில் நல்லவிதமாக விவாதித்து எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல என்பதனை கனம் நிதியமைச்சரவர்களுக்கு நினைவுபடுத்து கிறேன்.

அரசியல் நிர்யண சபையிலே பலவாறு குறிப்பிட்டார்கள். நல்லவிதத்தில் வாதிக்கப்பட்டு அது எடுக்கப்பட்ட முடிவல்ல. இதை சொல்லும்பொழுது அப்படி நான் சொல்வது மட்டுமல்ல, நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன், அரசியல் நிர்ணய சபையில் அப்படியே பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எடுத்துக் காட்டி சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒரு அங்கத் தினர் அதைப்பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கு

315 பேர் கூடி இதற்கு வழி கண்டுபிடிக்கத் தேவையில்லை அதை இந்நாட்டு மக்களுக்கு விட்டுவிடலாம் என்று அவர் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார். இன்னும் பலர் அதைப்பற்றி விவாதித்திருந்தாலும் விவாதித்துக் கடைசியில் க்ளோஷர் மோஷன் கொண்டு வந்து இதுவரையில் விவாதித்தது போதும் என்றும், இனிமேல் முடித்து விடலாம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். சற்றுத் தொடரலாம் என்று இன்னொரு உறுப்பினர் சொன்ன நேரத்தில் நமது மதிப்பிற்குறிய நிதி அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து இந்தப் பிரச்சனை இப்பொழுது தேவை இல்லை, புதிய திருத்தம் சொல்லலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்பொழுது கவனித்துக் கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறார்.

இதனை அரசியல் நிர்ணயசபைத் தலைவர் ஏற்றுக்கொண்டு க்ளோஷர் மோஷனுக்கு இடம் கொடுத்துவிட்டு விவாதத்தை முடித்துவிட்டுக் கடைசியில் இரண்டொரு திருத்தத்தை மட்டும் வோட்டுக்கு விட்டார். அதை தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது கனம் T.A. இராமலிங்க செட்டியார் அவர்கள் தம் திருத்தத்தைப் பற்றி வோட்டு எடுக்க வேண்டுமென்று சொல்லியபோது கையை உயர்த்தி வோட்டுக்கள் எடுக்கப்பட்டன. அந்தத் திருத்தத்திற்கு, ஆறு வோட்டுக்கள் கிடைத்ததாக அரசியல் நிர்ணய சபைக் குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. அந்த ஆறு கரங்களில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுடைய கரமும் இருந்ததோ என்னவோ அதைப்பற்றி குறிப்பிடவில்லை. அப்படி அவருடைய கரம் இருந்திருந்தால் அது தமிழ் நாட்டினுடைய நல்ல கர்ம்தான், அவருடைய கரம் இல்லாது இருக்குமானால் உண்மையிலேயே அவருடைய கரம் நமக்கு பயன் படாமல் போய்விட்டது என்றுதான் கருதவேண்டும், [சிரிப்பு] இப்படி எவ்வளவோ பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் நிறைவேற்றப் பட்ட அரசியல் நிர்ணய கட்டத்தில் இருக்கக்கூடிய 17-வது பிரிவு மொத்தமாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்துடையது மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்திலுள்ள பலருடைய கருத்துமாகும். நான் மற்ற வரை தாழ்வுபடுத்த வேண்டும், இழிவுபடுத்த வேண்டும், என்பதற்குச் சொல்லவில்லை. நாம் தாழ்வுப்படுத்தப் படுகிறோம், இழிவு படுத்தப்படுகிறோம் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்பு

கிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற நம்முடைய தாய்மொழியாகிய தமிழ்மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று ஒரு நாளாவது நமது நிதி அமைச்சர் கேட்டிருக்கக்கூடாதா? அவர்கள் அதைத் தள்ளிவிடட்டும்; ஒப்புக் கொள்ளாமல் போகட்டும்; என்ருலும் நம்முடைய தாய்மொழி, தமிழ் இந்திய தேச ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்திஞேம் என்கிற மனச்சாந்தியாவது அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் பரந்த மனப்பான்மை வேதாந்த மனப்பான்மை என்றெண்ணி அவர் சொல்கிருர், "எல்லோரும் சொல்லலாம், நடப்பதாக இருந்தால்தான் சொல்லலாம். நடக்காத காரியத்தை வீணுகச் சொல்வானேன்" என்று இரண்டு திங்களுக்கு முன்பாக மேற்கு வங்க சட்டசபையில் மொழிப் பிரச்சனையைப் பற்றி விவாதம் நடக்கையில் வங்காளத்தையும் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திய வங்கநாட்டு பெரியவர்கள், "தமிழ் மொழியும் மிகச் சிறந்த மொழி. அதையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேசியிருக்கிருர்கள்" கொங்கு நாட்டு அமைச்சரிடத்திலிருந்து கேட்பதற்குப் பதிலாக வங்க நாட்டிலிருந்து இதனைக் கூறக் கேட்பதற்கு பாராட்டுவதா? எந்த வகையில் பாராட்டுவது என்று தெரியவில்லை.

தமிழ் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்ற ஆர்வம் நமக்கு எழவில்லை, அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிருர்கள். தமிழ் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்லக்கூட நாம் பயப்படுகிரேம். ஆனால் இதுவும் ஆட்சிமொழியாகத்தான் இருக்கவேண்டுமென்று அவர்கள் சொல்லுகிருர்கள். இப்படி நமது அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு, ஆளும் கட்சியாக உள்ளவர்களுக்கு தமிழ் ஆட்சிமொழியாய் இருக்க வேண்டுமென்று சொல்லுவதற்குக் கூட பயம் இருப்பதற்குக் காரணம் என்ன? அதுதான் உள்ளே இருக்கக்கூடிய அரசியல் தத்துவம். என்னைப் போன்றவர்கள் பேசுவதைப் பார்த்து இப்படி அவர்கள் பேசினுர்களாமே, நீங்கள் அவர்களை இப்படிப் பேசவிட்டு கேட்டுக் கொண்டா இருந்தீர்கள் என்று கேட்டால், உடனே "இல்லையே உடனே உங்களை பாராட்டிக்கொள்ளுங்கள், அதற்காக மற்றவர்களை இழிவுபடுத்தாதீர்கள், என்றல்லவா சொன்னேன்" என்று சொல்லிக் கொள்தான் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்கிருர் நிதி அமைச்சர்.

ஆகவே இன்றைய தினம் ஒளிவு மறைவு இல்லாமல் பேசப்பட்டுவிட வேண்டும். நீங்கள் எதற்காக அச்சப்படுகிறீர்கள்?

உங்களை யாரும் ஆதரிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? உங்களை ஆதரிக்க நாங்கள் இருக்கிறோம். நீங்களே நிரந்தரமாக பதவியிலிருக்க வேண்டுமா? இப்போதே எங்களுடைய கட்சியின் ஒரு பகுதியினராகிய திராவிடகழகத்தினர் உங்களுக்குத்தான் ஆதரவை அளித்துக்கொண்டு வருகிறார்கள். நாங்களும் கூட— இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்--அதற்கு எங்களுடைய பாது காப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் நீங்கள் தமிழ் நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கின்ற வகையில் வட நாட்டாருக்கு தாழ்ந்து போய்விடக்கூடாது. இந்திமொழி ஆட்சி மொழியாக இருப்பதற்கு எந்த வகையிலும் தகுதி இல்லாதது. இன்னொன்று காலையிலே கேட்கவேண்டுமென்று கருதினேன் ஆட்சிமொழி ஆட்சிமொழி என்று பேசுகின்றோம். ஆட்சிமொழி என்றால் என்ன என்பதற்கு இன்னும் சரியான விளக்கம் தரப்பட வில்லை. ஆட்சிமொழி என்பது எந்தவகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு இன்னமும் விளக்கம் தரப்படவில்லை ஆட்சி மொழி என்றால் கார்டு, கவர்களில் இருக்கவேண்டும், அந்நிய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ள எழுதப்பட வேண்டும் என்று இப்படி என்னென்ன வகையில்தான் தீர்மானித் திருக்கிறார்கள் என்பற்கு விளக்கம் நமக்கு இல்லை. அதற்குக் கார ணம் அரசியல் அமைப்பின்படி ஆட்சி என்றாலே என்ன என்பதற்கு விளக்கம் இல்லாததுதான். இராஜ்ஜிய நிர்வாகம், மத்திய நிர்வா கம் இரண்டும் சேர்ந்த நிர்வாகம் என்கிற அடிப்படையில் எது நம் முடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது அவர்களுடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது இரண்டு சர்க்காருடைய ஆட்சியைச் சேர்ந்தது என்று பிரித்துப் பார்க்கிறபோது நாம் ஒரு குழப்பமான நிலையில் இருக்கிறோம் இன்றையதினம் நம்முடைய ஆட்சிமொழி என்று சொல்லுகிற நேரத்தில் நிதி அமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர் கள் தெளிவாக விளக்கம் கொடுக்கவேண்டும். அது எத்தனை பேர் களை பாதிக்கக் கூடிய பிரச்சனையாக இருக்கிறது என்று சென்னை சர்க்காரிலிருந்து மத்திய சர்க்காருக்கும் அல்லது சென்னை துறைத் தனத்தால், வங்க துறைத்தனத்தாருக்கும் எழுதுகிற கடிதப் போக்குவரத்து ஆட்சி மொழியில் இருக்க வேண்டுமென்றால் அதற்காக இப்படி துருவித் துருவி வார்த்தைகளை கண்டுபிடிக்க வேண்டியதில்லை. அதற்காக இப்படி கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி வார்த்தைகள் கண்டு பிடிக்க வேண்டியதில்லை. இப்படி அவர்கள் தேடித்தேடி அலைவானேன்? இந்தி மொழியை வளப் படுத்துவானேன்? அவர்களுடைய உள்நோக்கம் எதுவோ அதை

வடக்கே உள்ளவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லுவதற்கு அவர்களுக்கு இப்போது துணிவு இல்லை. அந்தத் துணிவு இல்லாத தற்குக் காரணம் அவர்கள் எங்களைக் கண்டு பயப்படுவதுதான் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் எங்களுடைய எதிர்ப்பைக் கண்டு எதற்காகப் பயப்படவேண்டுமென்று நீங்கள் கேட்கலாம். நாங்கள் 150 பேர் நீங்கள் 15 பேர் என்று பேசலாம். ஆனாலும் வட நாட்டவர்களுக்கு இத்தகைய அச்சம், இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது? இந்தி தேசீய மொழிதான் என்று பேசப்பட்டது மாறி, ஆங்கிலத்திற்கு சமமாகவாவது இந்தியை எடுத்துக் கொள்ளக் கூடாதா? என்கிற முறையில் வேதரத்தினம் போன்ற வர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் இது பரிதாபமாகக் கூட இருக்கிறது. இந்தியை கட்டாயமாக தேசியமொழி ஆக்க வேண்டும் என்கிற நிலையும், பிடியும் இப்போது தளர்ந்து விட்டது. அதை அவர்களே உணர்ந்து வருகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நம் அமைச்சர் அவை ஏன் திட்டவட்டமாக எதிர்க்கக்கூடாது என்று கேட்கிறேன். மதிப்பிற்குறிய கல்யாண சுந்தரம் அவர்கள் திரு ராஜகோபாலாச்சாரியார் முன்னால் கொண்டிருந்த கருத்தையும், இப்போது கொண்டுள்ள கருத்தை யும் எடுத்து காட்டினார்கள். ஒருமுறை கொண்ட கருத்தை தவறானதாக இருந்தால் மாற்றிக் கொள்ளவேகூடாது என்று நான் சொல்லமாட்டேன். அன்றைக்கு நண்பர் ராஜகோபாலாச் சாரியார் "எங்களுடைய கொள்கை A to Z கம்யூனிஸ்ட் கட்சியை ஒழிப்பதுதான்" என்றார் அதே இராஜகோபாலாச்சாரியார் இப் போது "என்னுடைய கொள்கை A to Z காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதுதான்" என்கிறார். எப்போதைக்கெப்போது எதெது அவருக்கு கெட்டது என்று தோன்றுகிறதோ அந்த கெட்டதை ஒழித்து நல்லதை வைத்துக் கொண்டிருக்கிறார். நாமே ஒரு காரியத்தைச் செய்துவிட்டாலும்கூட அது தீமையானதுதான் என்று தெரிந்தால் ஒப்புக்கொள்வதுதான் பெருந்தன்மை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஆச்சாரியார்காலத்தில் இந்தி வலுக் கட்டாயமாகப் புகுத்தப்பட்ட காலத்திலும் கூட எதிர்க்கத்தான் செய்தோம். இப்போதும் எதிர்க்கிறோம் ஆகவே இன்றையதினம் அவரைப் பாராட்டுவதா, கண்டிப்பதா என்பதற்கு எங்களுக்கு அவசியம் இல்லை. ஆனால் விசித்திரமான விஷயம் இதைப்பற்றி பேசுகிறபோது எனக்கு நினைவுக்கு வந்தது. எப்படி ராஜகோபா லாச்சாரியார் முன்னால் தாமே இந்தியை கட்டாயப் பாடமாக கொண்டு வந்துவிட்டு இப்போது அதை எதிர்க்கிறாரோ

அப்படியே மேற்கு வங்கத்தில் கல்வி மந்திரியாக இருந்தவர்கள் பிரபுல்ல சந்திரகோஷ் அவர்கள் தம்முடைய காலத்தில் கட்டாய மாக இந்தியைப் புகுத்திவிட்டு இப்போது, பேசும்போது "I have Committed a mistake and I admit it"

"நான் தவறு செய்து விட்டேன். அந்தத் தவறை ஒப்புக் கொள்கிறேன்" என்று சொல்லுகிருர். ஆகையால் அமைச்சர்கள் தவறு செய்யலாம். செய்யும் தவறை ஒப்புக் கொண்டு திருத்திக் கொள்வது தான் அமைச்சர் அவைக்கு இருக்கவேண்டிய பெருந் தன்மை "இன்னகாரியம் நான் செய்துவிட்டேன். ஆகையால் கடைசி வரையில் அதிலேயே இருப்பேன்" என்று யாரும் சொல்லத் தேவை இல்லே. இந்திக்கு இங்கே உள்ள எதிர்ப்புப் போல ஆந்திராவில் இல்லேயே கேரளத்தில் இல்லேயே என்று பல நண்பர் கள் பேசினர்கள். ஆனல் இந்தியை எதிர்த்து பல நண்பர்கள் இடம் இருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. எங்களுக்கும் சேர்த்து தாங்கள் போராடி வெற்றி வாங்கித் தந்ததற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிருேம் என எழுதி இருக்கிருர்கள் ஆனல் நிதி அமைச்சருக்குப் பக்கத்தில் உள்ள அந்தஸ்து இல்லாத வர்களேப் போல இருக்கலாம். என்னேப் போன்ற சாதாரண மக்கள் தான் அவர்கள். ஆனலும் ஆந்திராவில் உள்ளவர்களும் கூட கவனித்துப் பாராட்டுகிருர்கள் இந்தியத் துணேக்கண்டத்தில் இருக்கிற எல்லாப் பத்திரிக்கைகளும் இந்தி விஷயத்தில் கொண் டிருந்த பிடிவாதம் இன்றைய தினம் தளர்ந்திருக்கிறது. அந்த பிடிவாதம் தளர்ந்ததற்கு காரணம் தென்னுட்டில் இருந்து எழுந்த கிளர்ச்சிதான். இன்றைய தினம் அது இந்த அளவோடு நிற்க வேண்டும் பிரிவினேக்குப் போகக்கூடாது என்கிற எண்ணம் தான் அந்தப் பத்திரிக்கைகளுக்கு எழுந்துள்ளது. இந்தியா ஒன்று என்று பேசுகிறவர்களிடம் காட்டுவதைவிட அதிக மதிப்பு எங்களிடம் காட்டி பிரிந்து போகாதீர்கள் ஒன்ருக இருக்கலாம் வாருங்கள் என்று அந்தப் பத்திரிக்கைகள் எல்லாம் எழுதுவதை பார்க்கும் போது சந்தோஷமாகக்கூட இருக்கிறது. ஆனல் சந்தோஷத்திற்காக சித்தாந்தங்களே விட்டு விடுவது தமிழனின் மரபு அல்ல. அதை தமிழ் மரபு அறிந்த நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்திற்கு வெளியே ஒப்புக்கொள்வார்கள் எனக்குத் தெரியும். ஆகவே இந்தி மொழி விஷயத்தில் எங்களே கழகச் சார்பில் எடுத்துக் கொள்வது இதற் காகச் சட்டத்தை திருத்திக் ஆகவேண்டும் என்பதாகும். சட்டத்தைத் திருத்துவதில் உள்ள சிக்கல்கல் பற்றி நமது நிதி

யமைச்சர்கள் எடுத்து சொன்னுர்கள் சிக்கல் நிச்சயமாக இருக்கும் எதிலேயும் சிக்கல் இருக்கும். ஆனுல் சாமார்த்திய சாலிகள் முயற்சி செய்தால் சிக்கல்கள் தீரும். நமது நிதி அமைச்சர் அவர் கள் அப்படிப்பட்டதொரு சாமார்த்தியசாலி என்பதை அவர்களே இந்த மன்றத்தில் அடிக்கடி எடுத்துச் சொல்லி இருக்கிருர்கள். நானும் சில வேளைகளில் ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆகவே அவர்கள் இது சிக்கல்கள் நிறைந்தது என்று சொல்வதைவிட இதை நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்லி விட்டு அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்று நாங்கள் பயப்பட வில்லை. ஏனெனில் அந்தக் கோட்டை சரிந்துக்கொண்டு இருக் கிறது. 1945, 1950ல் இருந்துவந்த பிடிவாதம் அல்ல இன்றைய தினம் இருப்பது. இன்றைய தினம் வடக்கே இருப்பதெல்லாம் இந்திக்காக நாம் எடுத்துக்கொண்ட முயற்சி வீணுகப் போய்விடக் கூடாதே என்பது தான். அது சட்டபுத்தகம் வரையிலாவது இருக்கட்டும் என்று சொல்லக்கூடிய அளவிலே தான் இருக்கிறதே தவிர முன்னுல் இருந்த கொடிக்கட்டி ஆண்ட நிலை அல்ல. அன்று கட்டிய கோட்டை இன்று சுக்கள்நூருகப் போய் இருக்கிறது.

ஆகவே தைரியமாக அரசியல் சட்டத்தை திருத்த முயற்சி எடுத்துக் கொள்ளலாம். அதற்கு அன்பழகன் அவர்கள் கொடுத் திருக்கக்கூடிய தீர்மானத்தை சர்க்கார் தங்கள் தீர்மானமாக மாற்றிக்கொண்டு வருவதாக யிருந்தாலும் எனக்குப் பெருமை தான். ஒருமித்தகருத்து வரவேண்டும் என்பதற்காக இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கும் நேரத்தில் இதை ஒத்த ஒரு தீர்மானத்தை மேற்கு வங்க சட்டசபையிலும், மேற்குவங்க மேல் சபையிலும் வேறு ஒருவர் கொடுத்த தீர்மானத்தை எல்லாக் கட்சி தலைவர்களும் ஒரு முகமாக ஆதரித்து அந்த தீர்மானத்தை நிறைவேற்றினுர்கள். அதேபோல் இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதால் அமைச்சர் அவைக்கு ஒரு பங்கமும் வந்து விடாது. அதனுல் காங்கிரசுக்கு கௌரவம் கெட்டுவிடாது. அதனுல் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஒரு பெரிய செல்வாக்கு வந்து விடும் என்று பயப்படத்தேவை இல்லை. எங்கள் செல்வாக்கைச் சிதைப்பதற்கு இவ்வளவு பேர்கள் இருக் கும் போது நீங்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஆகவே அச்சப்படாமல் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதின் மூலம் இந்திய அரசியல் சட்டத்தில் 17 வது பிரிவை மறுமுறை யும் பரிசிலனை செய்து இந்தியாவிற்கு இந்தி ஆட்சிமொழி! அந்த

இந்தி தேவநாகிரிலிபியில் இருக்கும் என்ற பகுதியை அறவே நீக்கிவிட்டு, இந்தியாவில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழி யாக இருக்கும். இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்ரு, பலவோ ஆட்சிமொழி ஆவதற்குக்கான தகுதி பெற்றதாக கருதப்படுகிறவரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நாங்கள் கருது கிரும். இதை நான் சொல்லுகிற நேரத்தில் ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிரும், ஆங்கிலத்திற்கு ஆதரவாகப் பேசுகிரும், என்று பலர் தப்பாகக் கருதுகிருர்கள். சிலபேர்கள், ஆங்கிலம் படித்து விட்டதால் அவர்களுக்குள்ள சலுகைகள், தமிழ் வந்தால் போய்விடும் என்ற பயத்தால் இப்படிச் சொல் கிருர்கள், என்று சொல்கிருர்கள்.

ஆங்கிலம் படிக்க எந்த அளவு புத்தி செலுத்திஞர்களோ அந்த அளவு தமிழில் செலுத்திஞல் ஆங்கிலத்தில் எந்த அளவு கீர்த்தி பெற்ருர்களோ அந்த அளவில் தமிழிலிலும் கீர்த்தி பெற முடியும். ஆகவே ஆங்கிலம் படித்து விட்டார்கள் சிலர், அதில் கிடைக்கும் சலுகை கெட்டுவிடும் என்பதால் இந்தி வேண்டாம் என்று தப்புக் கணக்குப் போட வேண்டியதில்லை. தமிழ் ஆங்கி லத்தைவிட தரத்தில் குறைவானது என்று நாம் எடுத்துக் கொள்ள தேவையில்லை. ஆட்சிமொழியாக, இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்த மொழி. அப்படிப்பட்ட ஒரு மொழி படிப்படியாக நம்மிடம் வரும் பொழுது அந்த மொழியோடுகூட ஆங்கிலமும் படிக்க வேண்டுமென்று சொல்லி, Any one of Indian languages' இந்தியாவிலுள்ள வேறு மொழிகளில் ஒன்றையும் படிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் வலி யுறுத்திச் சொன்ஞர்கள். அப்படியிருக்கும் போது, இந்திக்கு மட்டும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இந்திபடிப்பதற்கு மட்டும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, சர்தார், வேதரத்தினம் அவர்கள் காலையில் பேசியபோது சொன்ஞர்கள், எட்டாவது வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரையில் இந்தி கட்டாயப்பாடமாக்கப்பட்டு அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொன்ஞர்கள். அப்படி அவர் போன்றவர்கள், நம்பத்தக்க அளவில், எண்ணத்தக்க அளவில் இருக்கிற அந்த முறையை மாற்றி இந்திய மொழிகளில் எதுவாக இருந்தாலும் தெலுங்கு படிக்க வேண்டுமென்ருலும், கன்னடம் படிக்க வேண்டுமென்ருலும், மலையாளம் படிக்க வேண்டுமென்ரு

லும், குஜராத்தி படிக்க வேண்டுமென்றாலும், மராத்தி படிக்க வேண்டுமென்றாலும், வழி செய்து தர வேண்டும். படிக்க வேண்டுமென்று கருதுகிற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டும். அந்த நிர்ணயத்தை சொல்லுங்கள். இத்தனை மாணவர்கள் கேட்பார், இன்னமொழி, ஆசிரியர் நியமிக்கப்படு வார் என்ற முறையை வகுத்து, பெற்றோர்கள், மாணவர்கள், எண்ணம் தெரிவிக்கும்போது, அந்தந்த மொழிகளில் படிக்க வழி வகை வகுத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மொழிப் பிரச்சனையில் நாம் நிச்சயமாக குறிப்பிடத்தக்க, மகிழத்தக்க, பெருமைப்படத்தக்க அளவு வெற்றி பெற்றிருக் கிறோம், அந்த வெற்றி முழுவெற்றியாக வேண்டுமென்றால் இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவில் மகத்தான மாறுதல், தலைகீழான மாறுதல் என்றுகூட குறிப்பிடுவேன், செய்யவேண்டும் அப்படிப்பட்டதொரு மாறுதல் இந்திய அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டும், செய்யப் படவேண்டுமென்பதோடு கூட ஒரு மொழிதான் ஆட்சிமொழி யாக இருக்கவேண்டும் என்கின்ற எண்ணம் நீக்கப்பட்டு எந்தெந்த மொழிகள் ஆட்சி மொழிகள் ஆவதற்குத் தகுதி படைத்தனவோ அவை எல்லாம் ஆட்சி மொழிகள் ஆக வழிவகைகள் செய்யப்பட வேண்டும், என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி செய்வ தால் குழப்பம் ஏற்படுமென்று நினைக்க வேண்டியதில்லை. இந்த மன்றத்தில் ஒரு மொழியில் பேசுகிறபோது இன்னொரு மொழியில் மொழி பெயர்த்து தரவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொடுத்து அது தோற்கடிக்கப்பட்டது 150 பேர் ஒருபக்கத்திலும் 15 பேர் இன்னொரு பக்கத்திலும் இருப்பதால், அதை இந்திய பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொண்டு ஒரு மொழியில் பேசினால் இன்னொரு மொழியில் மொழிபெயர்க்க 6, 7 லட்சம் செலவில் விரைவாக காரியங்கள் செய்து கொண்டு வருகிறார்கள் ஆக, நல்லதொரு காரியத்தைச் சொன்னால் அதன் எதிரொலி பல இடங்களிலும் கேட்கும் என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. ஆகவே 'நல்ல நோக்கத்தோடு தரப்படுகின்ற எங்கள் தீர்மானத் தைத் துரைத்தனத்தார் ஏற்றுக் கொண்டு தங்கள் கரங்களுக்கு வலிவு தேடி இந்திய அரசாங்கத்தினிடம் வாதாடி, போராடி இந்த மொழிப் பிரச்சனைக்கு நிரந்தரமான, எல்லோரும் கண்டு பெருமைப்படத்தக்க அளவிற்கு, தமிழ் பண்புக்கு ஊறு நேரா முறையில் நல்லதொரு முடிவிற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை நிறுத்திக் கொள்கிறேன். ★

# மேலவை, கீழவை பற்றி அண்ணா

**மாண்புமிகு திரு. அறிஞர் அண்ணா:** தலைவர் அவர்களே, நம்முடைய அவையிலே உள்ள மதிப்பு மிக்க உறுப்பினர்களிலே சிலர் விலகுகிறார்கள் என்கிறபோது, அவர்களிலே மிகப் பலர் மறுபடியும் திரும்பி இந்த அவையிலே வரவேண்டும் என்று இந்த அவையிலே உள்ள மற்றவர்கள் எல்லாம் விரும்புவது உண்மையிலேயே அவர்களிடத்திலும், அவர்கள் ஆற்றியிருக்கிற தொண்டினிடத்திலும் இந்த அவை வைத்திருக்கிற நல்ல மதிப்பை சரியாக எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. அவர்கள் விலகிச் சென்றாலும் அவர்களிலே பலர் திரும்ப வரப்போகிறார்கள் என்ற நிலை நிச்சயமாக ஏற்படவேண்டும் என்று நாமெல்லாம் விரும்புகிறோம். ஏனென்றால் அவர்கள் எல்லாம் பெற்றிருக்கிற அறிவாற்றல், இந்த அவையினுடையதரத்தை உயர்த்துவதற்கு இதுவரையில் மிக அதிகமான அளவிற்குப் பயன்பட்டு ,வந்திருக்கிறது.

மேலவை, கீழவை என்று இரண்டு வேண்டுமா என்பதைப் பற்றி பல இடங்களில் விவாதங்கள் நடைபெற்ற நேரத்தில்-நான் அதைப் பற்றிய பல ஏடுகளைப்படித்திருக்கிறேன். ஒரு ஆங்கில ஏட்டிலே படித்தேன். மேலவை எதற்கு என்று ஒருவர் கேள்வி கேட்க அதற்கு மற்றொருவர் பதில் அளித்து இருக்கிறார். நீங்கள் காப்பி அருந்துகிற போது காப்பி ஊற்றி வைத்திருக்கிற கோப்பை இருக்கிறதே அதைத் தாங்க வைத்துக் கொண்டிருக்கும் சாசர் ஒன்று வைத்திருக்கிறீர்களே அது எதற்கு என்று கேட்டார்கள். காப்பி கொஞ்சம் கொதிப்பதாக இருந்தால் அதை சாசரில் ஊற்றி ஆறவைக்கவும், காப்பி குடிக்கறபோது கோப்பையிலே இருந்து சிந்திவிட்டால் அது உடையிலே படாமல் தாங்கிக் கொள்ளவும் சாசர் இருக்கிறது என்று சொன்னார்கள். அதே போல மேலவை இருப்பதும் அதற்குத்தான். கொஞ்சம் கொதிப்பு ஏற்பட்டால் அதைச் சுகப்படுத்துவதற்கும் அதை நல்ல முறையில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் இருப்பது தான் மேலவை.

மேலவை இதற்காகத்தான் இருக்கிறது என்று பதில் அளித்தார்கள் என்று படித்தேன். இதை நான் படித்த நேரம் மேலவைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரம். நானே அந்த மேலவையின் தயவில்தான் மந்திரி சபையில் இருக்க முடியும் என்ற எண்ணம் ஏற்படாத நேரத்தில் மேலவையைப் பற்றி நான் அறிந்து கொண்டிருந்த அரிய கருத்துக்கள் இந்த மேலவையில் வீற்றிருக்க நேரிட்ட இந்த ஓராண்டுக் காலத்தில் இன்னும் அதிகமான முறையில் உறுதிப்பட்டு இருக்கின்றன.

## தொழில் வளத்தில் நெசவாளர் பங்குபற்றி அறிஞர் அண்ணு

இங்கே பணியாற்றிக் கொண்டு வருகிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கைத் துறையிலே பார்த்தாலும், அவர்கள் மேற்கொண்டிருக்கிற தொழிற்துறையிலே பார்த்தாலும், அறிவுத் துறையிலே பார்த்தாலும் அந்தத் துறைகளில் அவர்கள் எல்லாம் மிகவும் வித்தகர்கள் என்ற பெயர் பெற்றவர்கள். அதனுல் தான் சிலர் பேசுகிறபோது நம்முடைய நண்பர் பொன்னுசாமி செட்டியார் அவர்களை முதலாளி என்று எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் அவர் தொழிலில் பெற்றிருக்கிற வெற்றியைத்தான் குறிப்பிடுகிருர்களே தவிர அவர் தொழிளாளிவர்க்கத்தில் இருக்கிருர் என்ற அர்த்தத்தில் இல்லை. அவர் முதலாளி வர்க்கத்தில் இருக்கிருர் என்ற அர்த்தத்தில் இல்லை. அவர் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சில நாட்களுக்கு முன்னுலே கூட சொன்னுர்கள்.

நான் மிகுந்த பொறுமையாக இருக்கிறேன் என்று நம் எதிர்க்கட்சித் தலைவர் பலமுறை சொல்லியிருக்கிருர். நான் நெசவாளிக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லிக் கொள்வேன். நெசவாளியாகப் பிறந்தவர் யாரும் பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. எத்தனை தடவை அறுந்த நூலை இணைத்துப் பார்க்கிறோம். அது எத்தனை தடவை வருகிறதோ இல்லையோ என்று பார்க்கிறோம். எத்தனைச் சிக்கல்களை பிரித்திருக்கிறோம். எத்தனை முடிச்சுகளை அவிழ்த்திருக்கிறோம், ஆகவே நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தவர்கள் நெசவாளியாக இல்லாவிட்டாலும் நெசவாளிக் குடும்பத்திற்கு இயல்பானபொறுமை குணத்தை நிரம்பப் பெற்றுக் கொள்ளுவார்கள். நம்முடைய பொன்னுசாமி செட்டியாரிடம் அப்படிப்பட்ட

அமைதியான பொறுமை குணத்தை நான் பல காலும் பார்த்து வருகிறேன். அவர்கள் முதலாளியாக இருக்கிறார்கள் என்று நம்முடைய நண்பர் என். வி. நடராஜன் சொன்னார். சாதாரணமாக கொஞ்சம் ஏழை எளியவர்களாக உள்ளவர்கள் எதிரிலே உள்ள யாரைப் பார்த்தாலும் அவர்கள் கொஞ்சம் பளபளப்பாக இருக்கிறார்கள் என்றால் அவர்களை முதலாளிகள் என்று தான் சொல்லத் தோன்றும்.

இந்த வகையில் சொன்னது தவறு. முதலாளிகள் சார்பில் அவர் பேசியதாக நான் கவனித்த வரையில் எதுவும் இல்லை. தொழில் வளர தொழிலாளர் நலம் வளர வேண்டும் என்பது பற்றியும் அவர்கள் மிக நல்ல முறையில் எடுத்துரைத்தார்கள். அவர்கள் எல்லாம் இந்த அவைக்கு மறுபடியும் திரும்பி வந்து தொழில்துறையில் உள்ள நல்ல கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

## உறுப்பினர்கள் சிலரைப்பற்றி அண்ணா

நமது சாம்பசிவ ரெட்டியார் அவர்கள் எனக்கு நேரிடையாகப் பழக்கம் இல்லை என்றாலும், அவரைப் பற்றி நான் 15, 20 வருடங்களாக அறிந்து வைத்திருக்கிறேன். சேலம் மாவட்டத்தில் அவரை அறியாதவர்கள் எந்த கிராமத்திலும் கிடையாது. தமிழனிடத்தில் யார் யாருக்கு பற்று உண்டோ அவர்கள் எல்லாம் ரெட்டியார் அவர்களைப் பல ஆண்டுகளாக நன்றாக அறிவார்கள். அவர்கள் இந்த அவையில் அமர்ந்திருந்து எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்கள் நல்ல கருத்துக்கள் மட்டுமல்லாமல், தெளிவான முறையில் மட்டுமல்லாமல், தீந்தமிழில் எடுத்துரைத்து வந்த கருத்துக்கள் இந்த அவையில் விவாதங்களின் தரத்தை நல்ல முறையில் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் திரும்பி வந்து அமர்கின்ற வரையில் இடையில் உள்ள நாட்கள் எல்லாம் நமக்கு ஓரளவிற்கு இழப்பு நாட்களாகும் என்று நாம் எண்ண வேண்டிய அளவுக்கு அரும் பணி ஆற்றியிருக்கிறார்கள்.

எனது மற்றொரு மதிப்பிற்குரிய நண்பர் எஸ். டி. சுந்தரம் அவர்கள் கலைத் துறையில் ஈடுபட்டு அந்தக் கலைத் துறையில் ஈடுபட்டால் ஏதேதோ தன்னிலையில் நின்று பல ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

தமிழினிடத்திலும், தமிழ் நாட்டினிடத்திலும் நீங்காத பற்றுக் கொண்டிருக்கிறவர்கள் அவர்கள். காந்தீயத் தத்துவத்தை நடைமுறையில் நடத்திக் காட்டுவதில் மிகுந்த பெருமை கொண்டவர்கள். கலைத்துறையின் பிரதிநிதியாக அவர்கள் இந்த அவையில் வீற்றிருந்து பல நல்ல கருத்துக்களை அடிக்கடி எடுத்துச் சொல்லி இந்த அவைக்கு தனிச்சிறப்பு தேடிக் கொடுத்திருக்கின்றார்கள். நமது மற்றொரு நண்பர், நம்முடைய அவையின் துணைத் தலைவராக இருந்து வரும் பழனிச்சாமி கவுண்டர் அவர்கள், கோவை மாவட்டத்தில் கீர்த்திமிக்க ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். விவசாயத்தைப் பற்றி அரசாங்கத்தை நடத்துகிறவர்கள், நாம் உள்பட, எவ்வளவு அறிந்திருக்க முடியுமோ அவைகள் எல்லாவற்றையும் விட மிக அதிகமான அளவுக்கு விவசாய துறையைப் பற்றி அனுபவத்தில் அறிந்திருக்கிற பெருநிலக்கிழார் ஆவார்கள். அவர்கள் இந்த அவையில் அமர்ந்திருந்து அவர்கள் நம்மை விட்டுப் பிரிவதாக இருந்தாலும், அவர்கள் திரும்பிவர வேண்டும் என்ற கருத்து நமக்கு இருக்கிறது என்றாலும், அவர்கள் வருவதற்கு எவ்வளவு காலம் பிடித்தாலும், அல்லது திரும்பிவர முடியாமல் போய்விட்டாலும், அவர்களுடைய நல்லுரைகளை எங்களுக்கெல்லாம் தந்து உதவ வேண்டும் என்று அவர்களை எல்லாம் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது நண்பர் பாலசுப்பிரமண்ய ஐயர் அவர்களைப் பற்றி இந்த அவையில் மட்டுமல்ல, எந்த அவையில் உள்ளவர்களும், அவருடைய அருங்குணங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் 1957–58ல் எல்லாம் கீழ் அவையில் இருந்த நேரத்தில் எனக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கிற போதெல்லாம் மேல் அவைக்கு வருகிற போது யார் பேசுகிறார்கள் என்று கேட்கின்ற நேரத்தில் பாலசுப்ரமணிய ஐயர் பேசுகிறார் என்றால் மிகுந்த ஆவலோடு வந்திருந்து அவர் பேச்சை கேட்பது வாடிக்கை. ஏதும் தெரியாத மாதிரி எழுந்திருப்பார். யாருக்கும் தெரியாததை எல்லாம் விளக்குவார். எல்லா விவரங்களையும் பேசுவார். ஆனால் இடையிடையே ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன் என்று அவையடக்கத்தோடு சொல்லுவார்கள். அந்த பெருந்தன்மைக்கு அவர் தான் இலக்கணம். எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லுபவர்கள் எதையும் தெரிந்திருக்க மாட்டார்கள். எனக்கு ஏதும் தெரியாது என்பவர்கள் தான் எல்லாவற்றையும் தெரிந்திருப்பார்கள். சிலர் எல்லாவற்றையும் தெரிந்திருப்பார்கள். ஆனால் எடுத்து

சொல்கின்றபோது பலவற்றைச் சொல்ல முடிவதில்லை. சிலர் சிலவற்றைச் சொல்லலாம் என்று ஆரம்பிப்பார்கள். நம்முடைய நண்பர் ராசகோபால் அவர்களைப் போல், அவர் இன்னது தான் சொல்லியிருப்பபர் என்று நாம் ஊகித்துக் கொள்ளலாமே தவிர, அவர்களால் சொல்லி முடிக்க முடியாது. ஆனால் நண்பர் பால சுப்பிரமணிய ஐயர் அவர்கள், எதைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறாரோ அதைத் தெளிவாக, விளக்கமாகச் சொல்லி, நம்மை வேறு பலவற்றைப்பற்றி சிந்திக்க வைக்கின்றார்கள். ஒருவர் எடுத்து பேசுவது, மற்றொருவர் மனதில் புகும்படியாகப் பேசுவது மிகக் கடினம். ஆனால் ஒருவர் பேசுவதைக் கொண்டு அதைக் கேட்கின்றவர்கள் இன்னும் பல சிந்தனையைப் பெறுகின்றார்கள் என்றால், மிகத் திறமைசாலிகளான சிந்தனையாளர்களையும், பேச்சாளர்களையும் தான் அந்த வரிசையில் வைத்துப் பார்க்க முடியும். அந்த முறையில் நம்முடைய நண்பர் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள், தான் பேசுவதன் மூலமாக மற்றவர்களை சிந்திக்க வைத்திருக்கின்றார்கள். ஒருமுறை நான் கீழ் அவையின் உறுப்பினனாகவும், அவர் மேல் அவை உறுப்பினராகவும் இருந்தபோது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் அதற்கான குழுக்களில் விவா திக்கப் பட்டநேரத்தில் நான் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ் நாட்டுக்கு 1,000 கோடி ரூபாய் தரவேண்டும் என்று கேட்டேன். எல்லோரும் அதை எதிர்த்தார்கள். அது எப்படி ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தால் செலவழிக்க முடியுமா என்று சிலர் கேட்டார்கள். இன்னும் சிலர் எங்கேயிருந்து எடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். நமது ஐயர் அவர்கள் அதைப் பற்றி இந்த அவையில் பேசுவதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள் "இப்படி அண்ணாதுரையை கேட்டார்கள், எங்கிருந்து அந்த ஆயிரம் கோடி ரூபாயை எடுப்பது என்று சிலர் கேட்டார்கள். நான் சொல் கிறேன் அதற்கு இடம். நீங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய், 9,000 கோடி ரூபாய் எங்கிருந்து எடுக்கப் போகிறீர்களோ, அங்கிருந்து தான் இந்த ஆயிரம் கோடி ரூபாயையும் எடுக்க வேண்டும். இதற்கு என்று தனி இடமா?" என்றார்கள். உள்ளபடியே நான் அதைக் கேட்ட பொழுது மெய்சிலிர்த்துப் போனேன். ஆயிரம் கோடி ரூபாய் எங்கேயிருந்து எடுப்பாய் என்று கேட்டபோது என்ன சொல்ல லாம் என்று நான் திகைத்துக் கொண்டிருந்தேன். ஆனால்

இங்கே அவர்கள் பேசியது உங்களுக்கு மூன்றாவது திட்டத்திற்கு பணம் எங்கே கிடைக்குமோ அங்கே தான் இதுவும் கிடைக்கும், அங்கே எடுக்கலாம் என்றார்கள். எப்படி செலவழிக்க முடியும் என்று கேட்டதற்கு சொன்னார்கள். மூன்றாவது திட்டத்தில் வருகிற ஆயிரங்கோடி ரூபாயை செலவழிப்பது; இதில் என்ன சந்தேகம் என்றார்கள். மிக எளிதான முறையில் பேசியதாகக் கருதுவார்கள். ஆனால் அதற்குப் பின்னால் மிகப் பெரிய பொருளாதார தத்துவம் அடங்கியிருக்கிறது. அவ்வளவு நல்ல முறையில் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை இந்த அவையில் எடுத்து வைத்திருக்கின்றார்கள். எந்தப் பிரச்சனையைப் பற்றி அவர்கள் பேசுவதாக இருந்தாலும் தனி அறிவினை அதில் கலந்து அளித்திருக்கின்றார்கள். அவர்கள் இந்த முறையும் பட்டதாரிகள் தொகுதிக்கு நின்று வர வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பிக் கொண்டிருந்தேன் தேர்தல் முறைகளில் கலக்கம், சலிப்பு, கசப்பு இவைகள் எல்லாம் ஏற்படத்தக்க அளவுக்கு மிகவும் மாறுபட்டிருக்கின்றன. அந்த மாறுபட்ட சூழ்நிலையில் தேர்தலில் ஈடுபடவேண்டுமா என்பது பற்றி அவர்கள் ஓரளவு ஐயப்பாடு கொண்டதன் காரணமாக அவர்கள் ஈடுபடாதிருந்து விட்டார்கள். ஆனால் நான் அறிந்த அளவில் தஞ்சைத் தரணி முழுவதிலும் எனக்குத் தெரிந்தவர்களை கேட்ட நேரத்தில், அவர்கள் இந்தமுறை நின்றிருந்திருந்தால் அனைவரும் அவருடைய வெற்றிக்குப் பாடுபட ஆவலோடு இருந்திருக்கிறார்கள் என்று தெரிந்தபோது, அவர்களிடத்தில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொள்ள முடிந்தது.

அவரைப்போலவே தேசியக் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை அவர்கள் இந்த அவைக்கு வந்தபிறகு மட்டுமல்லாமல் பொதுவாக தமிழகத்திற்கும், தமிழகத்தின் மூலமாக இந்தியா முழுவதற்கும், இந்தியாவின் மூலமாக கவிஞர் உலகத்திற்கும் அரும்பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் ஈன்றிருக்கின்ற கவிதைகள் மூலமாக மட்டுமல்ல அவர்கள் ஆற்றியிருக்கின்ற தேசியத் தொண்டு மூலமாக மட்டுமல்ல, அவர்களுடைய தியாகங்கள், அவர் நடந்து கொண்ட முறைகள் இவற்றின் மூலமாக பல்லாயிரக் கணக்கான மக்களுடைய இதயத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இந்த அவையில் ஆற்றிக் கொண்டிருந்த பெரும் பணியிலிருந்து சில காலத்திற்கு அவர்கள் அந்தப் பணியை ஆற்ற முடியாத நிலை ஏற்பட்டிப்பது வருந்தத்தக்கது என்றாலும் இந்த இடைவெளி

நேரத்தில் அவர்கள் ஆற்றியிருக்கின்ற அரும்பணிகளை நாமெல்லாம் எண்ணி எண்ணி நம்முடைய வழி முறைகளைச் செப்பனிட்டுக் கொள்வதற்கு அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் ஜெயராம ரெட்டியார் அவர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கிறுர்கள். ஆகையால் அவர்கள் விலகி போய்விட்டார்கள் என்று சொல்வதுகூட அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆனல் அவர்கள் விலகிச் செல்லுகின்ற நிலையில் இப்போதும் இருந்தாலும் அவர் இந்த அவையில் எடுத்துப் பேசுகின்ற நேரத்தில் கிராமப்புறத்து மக்கள் எதை எதை எண்ணுகிறுர்களோ அவைகளை மிக நல்ல முறையில் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறுர்கள். சிறு தொழில் நடத்துகிறவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இவர்களுடைய கஷ்ட நஷ்டங்களையெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி, இந்த அவையில் அவர்கள் நல்ல கருத்துக்களை அளித்து வந்திருக்கிறுர்கள்.

நம்முடைய ராஜா ஐயர் அவர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கிறுர்கள். நானும் என்னுடைய நண்பர்களும் நமது ராஜா ஐயரவர்களைப் பற்றியும், நமது மற்ருெரு ஆசிரியர் கிருஷ்ண மூர்த்தி அவர்களைப் பற்றியும் பேசிக் கொள்வது வாடிக்கை.

அவர்கள் ஆசிரியர்கள். அதனுல் ஆசிரியர்களைப் பற்றி நிரம்பப் பேசுவார்கள். ஆனல் நான் அவர்களைப்பற்றிப் பேசுகிற போது சொல்வது ஆசிரியர் சமுதாயத்திற்கு இந்த இரண்டு உறுப்பினர்களைப் போல் எந்தக் காலத்திலும் கிடைத்தது இல்லை. இனியும் கிடைக்க மாட்டார்கள். அந்த அளவிற்கு ஆசிரியர் சமுதாயத்திற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறுர்கள். எந்தக் கேள்வியாக இருந்தாலும் இந்த ஆசிரிய சமுதாயத்தின் வாழ்வு உயர்வதற்கு ஏற்ற நல்ல நோக்கத்தோடு பேசுவார்கள். கல்வியின் தரம் உயர்வதற்கு ஏற்ற எண்ணத்தோடு அவர்கள் கேள்விகளைப் போடுவதும், விளக்கங்களைப் பெறுவதும், விளக்கங்களை அளிப்பதும் ஆக இந்த முறையில் அவர்கள் மிகச் சிறந்த பணியாற்றிக் கொண்டு இருக்கிறுர்கள். இத்தகைய உறுப்பினர்கள் கல்வித் துறையில் அனுபவம் வைத்து இருக்கிற அளவிற்குப் அக்கறை செலுத்துவதற்கு முடியாத நிலை இருக்கிறது. நமது பெருமதிப் பிற்குரிய துணைவேந்தர் அவர்கள் கல்வித்துறையில் எல்லாம்

அறிந்தவர்கள். நண்பர் பாலசுப்பிரமண்ய ஐயர் அவர்கள் அந்தத் துறையில் அதிக தேர்ச்சிப் பெற்றவர்கள். மற்றவர்கள் பல்வேறு விஷயங்களுக்கிடையில் கல்வி விஷயத்தை கவனிப்பதாலே அவர்களுக்கு பாடம் கற்றுத் தருகிற வகையிலே ராஜா அய்யர் கல்வித்துறை பற்றி விஷயங்களைப் எடுத்துப் பேசுவதும், விளக்கங்களை அளிப்பதும் வழக்கம். கல்வித்துறையிலே பெற வேண்டிய பாடங்களை அவர்கள் அளிக்கிறார்கள் என்ற முறையிலே அவர்கள் பேசுவதைக் கவனித்து வந்திருக்கிறேன். அவர்கள் என்னுடைய பாராட்டுதலுக்குரியவர்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

நம்முடைய நண்பர் கிருஷ்ணசாமி வாண்டையார், ராஜ மார்த்தாண்டம், அம்மையார்திரிபுரசுந்தரி, எத்திராஜ், பொன்னுசாமிவில்லவராயர், ஆகியவர்கள் அனைவரும் எதிர்க்கட்யைச் சேர்ந்தவராக இருந்தாலும் எடுத்துச்சொல்ல வேண்டியவைகளை, இந்த அவை பலன் பெறத்தக்க வகையிலே எடுத்து சொல்லி வந்திருக்கிறார்கள். நண்பர் ராமதாஸ் அவர்களின் வயது என்ன என்று இப்போதுதான் பார்த்தேன். வயதிற்கு ஏற்ற பர பரப்போடு அவரது பேச்சு அமைந்து இருக்கிறது. இந்த வயதிற்கு இப்படிப் பேசாவிட்டால் வேறு எந்த வயதில் பேச முடியும்? ஆகையால் தான் அவர்கள் பேசுவதில் வியப்பு ஏதும் ஏற்படவில்லை. அதுமட்டுமல்ல எனக்கு ஒரு சந்தேகம். அவருடைய வீட்டிலே ராமதாஸ் என்ற பெயரை வைத்தபோது சாந்தமாக இருக்கக் கூடியவர் பெயரை வைத்து விட்டார்கள். அப்படியிருந்தும் எப்படி இவ்வளவு படபடப்பு இருக்கிறது என்று நான் ஆச்சரியப்பட்டேன். அதற்குப் பிறகு இந்த வயதிற்கு அந்தக் காலத்தில் இருந்த ராமதாஸ் இப்படித் தான் இருந்திருப்பார் என்று நினைத்துக் கொண்டேன். ஆலயத் திருப்பணி செய்து முடிக்கிற வரையில் அந்த ராமதாஸ் இப்படித்தான் ஆவேசமாக இருந்திருப்பார். நண்பர் ராமதாஸ் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் ஈடுபட்டு 25 வருட காலமாக காங்கிரஸ் கட்சியிலேயே பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள், who is who என்ற புத்தகத்திலே இருந்து இதை நான் அறிந்தேன் எனக்கு அதிலே உள்ளபடியே அவரைப் பாராட்ட வேண்டுமென்று தோன்றுகிறது. அவர் காங்கிரஸ் கட்சியிலே இருந்து, வேறு கட்சிகளுக்கு செல்லாமல் 25 வருட காலமாக ஒரே கட்சியிலிருப்பது உண்மையில்

பாராட்டத்தக்கது. அதிலும் இப்போது நடக்கிற நடவடிக்கைசு களை பார்க்கும் போது இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப் பார் என்று எண்ணவோ திடம் இல்லை என்று சொல்லுகிற அள விற்கு அரசியல் பிடிப்புகளையெல்லாம் கேலிக்கூத்து ஆக்குகின்ற நிலைமை இருக்கும் போது இளமை பருவத்திலேயே காங்கிரஸ் கட்சியில் ஈடுபட்டு காங்கிரஸ் கட்சியிலே ஈடுபட்டால் எந்த வித மான பலனும் கிடைக்காது என்ற தீர்மானத்தோடுதான், ஈடு பட்டிருக்க முடியுமே தவிர நாம் எம். எல். ஏ. ஆகலாம், ஆளுங் கட்சி ஆகலாம் என்ற எண்ணத்திலே இருக்க முடியாத வயதிலே ஈடுபட்டு அதிலே இருந்து ஆளும் கட்சியாகவும், பின் எதிர்க்கட்சி யாகவும் நல்ல அனுபவம் பெற்றிருக்கிறுர். இன்னும் இரண் டொரு வருடங்கள் போனுல் நண்பர் ராஜாராம் நாயடு அவர் களுக்கு இருக்கிற சாந்தமும், அமைதியும் நிச்சயம் இவர்களுக்கு வரும். அவர் பேசுகிற பேச்சில் ஆர்வம் கொந்தளிப்பதை நான் வரவேற்கிறேன். ஆர்வம் இருக்கலாம். ஆர்வம் இருக்கிற அள விற்கு பிடிப்பும் இருக்க வேண்டும் இந்த ஆர்வத்தை நான் வர வேற்கிறேன், ஆனுல் ஒன்றே ஒன்றை மட்டும் கவனிக்க வேண்டும் இன்னெரு கட்சியில் இருப்பவர்களும் இதே ஆர்வத்தோடு தான் இருப்பார்கள். இன்னெரு கட்சியிலே எந்த அளவிற்கு தியாகம் செய்து இருப்பார்கள் என்பதை உணர வேண்டும். அப்படி உணர்ந்தால் ஒருவருக்கு ஒருவர் மரியாதை காட்டிக் கொள்கிற முறையிலே நாம் நடந்து கொள்வதில் வெற்றி பெற்று விடுவோமேயானுல் பிறகு ஜனநாயகம் மிகச் சிறந்து விளங்க பாடுபட்டவர்களாவோம். இந்தியா முழுவதிற்கும் நல்ல தெளிவு ஏற்படும்படி செய்ய முடியும். தமிழ் நாட்டிலே இப்படி வெற்றி பெறச் செய்து செய்துவிடுவோமானுல் ஜனநாயகம் அணையாமல் பாதுக்காக்கப்படுகிறது என்பது பொருள். நண்பர் ராமதாஸ் பேசுகிறபோது மட்டுமல்ல கவனிப்பது. அவர் பேசி முடிந்த பிறகு எப்படியிருக்கிறுர் என்பதை அதிகமாகக் கவனிப்பது வாடிக்கை. உள்ளபடியே ஆத்திரத்துடன் இருப்பதுடனே சிரிப்பு வராமல் ஒரு ஓரத்திலே உட்கார்ந்து இருப்பார்கள். நண்பர் ராமதாஸ் பேசுகிறபோது கடுகடு என்று இருந்தாலும், பேசி முடிந்த பிறகு அப்படியே இருக்காமல் இருப்பதைப் பார்த் தால் பேசுகிற ·போது ஆத்திரமாக பேசுவது என்பது, ஏதோ ஆத்திரம் இருப்பதைப் போல் காட்டிக் கொள்கிறுர்களே தவிர நிச்சயமாக அவருக்கு ஆத்திரம் இல்லை என்பதைக் கண்டுகொண்டு

இருக்கிறேன். நண்பர் ராமதாஸ் சிரிப்பதைப் பார்த்தால் உள்ள படியே எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறார் என்பது தெரிகிறது. சிவப்பாக இருக்கிற ராஜாராம் நாயுடு அவர்கள் சிரிப்பதைக் காட்டிலும் கருப்பாக இருக்கிறவர்கள் சிரித்தால் அதற்கென்று தனியாக மதிப்பு உண்டு. அதைப் போல் நண்பர் ராமதாஸ் அவர்கள் சிரித்தால் அதில் அலாதியான வசீகரம் உண்டு.

எதிர்க்கட்சித் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்களைப் பற்றி பல வருடங்களாக அறிந்து இருக்கிறேன். அவர்கள் அமைச்சர் ராக இருந்த நேரத்திலும் காங்கிரஸ் உறுப்பினராக சட்டசபை யில் இருந்த நேரத்திலும் அவரைப்பற்றி நான் மிக அதிகமான அளவிற்கு பல ஆண்டுகளாக கவனித்துக் கொண்டு வந்திருக் கிறேன். அவர் காங்கிரஸ் கட்சியிலே மிகுந்த பற்று வைத்து நல்ல தொண்டாற்றி இருக்கிறார். அவர் காங்கிரஸ்கட்சி அரசாலு லும், வேறு கட்சி அரசாலும் ஒரு நல்ல நம்பிக்கை வைத்து இருக்கிறார், அந்த நம்பிக்கை என்னவென்றால் கிராமங்கள் முன்னேற வேண்டும். கிராமத்து மக்கள் முன்னேற வேண்டும். அவர்களுக்கு சுயஆட்சி கிடைக்க வேண்டும் கிராமத்து மக்கள் தங்களைத் தாங்களே நடத்திச் செல்லக் கூடிய அளவிற்கு பஞ்சா யத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் நல்ல முறையிலே இயங்க வேண்டும் அவைகளுக்கு போதுமான வாய்ப்புகளும், வசதிகளும் இருககின்றன. அதிகாரங்களும் உரிமைகளும் அதிக மாக தரப்படவேண்டும். என்பதைத் தொடர்ந்து அவர் வலியுறுத் திக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருந்த நேரத்திலும் சரி, பஞ்சாயத்துக்களின் ராஜ்ய சபை தலைவராக இருந்த நேரத்திலும் சரி, இப்போதும் சரி, அவர் எதைப் பேசினாலும் கடைசியில் இதில் தான் வந்து முடியும். உண்மையிலே நமது நாட்டு பிரச்சனை எதுவாக இருந்தாலும் கிராமத்து பிரச்சனைகளும் எந்த பிரச்சனையும் தீராது. கிராமத்து மக்கள் வலிவு பெறாமல், கிராமத்து மக்களிடம் செல்வம் சேராமல், நாட்டிலே செல்வம் சேராது. கிராமத்து மக்கள் அரசியல் தெளிவு பெறாவிட்டால் நாட்டில் அரசியல் தெளிவு இருக்காது. அதன் தனிப் பிரதிநிதியாக இருந்து அவர்கள் மிகச் சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டு வந்து இருக் கிறார்கள். எனவே மீண்டும் இந்த அவைக்கு வராவிட்டாலும் மீண்டும் இந்த அவைக்கு வருவார் என்பதிலே நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். தொடர்ந்து அவருடைய சிறந்த சேவை, அறிவு இந்த அவைக்கு கிடைக்கவேண்டும். அதன் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்ல பயன் கிடைக்கும் என்று நான் எதிர்பார்கிறேன் அவர் எதிர்க்கட்சித் தலைவராக!

# எதிர்க்கட்சி மரபுபற்றி அண்ணுவின் உரை

**மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணு:** தலைவர் அவர்களே, நம்முடைய பெருமதிப்பிற்குரிய நண்பர் வெங்கடராமன் அவர்கள் திட்டக்குழுவில் உறுப்பினராக பதவி ஏற்க இருப்பது நமக்கெல்லாம் அவர்கள் இங்கே இருந்திருந்தால் இன்னும் அதிகமான மகிழ்ச்சி இருந்திருக்கும். ஆனுல் அவர்கள் செல்கிற இடமும் நம்முடைய தொடர்பு உடைய இடம் என்கிற முறையிலும் அவர்களுடைய பணி இன்னும் அதிகமான அளவிற்குப் பயன் தருவதற்கு வாய்ப்புத் தருகிற இடம் என்ற முறையிலும் நாம் அவர்களுக்கு நம் வாழ்த்துக்களையும், அவரை அந்த இடத்திற்குச் சென்று தங்களுடைய கடமைகளைச் செம்மையான முறையில் நிறைவேற்றி, அதன் மூலமாக இந்த மாநிலத்திற்கும், நாட்டிற்கும் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்கின்ற நம்முடைய வேண்டுதல்களையும் தெரிவிக்க இருக்கிறேம். அவருடைய குணவியல்புகளைப் பற்றி எல்லா நண்பர்களும் இங்கே எடுத்துப் பேசினுர்கள் என்றுலும், அந்த தனிஇயல்பு பொதுவாக அரசியல் கட்சியில் பணியாற்றுகிற ஒவ்வொருவருக்கும் வரவேண்டும் என்பதுதான் முக்கியமானதாகும். ஏனென்றுல் தன் இயல்பு மட்டும் அரசியலில் செம்மைக் கொடுத்து விடாது அது ஆங்கிலத்தில் சொல்வதைப் போல 'in spite of' ஆகும். அரசியல் முழுவதற்கும் இப்படிப் பட்ட இனிமையான இயல்புகள் நல்லமுறையில் அமைந்து, ஜனநாயகம் கனியவேண்டும். பொதுவாக ஒரு கட்சியிலே உள்ளவர்கள் மற்றெரு கட்சியிலே இருப்பவர்களை மதிப்புக் குறைத்துத் தாக்கினுல் தான் கட்சியை நடத்த முடியும் என்ற தவருன எண்ணம் இருக்கிறது. ஒரு கட்சியிலே உள்ளவர்களை ஏதும் தெரியாதவர்கள் என்று சொன்னுல் தான் தங்கள் கட்சியை வளர்த்துக் கொள்ளமுடியும் என்ற தவருன கருத்து இருக்கிறது. ஒரு கட்சியிலே உள்ளவர்கள் எதைச் செய்யவில்லை. அதனுல் தான்

தங்கள் கட்சியை வளர்த்துக் கொள்ள முடியும் என்ற தவமுன எண்ணம் இருக்கிறது. இது எல்லாம் ஜனநாயகத்தில் ஆரம்ப காலத்தில் இருக்கின்ற இயல்புகளே. நாம் இதில் தேர்ச்சி பெற ஒவ்வொருவரிடமும் இனிய இயல்புகள் வரவேண்டும். ஒருவர் பல தொண்டுகள் செய்திருக்கிமுர் அதற்குப் பாராட்டுத் தெரி விக்கலாம். அந்த முறையிலே நண்பர் திரு. வெங்கடராமன் கொண்டிருக்கும் இனிய இயல்பு எல்லா கட்சியிலும் வரவேண்டும். குறிப்பாக அவருடைய கட்சியிலே உளளவர்களுக்கு நிரம்ப இருக்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. அப்துல்வகாப் அவர்கள் சொன் ஞர்கள். மிகவும் வேண்டியவர்கள் அல்லது, தான் மிகவும் மதிப் போடு கவனித்து வந்த இரண்டு நண்பர்கள் திரு. வெங்கடராம னும் இன்னும் முன்னுள் முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்களும் என்று (ஒரு மாண்புமிகு உறுப்பினர்: முன்னுள் அவைத் தலைவர் திரு. செரியன் அவர்களைத்தான் சொன்ஞர்) பக்தவத்சலத்தைக் கூட சொன்ஞர். அது நட்பு உரிமை காரணமாக ஒரு கட்சியிலே உள்ளவர்களுக்கும், இன்னெரு கட்சியிலே உள்ளவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டால் எல்லாவற்றையும் விட்டு விட்டு அவரவர் கள் தங்கள் தங்களுக்குள் இருக்கிற மனவிரோதத்தை விட்டு விட்டு, நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை யின் அடிப்படையில் அந்தப் பழக்கம் ஏற்படவேண்டும். என்னைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சியில் எல்லோரிடமும் எனக்கு மதிப்பு உண்டு. ஆனல் எல்லோரிடமும் மதிப்பு உண்டு என்ற லும், எனக்கு நட்பு ஏற்பட்டது காங்கிரஸ் கட்சியிலே இரண்டு பேரிடம் தான். ஒன்று நம்முடைய நண்பர் திரு. வெங்கடராமன் அவர்கள், இன்னெரு நண்பர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள். அவர்கள் இரண்டு பேரிடம் நட்பு உண்டு. திரு சுப்பிரமணியம் அவர்களும், நானும் சண்டை போட்டுக் கொண்டது உண்டு. ஆனல் வெங்கடராமன் அவர்களுடன் ஒருநாள் கூட சண்டை போட்டதில்லை. திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு திடீர் என்று கோபம் வரும். திடீர் என்று கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். ஆனல் நம்முடைய திரு. வெங்கட ராமன் அவர்கள் கோபித்துக் கொண்டு நான் பார்த்ததில்லை கோபித்துக் கோண்டு பார்க்காமல் இருக்க மூன்று காரணம் சாதாரணமாக உண்டு. பேசிக்கொண்டிருக்கும் அந்த

விஷயத்தில் அக்கறை இல்லாவிட்டால் கோபம் வராது. இவரைச் சொல்லவில்லை. பொதுவாகச் சொன்னேன். இன்னொன்று அவர்களுடைய மனதில் வெளியில் தெரியக் கூடாத விஷயங்கள் ஏதாவது இருக்குமானால் அவர்களுக்குக் கோபம் வராது. ஒருவர் சொல்வது புரியா விட்டால் கோபம் வராது. திரு. வெங்கட ராமன் அவர்கள் இந்தக் காரணங்களால் இப்படி இல்லை. சொல்லக் கூடிய விஷயங்களை நன்கு புரிந்து கொண்டு, அக்கறை காட்டி, அவருடைய தனியான திட்டத்தை வைத்துக்கொண்டு கோபித் தால் காரியம் ஆகாது என்று எண்ணி காரியங்களைச் செய்வார். சாதிக்கப்பட வேண்டும் என்றால் முயற்சியில் தான் செய்ய வேண்டும். இந்த மாதிரி தான் அவர்கள் எப்போதும் கோபம் கொள்ளாமல் கவனத்தோடு மற்ற கட்சியினரோடும் நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சிறந்த பண்பாடு எல்லோ ருக்கும் இருக்க வேண்டும் என்பது தான் அவருக்கு நாம் இப் போது தெரிவிக்கும் பாராட்டுதலுக்கு இருக்கிற பலனுகுமே தவிர இப்போது பாராட்டுவதின் மூலம் அவருடைய புதிய இயல்புகளை பாராட்டுவது என்பது பொருள் அல்ல. தவிரவும் அவருடைய இயல்புகள் நமக்கெல்லாம் வரவேண்டுமென்று விரும்பி நாம் இந்த இயல்புகள் அவருக்கு இருப்பதால் நம்முடைய மரியாதை யும், பாராட்டுதல்களையும் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

பொதுவாக நம்முடைய நண்பர் திரு. வெங்கடராமன் அவர்கள் தமிழகத்தில், இந்த தேசத்தில் என்னென்ன வெற்றிகளை கண்டிருக்கிறார்கள் என்பதை அவருடைய கட்சியில் இல்லாதவர் கள் சொல்லக்கேட்பது தான் உண்மையான பெருமையாகும். அவருடைய கட்சி அதைச் சொல்லுகிற நேரத்தில்தான் அது இப்படி இப்படி இருந்திருக்கலாம் என்று சொல்லத் தோன்றும். தமிழ் முறைப்படி அப்படி உதாரணமாக ஒருவரை கூட்டத்திற்கு தலைமை வகிக்கச் சொல்ல வேண்டுமென்றால் 'தங்களைத் தலைமை வகிக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்' என்று சொல்ல வேண்டும். அந்தத் தலைமைப் பதவியை வகிப்பவரும் பண்பாடு தெரிந்தவராக இருந்தால், என்னைத் தலைமை வகிக்குமாறு நீங்கள் எல்லாம் கட்டளையிட்டதற்கு இணங்க தலைமை வகிக்கிறேன் என்று சொல்ல வேண்டும். அதைவிட்டு, தலைவர் 'நீங்கள் ரொம்ப வேண்டிக் கேட்டுக் கொண்டதால் தலைமை வகிக்கிறேன். என்று சொன்னால், அப்படியா, நீ தலைமை வகித்தது போதும்'

என்று பின்னுல் இருந்து பதில் வரும். அதைப் போல் அவருடைய வெற்றிகள் திறமைகள் பற்றி மற்ற இதர கட்சிகள் பாராட்டுவதுதான் உண்மையிலேயே உள்ளதாக இருக்கக் கூடிய பாராட்டுதல்கள் ஆகும். அந்த வகையில் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள், அவருடைய கட்சியைச் சேராதவர்கள் தொழில் துறையில் ஈடுபட்டவர்கள், அவருடைய தொழில் ஆர்வத்தை நிரப்பப் பாராட்டியிருக்கிருர்கள். அவருடைய தொழில் ஆர்வம் எந்த அடிப்படையின் பேரிலும் ஏற்பட்டதல்ல. சமதர்ம அமைப்பா அல்லது முதலாளித்துவ அடிப்படையில் ஏற்பட்டதா என்ருல் இரண்டும் இல்லை. அவருடைய கொள்கையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் நம்முடைய நண்பர் பெரியவர் திரு. பாலசுப்பிரமணிய அய்யர் சொன்னதைப் போல ஹாஸ்டலில் படித்தவர். தொழிலாளர்களின் தலைவராக இருந்தவர். ஆகவே அவருக்கு வாதம் தெரியாது என்று யாரும் சொல்ல முடியாது. இதைக் கவனித்துக் கொண்டு இருத்தால், தொழில் வளர்ச்சியைப் பெருக்க முடியாது என்று எண்ணி அதை விட்டுக்கூட வைத்திருக்கலாம். நண்பர் நடராசன் அவர்கள் சொன்னபடி தொழிலாளர் பலன் அடையும் வகையில் தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்ற நிலைமை வரவேண்டுமாஞல் நண்பர் வெங்கடராமன் அவர்கள் அதற்கு உறுதுணையாக இருந்து செயல்படுவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏனென்ருல் அவர் மாளிகையில் பிறந்து இந்த கட்டிடத்திற்குள் வந்தவர் இல்லை. சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். தொழிலாளர் இயக்கத்தில் நீண்ட பலகாலம் இருந்து தொண்டாற்றி வந்தவர். ஆகையிஞல் அந்த தொழில் எல்லாம் தெரியாது என்பது பொருள் அல்ல. தொழில் துறையிலே அமைச்சராக இருந்து முழு அளவு பயன் தொழிலாளர் சமுதாயத்திற்கும், முதலாளிக்கும் கிடைக்கும் முறையில் அவர் சில மாற்றங்களை செய்திருக்கிருர். சட்ட மன்றங்களில் இருந்த போது ஜனநாயகத்தை மிகவும் பாதுகாத்து வந்து இருக்கிருர்கள். அவருடைய கட்சிக்காரர்கள் சிலருக்கு மட்டும் அது வேண்டுமாஞல் புரியாமல் இருக்கலாம். ஆகவே அந்த சிறந்த ஜனநாயக பண்பாடு மற்றவர்களுக்கும் வரவேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமும் ஆகும். இத்தகைய இனிய இயல்புகளை உடையவர் இப்போது திட்டக்குழு உறுப்பினராகச் செல்கிருர் என்ருல் அவரிடமிருந்து அதிகமான பலனை திட்டக்குழு வாயிலாக

நிரம்ப எதிர்பார்க்க நியாயம் இருக்கிறது. அதை எல்லாம் செய்து தருவார் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கைவைத்து இருக்கிறேன். அவர் ஒரு கட்சியிலே நெடுங்காலமாக இருந்து வந்தவர் என்றாலும், வெளிநாடுகளுக் கெல்லாம் அடிக்கடி சென்று, உலகில் வேறுபட்ட நாடுகளில் அரசியல் கட்சிக்காரர்கள் எப்படி நடத்துகிறார்கள் என்பதை நேரடியாகப் பார்த்து இருக்கிறார்கள். அதனுடைய விளைவாகத்தான் துவக்கத்தில் நான் சொன்னபடி அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் மற்றக் கட்சிகாரர்களிடம் மதிப்பும், மரியாதையும் காட்டி வந்திருக்கிறார்கள். தொழிலில் ஒரு கருத்து தேவையில்லை என்ற நல்ல பாடத்தை அவர்கள் பெற்று இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், அவர்கள் சென்று பார்த்த நாடுகள் எல்லவற்றையும் விட நம்முடைய நாட்டு ஜனநாயகம் மிகப் புனிதமான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. ஏதோ சிற்சில சமயங்களில் பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும், சில குழப்பங்கள் ஏற்படுகிற போது நமக்கே சலிப்பு ஏற்படுகிறது என்ன நிர்வாகம் நடக்கிறது என்று. சில நாட்களுக்கு முன்பு ஆஸ்திரேலியா நாட்டு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியும், ஆளும்கட்சியும் சண்டை போட்டுக் கொண்டு, ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு, சபையே அல்லோலகல்லோலப்பட்டது என்று போட்டு இருந்ததை பத்திரிகையில் பார்த்தோம். நம்முடைய நாட்டில் அப்படிப்பட்ட விசித்திரமான குஸ்தி நிகழ்ச்சிகள் இல்லை. நாம் 15 வருடமாக, 20 வருடமாகத் தான் இந்த நிலைமையில் இருக்கிறோம் என்றாலும், இதை மிகச் செம்மையாக நடத்திக் கொண்டு போவதற்கு முக்கியமான காரணம் நம்முடைய நண்பர் திரு. வெங்கடராமன் போன்றவர்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளில், சட்டமன்ற நடவடிக்கைகளில் போற்றிவரும் ஜனநாயக பண்பாடுதான் இப்படிப்பட்ட ஒரு உணர்ச்சி சென்னையைப் பொறுத்தவரை 20, 25 வருடங்களுக்கு முன்னால் இருந்தது. இடையில் தான் கெட்டது. திரு. சத்தியமூர்த்தி அய்யர் தேர்தலுக்கு நின்ற நேரத்தில் அவரை எதிர்த்து திரு. ராமசாமி முதலியார் தேர்தலுக்கு நின்ற நேரத்தில் இருவரும் ஒரே தெருவில் ஒரே நேரத்தில் வாக்குக் கேட்டுக் கொண்டு போவார்கள். திரும்பி வருகிறபோது ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வார்கள். நானே கேட்டு இருக்கிறேன்.

**திரு. ஆர். வெங்கடராமன்:** இருவரும் ஒரே மேடையில் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா: ஆமாம் ஒரே மேடையில் இருவரும் பேசியிருக்கிறார்கள், நம்முடைய சென்னையிலே அப்போது நான் குடிஇருந்த பகுதியிலே ஒரே வீதியிலே ஓட்டுக் கேட்டுக் கொண்டு போகும் நேரத்தில் சத்தியமூர்த்தி அவர்களைப் பார்த்து ராமசாமி முதலியார் கேட்பார் How are your prospeets என்று. you will get through என்று அவர் சொல்லுவார். இவர் திருப்பிக்கேட்பார், How are your prospects'என்று. 'Not so bright' என்று பதில் சொல்லுவார். இப்படித்தான் பேசியவர்கள் இடையிலே இந்த பத்து வருஷத்திலே, உருட்டு விழிதான் அரசியலுக்கு மிகத் தேவை என்ற தவறான கருத்திற்கு நாம் வந்து விட்டோம். ஆனால் ஒருவருக்கொருவர் உருட்டு விழியால் பார்த்தால் தான் அரசியல் வளரும், கட்சி வளரும் என்ற நிலையை நான் மாணவப் பருவத்திலே இருந்த போது நிச்சயமாகப் பார்த்ததில்லை. நண்பர் வெங்கடராமன் அவர்கள் சொன்னபடி, இருவரும் ஒரே மேடையில் பேசியது மட்டுமல்ல இப்போது அப்படி இரண்டு கட்சித்தலைவர்களும் ஒரே மேடையில் பேச வேண்டுமென்றால் புதிதாக அந்த இடத்தில் போலீஸ் ஸ்டேஷன் போட்டுக்கொண்டு தான் பேச வேண்டும். அந்த அளவுக்கு முன்னேற்றம் வந்திருக்கிறது. ஆகையினால் நண்பர் வெங்கடராமனைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில் அரசியலை இனிய இயல்போடு நடத்திச் செல்வதற்கு பழகிக் கொள்ள வேண்டுமானால், வெங்கடராமன் அவர்களை எண்ணிப் பார்த்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் எனக்கும், என்னைப் போன்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். நண்பர் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் சொன்னபடி எந்த இடத்திற்கு அவரை அழைத்தாலும், எந்த வித்மான வேலையை அவருக்குத்தரப்பட்டாலும், அந்தவேலையிலே திறமையைக் காட்டுவதன் மூலம் அவர்கள் நல்ல வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். அது ஒரு வகையில் நமக்கு வலிவு. இன்னொரு வகையில் நமக்கு பலவீனமும் அதிலே இருக்கிறது. எதிலே என்றால், யார் அழைக்கிறார்களோ, எந்த வேலையைக் கொடுக்கிறார்களோ அதிலே அதிகமான திறமையைக் காட்டி, மற்றவர்களை மறந்து விடும் தன்மை நமக்கு நிரம்ப ஏற்பட்டிருக்கிறது. எனக்கு ஒரே பயம் தான். வெங்கடராமன் அவர்களை அங்கே அழைத்திருப்பது திட்டக் கமிஷன். திட்டக்கமிஷனோ பேரரசிற்கு உட்பட்டதாகும். பேரரசு பார்த்து தமிழகத்திற்கு இதற்கு மேலே செய்வதற்கில்லை

என்ருல், நாம் இருக்கிற இடம் திட்டக்கமிஷன், நமக்கு அழைப்பு விடுத்து பேரரசு என்று சென்று விடுவார்களோ என்ற அச்சம் ஒருகணம் ஏற்படுகிறது. அடுத்த கணம் அது எனக்கு ஏற்பட்ட மன மயக்கமே தவிர உண்மையல்ல என்ற தெளிவு பிறக்கிறது. ஆனுல் எனக்கு அடிக்கடி இந்த மன மயக்கம் வருவது போல அவர் செல்ல இருக்கிற இடத்தில் அடிக்கடி மனமயக்கம் வரும். அவரிடத்திலே பேசுகிறபோது சொல்லுவார்கள், என்ன திருப்பித் திருப்பி சேலம் இரும்பாலே, இரும்பாலே என்று சொல்லுகிறீர் களே, இரும்பாலேயில் என்ன முன்னேற்றம் இருக்கிறது. மின்சாரம் வளரவேண்டும் என்று பேச வேண்டுமென்பார்கள். ஆமாம் என்று ஒப்புக் கொண்டால், ஒருவகையிலே அது உண்மையே தவிர, மின்சாரமும் வளர வேண்டும், சேலம் இரும் பாலேத் திட்டமும் மேற்கொள்ளப்பட வேண்டுமானுல், கொஞ்சம் கலக்கப்பட்டு விடும். நம்முடைய அண்மைக் காலத்திலே இந்தியப் பேரரசிற்குச் சென்றுள்ள மிகப் பெரியவர் ஒருவர், அந்த விதமான வாதம் அவரிடத்திலே சொல்லப்பட்ட நேரத்தில், அதை ஒத்துக் கொண்டு, தமிழகத்திற்கு மின்சார வளர்ச்சிதான் முக்கியமே தவிர, சேலம் இரும்பாலே முக்கியமல்ல என்று சொல்லி விட்டார். அது நம்முடைய நண்பர் வெங்கடராமன் அவர்களுக்குத் தெரியும் பல வருஷத்திற்கு முன்னுலேயே சேலம் இரும்பாலே நமக்கு கிடைத்திருக்க வேண்டியதை ஓரளவு தடுத்து நிறுத்துவதற்கு அது ஒரு முக்கியமான காரணமாக அமைந்திருந்தது. சேலம் இரும்பாலே அமைத்து விடுவதால் லட்சக்கணக்கான மக்களுக்கு வேலே வாய்ப்புக் கிடைத்துவிடாது. ஒரு திட்டத்தின் ஆரம்ப காலத்திலே வேலேவாய்ப்பு இருக்கின்ற தொழிலாளர்கள் திட்டம் முடிவுற்று இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு குறையத் தான் செய்வார்கள், சில திட்டங்களில். அப்படிப்பட்ட திட்டங் களிலே ஒன்றுதான் சேலம் இரும்பாலே. சேலம் இரும்பாலேத் திட்டம் ஆரம்பித்த உடன் 50,000 பேருக்கு வேலே கொடுத்து விடுவோம் என்று பொருளல்ல, ஆனுல் அதைத் தொடர்ந்து கிளம்பி எழுகின்ற பல தொழில்கள் நாடு பூராவும் பரவும். ஆகவே சேலம் இரும்பாலேத் திட்டம் நமக்கு தேவை என்பதை நண்பர் வெங்கடராமன் அவர்கள் பல ஆண்டு காலமாக இந்தியப் பேரரசிடம் வலியுறுத்தி வந்திருக்கிருர்கள். அதற்காக ஜெர்மனிக்குச் சென்ருர்கள் செக்கோஸ்லோவியாவுக்குக் சென்ருர் கள். அமெரிக்காவிற்கு சென்றிருந்தார்கள். ஜப்பானுக்குச்

சென்றிருந்தார்கள். எல்லாப்புள்ளி விவரங்களையும் சேகரித்து வந்தார்கள், அந்த நாடுகளிலே இந்த இரும்பை உருக்குவதற்கு என்னென்ன புதிய முறைகளை எல்லாம் வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொன்னார்கள். கடைசியாக அவர்கள் சட்டமன்றத்திலே சொன்னது எனக்கு நினைவிலிருக்கிறது. இப்போது அமெரிக்காவில் மின்சாரத்தின் மூலமாகவே இரும்பு உருக்குவதற்கான ஒருபுதிய முறையை ஆரம்பித்து அவர்கள் தொடக்க கட்டத்தில் இருக்கிறார்கள். அதையும் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்படி அந்த பிரச்சனையில் அவர்கள் ஈடுபட்டது மட்டுமல்ல, அவர்கள் அமைச்சராக இருந்த போது அவர் இருந்த அறையில் பலபேர் சென்றிருப்பார்கள். நான் பல அமைச்சர்களுடைய அறைகளுக்குப் போன வழக்க மில்லை அவருடைய அறைக்கு இரண்டொரு தடவை போயிருக்கிறேன் இங்கு சுவற்றிலேமாட்டி வைக்கப்பட்டிருக்கிறது ஒரு பெரிய இரும்புப் பட்டயம். அதைக் காட்டி சொல்லுவார், இது சேலத்திலே எடுக்கப்பட்ட இரும்பு. இது கிழக்கு ஜெர்மனியிலே உருக்கி வார்க்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுவார்கள்.

**திரு. ஆர். வெங்கடராமன்:** அதை இப்போது கருணாநிதி வைத்துக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு அறிஞர் அண்ணா ;** நம்முடைய கருணாநிதி அவர்களிடத்தில் அது இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதன் விதிமுறைகள் இடம்கொடுக்குமானால், நான்கூட கருணாநிதி அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அதை நண்பர் வெங்கடராமனிடத்தில் கொடுத்து அவர் அதை டெல்லிக்கு எடுத்துச் சென்று அதைப் பார்த்துக்கொண்டே இருக்கும்படிச் செய்யவேண்டும். ஏனென்றால் அதைப் பார்க்கும்போது சேலம் இரும்பாலைத் திட்டம் சாத்தியமா இல்லையா என்ற ஐயப்பாட்டை அது நீக்கிவிடுமென்று நான் நினைக்கிறேன். அவர் திட்டக்குழுவில் பேசும்போது இதை நிறைவேற்றிக் கொடுப்பாரா என்று யாருக்காவது ஐயப்பாடு இருக்கும். அதைப் பார்த்து உடனே அந்த ஐயப்பாடு நிச்சயம் தீர்ந்துவிடுமென்று நான் நம்புகிறேன், ஆகையினால் திட்டக்குழுவிற்கு அவர்கள் செல்லுவதன் மூலம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இன்னும் நாம் அதிகம் பயன் பெறப் போகிறோம் என்ற முறையில், அவரை வாழ்த்துகின்ற முறையில், நம்மையே நாம் உள்ளபடி தட்டிக் கொடுத்துக் கொள்கிறோம் என்பதுதான் அதன் உடபொருள்

ஆகும். அவருடைய வாழ்க்கையில் இதைத் தான் பெருமகிழ்ச்சி யாகக் கருதினர் என்பதை நமது பொன்னுசாமி செட்டியார் அவர்கள் சொன்னர்கள். தமிழ்நாட்டிலே மூலையிலே ஏதாவது ஒரு தொழில் வளர்ச்சி பெற்ருல் கூட நாட்டிற்குத் தொழில் வாய்ப்பு கிடைக்கிறது என்பதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள் என்று சொன்னர்கள். அவருடைய வாழ்க்கையில் ஒரு காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் எனக்குத் தெரியும். அதிலிருந்து அவர் மீண்டது நம்முடைய பதவிக் காலத்தில் தொழில் துறையை வளர்த்துக் கொடுக்க வேண்டும்; தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவேண்டும். அதையே தன்னுடைய வேலைத் திட்டமாகக் கொண்டதால்தான் அவர்களுடைய அரிய ஆர்வத்தை எல்லோரும் இன்று பாராட்டுகிருேம், அப்படிப்பட்ட ஆர்வமுள்ளவர் திட்டக் குழுவிற்குச் செல்லுவதில் பெரு மகிழ்ச்சி எய்துகிருேம். நம்முடைய பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் சொன்னர்கள், நல்லவர் போகிருர் என்று. எல்லோராலும் ஏசப்பட்ட ஒரு இடத்திற்குப் போகிருர் என்பது தான் இதிலே விந்தை என்பது கவனிக்கத்தக்கது. திட்டக் குழுவினிடத்திலே பல பேருக்கு இன்றையதினம் நம்பிக்கை இல்லை. திட்டக் கமிஷனில் இருக்கிறவர்கள் நல்லபடி திட்டம்போடுகிருர்களா என்பதிலே கொஞ்சம் அருவருப்பான எண்ணம் கூட இருக்கிறது. நல்லபடி அதை திருத்தியமைக்க அந்த திட்டக் குழுவில் துணைத்தலைவராக இருக்கிறவர் பொருளாதாரத்திலே பெரும் பேராசிரியராக உள்ள காட்கில் அவர்கள், திட்டக்குழு எப்படி எப்படி தவறு செய்து விட்டது என்பதை வெளிப்படையாகப் பேசியவர். அதிலே உறுப்பினராகச் செல்லுகிற நம்முடைய வெங்கடராமன் அவர்கள் திட்டக் குழுவினிடத்திலே வெளிக்குத் தெரியாமல் பலமுறை சண்டை போட்டிருக்கிருர். நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் அவர் பேசுகிருர் என்ருலே அங்குள்ளவர்கள் அவர் எதை வாங்கிக்கொண்டு போய் விடுவாரோ என்றுபயப்படுவார்கள். ஆகையினல், திட்டக்குழு திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தை தோற்றுவித்த காட்கில் அவர்கள் அதன் துணைத் தலைவராகவும், திட்டக்குழுவிலே ஏற்கனவே வாதாடிக் கொண்டிருந்த வெங்கடராமன் அவர்கள் உறுப்பினராகவும் இருப்பதால், திட்டக் குழு இனி மிகப் பயனுள்ளதாக்கப்பட்டு, அது திருத்தி அமைக்கப்பட முடியும் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட பயனுள்ள இடத்திற்கு ஏற்கெனவே பயன் தரத்தக்க பலகாரியங்

களிலே வெற்றி பெற்ற நமது நண்பர் செல்வதில் நான் பெருமை யடைகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, அவர் புதிய பதவியில் மிகுந்த வெற்றியைப் பெற்று, அவருக்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கவும், அவருக்கு தொடர்ந்து வெற்றி கள் கிடைக்க வேண்டுமென்னும் வாழ்த்தி, அவருக்கு என்னு டைய நல்லெண்ணத்தை வழங்குவதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

*Mr. Chairman:* I fully associate myself with all the fine sentiments expressed by Hon. Members from all sides of the House about Thiru R. Venkataraman. We all know that he is an educated and cultured person having a double university degree. It is by chance that we met for the first time about fifteen years ago. I noted then that he possessed two other degrees. They were in the nature of extra curricular degrees. One is his charming and smiling face and the other is his winning manners. These two attributes of his contributed a good deal for his successful career. Not only that. I know, when he takes up any scheme or project, he does not think of the initial stages only, he conceives the whole range of it from the beginning to the end and after conceiving the project or scheme in such a thorough fashion he takes all the necessary steps for the successful completion of the thing. That is why he has been able to develop the industries in our state to a very remarkable extent.

When I heard the news of his appointment to the planning commission. I hesitated to congratulate him. But when in my room and in my presence others congratulated him. I had no other go but to follow suit. Why I hesitated to congratulate him was I felt we were to sing a very sea soned and efficient parliamentarian and we would be creating a void in that place. This is without meaning any disrespect to others. But I consoled myself like others by thinking that his going

there would be useful to the state and he would be most fitted and efficient person for the place.

Now, planning is not simply a question of allotting so much money for this state or that state or this scheme or that project. In the real sense of the word what it means is that all the concommitents should be looked into. Our Friend is already well versed in that. He will be an ideal Planning Member. I hope they will give him the necessary help and encouragement there and would not put hurdles in his way.

Now our Friend has got not only local but international experience. Some of us are accustomed to go to Ootacamund or Kodaikanal as our summer exodus. But our Friend's summer exodus is either Germany, Geneva, or New york or some other foreign country so he has been able to gather a lot of experience in all those countries, especially the most industrially advanced countries. It has been of immense use to him in his capacity as the Minister for Industries.

Then, I do not want to repeat all the good sentiments expressed about him. The Hon. Chief Minister, the Hon. Member Thiru K. Balasubramanya Ayyar and other have spoken about him. I want to keep some of the things in my heart and I do not want to exhaust them.

I wish him a successful career there and no doubt he will bring a very good name to our Tamilnad. I wish him all success.

திரு. ஆர். வெங்கட்டராமன்: சபைத் தலைவர் அவர்களே, சாதாரணமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பேசும் திறமை

பெற்றவன் என்று நான் என்று நினைத்துக் கொண்டிருந்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று இன்றைக்கு தெரிந்துகொண்டேன். இந்த மன்றத்திலே எனக்கு அளிக்கப்பட்ட உயர்ந்த பாராட்டுதல்களுக்கு, எந்த அளவிற்கு நான் உரித்தானவன் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, அமைச்சர்களும், மற்ற உறுப்பினர்களும், எல்லோரும் என்னிடத்தில் கொண்டுள்ள அன்பின் காரணமாகவே இந்தவிதமான பாராட்டுதல்களை தெரிவித்துள்ளார்கள் என்று கருதுகிறேனே தவிர, இவற்றையெல்லாம் பெறுவதற்குத் தகுதி படைத்தவன் என்று நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சபையில் 10 ஆண்டுகளாக ஓய்வு பெறுகிற அங்கத்தினர்களுக்கு எல்லாம் நான் வழியனுப்புதல் செய்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளின்போது அவர்கள் செய்த சேவைகளைப் பாராட்டியிருக்கிறேன். அவர்களில் சிலர் இந்தச் சபைக்கு திரும்பி அங்கத்தினர்களாக வருவார்கள்; சிலர் திரும்பி வராமல் ஓய்வு எடுத்துக் கொள்ளுவார்கள். இந்தவிதமான நிலைமை இருக்கும். எப்படி யிருப்பினும், அவர்கள் இந்தச் சபைக்கு ஆற்றிய பணியை என்றென்றும் மனதில் வைத்திருப்போம் என்று சொல்லுவது உண்டு. இன்றைக்கு நான் இந்தச் சபையில் இருந்து விலகுகிறபோது அதையேதான் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சபை என்னிடத்தில் காட்டிய பரிவு, சபையின் அங்கத்தினர்கள் என்னிடத்தில் காட்டிய அன்பு, என் மனதை விட்டு அகலாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகம் நடைபெறுகின்ற நாடுகளில், கட்சிகள், பிரதி கட்சிகள் இருந்தால்தான் பாராளுமன்ற ஜனநாயகம் நடைபெறும். பாராளுமன்ற ஜனநாயகம் நமது நாட்டிற்கு சரியானதா, உகந்ததா என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. என்னைப் பொறுத்தவரையில், பாராளு மன்ற ஜனநாயக முறையைவிட ஜனாதிபதி முறை நமது நாட்டுக்கு உகந்தது என்று கருதி, அந்தக் கருத்துக்களை எல்லாம் வெளியிட்டு வந்திருக்கிறேன். ஆனால் தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நமது சட்ட மன்றம், மேல்சபை நடவடிக்கைகளைப் பார்த்தவர்கள், அதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், பாராளு மன்ற ஜனநாயகத்திற்கு எந்தவித பங்கமும் இந்த நாட்டில் ஏற்படாது, இந்த நாட்டிற்கு அது உகந்ததாக இருக்கும் என்று உறுதியாக நம்பிக்கை கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை, சட்ட

சபை நடக்கிற காலத்தில், அப்போது எதிர்க் கட்சி தலைவராக இருந்த டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்களும், கனம் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களும் அன்பழகன் அவர்களும், ஆளுங் கட்சியின் கருத்துக்களை எதிர்த்து ஆணித்தரமாக அழுத்தம் திருத்தமாகப் பேசுவார்கள். ஆனால் சபை முடிந்த பிறகு ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் எல்லோரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களைப்போல் அன்புடன் பழகிக் கொண்டிருந்தோம். அந்த முறை இருப்பதால்தான். ஜனநாயகம் இந்த நாட்டில் மேலோங்கி சிறப்புறும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்து கிறது. அம்மாதிரியான மரபுகளைத்தான் நாம் வளர்க்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒருமுறை டில்லிக்குச் சென்றிருந்தேன். அது 30, 35 ஆண்டுகள் இருக்கும் என்று நினைக்கிறேன். அங்கே நடந்த பாராளுமன்ற சபையைப் பார்த்தேன். அப்போது அது சென்டிரல் அசெம்பிளியாக, மத்திய சட்டசபையாக இருந்தது. அப்போது நமக்கு ஆளுங் கட்சித் தலைவராக வரக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காது என்ற நிலை இருந்ததால், எதிர்க் கட்சித் தலைவராக வரவேண்டுமென்று நினைத்தேன். அந்த ஆசை இன்றைக்குப் பூர்த்தியாகிவிட்டது. அதே போல்தான், 1950-ம் ஆண்டு ஜவஹர்லால் நேரு அவர்கள் இளைஞர்கள் எல்லோரையும் அழைத்து பாராளுமன்றத்தில் சொன்னார். நான் திட்ட கமிஷனை அமைக்கப் போகிறேன்; திட்ட கமிஷன் நல்ல காரியங்களை உருவாக்க வேண்டும்; இந்த நாட்டின் முன்னேற்றம் எல்லாம் திட்ட கமிஷன் மூலமாகத்தான் செய்ய முடியும்; வேகமாக காரியங்கள் நிறைவேற வேண்டுமென்றால் திட்டக் கமிஷன் அவசியம் என்று பேசினார். அன்றைக்கு நினைத்தேன் நாமும் திட்ட கமிஷன் அங்கத்தினராக ஆகவேண்டுமென்று. அந்த சந்தர்ப்பம் இன்றைக்கு ஏற்படுகிறது. எந்த விதமான நிலைமைகள் ஏற்பட்டாலும், அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு, வரவேற்பதுதான் மனித இயல்புக்கு, பண்புச்கு ஏற்றதாம். எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்று வருத்தத்துடன் உட்கார்ந்து கொள்பவர்களுக்கு ஜனநாயகப் பண்பு குறைவு என்றுதான் நான் எண்ணுகிறேன். அந்த முறையில்தான் காங்கிரசுகட்சி சென்ற பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த போது கூட முதன் முதலாக கடற்கரை கூட்டத்தில் நான் சொன்

னேன், "மக்கள் மாறுதலே விரும்பினூர்கள். மாறுதல் ஏற்பட்டு விட்டது. மாறுதலுக்கு ஏற்றவாறு நாமும் நமது வாழ்க்கையில் நடந்து கொள்ளவேண்டும்" என்று. மக்களிடத்தில் எப்போது அரசுரிமையைக் கொடுத்தோமோ, அப்போது மக்களுக்கு ஆட்சி மாற்றுகிற உரிமை இருக்கிறது என்று எடுத்துச் சொன்னேன். இந்த பண்பு நமது நாட்டில் வளர வேண்டும் என்ருல், நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல், கட்சியில் இருப் பவர்கள், எதிர்க்கட்சிகளில் இருப்பவர்களே விரோதிகள் என்று கருதும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளாமல், நாம் எல்லோரும் நாட்டின் சேவை என்ற தலைப்பில் ஈடுபட்டிருக் கிருேம்; நாட்டுசேவை செய்வதற்கு பல இடங்களில் அவரவர்கள் அமர்ந்து கொண்டு வேலே செய்கிருர்கள்; எந்த இடத்தில் அமர்ந் திருந்தாலும், லட்சியம், குறிக்கோள், நாட்டுசேவை என்பது உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த முறையில் பணிபுரிய இதற்கான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டு மென லட்சியம் உருவாக வேண்டும். அதிர்ஷ்டவசமாக நம் முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தப் பண்பை இந்தச் சட்டசபையில் வெகு நன்ருக இந்த நான்கைந்து மாதங்க ளாக எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். இந்த விஷயத்தில் எனக்கு இந்த சபையை விட்டுப்போவதில் சந்தோஷம். எனக்கு இருந்த ஒரு பெயரை அவர் கவர்ந்து கொள்வார்களோ என்ற அச்சம் வந்து விட்டது. பொருமை வரக்கூடாது அல்லவா? அதனுல் இடம் கொடுத்து விட்டுப் போவது நல்லது என்று நினைக்கிறேன். அவர்கள் இன்றைக்குக் கூறிய நல்ல வார்த்தைகள் எப்படி ஜன நாயகம் நம்முடைய நாட்டில் நடைபெற வேண்டுமென்று சொல் கிருேமோ அது நடைமுறையில் ஒவ்வொரு திருப்பங்களிலும் உருவாகிவருமானுல் சென்னே ராஜ்யம் எப்படி பல துறைகளில் உலகத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று சொன் னேனே அதைப்போல ஜனநாயகப் பண்பிலும் தமிழ்நாடுதான் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்ற நிலே வரும். தனிப்பட்ட முறையில் எனக்கு வெகுவாக ஆதரவு கொடுத்து ஊக்கமளித் தவர்கள் இந்த சபையில் பலர் இருக்கிருர்கள். டாக்டர் செரியன் அவர்கள் நான் இந்தசபைக்கு முதல்வராக வந்த காலத்திலிருந்து வெகு அன்போடு என்னிடத்தில் பழகி எந்தெந்தத் துறையில் நான் எப்படி ஈடுபட்டு வேலே செய்கிருேமோ அதையெல்லாம் சீராக அமைத்து இந்த சபையில் எந்தவிதமான சந்தடியும்

ஏற்படாத வகையில் சிறப்பாக நடத்திச் சென்றூர்கள். அடுத்த படியாக இப்போது தலைவராக உள்ள நீங்கள் இந்த சபைக்கு ஒரு அலங்காரமாக இருக்கிறீர்கள் என்று சொன்னுல் மிகையாகாது. சபைத் தலைவர் என்பவர் சபையில் இருக்கிருரா இல்லையா என்று சந்தேகிக்கும் நிலைமை இருக்க வேண்டும், சபை நடப்பதற்கு வேண்டிய உதவிகளை செய்து தானே இந்த சபையில் நடைபெறும் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி விலகிக்கொண்டு இயந்திரம் ஓடுவதற்கு எண்ணெய் எப்படி உபயோகிக்கப்படுகிறதோ அந்த முறையில் பணியாற்றுவதுதான் தலைமைக்கு மிகச் சிறந்த பண்பு. இந்தப் பெரும் பொறுப்பை நம்முடைய தலைவர் வெகு அழகாக நமது கண்ணில் படாமலேயே மனதில் படும்படியாக நடத்திக்கொண்டு செல்லுகிருர்கள். என்றென்றும் நான் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்த சபையின் தலைவராக இருந்து என்றும் பணியாற்றுவார்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எனக்கு செய்த பெரும் உதவிகளுக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிகொள்ள விரும்புகிறேன்.

*Mr. Chairman:* No plan of my going to Delhi.

திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒருவேளை நாம் பிளான் போடலாமா என்று கூட நினைத்தேன். அடுத்து எதிர்க்கட்சி தலைவராக இருந்த டாக்டர் லெட்சுமணசாமி முதலியார் அவர்களும் திரு. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களும் இன்னும் இதர நண்பர்களும் சட்டசபையில் சிறந்த நடவடிக்கைகள் நடப்பதற்கு பெரிய சேவை செய்திருக்கிருர்கள். அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து கூறிய பல்வேறு ஆலோசனைகளை நான் மகிழ்ச்சியோடு ஏற்றிருக்கிறேன். குறிப்பாக சட்ட பிரச்சனை வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு இடத்தில் திரு. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் சிக்கல்களை காட்டிவிடுவார்கள். உடனே அந்த சிக்கலை தீர்ப்பதற்காக நாங்கள் அந்த பில்களை ஒத்திப்போட்டோ, வாபஸ்செய்தோ எப்படியோ திருத்தி வைத்திருக்கிறோம். எத்தனையோ ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காத லீகல் அட்வைஸ்களை திரு. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் கொடுத்தார்கள் என்று அடிக்கடி அவர்களைப்பற்றி சொல்வதுண்டு. அதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றிய பணி ஒரு விதமாக இருந்தது. இங்கு மேல் சபையில் வேறு விதமாக இருந்தது. நண்பர் அன்பழகன் இங்கே சொல்வார், அந்த சபையிலும் இங்கேயும் உறுப்பினராக இருந்திருக்கிறேன் அங்கே பேசியதுபோல காரசார மாக பேசுவதற்கு இங்கே வரவில்லை. இங்கே வந்ததும் காரம் போய் விடுகிறது சாரம் தான் வருகிறது என்று சொன்னார்கள். அது போன்ற சூழ்நிலை இங்கே இருக்கிறது என்பார். அந்த சூழ்நிலையை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளும் பண்பை வைத்துக் கொண்டிருந்தால் இங்கு வந்து பேசும் போது ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல பேசுவதற்கு முடிகிறது என்று சொல்வார். சபை அங்கத்தினர் ஒவ்வொருவரைப் பற்றி யும் பல நல்ல விஷயங்களைக் கூற முடியும். அதற்கு அவகாச மில்லை. அங்கத்தினர் எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இந்த மந்திரி சபையில் இருக்கிற அனைவரும் இங்கிருந்து பாராட்டுதலில் பங்கெடுத்துக் கொண்டது அவர்கள் எவ்வளவு அன்பு என்பேரில் வைத்திருக் கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு. அமைச்சர்களுக்கு எவ்வ ளவு வேலையிருக்கும் என்பது எனக்குத் தெரியும். எத்தனைதரம் சீட்டுக் கொடுத்து ரூமுக்கு அழைத்துக்கொண்டு போவார்கள் என்று தெரியும். சட்டசபையில் இருக்கிறார்கள் என்று சொன்னால் கூட பொருட்படுத்த மாட்டார்கள். என்னய்யா சட்டசபை? நாங்கள் வந்து காத்துக் கொண்டிருக்கிறோம், தெரியவில்லையா என்று கேட்பார்கள். இதற்குள்ள முக்கியத்துவம் தெரியாத தால் இப்படிச் சொல்லுவார்கள். நான் முன்பு சொன்னது போல இந்த மந்திரி சபை சிறப்பாக நல்ல பெயருடன் பணி யாற்ற வேண்டுமென்பது தான் என்னுடைய விருப்பம். அதனால் பெருமைப் படக்கூடியவன் நான் என்பதில் சந்தேகமில்லை. தமிழகம் பெருமைப்படுமென்பதில் சந்தேகமில்லை. நிர்வாகத்தில் இன்று ஒருவர் இருக்கலாம், நாளை மற்றவர் வரலாம். தாசில்தார் மாறுவது போலத்தான் இந்த நிர்வாகம் மாறுவதும். அந்தத் துறையில் நல்லபணி செய்து நல்ல பெயர், நல்லபுகழ் எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

திட்டக் கமிஷன் சம்பந்தமாக ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லலாமென்று நினைக்கிறேன். நான் ஆரம்பத்தில் சொன்

னேன், சொல்லிழந்து நிற்கிறேன் என்று. அது ரொம்ப பொருத்த மானது. இனிமேல் நான் பேசமாட்டேன். இனி என்னுடைய வேலே சிந்தனே செய்வது, எழுதுவது என்று இருக்குமே தவிர பேசுவதாக இருக்காது. அரசியல் வாழ்க்கையில் அரைகுறையாகச் செய்து அதிகமாகப் பேசுவது ஒரு விஷயம். திட்டக்கமிஷன் வேலேயில் அரைகுறையாகத்தானே இன்று சொல் கூட இழந்து நிற்கிறேன் என்று நினைக்கிறேன். திட்டக்கமிஷன் இன்றைக்கு புதிய பொறுப்பை ஏற்க வேண்டிய நிலேமை இருக்கிறது. நாட்டி னுடைய பொருளாதார நெருக்கடி ஏற்படுகிற பல்வேறு பிரச் சனேகள், கிடைக்கக் கூடிய அயல்நாட்டு உதவிகள், அதில் ஏற்பட் டிருக்கின்ற வேறுபாடுகள் இவற்றையெல்லாம் வைத்து நாட்டு முன்னேற்றத்திற்கு புது நிலேமையை உருவாக்கும் பொறுப்பு புது திட்டக்கமிஷனுக்கு இருக்கிறது. ஒரு காலத்தில் நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பேசும்போது, திட்டக்கமிஷன் நிர் வாகத்தில் திட்டங்களே நிறைவேற்றுவதால் தலேயீடு கூடாது என்று சொன்ன நான் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற நிலேமைக்கு வந்திருக்கிறேன். திட்டம் போடுவது திட்டக் கமிஷனுடைய பொறுப்பாக இருக்கவேண்டும். திட்டங்கள் சீராக நிறைவேற்றப்படுகிறதா என்று கண்காணிப்பது அதனு டைய பொறுப்பாக இருக்க வேண்டும். திட்டங்களே மாற்ரு மல் ஒழுங்காக நிறைவேற்றுகிருர்களா என்று கண்காணிப்பதும் அதனுடைய பொறுப்பாக வேண்டும். திட்டம் போட்டபிறகு அவற்றை நிறைவேற்றுகிறவர்கள் நிர்வாகத்திலுள்ள அமைச்சர் கள்தான். அதில் எந்தவிதமான குறுக்கீடும் இருக்கக்கூடாது. அதனுல்தான் பல தவறுகள் ஏற்பட்டது என்ற கருத்து அமைச் சரவையில் இருந்த போது எழுந்ததுண்டு. அதை எடுத்துச் சொன்னதும் உண்டு. புது யோசனே செய்ய வேண்டுமென்ருல் அமைச்சரவை தனியாகச் செய்யாமல் திட்டக் கமிஷனுடைய ஆலோசனேயைப் பெற்று எப்படி மற்ற திட்டங்களுடன் சேர்த்து உருவாக்க வேண்டுமென்று பார்த்து செய்ய வேண்டியது அமைச் சரவை பொறுப்பாக இருக்க வேண்டுமென்ற கருத்தையெல்லாம் நான் அன்று அமைச்சராக இருந்த காலத்தில் சொன்னதுண்டு. அதை நிறைவேற்றுகிற பணியைத்தான் பொதுவாக திட்ட கமிஷன் ஏற்று இருக்கிறது. ஒவ்வொரு ராஜ்யத்தில் எந்தெந்த திட்டங்கள் எவ்வளவு அவசியம் என்பதை அந்த ராஜ்யத்தில் இருப்பவர்கள்தான் உணர்வார்கள். ஆகவேதான் நான் நேற்று

21829

பங்கு எடுத்துக் கொண்ட விவாதத்தில் கூட சொன்னேன். ஒரே கட்சி மத்திய சர்க்காரிலும், ராஜ்ய சர்க்காரிலும் இருந்த காலத்தில் தனியாக சர்க்காரிலும், ராஜ்ய சர்க்காருக்கு தேவையில்லை. அந்த கொள்கை அளவிலே இரண்டு நிர்வாகத்தில் இருப்பவர்களும், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் இரட்டிப்பு மனப்பான்மை அவர்களுடைய கருத்தில் தோன்றுது. ஆனுல் மாறுபட்ட கருத்துகள் கொண்ட நிர்வாகம் ராஜ்யத்திலும், மத்திய சர்க்காரிலும் ஏற்படுகிறபோது, அந்தந்த ராஜ்யங்கள் திட்டக்குழுக்கள் தனியாக அமைத்துக்கொள்ள வேண்டும். எந்த திட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பது அந்த ராஜ்யங்களுடைய முக்கிய தேவை என்ன என்பதும் முதலிடம் எதற்கு கொடுக்க வேண்டும் என்பதும் ராஜ்யங்கள் தான் தங்கள் திட்டக்குழு மூலமாக அமைக்கவேண்டும் என்று சொன்னேன். அதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெகுதாராளமாக, சற்றும் ஏதோ எதிர்கட்சி தலைவர் சொல்லுகிறுர் என்று நினைக்காமல் உடனடியாக நேற்றே அதை ஒப்புக் கொண்டார்கள். அதன் பலனையும் விரைவில் எதிர்பார்க்கலாம் என்று நம்புகிறேன். இறுதியாக இங்கு சபையில் அங்கத்தினர்களாக இருக்கிற எல்லோருக்கும் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சபையில் பத்து ஆண்டுகள் இருந்த காலம் என்னுடைய வாழ்வில் மிகவும் மகிழ்ச்சிகரமான காலம். 10 ஆண்டு தான் சாதாரணமாக ஒருவருடைய வாழ்க்கையில், அதாவது 45 முதல் 55 வரையிலும் நின்று திட்டவட்டமாக ஒரு அலுவலை செய்யக் கூடிய உறுதிகொண்ட காலம். அந்த காலத்தில் உங்கள் எல்லோரிடமும் இருந்தது உங்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்று, நல்ல பணிகளை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது என்று எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சபையிலிருந்து விலகினுலும் இந்த சபையின் அங்கத்தினர்களும் அவர்களுடைய எண்ணங்களும் என்மனதை விட்டு அகலாது என்று சொல்லி என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

---

# “நிதி ஒதுக்கீடுபற்றி அண்ணா”

**சட்டமன்ற நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா**
**மார்ச்சு திங்கள் 27—1968**

**பேரறிஞர் அண்ணா:**—*தலைவர் அவர்களே! இறுதி துணை மதிப்பீட்டினுடைய விவாதத்தில் கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பல நல்ல கருத்துக்களுக்காக முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பொதுவாக துணை மதிப்பீடுகளில் கொள்கை விளக்கங்கள் அல்லது கொள்கை பிரச்னைகள் அவ்வளவாக விவாதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லாமல், பொதுநிதிநிலை அறிக்கையின் போது அதற்கான வாய்ப்புகள் நிரம்ப இருப்பதால், துணை மதிப் பீடுகளை ஆராய்கிறபோது எந்தெந்த இடத்தில் செலவினம் அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது, அதனால் விளையக் கூடிய பலன் என்ன என்ற அளவில் இந்த விவாதம் அமைவது வாடிக்கை ஆனாலும் அதையொட்டி சில பல நல்ல கருத்துக்களையும் உறுப் பினர்கள் விவாதித்துச் சொன்னதை நான் வரவேற்கிறேன். இந்த விவாதத்தின் போது மட்டுமல்லாமல், எப்போதும் நடக் கின்ற விவாதத்தில் இரு அவையிலும் உள்ளவர்கள் இன்னின்ன செலவினங்களை அதிகப்படுத்த வேண்டும், இன்னின்ன காரியங்களை துரிதப்படுத்தவேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறபோது, ஏன் அவர்கள் இப்படியெல்லாம் சொல்லுகிறார்கள் என்ற உணர்ச்சி எனக்கு ஏற்படுவதில்லை. அவர்கள் சொல்லுவதையெல்லாம் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம்தான் ஏற்படுகிறது என்பதை நான் எப்போதும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.*

*கிராமப்புறத்துப் பாதைகள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கனம் உறுப்பினர்கள் கேட்கின்ற நேரத்தில், கிராமப்புறத்துப் பாதைகள் அப்படி அமைக்கத் தேவையில்லை*

என்று பொறுப்புள்ள எந்த அரசாங்கத்தில் உள்ளவர்களும் சொல்ல மாட்டார்கள். ஆனால் அவைகளுக்குச் சரியான முறையில் நிதி ஒதுக்கம் செய்வதற்கு வாய்ப்புக்கள் இல்லையே என்று அரசில் உள்ளவர்களுக்கு அந்த ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்ற முறையில் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்கு நான் மிகவும் நன்றி செலுத்திக் கொள்ளுகிறேன்.

நம்முடைய எதிர்கட்சித் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்கள், இந்த இறுதி துணை மான்ய கோரிக்கையில் எந்தெந்த இனத்தில் செலவு அதிகப்படுத்தப்பட்டு அதிகத் தொகை தரப்பட்டிருக்கிறது என்பதை, நான் சொல்லவேண்டியதைக் கூட அவர்கள் சொல்லிலிருப்பதைப் பார்த்தால், அவர்கள் இந்த விவாதத்தில் எவ்வளவு பொறுப்போடு கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஏதோ கேட்பது என்றால் கேட்டுவிடலாம்; எதிர்கட்சியாக இருக்கிறோம் என்பதால் கேட்டுவிடலாம்; இதற்கு எதற்காக 15 லட்சம் ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டும்; இதற்கு எதற்கு 20 லட்சம் ரூபாய் என்று எல்லாம் கேட்டுவிடலாம். ஆனால் அந்த முறையில் அவர்கள் சொல்லாமல், "இவைகள் எல்லாம் தேவையானவைகள்; இவைகளைச் செய்ததற்காக நான் பாராட்டுகிறேன்" என்று எல்லாம் எடுத்துச் சொன்னதற்கு நான் மிகவும் நன்றி உள்ளவனாக இருக்கிறேன். அவர்கள் இன்றையதினம் இவைகளை எல்லாம் எடுத்துச் சொன்னதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்பதை முதலில் சொல்லிவிடுவதற்குக் காரணம், அவர்கள் முன்பு இங்கே பேசும் போது, பல இனங்களில் நாம் செலவினத்தைக் குறைத்துவிட்டோம்; சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு அதிகமாகக் குறைத்திருக்கிறோம் என்று சில விவரங்களைச் சொன்னார்கள். அன்றயதினமே நான் அவருக்கு அறிவிக்கப்பட்ட விவரங்கள் அல்லது அவருக்குக் கிடைத்திருக்கின்ற விவரங்களிலிருந்து அவர் செய்த முடிவுகள் அவ்வளவு சரியானவை அல்ல என்று பொதுப்படையாகச் சொன்னேன். சில குறிப்பிட்ட கருத்துக்கள்—சில இனங்களில் இப்போது வந்திருக்கின்ற அரசு தொகையை குறைத்துவிட்டது என்று நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது—பொதுமக்கள் மனதில் அப்படிப்பட்ட கருத்தை உண்டாக்கிவிடும் என்பதால் அவைகளைப்பற்றி இரண்டொரு விளங்கங்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக அவர்கள் இந்த கிணறுக்கு தரப்படுகின்ற மான்யங்கள் கடன்கள், டிராக்டர்கள் இவைகளுக்கு தரப்படு பவைகள் குறைக்கப்பட்டு இருப்பதாக தோற்றம் அளித்தாலும் அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டியது இந்த ஆண்டு நாம் புதிதாக, ஆங்கிலத்தில் சொல்வதானால் Institutional finance அதிகப்படுத்த வேண்டும் என்றமுறை வகுத்து இருக்கிறோம். அதற்கு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கு வேண்டிய வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவைகள் காரணமாகக் கிடைப்பதும், இப்போது செலவழிக்கப்படுவதாக சொல்வதைக் கூட்டிப் பார்த்தாலும், அதிகமான அளவு இந்த ஆண்டு செல வழித்து இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். பொதுவாக அதைச் சொல்வதானால் சென்ற ஆண்டு Tractor hire purchase, New well subsidy scheme 1967—68-ல் 13—05 கோடி செலவழித்து இருக்கின்றோம். Institutional finance செய்கின்ற ஏற்பாட்டைப் பொறுத்து இந்த வருடத்தில் 1968—69—ல் 14—22 கோடி செலவழிப்பதாக நாம் திட்டமிட்டு இருக்கிறோம். ஆகையினால் குறைந்துவிட்டது என்று நாம் கருதுவதற்கு காரணம் இல்லை. நான் சொன்ன 14—22 கோடி Agricultural Refinance Corporation மூலமாக கிடைப்பதை சேர்க்காமல் சொல்லி இருக்கிறேன். அதிலே கிடைப்பதையும் சேர்த்தால் இன்னும் சற்று அதிகமாகக் கூட இருக்கலாம். கிணறு மான்யம் பொறுத்த வரையில் இந்த வருடத்தில் 40.16. லட்சம். அடுத்த வருடம் 1968—69க்கு ரூ 62. 27 லட்சம் செலவழிக்கத் திட்டம் இட்டு இருக்கிறோம். ஆகையால் இந்த இனங்களிலே குறைக்கப்பட்டு இருக்கிறது என்று கருதத்தேவையில்லை. இன்னொன்று சொன்னார்கள். Rural water supply இவைகளுக்காக கோரப்படுகிறது என்று சொன்னார்கள். சில இனங்களில் குறைக்கப்பட்டு இருந்தாலும் பொதுவாக water supply, drainage இந்த இரண்டு இனங்களை யும் நாம் கணக்கு எடுத்துப் பார்த்தால் 1967—68-ல் ரூ 32.2. லட்சம் செலவழிக்கப்பட்டு இருக்கிறபோது 1968—69 ஆண்டுக்கு ரூ 250. லட்சம் செலவழிக்க இருக்கிறார்கள். துண்டு விழுந்து இருக்கிறது என்று அவர்கள் கேட்கிறார்கள். அது துண்டுபோல தோன்றலாம். ரூ 250 லட்சம் செலவழித்து இருக்கிறோம் அதனால் விளக்கம் கேட்பதானால் நாங்கள் இதுவரையில் சென்னை மாநகராட்சிக்கு இந்த வாட்டர் சப்ளைக்கு கடன் கொடுத்துக்

கொண்டு இருந்தோம்; மான்யம் கொடுத்து இருந்தோம். இந்த வருடம் முதல் முதலாக சென்னை மாநகராட்சியை பொது மக்களிடமிருந்து கடன் எழுப்புங்கள், அதற்கான அதிகாரம் அளிக்கிறோம் என்று சொல்லி ரூ 75 லட்சம் கடன் எழுப்புவதற்கு அனுமதி அளித்து இருக்கின்ற காரணத்தால் ரூ 75 லட்சத்தையும் இந்த ரூ 250 லட்சத்தையும் கூட்டிப் பார்ப்போமானால் சென்ற வருடத்தைவிட 1968—69-ல் அதிகப்படுத்தப்பட்டு இருப்பது தெரிந்து இருக்கும்.

இந்த பிற்பட்ட வகுப்பினர்களுக்கு, Seheduled Castes அவர்களுக்கு நிலத்திற்கு செலவழிக்கின்ற தொகை குறைக்கப் படுகிறது என்பதை சுட்டிக் காட்டினார்கள். சிலவகையில் குறைக்கப்பட நேர்ந்ததற்கு உள்ளபடியே வருத்தப்படுகிறேன். என்றாலும், நமக்குத் திட்டக் கமிஷன் இந்த ஆண்டு ரூ 165 லட்சம் அளவில் செலவிடவேண்டும் என்று எடுத்துச் சொன்னார் கள். அது மிகக் குறைவு என்பதை நாங்கள் வலியுறுத்தி இருந் தாலும் Development expenditure அபிவிருத்திக்கு செலவிடப் படுகின்ற தொகை நாளுக்கு நாள் அதிகப்படுமே தவிர குறைக்கப் படக் கூடாது என்று எவ்வளவோ விவாதித்து பார்த்தோம். ஆனல் எவ்வளவு வாதாடினலும் திட்டக் கமிஷனில் இருக்கிறவர் கள் 165 லட்சம் செலவழிக்க வேண்டும் என்று, தங்களுடைய நிலையை விளக்கிக்கொண்டு இருந்தாலும் 165 அளவிலிருந்து 173 லட்சம் என்று அதை உயர்த்தி இருக்கிறோமே தவிர அதிலே கொஞ்சமும் குறைக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவர்கள் அரிஜனங்களுக்குக் கட்டுமனைகள் கொடுப்பதில் கொஞ்சம் தயக்கம் காட்டப்பட்டு இருப்பதாகச் சொன் ஞர்கள். ஓரளவு தயக்கம் காட்டப்பட்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு தயக்கம் காட்டப் படுகிறது என்றால் அரிஜன மக்களிடம் அக்கறை இல்லாதலால் என்று கொள்ளக்கூடாது. இந்த அரிஜன மக்களுக்கு வீடு தரப்பட்டு வந்தது இதுவரையில் தரப்பட்டதாக ஏடுகளில் காண் பித்து சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை. பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி அறிக்கை கூட தெரிவித்து இருக்கிறது. இதை கவனத்தில் கொண்டு புதிதாக நிலம் கொடுக்கிறோம் என்று வாக்கு கொடுத்துக் கொண்டு இருப்பதைவிட

கொடுக்கப்பட்ட நிலங்கள் சரியான முறையில் பயன்படுத்தப் பட்டனவா, வீட்டுமனைகள் கட்டிட மனைகளாக ஆக்கப்பட்டு இருக்கிறதா என்பதற்கு சர்க்கார் ஏதாகிலும் உத்தரவு செய்ய வேண்டும் என்று கவனம் செலுத்த வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வதானால் Instead of merely acquiring lands we should find out whether proper utilisation has been made சரியாக பயன்படுத்தப்பட்டு இருக்கிறதா எறுபதை இந்த அரசு முக்கிய மாகக் கருதி இருக்கிறது. போன ஆண்டு காலத்தில் acquire செய்யப்பட்டவைகளில் அலாட்மெண்ட் செய்தது 74, 806 மனைகள். மற்றவைகள் செய்யப்படாததற்கு காரணம் வழக்கு இருக்கலாம், விலைக்கு வாங்குவதில் தகராறு இருக்கலாம். கொடுக்கப்பட்ட மனைகள் 74, 806 உபயோகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. மற்றவைகள் 41, 137 மனைகள் கொடுத்தோம் என்று சொல்லிக் கொள்வது ஒரு அரசு நடத்துகின்ற கட்சிக்கும் பிரசாரத்திற்கு பயன்படும் என்றாலும் அந்த நோக்கத்தைவிட அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் சரியானமுறையில் பயன் படுத்தப்படுகிறதா என்பதை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும் என்று இந்த அரசு இப்போது திட்டம் இட்டு இருக் கிறது. இப்போது நான் சொல்கிறது, ஏற்றுக் கொள்கிறமுறை- அரிஜன இலாகா டைரக்டர் அவர்கள் கூட இதுவரையில் 30-6-67 இந்தத் தேதி வரையில் கொடுக்கப்பட்டு இருக்கின்ற இடங்களில் 92, 836 வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டு இருப்பதாக வும் அவைகளிலே வீடுகள் கட்டப்பட்டு 75, 092 இடங்கள் வீடாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டு, இருப்ப திலே இருந்து இந்த விஷயத்திலே நாம் இன்னும் சற்று அதிக மாக கவலைசெலுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இப்போது சர்க்கார் சரியானமுறையில் நடத்த, வலியுறுத்த, அக்கறை காட்ட திட்டம் இட்டு இருக்கிறது. ஆகையால் வீட்டு மனைகள் அதிகம் கொடுக்கப்படவில்லை என்ற மனக்குறை இன்னும் இருக்க வேண்டியது இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்தின் போது நம்முடைய மதிப்புமிக்க சாம்பசிவ ரெட்டியார் என் உடல் நலத்திற்காக அவர்கள் பிராத்தனை செய்ததை சொன்னார்கள். அதற்கு மிகுந்த நன்றி உள்ளவனாகஇருக்கிறேன். பிராத்தனை சடங்குகளாக நடத்துகின்ற

பலனைவிட அவர்களைப் போன்றவர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள் என்றால் முழுப்பலன் கிடைக்கும். எனக்கு அதிலே நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் "நான் உங்களுக்காக பிரார்த்தனை செய்கிறேன்" என்று சொன்னார்கள். இந்தச்சடங்கைப் பற்றி அதிகமாக கவலை கொள்ளாமல் இருப்பதை எடுத்துக் கொள்ள லாம். அதேசமயத்தில் நான் பிரார்த்தனையில் நம்பிக்கை உள்ளவனா என்று கருதத் தேவையில்லை. பிரார்த்தனைகளில் பலமுறைகள் இருக்கின்றன. அந்தமுறையில், நான் எந்த வகையிலே பிரார்த்திக் கிறேன் என்றால் "பிறர் அறியாத வண்ணம் உள்ளத்திலே பிரார்த்திக்கிறேன்" என்பதை தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் சொன்ன இந்த சமூக ஒழுக்கக் குறைகளைத் தீர்ப் பதற்கு சமாதான முறையில் நடத்தவேண்டும் என்று நான் மிகவும் விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். அதற்குப் போது மான அளவு வாய்ப்புகள் வசதிகள் கிடைக்கவில்லை என்ற வருத்தம்.

நம்முடைய மதிப்புமிக்க உறுப்பினர் எத்திராஜுலு அவர் கள் "இதைச் செய்ய வேண்டும்; அதைச் செய்யவேண்டும்" என்றெல்லாம் சொன்னபோது முதலமைச்சரிடம் போவதால் எல்லாக் குறையும் தீர்ந்துவிடும் என்று நம்பிக்கை இருக்கிறது என்றார்கள். அவர்கள் அந்த நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள் என்பதற்காக நன்றி செலுத்திக் கொள்கிற நேரத்தில், இன்னாரு டைய குறையை இன்னாரிடம் சொன்னால் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்படுகிற அளவுக்கு மத்ய சர்க்கார் நடந்து கொள்ள வில்லை என்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சாதாரணமான முடிவுக்கு தடைபண்ணுகிறோம் என்று சொல்வார்கள். அதற்கு ஏற்ற முறையில் கொடுத்து இருக்கின்ற வாய்ப்பு வசதிகளைக் கொண்டு தீர்க்க ஓரளவு முயற்சி எடுத்துக் கொள்கிறோம். இருந்தாலும் இந்த துணைமான்ய கோரிக்கைகளிலும் துணை மதிப்பீடுகளிலும் ஒதுக்கப்பட்டு இருப் பது தேவையானவை, நியாயமானவை என்று எடுத்துச் சொன்ன தற்கு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி துணை மான்யக் கோரிக் கையை ஏற்றுக் கொள்ளுமாறு இந்த அவையை கேட்டுக் கொள்கிறேன்.

★

# நிதிநிலை அறிக்கையின்போது பாடமொழித் திட்டம்பற்றி அண்ணா

**மாண்புமிகு அறிஞர் அண்ணா :—**

தலைவர் அவர்களே! இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரில் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்ன உறுப்பினர்களுக்கெல்லாம் முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் 3 உறுப்பினர்கள் மூன்று முக்கியமான பிரச்சனைகளை இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய மதிப்புமிக்க சா. கணேசன் அவர்கள் தமிழகத்திலே உள்ள திருத்தலங்களின் பெயர்களை யெல்லாம் தமிழ் மொழியிலே பண்டைய நாட்களிலேயே எந்த முறையிலே அவைகள் வழங்கப்பெற்று வந்தனவோ, அதேமுறை யில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற நல்ல கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள். அவர்கள் அத்தனையையும் நம் முடைய அவையிலே உத்தியோகபற்றற்ற மசோதாக்கள் வருகின்றநேரத்தில் விரிவான முறையில் அவர்கள் பேசுவார்களே யானால் மற்ற கட்சிகளிலே உள்ளவர்களெல்லாம் அதைப்பற்றி என்ன கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வும் அதற்கு எந்த அளவு ஒருமித்தகருத்து இருக்கும் என்பதை யும் அரசு அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் தமிழ்நாடு என்ற முறையிலும் சரி எங்கள் கட்சி என்ற முறை யானாலும் சரி எங்களுக்கு மிகவும் உடன்பாடான கருத்துக்களா கும். அவர்கள் சொன்ன கருத்துக்களை மற்ற கட்சிகளைச் சேர்ந்த வர்கள் எந்த முறையிலே அணுகுகிறார்கள் என்பதை முழுதும் அறிந்துகொள்வதற்கு இதைப்பற்றி தனியாக ஒருமுறை விவாதங் கள் நடத்தப்படுமேயானாலும், அதுமிகவும் பயனளிக்கும் என்று கருதுகிறேன். அவர் சொன்ன கருத்துக்களை எல்லாம் நான் கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்தேன் என்பதையும் அது குறித்து தக்கநடவடிக்கைகள் எடுப்பதற்கான வாய்ப்பு இருக்கும்

போது அதிலே தயக்கம் காட்டமாட்டேன் என்பதையும் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இன்றைய அரசு சில புராதனச்சின்னங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு பாராட்டு தெரிவித்தார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூன்று பிரச்சனைகளைப் பேசிய மூன்று உறுப்பினர்களுமே, இந்த அரசு மேற்கொண்டிருக்கிற பல நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள். இந்த புத்தகங்களில் பலதவறுகள் இருப்பதைப் பற்றி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். உள்ளபடியே அது மிகவும் வருந்தத்தக்கதாகும். ஆனால் இந்த புத்தகங்களைச் சர்க்கார் வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டதற்குக் காரணம் தனியார் இந்த புத்தகங்களை வெளியிட்டு, அதனால் ஏராளமான தொல்லைகள் மாணவர்களுக்கு எற்பட்டு, மாணவர்கள் அதை ஒரு பெரிய கிளர்ச்சி நடந்து முடிந்ததின் விளைவாகத் தான் இப்போது சர்க்கார் வெளியிடும் முறை எற்பட்டுள்ளது. அதிலே சில குற்றம் குறைகள் துவக்க காலத்தில் வரத்தான் செய்யும். அவைகளை நீக்குவதற்கு நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளையெல்லாம் சர்க்கார் ஏற்று அதன்படி பாடப்புத்தகங்கள் சரியான முறையில் அமைவதற்கு இன்னும் நல்ல முற்போக்கான முறையில் பணியாற்ற வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். தொடர்ந்து அந்தக் காரியத்தில் அரசு ஈடுபடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள், நீங்கள் இங்கே இந்தியை எதிர்க்கிறீர்கள், அதுவரையில் எனக்கு மகிழ்ச்சிதான் டெல்லியில் எது எல்லாமோ நடக்கிறதே, என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். என்னுடைய வலிவு இன்றைய தினம் இங்கே இந்தியை எதிர்க்கிற அளவிலே தான் அமைந்திருக்கின்றது. ராஜா சர் முத்தைய செட்டியார் போன்றவர்கள் இன்னும் அதிகமான வலுவையும் உணர்ச்சியும் எற்படுத்துவார்களேயானால் டெல்லியிலே செய்யப்படுகிற அந்தகாரியத்தையும் தடுத்து நிறுத்துவதற்கான உணர்ச்சி நம்மிடம் இருக்கிறது. உள்ளபடியே அவர்கள் எடுத்துச் சொல்லியபடி இந்தியை இன்னும் திணிக்கின்ற காரியங்களில் மத்திய அரசாங்கம், மத்திய அரசில் உள்ள அரசாங்க அலுவலர்களும் ஒவ்வொருநாளும் ஏதாவது காரியத்தில் முனைந்து நிற்கிறார்கள் என்பதை செய்திகள் நமக்குத் தெரிவிக்கின்ற போது உள்ளபடியே நமக்கு வருத்தமாகத்

தான் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பது நாட்டின் பொதுவான பிரச்சனை என்று கருதி அதிலே அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்களை வலியுறுத்தி நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பண்டைய பெயர்கள் நமக்குத் தேவை என்பதை நம்முடைய சா. கணேசன், அவர்கள் எடுத்து சொன்னது உள்ள படியே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதை எங்களில் யாராவது சொல்லியிருப்பார்களேயானால், எதிர்க்கட்சியினர் சொல்லுவார்கள், உங்களுக்கு இதே வேலை, பெயரை மாற்றுவதே வேலையென்று சொல்லியிருப்பார்கள். பெயரை மாற்றுவது என்பது நல்ல தமிழ் உணர்ச்சி உள்ளவர்கள் மனதில் எந்த அளவுக்கு ஆழமாகப் பதிந்திருக்கிறது என்பதை நண்பர் சா. கணேசன் அவர்களுடைய ரொம்ப உருக்ககான உரை தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறது. அதைப்பற்றி அவையில் உள்ள அனைவரும் நல்ல முறையில் கருத்துக்கள் தெரிவிக்கின்ற வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்று ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் தம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிற மிக முக்கியமான பிரச்சனையில் நாம் துணிந்து ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகள் நமக்குப் போதும், இந்தியை நாம் இங்கே அனுமதிக்கத் தேவையில்லை என்று எடுத்த முடிவிற்கு அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல நம் ஆசிரியர் பிரச்சனையைப்பற்றி பேசிய நண்பர் ராஜா ஐயர் அவர்கள் ஆசிரியர்களுக்கு இந்த அரசு செய்து இருக்கிற பல சௌகரியங்களுக்கு, வசதிகளுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

ராஜா ஐயர் ஆனலும்சரி கிருஷ்ணமூர்த்தி ஆனலும்சரி அவர்கள் பேசுகிறபோது ரொம்ப ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும் ஏனென்றல், அவர்களுடைய ஒருவார்த்தையை நாம் நிறைவேற்றினல் அது பல லட்ச ரூபாயில் போய் முடியும். கேட்கிற போது இதுகூடவா செய்ய முடியாதென்று தோன்றும். அவ்வளவு சாதாரணமாக இருக்கும். ஆனல் இந்த மாநிலத்தினுடைய நிதியைச் செம்மைப்படுத்திச் செல்கிறவன் என்ற முறையில் அவர்கள் இருவர் பேசுவதிலேயும் என்னுடைய முழுக்கருத்தைச் செலுத்துகிறபோது, பணம் எந்த அளவிற்கு இருக்கிறது. என்று பார்க்கிற போதுதான், லட்சக் கணக்கான ரூபாயை ஒரு 5, 6, வார்த்தைகளில் எவ்வளவு சாமர்த்தியமாக அவர்கள் புகுத்து

கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதற்காக நான் அவர்களுக்கு மறுபடியும் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளாவிட்டாலும், அந்தத் தகுதி இயல்பாகவே இருக்கிறது. ஆனால் இந்த சர்க்கார் தன்னுடைய நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கானாலும்சரி கைத்தறி நெசவாளர்களுக்கானாலும் சரி தேவைபடுகிற பல்வேறு காரியங்களுக்கானாலும் நிதி செலவழிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்கிற உறுப்பினர்கள் ஒருவர் இருவராகிலும், அந்த நிதியைத் திரட்டுவதற்கு என்னவழி என்பதை சொல்லி இருப்பார்களானால் எனக்கு மிகவும் பலன் கிடைத்திருக்கும்.

ஏனென்றால் இருப்பதை வைத்துக்கொண்டு அவர்கள் சொல்கிற ஒவ்வொரு காரியத்தையும் செய்ய முற்பட்டால் எதை ஆதரிப்பது, எதை விடுவது என்பதையாவது அவர்கள் சொல்வார்களானால் அதுவும் பலனுள்ளதாக இருக்கும். ஆனால் அவர்கள் சொன்ன கருத்துக்கள் தேவையற்றது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்கள் விடைத்தாள்கள் திருத்துவதற்கு வரும்போது அவர்களுக்குக் கிடைக்கின்றன ஊதியம் மிக குறைவாக இருக்கின்றது என்று சொன்னார்கள். உண்மையிலேயே மிகக் குறைவானதாக இருக்கிறது என்று சொல்கிறபோது ரூ 3.75 என்று கேட்கிறபோது எனக்கு அப்படியே தோன்றிற்று. அவர் சொன்னபோது ஐயா, வருத்தப்படவேண்டாம் அப்படியே கொடுத்து விடலாம் என்று சொல்லலாம் என்று தோன்றிற்று. ஆனால் அதை உடனே கணக்குப் போட்டு பார்த்தால் எத்தனை லட்ச ரூபாய் ஆகிறது என்று பார்க்கிறபோது, அவரைப் பார்க்கிற போது நல்ல மனதோடு கொடுக்கமுடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது. ஆக உரியநேரத்தில் அவைகளெல்லாம் கவனிக்கப்படும் என்பதை நான் எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நான் எதிர்பார்க்கிறேன். மற்றபடி இந்தநிதி ஒதுக்கீடுதுணை மானியத்துக்கு இன்னென்ன அளவு ஒதுக்கப்படும் என்று போட்டிருப்பதில், ஒத்துழைத்து இத்தகைய காரியங்களுக்கு இந்தத்தொகை தேவைதான் என்பதை எடுத்துச்சொன்ன போது எனக்குத் திருப்தி கொடுக்கின்றது. அதிலும் ராஜா ஐயர் குறிப்பிட்டதுபோல், சர்க்கார் அலுவலர்களுக்கு நாம் கொடுத்திருக்கிற இந்த அதிகமான தொகை, அவர்களாகவே போராடி கேட்பதற்கு முன்னேயே, கொடுக்கப்பட்டிருக்கிறது. கஷ்டப்படுகிறவர்களுக்கு அவர்களுக்குரிய பஞ்சப்படி இல்லா விட்டால்

பல்லாயிரங் குடும்பங்களுக்கு நாம் கேடு செய்வது ஆகிவிடும் என்கிற உணர்ச்சிதான், 3 கோடி ரூபாய்க்குமேல் இதற்கு ஒதுக்க வேண்டும் என்ற எண்ணத்தை இந்த அரசு ஏற்படுத்தியது. அதற்குப் பாராட்டுதல் கிடைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மற்றபடி பலகருத்துக்களை எல்லாம் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உள்ள எண்ணிக்கை தொடர்புபற்றிச் சொன்னார்கள். முப்பது மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் வீதம் 45, 55 என்று ஆகியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் இண்டர்மீடியட் படித்தபோது அதிகம் அவர்கள் எப்படி சேர்த்துகொண்டார்கள் என்றால், இவருக்கு 20 மாணவர்கூட வரமாட்டார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் அப்போது சேர்த்துக் கொண்டார்கள்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்கூட இந்த முறை இருந்தது அப்படியே சேர்க்கின்ற சமயத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைப் பார்த்தால், இருக்கிற எண்ணிக்கைக்கு இடம் போதாது. நாம் நல்லமுறையில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித்தரவேண்டும் என்றால், எண்ணிக்கை குறைய வேண்டும் என்ற கருத்தை நான் வரவேற்கிறேன். எவ்வளவுக்கு எவ்வளவு குறைந்தாலும் அவ்வளவுக்கு அவ்வளவு சொல்லிக் கொடுக்கின்றதரம் உயரும். ஆனால் அந்ததரம் உயர்வதற்கு நம்முடைய பொருளாதாரத்தின் தரமும் உயரவேண்டும் ராஜா ஐயர் நன்றி தெரிவித்தார். ஆனால் நாம் எங்கே இதை சரியாகச் செய்யாமல் போய்விடுவோமோ என்பதற்காக இதைச் சொல்லியிருக்கின்றார் என்ற அளவில் நான் அவருடைய அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட மட்டில் அதற்கு ஏற்றவாறு உயரியமுறையில் கவனித்து நமது நிதியின் தரம் சீராகும் போது, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உள்ள நிலை இவைகளையெல்லாம் உயர்த்துவதற்கான முறையில் நான் பாடுபடுவேன் என உறுதியளிக்கிறேன். இந்த அவை ஒப்புதல் இந்த துணை ஒதுக்கீடு மசோதாவுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த அளவில் என்னுடைய உரையை நான் நிறுத்திக் கொள்கிறேன்.

# "வரவு செலவு திட்டத்தின்போது அண்ணா"

**மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா:—**

சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னர் வைக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைக் குறித்து பல உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லி என்னுடைய சிந்தனைக்கு நல்ல வேலையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் பல கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட வில்லை என்றும் அதில் புதிய கொள்கை காணப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள், நான்கூட அவர்கள் அதைச் சொன்ன பிறகுதான் ஆறுதல் அடைந்தேன். இதைப் பார்த்துவிட்டு இதில் ஏதாவது கொள்கை இருப்ப தாகத் தவறாக எண்ணிவிடுவார்களோ என்று எண்ணித்தான் வார்த்தைகளை வெகு ஜாக்கிரதையாக இதில் போட்டேன். புதிய கொள்கை எதுவும் விளக்கப்படவில்லை என்று அவர்கள் சொன்னதைக் கேட்டு நான் எடுத்த முயற்சிக்கு பலன் கிடைத் திருக்கிறது என்று திருப்திப்படுகிறேன். நேற்றைய தினம் கனம் உறுப்பினர் வேறு பிரச்சனைப்பற்றி பேசும்போது 'இதையெல் லாம் பார்த்தால் ஏதோ எங்களுடைய வெங்கடராமன் எழுதிக் கொடுத்ததைப் போல் இருக்கிறது' என்று சொன்னார்கள். விவரம் தெரிந்தவர் எழுதினார் என்பதைக் குறிப்பதற்காக வெங்கடராமன் எழுதியது போல் இருக்கிறது என்றும் எழுதத் தெரியாதவர்கள் எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்றும் கருதத் தேவையில்லை. வெங்கடராமன் தனி மனிதர் என்ற நிலையில் அல்ல, பொறுப்பு மிக்க பதவியில் இந்த மாநிலத்தில் பல ஆண்டுகளாக இருந்து நிரம்ப நிர்வாகத் திறமை பெற்றவர்கள் என்பதும், எடுத்துச் சொல்ல வேண்டியதை சுருக்கமாக எடுத்துச் சொல்வார்கள் என்ற முறையிலும் நான் அவரை அறிந்திருக்கிறேன். இடைக் கால வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியோ சபை முன்னால்

வைக்கப்பட்ட அறிக்கை பற்றியோ, அவை வெங்கடராமன் எழுதியிருப்பதைப் போல இருக்கிறதே என்று எண்ணினேன். நம்மை இவ்வளவு புகழ்கிறார்களோ என்று எண்ணினேன் அவர்கள் எதிர்ப்பார்த்துச் சொன்னது தவறிவிட்டது.

ஜனநாயகத்தில் ஒரு கட்சியினுடைய ஆட்சி மாறி இன்னொரு கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாம் தலைகீழாக மாறிவிடும் என்று எண்ணுகிறவர்கள் ஜனநாயகத்தை முற்றிலும் உணர்ந்து கொள்ளாதவர்கள்தான். நம்நாட்டில் மட்டுமல்ல. உலகம் எங்கும் இன்றையதினம் ஜனநாயகம் வளர்ச்சி அடைகிற பக்குவத்தைப் பார்க்கும் போது பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையிலுள்ள கொள்கை பேதங்கள் குறைந்து விட்டன. அமெரிக்காவிலுள்ள ரிபப்ளிகன் கட்சிக்கும் டெமாக்ரட்டிக் கட்சிக்கும் கொள்கை வித்தியாசம் என்னவென்றால் எளிதாக பதில் சொல்ல முடியாது. இங்கிலாந்து நாட்டிலே கூட கன்சர்வேட்டிவ் கட்சி என்றால் என்னும் சொல்லலாமே தவிர கொள்கையில் அடிப்படையான வித்தியாசம் என்னவென்று கேட்டால் எளிதாக விளக்க முடியாது. பல்வேறு கட்சிகள் ஒன்றுக்கொன்று நெருங்கியும் அணைத்துக்குக் கொண்டும் பொது நோக்கத்தோடு செய்வதற்காகத்தான் ஜனநாயகம் இருக்கிறதே தவிர, 'காங்கிரஸ் கட்சி அரசாளுகிற போது இப்படியிப்படி இருக்கும் மற்றவர்கள் வந்தால் அத்தனையும் மாற்றப்படும்' என்று யாராகிலும் கருதியிருந்தால் அது தவறு.

மாற்றம் இல்லையே என்று என்னைக் கேட்பதில் பொருளில்லை. அதிலும் நம்முடைய நண்பர் ராஜாராம் நாயுடு அவர்கள். ஏதோ ஜனங்களுடைய மனதை எல்லாம் மாற்றினீர்கள், அடியோடு, நீங்கள் வந்தால், பழைய முறைகளை மாற்ற வேண்டாமா என்றார்கள். நான் இங்கே இருக்கிற நேரத்தில், அவருடைய மனதை மாற்ற எண்ணிக்கொண்டு இருக்கிறேன். ஆகவே மனதை மாற்றுவது என்பது வேறு. ஒரே அடியாக சர்க்கார் நடவடிக்கைகளை மாற்றுவது என்பது வேறு. ஆகையினால், அதிலும் நாங்கள் ஜூலை மாதத்தில் கூடியிருந்தாலும், காலம் கொஞ்சம் வாதத்திற்காவது பொருத்தமாக இருக்கும், இருக்கக்கூடும். இது நான் அவர்களுக்கு முத்திரை தருகிற காரியம். ஏற்கெனவே இருந்த சர்க்கார் செய்து விட்டுப் போன காரியங்களுக்கும், அவர்கள் விட்டுச் சென்ற இடத்தில்

இருந்து தொடர்ந்து நடத்துவதற்கு, அவர்கள் விட்டுச் சென்ற காரியங்களில் ஒரு பகுதியை தொடர்ந்து நடத்துவதற்கு, ஏற்பாடாகி இருக்கிற இடைக்காலத் திட்டமாகிய இந்த இடைக் காலத் திட்டத்தில் அதிகமான கொள்கைகள் அல்லது நாங்கள் என்ன கொள்கைகளை கையாளப் போகிறோம் என்பதைப்பற்றி விளக்கம் இல்லை என்று அவர்கள் சொன்னதற்கு, இடைகால வரவு செலவுத் திட்டத்தில் அடிப்படைக் கொள்கைகளைத் தேடினால் எல்லாமே இருக்கிறது என்பதைத் தான் பதிலாகத்தர முடியும். அதிலும் அவர்கள் எதையாவது சொல்லி இருக்க வேண்டாமா என்றார்கள் 'பயிற்சி மொழியைப்பற்றிச் சொல்லுங்களேன்' என்று சொல்வதைப் பார்த்தால், ஏதோ திட்டவே இடமில்லை, திட்டுவதற்கு இடமே கிடைக்கவில்லை என்ற எண்ணத்தை வெளியிடுகிற பேச்சாக இருக்கிறதே தவிர பெரிய லட்சியம் இருப்பதாகத் தெரியவில்லை. நான் இந்த இடைக்கால பட்ஜெட்டை சமர்ப்பித்த போது நிறைய சந்தர்ப்பங்களைக் கொடுத்தேன். வாதிடுவதற்கு என்று மட்டும் கருதி நான் இப்படிச் செய்யவில்லை. எந்தக் கருத்துக்கள் இந்த இடைகால பட்ஜெட்டிலே இருக்கின்றன அவைகள் எந்த அடிப்படையில் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். நான் ஒன்றே ஒன்று எதிர்பார்த்து கொண்டு இருந்தேன். நீங்கள் 'இந்த இடைக்கால பட்ஜெட்டில் துண்டுவிழுகிற பட்ஜெட்டாகப் போட்டு இருக்கிறீர்களே, இதைச் சரிக்கட்ட முடியாமல் போய் விட்டதா? எதற்காகத் துண்டுவிழுகிற பட்ஜெட்டாகப்போட்டு இருக்கிறீர்கள்? இது சரியல்லவே. இதனால் விலைவாசி ஏற்றம் வேகமாக உண்டாகுமே' என்பதைப் பற்றிக் கேட்பீர்கள் என்று நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். ஆனால் காங்கிரஸ் நண்பர்கள் கேட்கமாட்டார்கள். நான் சமர்ப்பித்த இந்த பட்ஜெட்டில் 7 கோடி ரூபாய் துண்டுவிழுகிறது. இன்று பத்திரிகையில் பார்த்தேன் மொரார்ஜிதேசாய் வெளியிட்டுள்ள பட்ஜெட்டில் 350 கோடி ரூபாய் துண்டுவிழுகிறது. அதனாலே இதைப்பற்றிக் கேட்கமாட்டார்கள் என்று நான் அறிந்து இருந்தேன். ஆனால் யார் கேட்டு இருந்தாலும் இன்றையதினம் மற்ற மாநிலங்களில் கூட துண்டு விழும் பட்ஜெட்தான் போடப்பட்டு இருக்கிறது.

கேரளத்தில் அவர்கள் 6. 88 கோடி ரூபாய்க்கு துண்டுவிழும் படியான பட்ஜெட்டை போட்டு இருக்கிறார்கள். மேற்கு

வங்காளத்தில் 6. 40 கோடி என்ற அளவிற்கு துண்டு விழுந்திருக்கிறது குசராத்தில் 1. 30 என்ற அளவிற்கு துண்டு விழுந்திருக்கிறது. பீஹாரில் 3. 06 என்ற அளவிற்கு துண்டுவிழுந்திருக்கிறது. ஆனல் துண்டுவிழுவது யாருடைய தவறினாலும் அல்ல. துண்டு விழாமல் இருந்திருந்தால் இன்னும் அதிகமான அளவிற்குத் திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியும். எனவே துண்டுவிழுதல் ஏற்படாமல் இருப்பதற்கு எனக்கு நீங்கள் வழிவகை சொல்லித்தர வேண்டும். இதற்குப் பெயரே அசெம்பிளி என்று பெயர் அல்ல. கௌன்சில். நல்ல யோசனைகளைக் கூறுகிறஇடம் எனறு இதன் பெயர். எனவே துண்டுவிழாமல் இருப்பதற்கு என்னென்ன வழிவகைகளை ஆராயலாம் என்பதை நீங்கள் இப்படிப்பட்ட வாதத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் பெரிதும் எதிர்பார்த்தேன். இப்படித் துண்டுவிழுந்து இருப்பது முன்னாலே இருந்த சர்க்காருடைய நடவடிக்கைகள் காரணம். அதனாலே துண்டுவிழுந்து இருக்கிறது. ஆனாலும் முன்னாலே இருந்த சர்க்காருடைய நடவடிக்கைகளை நாம் சிந்தித்துப் பார்த்தாலும், அவர்களுடைய நிர்வாகக் கோளாறுல் வந்தது என்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய நிர்வாகக் கோளாறினால் துண்டு விழுந்தது என்றால் நாம் காரசாரமாகக் கண்டிக்கலாம். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொண்ட, தவிர்க்க முடியாத பொறுப்புகள் காரணமாகும். மத்திய சர்க்கார் விலைவாசி ஏற்ற அடிப்படையில் அவர்களுடைய சர்க்கார் அலுவலர்களுக்கு அளித்த உயர்வுகள், கூட்டப்படுகிற Dearness allowance அதை ஒட்டி இரண்டு தடவை கொடுக்கப்பட்ட சம்பள உயர்வுகள் தான் பணச் செலவுக்குக் காரணம். இவைதான் பெரிதும் துண்டு விழுவதற்கு காரணம் ஆகும். ஆகவே இது உண்மையிலே துண்டு விழுந்தால், உண்மையிலே செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு வேண்டிய பணம் நம் இடத்திலே இல்லை என்பதை உலகிற்கு அறிவிக்கிற காரியமே தவிர, 'துண்டுவிழுந்து விட்டது, எனவே நம் இடத்தில் பணம் இல்லை, கொடுத்த பணத்தை விரயம் ஆக்கி விட்டோம், வேறு எது எதற்கோ செலவழித்து துண்டுவிழுந்து விட்டது' என்று நாம் துண்டு ஏந்துகிற நிலையில் இல்லை. முன்னாலே இருந்த சர்க்கார் இதற்குப் பொறுப்பாக இருந்தாலும், அதை நானும் முழுக்க முழுக்க பொறுப்பு ஏற்றுக்கொண்டு செய்யவேண்டிய காரியம் செய்தால்தான் இப்படித் துண்டு விழுந்து இருக்கிறது. எனவே இதைப்பற்றி யாரும் தவறான

முறையில் கருதமாட்டார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் இதே முறையில் மாநில சர்க்காருடைய வரவு செலவுத் திட்டம் அமைந்து கொண்டு போகவேண்டுமா இல்லையா என்பதைப்பற்றி நாம் வெகு தீவிரமாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும். நாம் வெகு தீவிரமாக ஆலோசித்துப்பார்க்க வேண்டும் என்று நான் சொல்லுகிறபோது இங்கே இருக்கிறவர்கள், தங்கள் தங்கள் கட்சிகளை ஒரு சமயம் கொஞ்சம் மறந்து, மறக்க முடியாது என்றாலும், காலையில் 6 மணி முதல் 7 மணி வரையில் எந்த விதமான கட்சிக் கொள்கைகளாக இருந்தாலும் அதிகமாக வைத்துக் கொண்டு, இங்கே இருக்கிற வரையில் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, எந்த முறையிலே ஆலோசனைகளை நல்க வேண்டுமோ அந்த வகையிலே அளிப்பார்கள் என்ற நம்பிக்கையிலே பேசுகிறேன். இல்லை கட்சி அடிப்படையில் தான் பேசவேண்டும் என்று சிலர் பேசியது போல், நீங்கள் தேர்தல் நேரத்தில் என்ன என்னவோ வாக்குறுதிகளைக் கொடுத்தீர்களே அவற்றை நிறைவேற்றப் போகிறீர்களா, மூன்றுபடி, ஒருபடி என்று பேசினீர்களே என்ன ஆயிற்று என்று சொல்வார்களானால் அவர்களுக்கு நான் ஒரே பதில் தான் சொல்ல முடியும். என்னால் இந்தக் காரியங்களைச் செய்ய முடியாது என்று தோன்றினால் மக்களிடத்தில் ஒரு துளியும் ஒளிக்காமல் மறைக்காமல், அதனைச் சொல்லி அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நிரம்ப இருக்கிறது. உதாரணம் சொல்ல வேண்டுமானால் நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் 'இந்த நாடு பிரியவேண்டும்' என்று, பிரிவினை கொள்கையை வைத்து இருந்தது. அதைவிட்டுவிட்ட உடனே அரசியல் வட்டாரங்கள் எல்லாம் கருதிக் கொண்டு இருந்தது 'இனி தீர்ந்தது முன்னேற்றக் கழகம்' இத்தனை ஆண்டுகளாக திராவிடநாடு என்று பேசிக்கொண்டு இருந்தார்கள். அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் சுடுகாடு என்று சொல்லிக் கொண்டு இருந்தார்களே, அடிப்படையையே மெல்ல விட்டு விட்டுவிட்டவர்களை மக்கள் மன்னிப்பார்களா, ஆதரிப்பார்களா, என்றார்கள். என்ன காண்கிறீர்கள். மக்கள் மன்னித்து மட்டுமல்ல ஆதரித்தது மட்டுமல்ல, இதைவிட்டு விட்டதாலே எங்களுக்குச் சில இடங்களில் இருந்து புதிய ஆதரவு வந்தது. நாங்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிற காரியங்களிலேகூட நாங்கள் பொறுப்பிலே அமர்ந்து பிறகு சிலவற்றைச் செய்ய முடியவில்லை

என்றால், மக்கள் இடத்திலே தெளிவாகச் சொல்லி, 'இதை இன்ன இன்ன காரணங்களால் செய்ய முடியவில்லை. மேற்கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள், வெளியே வரச் சொல்கிறீர்களா' என்று கேட்கின்ற referendum முறையை நான் கையாள இருக்கிறேன். நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் மூன்றுபடி, ஒருபடி என்று கேலிபேசிக் காலத்தை ஓட்டி விடலாம் என்று கருதிக் கொண்டு இருக்க வேண்டாம். அது ரொம்பநாளைக்கு கை கொடுக்கிற விஷயம் அல்ல. நான் சொல்வது எல்லாம் 'நாங்கள் நெருச்கடியில் இருந்து மக்களைக் காப்பாற்ற லாயக்குஇல்லை, ஆள்வதற்கு தகுதிஇல்லை' என்று கருதுவீர்களானால், நாங்கள் வந்தும் 'பிரயோஜனம் இல்லை' என்று சொல்வீர்களானால், நாட்டு மக்கள் அதற்குப் பிறகு வேறு இனியாரைத் தேடப் போகிறார்கள்? அவர்கள் நிலைதான் என்ன. நல்ல சர்க்கார் ஏற்படுவதற்கு வழி என்ன என்று 20 ஆண்டுகளாகப் பெற்று இருக்கிற நிர்வாக அறிவை அருள் கூர்ந்து கொடுங்கள். உங்களுடைய அனுபவம் இந்த நாட்டை நல்ல முறையிலே நடத்திச் செல்வதற்குப் பயன்பட வேண்டும் என்று கருதிக்கொண்டு, ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும், சில இடங்களில் வேகமாகக் காரியங்கள் செய்யவேண்டும் என்று சொல்வது நல்ல எண்ணத்தோடு சொல்கிறது என்று எடுத்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு சமயம் 'வேகமாகப் போய் இடறி விழட்டும் பிறகு பார்க்கலாம்' என்று எண்ணிக்கொள்வீர்களானால் நான் அந்த அளவிற்கு ஏமாறுகிறவன் அல்ல என்று முதல் கூட்டத்திலேயே திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் பல காரியங்களைச் செய்யாமல் இருப்பேன். ஆனால் ஏதாவது காரியம் செய்தால் ஏன் செய்தோம்' என்று நானே பின்னால் வருத்தப்படக் கூடிய காரியம் நான் செய்யக் கூடாது என்பதில் மிகவும் கண்டிப்பாக உள்ளவன். ஆகையினால் நீங்கள் எடுத்துக் சொன்னால் அவைகளைப்பற்றி நான் நிச்சயமாக ஆராய்ந்து பார்த்து எதை எதை எந்த எந்த முறையில் செய்யத் தோன்றுகிறதோ, அவற்றை என்னுடைய சொந்த சிற்றறிவைக் கொண்டு, என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில் செய்யப் பாடுபடுவேன். அதோடு மட்டும் அல்லாமல், பின்னால் மற்றவர்களின் நல்லறிவின் துணை கொண்டு செய்யத் தக்க காரியங்களை செய்யக் கூடிய காலத்திலே செய்வதாக உங்களுக்கு வாக்களிக்கிறேன்.

அதிலே நண்பர் ராஜாராம் நாயுடு அவர்கள் சொன்னார்கள் நிலவரி இருக்கிறதே அதையாவது எடுத்து விடக்கூடாது என்று. [the Hon'ble Chief Minister was seen searching for more information from his files.]

இன்னும் அமைச்சர் எதை எதை ஒழுங்காக வைத்து இருக்க வேண்டும் என்றே எனக்குத் தெரியவில்லை. இதில் இருந்தே புரிந்து கொள்ளலாம் என்னிடமிருந்து எந்த அளவிற்கு எதிர் பார்க்கலாம் என்று. நண்பர் ராஜாராம் நாயுடு சொன்னார்கள், நீங்கள் ஏன் அதைச் செய்யக்கூடாது' என்று கேட்டார்கள் நான் அவர்களுடைய சர்க்கார், அவர்களுடைய முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் மூலமாக, என்ன வாக்களித்திருகிறார்கள் என்பதை 1966 நவம்பர் 2-ம் தேதி தரப்பட்ட முதலமைச்சருடைய நிலவரி பற்றிய அறிக்கையிலிருந்து சில குறிப்புகளைத் தர விரும்புகிறேன். அவர்கள் நிலவரியை மட்டும் ரத்து செய்வதாகச் சொல்லவில்லை. நிலவரியை ரத்து செய்து அதனால் ஏற்படக்கூடிய பணநஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு வேறு ஒருவகையும் செய்திருக்கிறார்கள். நீங்கள் வெகு ஜாக்கிரதையாக 'நிலவரியை ரத்து செய்யுங்கள்' என்று மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ தவிர அவர் குறிப்பிட்ட மற்றொன்றைச் சொல்லவில்லை, ஆகையால் எப்போ தாகிலும் நீங்கள் இதை ஆதரிக்க வேண்டிய அவசியம் வந்தால் இரண்டையும் சேர்ந்து ஆதரிக்க வேண்டும். அது முதலமைச்சர் பக்தவத்சலத்தின் தனிப்பட்ட எண்ணம் மட்டுமல்ல அவர்கள் சார்ந்திருக்கின்ற காங்கிரசு கட்சியின் எண்ணமும் அது "The Tamilnad Congress Committee, after a consideration of these two important problems in their various aspects has recommended to Government to examine ways and means of abolishing land revenue coupled with State Trading in agricultural produce"

"State Trading in agricultural produce" நடைமுறை திட்டமானால், நிலவரியை தள்ளிவிடுவது என்ன, இன்னும் வீட்டுக்காரர்களுக்குகூட வீட்டு வரியைத் தள்ளுபடி செய்யலாம். அதில் கிடைக்கிற வருவாயை கணக்குப் பார்த்துதான் அவர்கள் நிலவரியை எடுத்துவிடுகின்றேன் என்று சொன்னார்கள். இந்த அறிக்கையில் வேறொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எப்படி மதுவிலக்கு திட்டத்தைக் கொண்டு வந்து அதனுல் நஷ்டம் ஏற்பட்டபோது, விற்பனே வரியால் வந்த வருவாயைக் கொண்டு அதை நாங்கள் சரிக்கட்டிஞேமோ அதைப்போல் செய்வோம் என்று சொல்லியிருக்கிருர்கள். இன்னமும், இங்கும் மற்ற அவையிலும் காங்கிரசு உறுப்பினர்கள் இரண்டையும் சேர்த்துச் சொல்லுகிருர்களா என்று பார்த்தேன். சொல்லவில்லே. ஆனுல் இந்த இடத்தில் 'அண்டு' என்று கூட போடவில்லே "Abolition of landrevenue and attempt at State Trading" என்று கூட அல்ல "Coupled with State Trading என்றிருக் கிறது. அதைப் போட்டு இறுக்கிவிடவேண்டும்; இரண்டையும் ஒன்ருகச் சேர்த்தால் தான் நடக்கும் என்று முன்னுல் இருந்த முதலமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். நான் அவரைவிட தைரியசாலி அல்ல. ஆகையால் அவர் எந்த அளவுக்கு அதில் கொஞ்சம் தாமதம் காட்டவேண்டும் என்று கருதிஞரோ, அதைப் புதிய சர்க்கார் எடுத்துக் கொண்டால் தவறல்ல. இன்னும் ஒன்று 'அவர்கள் ஒரு ஸ்பெஷல் ஆபீசரை போட்டு, ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. கெய்வாரை போட்டு ஒரு அறிக்கை தயாரித்து இருப்பார்களே, அது இந்நேரம் உங்கள் கையில் வந்திருக்குமே; மற்றதில் தாமதம் காட்டலாம், இதை உடனடி யாக எடுத்துச் செய்யக் கூடாதா' என்று கேட்டார்கள். 'இதை என்று அழுத்தியதற்கு அது ஒரு சாதாரண விஷயம் என்று கருதிக்கொண்டு சொல்லியிருக்காலம் 'செய்யக்கூடாததா' என்று எங்களே பார்த்து கேட்டதற்கு, 'இது கூடவா உன்னுல் முடிய வில்லே' என்பதற்காக இருக்கலாம், இரண்டில் எதுவாக இருந் தாலும், நீங்களே பெருவாரியாக வெற்றிபெற்று இங்கே முதலமைச்சராக பக்தவத்சலம் அவர்களே வந்திருந்தாலும் காங்கிரஸ் சர்க்காரே ஏற்பட்டாலும், என்னசெய்வதாக இருந் திருக்கிருர்கள் என்பதும் இந்த அறிக்கையில் இருக்கிறது.

"The report will be submitted by the Special Officer in lieu for the new Government to consider and take decisions by July 1967. i.e., commencement of next fasli 1377."

அவர்களே வந்திருந்தாலும், 1967-ம் ஆண்டு ஜூலே மாதத் தில் தான் ("Commencement of next fasli year 1377"-ல் தான்) முடிவு எடுப்பதாக இருந்தது.

**திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் :** we will take a decision என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா:** திரு. பாலசுப்பிரமணிய அய்யர் சொன்னபடி நிலவரியை எடுத்துவிடுவேன் என்று அல்ல. "take a decision" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருபது வருட நிர்வாக அனுபவம் உள்ள நீங்களே ஜூலை மாதத்தில் தான் செய்ய முடியும் என்றால், இப்போதுதான் தத்தி நடக்கின்ற எங்களைப் பார்த்து 'இன்னும் கொஞ்சம் வேகம், இன்னும் கொஞ்சம் வேகம் என்றால்' குழந்தையினிடத்தில் அக்கறையுள்ளவர்கள் சொல்லுகின்ற காரியம் அல்ல என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்றபடி அவர்கள் மறுபடியும் கூட வேறொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள் "We are confident that what ever loss of revenue is sustained ultimately with the abolition of land revenue, can be made good by State Trading in major agricultural produce ... ஆகையினால் இந்த நிலவரி ரத்து என்பதைப்பற்றி சர்க்கார் கொடுக்கின்ற அறிக்கை நிச்சயமாக பரிசீலனையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாங்கள் எண்ணிக் கொண்டிருப்பது எல்லாம், இந்த நிலவரியை ரத்து செய்வது என்பது எந்த அடிப்படையில் இருக்கவேண்டும். நிலவரியைக் கட்டுவதில் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு கஷ்டம் இருக்கிறது; ஆகையினால் ரத்து செய்யலாம் என்ற முறையிலா; அல்லது நமக்கு வேறு வகையில் வருவாய் தேடிக் கொண்டு இந்த தேவையற்றதை விட்டு விடலாம் என்ற அடிப்படையிலா என்று இவைகளை ஆராயவேண்டியிருக்கிறது. அதைப்போலவே, ஒரு நல்ல கட்டம் இயற்றப்படுகின்ற நேரத்தில்; அது சமூகத்தில் யார் யாருக்கு மட்டும் தேவை, யார் யாருக்கு அது தேவையில்லை என்று பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இந்த நிலவரியை கட்டுவதற்கு கொஞ்சம் தாங்கும் சக்தி படைத்த நிலச்சுவாந்தார்களைப் பார்த்து 'உங்களுக்கும் வரிரத்து தான்' என்று சொல்லுவது நியாயமா, அல்லது 5 ஏக்கர், 4 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கின்ற சிறு நிலச்சுவந்தார்களுக்கு மட்டும், 'நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள், ஆகையால் நிலவரியை ரத்து செய்து விடலாம் உங்கள் வரையில் என்று சொல்லுவது நியாயமா என்று ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. நேற்றைய தினம் எனது மதிப்பிற்குரிய நண்பர்

தாமோதரன் திட்ட கமிஷனைப்பற்றி சொன்னார்கள். திட்ட கமிஷன் தாக்கல் அனுப்பியபடி இருக்கிறது. 'நிலவரியில் கை வைக்காதே, அதிகப்படுத்த வேண்டுமே தவிர அதை குறைக்க கூடாது' என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மத்திய சர்க்காரும், மாநிலசர்க்காரும் ஒரே கட்சியாக இருந்த போதே, இந்த தாக்கல் வந்தது என்றால், நான் வேறொரு கட்சியை வைத்துக்கொண்டு சர்க்கார் நடத்துகின்றபோது, அந்த தாக்கல் புறப்படாது என்பதற்கு என்ன உத்திரவாதம்? அப்படி நான் தாக்கல் வந்தவுடன்; திட்ட கமிஷனுடைய கட்டளையை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றோ அல்லது மத்திய சர்க்கார் ஆணையை மீறுவேன் என்றோ சொன்னால் உடனே நமது தாய்மார்கள் எழுந்திருந்து இப்படி தட்டிக் கழிக்காதீர்கள்' என்று அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சொன்னால், என்ன செய்வது என்பதை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். ஆகையால் இந்தப் பிரச்சனைகளைப்பற்றி வெகு தீவிரமாக ஆராய்ச்சி செய்து தக்க நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத்தான் 'படிப்படி யாக' என்று சொன்னோம். ஒரு பெரிய தவறான கருத்து நமது நாட்டில் இருக்கிறது 'படிப்படியாக' என்றால்அது ஏதோ கேவலம் அது ஏதோ பிற்போக்குத் தன்மை என்று எண்ணிக் கொண்டிருக் கிறார்கள். படிப்படியாக என்பதற்குப்பொருள் 'உறுதியாக' ஒரு இடத்தி லிருந்து இன்னொரு இடத்திற்கு உறுதியாகச் சொல் வோம் என்பதற்குத்தான் படிப்படி என்று பெயரே தவிர, நாங்கள் இருந்தால் வெகு வேகமாகப்போய் இருப்போம் என்றால் அது வேறு விஷயம்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர்: விழுவதற்காக.

மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா: ஆகையினால் படிப்படி யாக என்பது தவறானது அல்ல. என்னை நீங்கள் பார்க்கிறீர்கள். என்னுடைய உடல் அமைப்பை பார்த்தாலே தெரியும் நான் தாண்டுபவன் அல்ல. தாவக்கூடியவன் அல்ல என்று, படிப்படி யாகத்தான் செல்லமுடியும். ஆகையினால் என்னிடத்தில் படிப் படியான காரியத்தைத்தான் எதிர்பார்க்கலாம் என்று தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். மற்றுமொன்று, நமது நண்பர் ராஜாராம் நாயுடு அவர்கள் பேசியதில் அவர்கள் ஏதோ சொன் னார் தவறான கருத்து வரும்படியாக, அவர் தவறாகச் சொல்ல

வில்லே. அந்த பேச்சால் சில தவருன கருத்துக்கள் வரக்கூடும் என்பதால் அதைப்பற்றி சிறிது விளக்கம் தரவேண்டுமென்று விரும்புகிறேன், முன்னல் பள்ளிக் கூடத்தில் மதிய உணவு திட்டத்திற்கு ஏராளமான தொகை செலவழிக்கப்பட்டது போய் அவர்கள் பழமொழி சொன்னர்கள் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது' என்று.

திரு. ராஜாராம்: மானயம் குறைந்து விட்டது என்று சொன்னேன்

பாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணு: மான்யம் குறைந்து விட்டது என்ருர். அதுவும் குறையவில்லே.

"In the Third Plan we were receiving only one—third grant towards midday meals scheme, but the Central Government have arranged to meet that expenditure and at the end of the Third Plan it should be treated as committed expenditure."

இன்னென்று மத்திய சர்க்காரில் கொடுத்தது 8 லட்சம் என்று குறிப்பிட்டார்.

"The Finance Commission has already provided re sources towards it. The argument doesnot seem to justify the central grant. We are not going to get through sources guaranteed by the Finance Commission."

பத்திரிகையில், மதிய உணவுத் திட்டத்திற்கு முன்னல் 10 லட்சம் செலவழித்தார்கள் இப்போது 8 லட்சம் தான் என்று செய்தி வரக்கூடாது என்பதற்காக, செலவழிக்க இருக்கிற தொகையில் குறைவு ஏற்படாது. அதுஃபைனன்ஸ் கமிஷன் கொடுக்கின்ற ஏற்பாட்டுப்படி செய்ய இருக்கிரும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்னென்று அவர்கள் எப்படியாகிலும் தெர்மல்பவர் ஸ்டேஷனே நான் உண்டாக்கி தீர வேண்டும் என்று சொன்னர்கள். மின்சாரத் துறையில் என்னென்ன சாத்தியமோ அவ்வளவையும் நமது வெங்கடராமன் அவர்கள் செய்வதில் தவறி இருக்க மாட்டார்கள் என்று உங்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். அதில் ஒரு சிக்கலான

பிரச்சனையை தீர்க்காமல் விட்டு வைத்திருக்கிறார். புதிதாக 100 மெகாவாட்— தெர்மல்பவர் ஸ்டேஷனை வைக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொண்டாகி விட்டது. அதைத் தூத்துக்குடியில் ஆரம் பிப்பதா அல்லது எண்ணூரில் விரிவு படுத்துவதா என்பது சிக்க லான ஒன்றாக இருக்கிறது. அவருக்கு இருக்கிறசாமர்த்தியத்திற்கு சிக்கலை எடுத்து விட்டுக் கொடுத்திருக்கலாம். ஆனால் சிக்கலோடு கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆர். வெங்கடராமன்: சிக்கலை தீர்ப்பது என்றால் எலெக்ஷன் 6 மாதம் தள்ளிப்போய் இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா: எலெக்ஷனை 6 மாதம் தள்ளிப் போட்டிருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். உண்மையில் நமது தாய்மார்கள் 'எங்களுடைய வெங்கடராமன் என்று மார்தட்டிக் சொல்லுங்கள்' என்றார்கள். எனக்குத் தெரியும் அவர் இரண்டு கையாலும் மார்தட்டிக்கொண்டே வந்திருக்கிறார். 'நாம் என்ன சொன்னாலும் இந்தப் பாவிகளுக் குப் புரியவில்லையே' என்று மார்த்தட்டிக் கொண்டிருக்கிறார்கள். நமது மார்பை நாம் தட்டிக் கொள்ளுகிறபோது ஒரு சிரமமும் இல்லை.

ஆகையால் இந்த தெர்மல் பிளாண்ட் விஷயத்தில் சிக்கல் அப்படியே இருக்கிறது, சேலம் ஸ்டீல் பிளாண்ட் விஷயத்திலும் சிக்கல் அப்படியே இருக்கிறது. இந்தச் சிக்கலைப் பதவியில் இருக்கிறவர்கள் அவிழ்ப்பதற்காக இருக்கிற வழிமுறைகளை விட பதவியில் இருந்தவர்களுக்கு இருக்கிற வழி முறைகள் அதிகம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுவரையிலா வது அவர்கள் என்னிடத்தில் ஜாடை காட்டட்டும். அதுவரை யில் அவர்கள் ஜாடைகாட்டுவார்களேயானால் அதை நன்றாக செய்து முடிக்கமுடியும். திரு. பாலசுப்பிரமணிய அய்யர் அவர் கள் சொன்னார்கள் 'நீங்கள் மத்திய சர்க்காருக்கு ரொம்பவும் பக்தி பூர்வமாக நடந்தீர்கள்' என்று, பக்தியிலே பலவகை உண்டு. கல்லால் அடித்தே சாக்கிய நாயனார் என்பவர் தன் பக்தியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். எனக்குக்கூட அப்படி மத்திய அரசாங்கத்தினிடம் அதிகமான அளவுக்கு பற்று இருந்தாலும்; நான் அணுகுகிற முறைக்கும் திரு. வெங்கடராமன் அவர்கள் அணுகுகிற முறைக்கும், கொஞ்சம் வித்தியாசம் இருக்கும்.

அவர் அணுகிறபோது அவரை எதிரிலே நாற்காலி போட்டு உட்காரவைத்து 'எனக்கு இருக்கிற தொல்லையில் நீ இதை வேறு கேட்கிறாயோ என்றால்' அவரே 'சரி, சரி அடுத்த தடவை பார்க்கலாம்' என்று தான் வருவார். இதே கேள்வியை என்னைப்பார்த்து கேட்டால் நான் என்ன சொல்லுவேன்? 'எனக்கு இது தவிர வேறு வழியில்லை;. 'நீங்களாவது எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்; வழி சொன்னால் நான் நேராக செக்கரட்டேரியட்டுக்கு செல்லுகிறேன்• இல்லாவிட்டால் கடற்கரைக்குப் போய் மக்களைக் கூட்டி, ஐயா ஏதேதோ எண்ணினேன், இந்தந்த காரணங்களால் இப்படி ஆகிவிட்டது, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்'' என்று கேட்பேன். அந்த அளவுக்கு எனக்கு வாய்ப்பு இருக்கிறது. இதையே தான் நான் அவர்களுக்கும் கூட சொன்னேன். 1957-ல் சென்னை சட்டமன்றத்தில் நான் இருந்த போது ''இப்படிப்பட்ட நேரத்தில் நீங்கள் ராஜினமா கூட செய்ய வேண்டாம்; ராஜினமா செய்வதாக உண்மையாகக்கூட வேண்டாம் ஒப்புக்காகவாவது சொல்லுங்கள்'' என்று கேட்டேன். அதை அவர்கள் அந்த நேரத்தில் நம்பவில்லை. என் மதிப்புக்குரிய நண்பர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இப்படிப்பட்ட'' சீப் பிராவ்டோ, எனக்குக் கிடையாது என்று சொன்னார். எங்களுக்கு அது 'சீப்பிராவ்டோ'வாக தோன்றவில்லை. ஒரு நாட்டு மக்களின் உணர்ச்சியை ஒரு அரசு அந்த வகையில் எடுத்துச் சொல்லவேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன். அந்த வகையில் சேலம் ஸ்டீல் பிளான்ட்டிலும், தெர்மல் பிளாண்டிலும் உள்ள சிக்கலைத் தீர்க்க நாங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளும் நேரத்தில், நீங்கள் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்று ஏற்கெனவே நிர்வாகத்தில் இருந்தவர்களைப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இந்த இடைக்கால பட்ஜெட்டோடு ஒரு நெருங்கிய தொடர்பு இலலாவிட்டாலும், பேசப்பட்ட பேச்சுக்களுக்கு தொடர்பு இருப்பதால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அருள் கூர்ந்து காங்கிரசில் உள்ள யாரும் 'நாங்கள் 3 படி அரிசி போடுகிறோம் என்று சொன்னதால், ஒரு படி அரிசி போடுகிறோம் என்று சொன்னதால் மக்கள் எங்களை ஆதரித்தார்கள்; உங்களை ஆதரிக்கவில்லை' என்று தப்புக்கணக்குப் போடாதீர்கள். கேரளத்தில் 3 படி அரிசியைச் சொல்லியா எதிர்க்கட்சியினர் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்? பீகாரில் ஒரு

ரூபாய்க்கு 3 படி அரிசியை சொன்னார்களா? வங்கத்திலே அந்தப் பேச்சு வந்ததா? இல்லையே! ஏதோ ஒரு எண்ணம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது அதை நம்முடைய மதிப்புக்குரிய வெங்கட்ராமன் அவர்கள் இங்கு அழகாகப் பத்திரிகை அறிக்கை ஒன்றில் சொன்னார்கள், "மக்கள் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய இன்னும் அதிகமான வளர்ச்சியை இன்னாரைக்கொண்டு செய்து கொள்ளலாமா; அவரைக் கொண்டு செய்து கொள்ளலாமா என்று தான் தேடுவார்கள். ஆக அதுதான் வளர்ச்சியின் அறிகுறி" என்று அவர் பேசியதாக அந்தப் பத்திரிகையில் பார்த்தேன். அதுவும் ஒரு போதுக்கூட்டத்தில் பேசியதாகப் பார்த்தேன். அதற்கு முன்னால் ரொம்பவும் காரசாரமாகப் பலர்பேசிய போதிலும், அந்தக் காரத்தில் தன்னை இணைத்துக் கொள்ளாமல் தனித்து நின்று நல்ல முறையில் பேசியதாகப் பார்த்தேன். ஆகையால் காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் இந்தத் தடவை அனுமதி கொடுக்காததற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகமும் மற்ற எதிர்க்கட்சியினரும் 3 படி, ஒருபடி என்று சொன்னதால் தான் என்று கருதாதீர்கள் அது போடமுடியுமா என்றெல்லாம் கேட்காதீர்கள். நான் திருப்பிக் கேட்பது தவறு என்று கருதுகிறேன். ஆனால் மக்கள் பேசிக்கொள்வார்கள், 'இவர்களாவது 3 படி போடுகிறேன் என்றார்கள்; ஆனால் காங்கிரஸ் அரசாள வந்தால், நாட்டில் எங்கும் தேனும் பாலும் ஓடும் என்றார்கள்; எந்தக் குடத்தில் தேனை அள்ளினோம். எந்தக் குடத்தில் பாலை எடுத்தோம், என்று பேசிக் கொள்வார்கள். ஆகையால் தான் நாம் அவர்களைப்பற்றி அதிகமான அளவுக்கு ஒருவருக்கொருவர் சொரிந்துவிட்டுக் கொண்டு கஷ்டப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். முதலில் சொறிகிறபோது இன்பமாகத் தான் இருக்கும். பிறகு எரிச்சல் ஏற்படும். ஆகவே இந்த நாட்டு மக்கள் ஜனநாயக முறைப்படி ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புப்படி அரசு ஏற்ற நாங்கள் உங்களை வெகுவாக மதிக்கிறோம். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது காங்கிரஸ் அமைச்சர்களில் ஒருவர் இருவரைத் தவிர, காங்கிரஸ் கட்சியினர் எங்களுக்கு எதுவுமே தெரியாது என்ற அடிப்படையில்தான் எங்களோடு பழகினார்கள். எங்களை இன்றையதினம் உங்களுக்கு எல்லாம் தெரியும். இருபது வருஷம் இந்த நாட்டினை ஆண்டிருக்கிறீர்கள். அந்த நல்ல அனுபவ அறிவினை வைத்திருக்கிறீர்கள் என்ற மதிப்போடு உங்களை நாங்கள் அணுகுகிறோம். அப்படி

அணுகுகிற நேரத்தில் நீங்கள் எங்களை இக்கட்டில் புகுத்தலாமா? என்றோ, 'நீ அதைச் சொன்னாயே என்னவாயிற்று; இதைச் சொன்னாயே இது என்னவாயிற்று' என்று இவைகளைப் பற்றியோ நீங்கள் அதிகமாகக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மூன்றுபடி, ஒருபடி என்கிற விஷயத்தை இந்த சட்டமன்றத்தில் மட்டும்தான் பேசுகிறீகள்? தேர்தலுக்கு முன்னால் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் நீங்கள் பேசாத நாள் உண்டா? அப்படியே 3படி போடுகிறேன் என்று சொன்னதால்தான் மக்கள் ஓட்டு அளித்தார்கள்' என்றால் கிராமத்தில் உள்ள மக்கள் எங்களை எதிர்த்து அல்லவா ஓட்டுப் போட்டிருக்கவேண்டும்? 'மூன்றுபடி அரிசி போடுவது என்றால், நம் நெல் விலையை அல்லவா குறைத்து விடுவார்கள்; அப்படி என்றால், இந்த நாட்டு விவசாயிகள் வயிற்றில் அடிப்பதாகத் தானே அது இருக்கும் என்று விவசாயிகளின் ஓட்டுகள் எனக்குக் கிடைத்திருக்ககூடாதே! எங்களுக்குக் கிடைத்த ஓட்டுகள் சென்னையிலும், கோவையிலும், திருச்சியிலும், தஞ்சையிலுமாக இந்த 4 இடங்களில் மட்டும்தானே கிடைத்திருக்க வேண்டும். நடைபெற்றது என்ன? கிராமத்தில் உள்ள விவசாயிகள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அரிசி விலையை மட்டு மல்ல, விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற மற்ற எல்லாப் பொருள் களின் விலையையுமே குறைக்க விரும்புகிறார்கள் என்று நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான் கிராமத்து மக்களும் நகரத்து மக்களும் எங்களை ஆதரித்தார்கள். அவர்கள் நம்பிக் கைக்கு ஏற்ற அளவுக்கு எங்களால் நடந்து கொள்ள முடிகிறதா என்றால் அதுவேறு பிரச்சனை. ஆகையால் எந்தக் கட்டத்திலா வது என்னால் நடந்து கொள்ளமுடியவில்லை என்று தோன்றினால், மதிப்புக்குரிய டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் நிறைந்த அன்பு காரணமாக என்னை எச்சரித்திருந்தாலும் நான் எந்தக் கட்டத்திலாவது என்னால் அந்த நிலைமைகளைச் சரிக்கட்ட முடியாது என்று தோன்றினால் மக்களிடம் அணுகி "இன்னின்ன காரணங்களால் இதைச் செய்யமுடியாது போய்விட்டது; நீங்கள் என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்" என்று கேட்பவனே தவிர, எப்படியாகிலும் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் அல்ல. அல்லது இன்னுமா இருக் கிறான் என்ற கேள்வி வருவதற்குள்ளாக, 'இதற்குள்ளாகவா அவன் போய்விட்டான்' என்று கேள்வி வரும்படி, நடந்து

கொள்வேனே தவிர, ஏனென்றால் எங்கள் அரசியல் வாழ்க்கையை இந்த 5 வருஷத்தோடு முடித்துக் கொள்வதாக இல்லை. ஆகையால் எந்தெந்த அளவுக்குக் காரியங்கள் செய்ய முடியும் என்று மக்களிடம் சொல்லுவேன். அந்த நேரத்தில் 'மத்திய அரசுக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள தொடர்புபற்றி இதே கருத்தைத்தானே நீங்களும் வைத்திருக் கிறீர்கள். இதில் என்ன புதுமை இருக்கிறது, என்று கேட்கலாம்.

நம் பாலசுப்பிரமணியம் அய்யர் அவர்களுக்குத் தெரியும். எல்லா சங்கீத வித்வான்களுமேதான் காம்போதி ராகத்தைப் பாடுகிறார்கள். காம்போதி ராகத்திற்கு இலக்கணம் ஒன்றுதான். ஆனால் ஒவ்வொருவர் பாடுகிறமுறை மாறுபடும். சிலபேர் பாடினால் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். சிலபேர் பாடுகிற போது ஏன் வந்தோம் என்று இருக்கும்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர்: இது காம்போதியா என்று கூட சந்தேகம் வரும்.

மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா: ஆமாம். கொஞ்சகாலம் பொறுத்தீர்களானால் 'இது நாங்கள் பாடிய பாட்டாகத்தானே இருக்கிறது' என்று சொன்னாலும் அது உங்களோடு பழகிய பழக்கத்தாலோ என்னவோ என்று சொல்லுவேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் ஒரு அரசு மாறுகிறபோது அடிப்படை இலக்கணங்களை அடியோடு மாற்றமுடியாது. எப்போது மாற்றலாம் என்றால், ஒரு புரட்சி ஏற்பட்டு வருகிற சர்க்கார் என்றால் மாற்றலாம். அதுவும் பலாத்கார புரட்சி ஏற்பட்டு வருகின்ற சர்க்கார் என்றால் மாற்றலாம் அந்த மாதிரி பிரான்ஸ் நாட்டிலே புரட்சிக்குப் பிறகு மாற்றப்பட்டது. அப் போது கடைவீதியில் சுற்றிக் கொண்டிருந்தவர்களை யெல்லாம் அழைத்து வந்து 'நீதான் நீதி மன்றத்தலைவன். அவனைப்பற்றி என்ன சொல்லுகிறாய்? இவனைப்பற்றி என்ன சொல்லுகிறாய்? என்று கேட்க அவன் எதையோ தின்றுகொண்டு 'இவனுக்கு தூக்கு அவனுக்கு 12 வருஷம் அவனுக்கு 6 வருஷம் என்று சொன்னானாம். அதுவல்ல இங்கே நடந்தது இங்கே நடந்திருப்பது ஜனநாயகச் சக்கரம் உருண்டிருக்கிறது. இருபது வருஷத்திற்குப் பிறகு ஒரு சுற்றி இருக்கவேண்டும். ஒரு சுற்றுதான் சுற்றி இருக்கிறது. ஒரேசுற்றில் அடிப்படையிலேயே எல்லாம் மாறிவிடும்

என்று கருதாமல் செய்யக்கூடிய காரியங்களில் மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள தொடர்பில், அவர்கள் அனுசரித்து கொள்கைக்கும் நாங்கள் அனுசரித்த கொள்கைக்கும் ஒரு அடிப்படை வித்தியாசம் நிச்சியமாக இருக்கும். எந்த அடிப்படை வித்தியாசம் என்ருல், நம்முடைய தமிழக காங்கிரஸ் அமைச்சர்கள் சொல்லாமலேயே காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்பதில் அவர்கள் வெற்றியை பெற்ருர்கள். மற்ற மாநில சர்க்கார்கள்கூட நம் தமிழக காங்கிரஸ் சர்க்கார் மீது பொருமை கூட கொண்டிருக்கிருர்கள். 'வெங்கடராமன் வருவார்; டெல்லியில் உள்ள அதிகாரிகள், அமைச்சர்களைப் பார்ப்பார்; திரும்பி போகிறபோது கைநிறைய காகிதங்களோடுதான் போவார்; எத்தனையோ லைசென்ஸ்களை வாங்கிக்கொண்டு போவார்; அத்தனை சாமர்த்தியம்' என்று சொல்லுவார்கள். நான் கருதுவது தனி நபர் சாமர்த்தியத்தால் மட்டும் எந்தக் காரியமும் இருக்கக்கூடாது. இப்போதே பாருங்கள் திரு. வெங்கட்ராமனைப் போன்ற சாமர்த்தியசாலியை எங்களால் கொண்டுவர முடியவில்லை. எங்களுக்குப்பிறகு இதைவிட சாமர்த்தியம் குறைவானவர்கள் வருகிருர்கள் என்ருல், ஒரு சர்க்கார் சாமர்த்தியத்தின் பேரிலேயேவா இருக்க வேண்டும்?

அது ஒரு முறையின் பேரில்இருக்க வேண்டும். ஆகையால் மாநில சர்க்காரின் முழுவளர்ச்சிக்கு மத்திய சர்க்கார் என்ன செய்யவேண்டுமோ அதைக் கேட்டு வாங்க நாம் ஒரு துளியும் தயங்கக்கூடாது என்பதுதான் இந்தப் புதிய சர்க்காரின் கொள்கையாகும்—திட்டமாகும். அரசியல் சட்டத்தில் இப்பொழுதே நல்ல அதிகாரம் இருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று அரசியல் வித்தகர்கள் சொல்லுகிருர்கள். இருக்கிற அதிகாரத்தை மத்திய சர்க்கார் இழுத்துக் கொள்கிருர்கள் என்று சொல்லுகிருர்கள். காலதாமதப்படுத்தி தங்களுக்குள்ள ஆதிக்கத்தால் நம்முடைய திட்டங்களை குறைக்கிருர்கள் என்று நினைக்கிருேம். அரசியல் சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை மாநில சர்க்காருக்கு உரியது. மத்திய சர்க்காருக்கு இன்னின்ன உரியது என்னதெளிவாகச் சொல்லியிருந்தாலும், மத்திய சர்க்காரிலிருந்து ஒவ்வொரு பாராளுமன்றத் தொடர் கூட்டத்திலும், கல்வித் துறையில் இன்னின்ன சலுகைகள், அதிகாரங்கள்

வேண்டுமென்றும் சுகாதாரத் துறையில் இன்னின்ன உரிமைகள் தேவை என்றும் மாநிலங்கள் கேட்கக்காரணம் என்ன? சேலம் எஃகாலையைப் பற்றி திரு. வெங்கட்ராமன் அவர்கள் தயாரித் ததைவிட அப்பழுக்கற்ற அறிக்கையை யாரும் தயாரிக்க முடியாது. ஒன்று அவருக்கு நினைவிருக்காது என்று கருதுகிறேன் அவருடைய அறைக்கு ஒருநாள் போனபோது, நெய்வேலி லிக்னைட்டை எடுத்து சேலம் எஃகு தயாரிக்கலாம், என்பதைக் காட்ட அதில் தயாரித்த எஃகை சுவற்றில் தெரியும்படி மாட்டி வைத்திருந்தார்கள். அவை கிழக்கு ஜெர்மனியிலிருந்து எடுத்து வந்தது என்று காட்டினார்கள். இவ்வளவையும் தயாராக சேகரித்து வைத்திருந்தார். அப்படியிருந்தும் ஏன் தடைப்பட்டது? மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டிய உதவியை இழுத்துப் பிடித்தவுடன், மாநில சர்க்காரே செய்யும் என்று சொன்னார்கள். மாநில சர்க்கார் என்ன செய்திருக்கிறது? அதற்குத் தகுந்த அளவு பைலட்பிராஜெக்ட் என்று போட்டிருக்கலாம். அல்லது ராஜாராம் அவர்கள் சொல்லியதுபோல 'டோகன் புராஜெக்ட் என்று போட்டிருக்கலாம், ஆகையால்தான் நம்முடைய தாய் மார்கள் சொன்னார்கள் 'மார்தட்டி சொன்னாரே' என்று. மார்தட்டிக் கொண்டவுடன் கணக்கு வரவில்லையே என்றுத் தலையைத் தட்டிக் கொண்டிருப்பார். அப்படியும் வரவில்லை. மத்திய சர்க்காரிலிருந்து இந்த அதிகாரங்களைப் பெறுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முனையும். இன்னொரு கருத்து இருக்கிறது. மத்திய சர்க்காரின் பணத்தில், பங்கு வேண்டுமென்றும் சொல்லுகிறபோது மத்திய சர்க்காருக்கு என்று தனியாக பணம் இருக்கிறது என்று கருதுகிறோம். மத்திய சர்க்கார் பணம் என்று ஒன்றில்லை. நாட்டு மக்கள் கொடுத்த பணத்தில் ஒரு பகுதி அங்கே முடக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு பகுதி இங்கே லேசாக உலவிக் கொண்டிருக்கிறது. நம்முடைய பணத்தைத்தான் திருப்பித்தர வேண்டுமென்று கேட்கிறோமே தவிர, நாசிக்கில் ஒரு அச்சகம் வைத்து, ஸ்டேட் கவர்ன்ட்மெண்ட் கரன்சி என்ற ஒரு பகுதியும், சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கரன்சி என்று ஒரு பகுதியும் அச்சடிக்கப்படு வதில்லை. 'எங்கள் பணம் அங்கேயிருக்கிறது. திருப்பிக் கொடுங் கள்.' என்று கேட்பதில் அவர்களைவிட நாங்கள் கண்டிப்பாக நடந்து கொள்ளமுடியும். பக்குவமாக நடந்து கொண்டு பார்த் தோம். பலிக்கவில்லை. கண்டிப்பாக நடந்து கொண்டு பார்ப்

போம். பிறகு பக்தர்கள் சொல்லுகிறபடி ஆண்டவன் விட்ட வழி என்று விட்டு விடுவோம். ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் வகையில் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இடைக்கால பட்ஜெட் விவாதத்தில் சொல்லிய எல்லா கருத்துக்களையும் கவனத்தில் வைத்துக் கொண்டு ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்து இதை முடிப்பதற்கு முன் ஒன்றை அறிவிக்க விரும்புகிறேன். அம்மையார் அவர்கள் வடசென்னையில் உள்ள பெண்கள் கல்லூரி பற்றி சொன்னார்கள். பெண்கள் இருந்து படிப்பதற்கு இடமே இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இடம் கூடவாங்கி வைத்திருக்கிறோம் என்றார்கள். அந்தக் கஷ்டம் இனிமேல் இருக்காது என்று உறுதியளிக்க விரும்புகிறேன். புதியகட்டிடம் கட்டுவதற்கு பணம் இருக்கிறதா என்று துண்டு விழுகிற பட்ஜெட்டைக் கொடுத்திருக்கின்ற ஒரு நிதியமைச்சரிடம் கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

We have now proposals for shifting the school of printing to Adyar. When this is done, the spacious building of the school of printing will be come available for the use of the women's college. This will also obviate the need for fresh acqusition of land at prohibitive cost.

ஆகையால் நான் பேசியதற்கு ஒன்றுமில்லையா, என்று மற்றவர்களுக்கு வருத்தம் இருந்தாலும் அம்மையாருக்கு வருத்தம் இருக்காது என்று நினைக்கிறேன். நல்ல கட்டிடம் அவர்களுக்குக் கிடைக்கிறது. பெண்கள் கல்வியிலும், சேவையிலும் அவர்கள் காட்டுகிற ஆர்வம் எங்களாலும் பாராட்டப்படும் என்று உறுதியளித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே, ராஜாராம்: தலைவர் அவர்களே, சபை நடந்து கொண்டிருக்கிற போது அந்தக் காலங்களில் முக்கியமான அறிவிப்புகளைச் சபையிலேயே அறிவிக்க வேண்டுமென்று கேட்டேன். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். இந்தச் சபையிலோ அல்லது அசெம்பிளியிலோ முக்கியமான அறிவிப்புகளை அறிவித்தால் நல்லது என்றேன்.

மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா: உறுப்பினர் யோசனைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இனி அந்த முறை பின்பற்றப்படும்.

# "வரிவிதிப்பு முறைப்பற்றி அண்ணா"

**அறிஞர் அண்ணா:**

தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்த அவை முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் பேரில் மிக நல்ல கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில் நான் இங்கேயிருப்பதற்கு இல்லாத நிலைமை ஏற்பட்டதற்கு உள்ள படியே வருந்துகிறேன். ஆனால் நான் இருந்த இடத்திலிருந்தே அவர்கள் எல்லாம் பேசிய கருத்துக்களை தருவித்து படித்து அவை களால் மிகுந்த பயனைப்பெற்றுக்கொண்டேன் அதிலும் இன்றைய தினம் நம்முடைய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் நல்ல முறையில் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பல வருடங்கள் ஆளும் கட்சியாக இருந்தவர்கள் எதிர்க் கட்சியாக ஒரு தடவை அமர்ந்தால் என்ன பலன் கிடைக்கும் என்பது அவரின் பேச்சி லிருந்து நன்கு புலனாகிறது. நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் ஆண்ட அனுபவம் எங்களுக்கு இல்லாத காரணத்தால், நாங்கள் எடுத்துச்சொன்ன சிலவகையான குற்றச்சாட்டுகளைப் போல அல்லாமல், அவர்கள், இன்னின்ன காரியங்களை இன்னின்ன யடி செய்யவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர், கருத்துக்களை திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டுமென்று பல இடங்களில் வற்புறுத்தினார்கள். ஜனநாயகம் நடைபெறுகின்ற நாட்டில் ஆளும் கட்சி பல விஷயங்களில் திட்டவட்டமாகத் தெரிவிப்பதை மற்றவர்கள் தவறான வழிகளில் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற உறுதிப்பாடு இருக்குமானால் திட்டவட்ட மாகத் தெரிவிக்கலாம்.

நம்முடைய எதிர்க் கட்சி தலைவரை பொறுத்தவரை பயன் படுத்திக் கொள்ளமாட்டார்கள். ஆனால் அவருடைய கட்சியின ரின் போக்கைக் கட்டுப்படுத்தும் வகை அவருக்கு இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். திட்டவட்டமாகத் தெரிவிக்கக்கூடாது என்பதற்காக திட்டவட்டமாக சிலவற்றைத் தெரிவிக்காமல் இல்லை. சிலவற்றை எடுத்துச் சொன்னதை நான் இன்னும் அதிக

அளவிற்கு சிந்தித்து பார்த்து அதை எல்லாம் எந்தெந்த வகையில் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதை அக்கறையோடு கவனிப் பேன் என்ற அளவிற்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இந்த நிதி நிலே அறிக்கையில் வரி போடவில்லே என்பதற்காக ஒரு பெருமித உணர்ச்சி ஒரு வரியில் கூட நான் காட்டவில்லே. அதற்கு காரணம், நான் ஓரளவிற்கு பொருளாதாரத்தில் படித்தறிந்து கொண்டது. வரி போடாமல் இருப்பதானது பெருமை என்ருே, சிறுமை என்ருே, எந்த பொருளாதார இலக்கணமும் சொல்லவில்லே. வரி என்பதே கூட சமுதாயக் கடமையில் குறிப்பிட்டிருக்கிறதே தவிர அது கொடுங்கோலின் அடையாளமென்று யாரும் சொல்லவில்லே. ஆனுல் ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலே அறிக்கை தயாரிக்கும் நேரத்தில் இந்த வருடத்திலே நிதி நிலேக்கொப்ப எங்களுக்குக் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது, ஆகவே இன்னின்ன வரி போடுகிருேம் என்று கேட்டு வாங்குவதும், இந்த வருடம் போட வில்லே ஏனென்ருல் இருக்கிற நிதி நிலேயை வைத்துக்கொண்டு ஓரளவு சரிப்படுத்தியிருக்கிருேம் என்று சொல்வதும் ஒரு பொரு ளாதார மரபாகும். ஆகையால் இதிலே வரி போடவில்லே என்று நான் பெருமைபட்டுக் கொள்வதாக மற்ற கட்சி நண்பர்கள் எடுத் துக்கொண்டு, ஏன் வரியில்லே, அதிலே வரியில்லேயா, இதிலே வரி யில்லேயா என்றெல்லாம் சில உறுப்பினர்கள் பேசியிருக்கிருர்கள். அதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட வாதம் நீங்கள் வந்தால் வரியே போடமாட்டோம் என்று அல்லவா சொன்னீர்கள், இப்போது போடுகிறீர்களே நியாயமா என்று அவர்கள் கேட்கி ருர்கள். நாங்கள் சொல்வதையெல்லாம் இப்போது கவலேயோடு அக்கறையோடு கேட்கிற அளவிற்கு நாங்கள் ஆட்சிப் பொறுப் பில் இல்லாத நேரத்தில் பேசியதை கவனித்து கேட்டிருந்தால் நாங்கள் ஒரு இடத்தில் கூட அப்படி சொல்லவில்லே என்பதை அவர்கள் உணர்வார்கள். நாங்கள் அப்போது பேசியதெல்லாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லாத பேச்சுக்கள் என்று கருதிய தால், யாரோ சொன்னதாக சொன்னீர்களே, இப்போது வரி போடுகிறீர்களே நியாயமா என்று பேசுகிருர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்றைய தொடர்பு, உறவாக மலர்ந்து எதிர்காலத்தில் யார் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் எந்தக் கட்சி எதிர் தரப்பில் இருந்தாலும், ஒருவரை ஒருவர் நல்ல விதத்தில் புரிந்துகொண்டு அதற்கேற்ற முறையில் கருத்துக்களே பரிமாறிக்கொள்ள, இப்போது நல்ல சூழ்நிலே உருவாகியிருக்கிறது

என்று நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த இரண்டு கட்சியிலும் தீவிரவாதிகள் சிலர் இருக்கலாம். நம்முடைய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் பேசியதை, தீவிர காங்கிரஸ்காரர்கள் அந்த இடத்தில் இடித்திருக்க வேண்டும், அதைப் பற்றி நன்ருக கேட்டிருக்க வேண்டும். இதுபற்றி நீங்கள் அப்படி கேட்டிருக்க வேண்டும்; இதுபற்றி நீங்கள் அப்படி பேசியிருக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லுவார்கள். எனக்கு அப்படிச் சொல்லக் கூடியவர்கள் இருக்கிருர்கள் ஆனல் இப்படி ஒருவருக்கு ஒருவர் இடித்து கொள்வதின் மூலமாக மட்டுமல்ல. ஒருவருடைய கருத்துக்களை மற்ருெருவர் வாங்கிக் கொள்வதின் மூலமாகத்தான் அரசியலில் நல்ல சூழ்நிலை உருவாகும். அப்படிப்பட்ட அரசியல் நடக்க வேண்டுமென்ற அக்கறை எனக்கு மிகுதியாக உண்டு என்பதால் நம்முடைய எதிர்க்கட்சி தலைவரவர்கள் சொன்ன நல்ல கருத்துக்களையெல்லாம் நான் நிச்சயமாக ஆராய்ந்து பார்ப்பேன் என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனல் அவர்கள் அக்கறையோடு பேசினர்களே தவிர, அவர்களையும் அறியாமல் கட்சி பேச்சை பேசினர்கள். அவருடைய கட்சியைச் சார்ந்த டி. டி. கிருஷ்ணமாச்சாமி அவர்கள் 20 கோடி ரூபாய்க்கு துண்டு விழுகிற பட்ஜெட் வரப்போகிறது சென்னையில் என்று சொன்னது மெய்ப்பிக்கப்படவில்லை, என்பதால் அவருக்குக் கொஞ்சம் கசப்பு. ஆகவே எப்படியாவது அதற்கு ஒரு முக்கியத்துவத்தை கொடுக்கவேண்டும் என்று, “நீ இந்த விதத்தில் குறைக்காமல் இருந்தால் அந்த இடத்தில் குறைக்காமலிருந்தால், திரு. டி. டி, கிருஷ்ணமாச்சாரி அவர்கள் சொன்னபடி ரூபாய் இருபது கோடிக்கு துண்டு விழுந்து இருக்கும்” என்று சொல்லி அவர் வார்த்தைகளை மெய்ப்பிக்க வேண்டும் என்று பாடுபட்டு இருக்கிருர். அதே நேரத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இன்னமும் ஒன்றை சொல்லியிருக்கிருர். அதற்கு அவர் என்ன சமாதானம் சொல்லுவார் என்று தெரியவில்லை. மத்திய அரசினைப் பற்றி அவர்கள் குறிப்பிடும்போது, “இப்போது இங்கே அரசாள்கிறவர்களைப் பார்த்தால் தெரியும், ஒரு காரியமும் நடைபெருது என்று” சொல்லியிருக்கிருர்கள். அதற்கு நமது நண்பர் ராஜாராம் நாயுடு என்ன சமாதானத்தைச் சொல்லுவாரோ தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும் இருபது கோடி ரூபாய் துண்டு விழும் பட்ஜெட்டாகத்தான் இருக்கப்போகிறது என்று அவர்கள் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. நடைபெறவில்லையென்ருல் என்னு

டைய சாமர்த்தியத்தினுல் வந்ததாக நான் சொல்லவில்லே. உண்மை நிலே என்னவென்ருல், மத்திய அரசும் துண்டு விழும் பட்ஜெட்டை போட்டு, மாநில அரசுகளும் துண்டு விழும் பட்ஜெட்களாகப் போட்டு இந்தியா முழுவதும் "டெஃபிஸிட் ஃபைஞன்சிங்" (Deficit Fiancing) என்ற முறையில் செயலாற்ற முற்பட்டால், இப்போது இருக்கும் கஷ்டங்கள், மக்கள் படும் அவதிகள் இன்னமும் பன்மடங்கு அதிகமாகி தொல்லேகள் பெருகிவிடும், ஆகவே கூடுமான வரையில் நமது மாநில அரசு நாங்கள் வந்த பிறகு மட்டுமல்ல, எப்போதுமே தன்னுடைய நிதி நிலேயைக் கைக்கு அடக்கமாக வைத்துக்கொண்டு இருப்பதில் மிகுந்த கண்ணும் கருத்துமாக இருந்துவந்து இருக்கிறது. அந்த மரபு கெடாதபடி நானும் பார்த்துக்கொண்டு இருக்கிறேன் என்ற அளவிற்காவது நீங்கள் உங்கள் வாழ்த்துக்களே தருவீர்கள் என்பதில் ஐயப்பாடில்லே. பழைய மரபை கெடுக்கவில்லே என்பது ஒரு புறம் இருந்தாலும் புதிய மரபை புகுத்தவில்லேயே என்ற வருத்தம், கவலே அவர்களுக்கு இருப்பதுபோல எனக்கும் இருக்கிறது என்ருலும்; இப்போது இந்தியா முழுவதிலும் எந்தத் துறையை நோக்கிலுைம், அதில் ஒரு புதிய மரபை உண்டாக்குவதற்கு ஏற்ற பொருளாதார சூழ்நிலே இல்லே என்பதை நாம் முதலில் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும். ஏதோ கிடைக்கிற பணத்தை வைத்துக்கொண்டு, செட்டாக குடித்தனம் நடத்தி, வெளியே பணத்தை நாலு பேரிடத்தில் கடன் வாங்காமல் குடித்தனம் நடத்திஞல் அந்தக் குடித்தனத்திற்கு எந்த அளவிற்கு பாராட்டுக் கிடைக்க வேண்டுமோ. அந்த அளவிற்கு பாராட்டுதல்கள் கிடைத்தால் போதும், என்று சொல்லத்தக்க அளவிற்குதான் உள்ள நிதி நிலேயைக் கொண்டு பணியாற்ற வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு இந்தியாவின் மொத்த நிதி நிலே பாழ்பட்டு இருக்கிறது. அப்படி பாழ்பட்டு இருப்பதற்குக் காங்கிரஸ்தான் காரணம் அல்லது காங்கிரஸ்காரர்கள்தான் காரணம் என்று நான் குற்றம் சாட்டி பேசுவதாக யாரும் கருதத் தேவையில்லே. மாருக நம் திட்டங்கள் மூலமாக நாம் எவைகளே எதிர்பார்த்தோமோ அவைகளில் பெரும் பகுதி, நமக்கு ஏமாற்றத்தையும், எரிச்சலேயும் கசப்பையும் கொடுக்கும் அளவிற்கு, நம்முடைய பொருளாதாரச் சூழ்நிலே பாழ்பட்டு இருக்கிறது. இதைப்பற்றி நான் சொல்லவேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருந்த பல கருத்துக்களே இந்த அவை

யினுடைய மதிப்பு மிக்க உறுப்பினர்; நமது அருமை நண்பர் திரு. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்பு இந்த அவையில் எடுத்து கூறியதை நான் படித்துப் பார்த்தேன். என்னுடைய வேலையில் பெரும் பகுதியை நிறைவேற்றிக் கொடுத்து இருக்கிறார்கள். இன்று இருக்கும் பொருளாதாரச் சூழ்நிலை, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்க வேண்டிய தொடர்புகள், மாநில அரசு பெறவேண்டிய வாய்ப்புகள், சலுகைகள், நிதிக் கமிஷன் ஆற்றவேண்டிய கடமை. அதற்கு இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள பிரிவுகள், அந்தப் பிரிவுகளுக்கு இருக்கவேண்டிய விளக்கங்கள், அவற்றை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்பது போன்ற விஷயங்களையெல்லாம் அவர்கள் தமது உரையில் மிகத் தெளிவாக எடுத்து கூறிவிட்டமையால் நான் அவற்றை மீண்டும் எடுத்து பேசவேண்டும் என்று விரும்பவில்லை. நான் சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்த பல கருத்துக்கள் அவர்களுடைய உரையில் இடம் பெற்று இருப்பது கண்டு உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இருந்தும் அவருடைய உரையில் ஒரே ஒரு வார்த்தைதான் எனக்கு வருத்தத்தைக் கொடுத்தது. "நான் மறுபடியும் இந்த அவைக்கு வருவதாகஇல்லை" என்று சொன்னது எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. கட்டாயம் அவர் இந்த அவையில் எடுத்துச் சொல்லப்படும் கருத்துக்களின் மேம்பாட்டுக்காக பல ஆண்டு காலம் அவர் இந்த அவையில் வீற்றிருந்து (அங்கத்தினர்களின் மகிழ்ச்சி மிக்க கையொலி) அனுபவமிக்க அவர்தம் நல்ல கருத்துக்களை யெல்லாம் நமக்கு தர வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

## "மொழிப் பிரச்சனைக்கு அவசியம் காமராஜர், ராஜாஜி சந்திப்பு என்பது பற்றி அண்ணா"

இன்றையதினம் இந்த அவையில் வீற்றிருக்கும் பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களும், டாக்டர் (லட்சுமணஸ்வாமிமுதலியார்) அவர்களும், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்கள் ஆங்கிலத்தின் அவசியம் பற்றி உருக்கமாக எடுத்துரைத்ததை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்று இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்கள் எல்லாம் ஆங்கில மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்றும் ஆங்கில மொழியை புறக்

கணிப்பது தேசிய கடமைகளில் ஒன்று, என்று பலர் பேசியதை கேட்டும் மிகவும் வருத்தப்பட்டவர்கள். ஆனால் இன்றையதினம் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆங்கிலம் இல்லாமல் பல காரியங்களை நல்ல முறையில் நடத்த முடியாது என்று சொல்லி, "நீங்கள் தமிழ்ப் பற்று காரணமாக ஆங்கிலத்தைப் புறக்கணித்து விடாதீர்கள்" என்று எனக்கு அவர்கள் எடுத்துச் சொல்லும் போது, நான் உள்ளபடியே ஒரு பத்து அல்லது பதினைந்து ஆண்டு களுக்கு முன்பு நமது தமிழகத்தில் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு நேர்மாறான கருத்து பரவாமல் இருந்து இருக்குமானால் இன்றைய தினம் ஆங்கிலத்தின் தரம் இந்த அளவிற்கு வீழ்ச்சியுற்று இருக் காது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நண்பர் சொன்னார்கள், என்ன படித்தாலும்கூட இன்றையதினம் ஆங்கிலத்திலே தவறாகத்தானே பேசுகிறார்கள் என்று. ஆனால் நல்ல முறையில் ஆங்கிலத்தில் பேசினாலே அவர்கள் எல்லாம் தேசீயத்திற்கு விரோதிகள் என்று எண்ணிக்கொண்டிருந்த நாட்கள் எல்லாம் இருந்தன ஆங்கில பள்ளிக்கூடங்கள் அனைத்தும் அறவே அகற்றப்பட்டுவிட வேண்டும் என்று பொதுமேடைகளில் வலியுறுத்தப்பட்ட காலமெல்லாம் இருந்தது. நல்ல வேளையாக விஷ ஜந்துக்கள் ஏதோ சந்து பொந்துகளில் ஒளிந்துகொண்டு எப்போதாவது தலையை நீட்டுவது போன்று ஆங்கிலம் கூடாது என்றும் ஆங்கிலம் இருக்கவேண்டும் எனறு பேசுகிறவர்கள் தேசத் துரோகிகள் என்று கருதிக்கொண்டு இருப்பவர்கள் இந்தியாவிலே இரண்டொரு மூலைகளில் இருந்துகொண்டு குரல் கொடுக்கிறார் களே தவிர நாடு முழுவதும் அப்படிப்பட்ட கருத்துக்கள் பரவா மல் இருப்பது நல்லகாலம்தான். எனவே இன்றையதினம் நாடு முழுவதும் ஆங்கிலத்தின் அவசியம்பற்றி ஏற்றுக்கொண்டு இருக் கிறார்கள். தமிழ் பாடமொழியும், பயிற்சி மொழியுமானால் ஆங்கில அறிவு கெடாமல் இருப்பதற்கு என வழிவகைகளை கண்டு ஆராய் வதற்கு பல்கலை கழகத் துணைவேந்தர்களையும், கல்வி நிபுணர் களையும் கலந்து பேசி தக்கமுறையில் ஆங்கில அறிவை பெருக்கி கொள்வதற்காக இந்த அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் சொன்னார்கள் "மொழி பிரச்சனையில், அதை தீர்த்து வைப்பதற்கு எங்கள் தலைவர் காமராசரோடு நீங்கள் கலந்து பேசினீர்கள், மகிழ்ச்சி யடைந்தோம். ஆனால் மறுநாள் ராஜாஜி அவர்களோடு கலந்து

பேசினீர்கள் அதில் கொஞ்சம் பீதி ஏற்பட்டது. பிறகு விளக்கத்தை அளித்தார்கள், அந்த பீதி நீங்கிவிட்டது'' என்று. இப்போது நான் சொல்லப் போகிறதைக் கேட்டு அவர்கள் திடுக்கிட்டுவிடக் கூடாது.

இந்த மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், நான் காமராஜரை மட்டும் சந்தித்தது போதாது, ராஜாஜியை மட்டும் சந்தித்தது போதாது. காமராஜரும் ராஜாஜியும் சந்திக்க வேண்டும். ஒருவரை நீக்கிவிட்டு இன்னொருவரைமட்டும் வைத்துக் கொண்டு இந்த மொழி பிரச்சனையை தீர்த்துவிடலாம் என்று கருதுவதை விட ராஜாஜி அவர்களும் காமராஜர் அவர்களும் கலந்து பேசுவது மிக மிகத் தேவை. சொல்லப்போனால் எனக்கும் ராஜாஜிக்கும் இருக்கக்கூடிய தொடர்பைவிட காமராஜருக்கும் ராஜாஜிக்கும் இருக்கும் தொடர்புதான் பல ஆண்டுகளுக்கு முந்தியது. அதிலும் நம் எதிர்க் கட்சித் தலைவருக்கும் ராஜாஜி அவர்களுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவரே முனைந்து நின்று நான் எப்படி காமராஜரை ஒருநாளும், ராஜாஜியை ஒருநாளும் பார்த்தேனே அதேபோல அவர் ஒருநாள் காமராஜரிடம் பேசிவிட்டு, மறுநாள் ராஜாஜியிடம் பேசிவிட்டு, மூன்றாவது நாள் இரண்டு பேரையும் பேசச் செய்து, நான்காவது நாள் என்னையும் அழைத்துக்கொண்டு போவார்களேயானால் மொழி பிரச்சனைக்கு வெகு விரைவில் தீர்வு காண்பதற்கு நல்ல வழி ஏற்படும். இதில் ஒன்றை மறந்துவிடக் கூடாது. ராஜாஜிக்கு பின்னால் பலம் வாய்ந்த அரசியல் கட்சி இல்லாமல் இருக்கலாம். அவர் அடைந்து இருக்கும் வயதின் அளவினை பார்க்கும்போது, நமது கருத்தினை பரப்புவதற்கு அவர் நாளைக்கு பத்து கூட்டங்கள் என்று வெளியில் போகமுடியாத நிலையில் அவர் இருக்கலாம். ஆனால் அவர் கூறும் கருத்துக்களை புறக்கணிக்கக்கூடிய நிலையில் நாடு இல்லை. இதை மட்டும் நம்மில் யாரும் மறந்துவிடக்கூடாது. ஆகவே அவரையும் காமராஜரையும் சந்திக்க வைக்கவேண்டிய பெரும் பொறுப்பை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். ராஜாஜி அவர்களைச் சந்தித்துப் பேசியதைப் பற்றித் தவறாக சொன்னீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த அறிக்கையை மனதில் வைத்துதான் சொன்னீர்கள். எனவே அவர்கள் இருவரும் சந்தித்துப் பேச ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று

கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிச் சந்திக்க வைப்பதின் மூலமாக இந்தியை எப்படியும் புகுத்தியே தீரவேண்டும் என்று எண்ணம் கொண்டு இருப்பவர்களுடைய மனதில் மாறுதல் ஏற்படலாம் என்று நான் எண்ணுகிறேன்.

## "மத்திய மாநில அரசின் ஒருமைப்பாடு பற்றி அண்ணு"

மத்திய அரசு இந்த மாநில அரசைக் கவிழ்ப்பதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளுகிறது என்று இந்த அறிக்கையில் இருப்பது பற்றி அவர்கள் திடுக்கிட்டு போனதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்கேகூட கொஞ்சம் திகைப்பாகத்தான் இருந்தது. எதற்காக நம் அரசைச் கவிழ்க்க வேண்டும்? அப்படிக் கவிழ்ப்பதற்கு என்னவிதமான முகாந்திரம் காட்ட முடியும்? அப்படி கவிழ்ப்பதால் யாருக்கு என்ன லாபம் என்று எண்ணி நானே சற்று திகைத்துப் போனேன். ஆனுல் புதியதாக அகில இந்தியக் காங்கிரசின் தலைமையை ஏற்றுக் கொண்டவுடன், அவர் முதன் முதலாக வெளியிட்ட அறிக்கையில் காங்கிரஸ் அல்லாத அரசுகள் நல்ல முறையில் இயங்கவில்லை, கூடுமானவரையில் அவைகள் எல்லாம் நீக்கப்பட வேண்டியவைதான் என்ற கருத்து காணப்பட்டது. இப்படிப்பட்ட கருத்து படும்படியான வாசகங் களைத்தான் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் தமது அறிக்கையில் கொடுத்து இருந்தார். இந்த பதில் கிடைத்தது எங்களுக்குப் பெரியதொரு லாபம். ஆனுல் இதை அவ்வளவு உண்மையாக எடுத்துக்கொள்ள முடியாது. காரணம் சென்றவாரத்தில்தான் இன்னும் ஓராண்டு காலத்திலே இந்தியா முழுவதும் காங்கிரஸ் அரசாகும் என்று சொன்னுர்கள். நாம் இந்தியாவின் ஒரு பகுதி யாகத்தான் இருக்கிறேம். ஆகவே நம்மை மனதில் வைத்துக் கொண்டுதான் இதை சொல்லியிருப்பார் என்று எண்ணுகிறேன். இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பிரிவில் எந்த ஒரு மாநிலத்தில் ஆகிலும் சட்டமும் சமாதானமும் கெட்டுவிட்டால், குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படலாம் என்று ஒரு விதி இருப்பதால், இதற் குத் தயார் செய்கிறுர்களோ என்ற எண்ணத்தில் தாங்கள் அதை வெளியிட்டோம். இதிலே பீதி ஏற்படவேண்டிய அவசியமில்லை. நான் அதனுடைய தொடர்பாக சொன்னபடி காமராஜரும், ராஜாஜியும், நண்பர் ராஜாராம் நாயுடு அவர்களும், கூடிப் பேசு வார்களே ஆனுல் இந்த மொழிப் பிரச்சனையில் நாம் செய்ய

வேண்டிய வேலை அதிகம் இருக்காது. அவர்களுக்குள் இருக்கிற வேற்றுமை நீங்கிவிட்டால், தமிழ் நாட்டு அரசியலும், இந்திய அரசியலும் மிக ஆரோக்கியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றொன்றை குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சனைக்கு எந்த பரிகாரமாக இருந்தாலும் நாட்டின் ஒற்றுமைக்கும், இந்திய ஒற்றுமைக்கும் கேடு வரக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். அதை மிக மிக வரவேற்கிறேன். அதை ஆதரிக்கிறேன். எதாவது குறைகளைச் சொல்லுகிறபோது, பிரிவினைக் கேட்கிறான் என்று எண்ணிவிடக்கூடாது. அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படாமலும் நீக்கிக் கொள்ளும்படி நான் பலமுறை கூறியிருக்கிறேன். இன்னும் கூறுகிறேன். நாட்டின் ஒற்றுமை, நாட்டினுடைய வலிவு இவ்வளவையும் வைத்து இதன் அடிப்படையிலேதான் நான் பல பிரச்சனைகள் ஆராய்ந்து கொண்டு இருக்கிறனே. நாட்டின் வலிவு குறைக்கப்படவேண்டும் அல்லது ஒற்றுமை அறிய வேண்டும் என்ற கருத்திலே கூறுவது அல்ல. இதை என்னுடைய கழக நண்பர்களுக்கும் ஆளும்கட்சியிலே உள்ளவர்களுக்கும், நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆத்திரம் வருகிறநேரத்தில் இப்படியெல்லாம் இருப்பதானல் "நீங்கள் பிரிந்து, போய்விடுங்கள்" என்று அரசாங்கத்திலே உள்ளவர்களே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் ராஜாராம் நாயுடு அறிந்துகொள்வதற்காக இந்த அரசியல் நிர்ணயசபை நடவடிக்கை குறிப்புக்களை வைக்கிறேன். இந்த அரசியல் நிர்ணய சபையிலே விவாதம் நடந்தபோது டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் இந்தியை பலமாகக் கண்டித்தபோது உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் "If you think that you belong to a different nation you can get separated" என்று சொன்னார்கள். இப்படி அவர்கள்தான் பேசி இருக்கிறார்களே தவிர நாம் அல்ல. இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அவர்கள் தான் ஈடுபடுகிறார்கள் இன்னும் சொல்லப்போனல், தமிழகத்தில் இருந்து அவர்கள் சென்ன அதிகாரிகள் சென்று வடநாட்டிலே பெரும்புகழ் பெருகிறார்கள் என்பது மட்டுமல்ல, அரசியல்வாதிகள் கூட ஏன் இந்திய அரசியலை நடத்தக் கூடாது, அப்படி நடத்தக் கூடிய காலம் ஏன் வராது என்று நீங்கள் கருதவேண்டும். ஆகையால் இப்படிப்பட்ட எண்ணத்திலே, பிரிவினை எண்ணத்திலே நாங்கள் இல்லை என்பதை நான் அவர்கள் மூலம் மற்றவர்களுக்கு தெரிவித்துகொள்ள விரும்பு

கிறேன். இதிலே எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கக்கூடிய மத்திய, மாநில அரசுத்தொடர்பு என்பது Federal Constitution—னில் ஒரு இடத்திலே ஏற்படக்கூடிய பிரச்சனை. அதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியாது, அதை மறந்து விடக்கூடாது, என்ற எண்ணம் வந்து விடுமானால் நிலைமைகள் சரியாகிவிடும். மாநிலத்தின் நலன்கள் பாதிக்கப்படும் என்பதை வைத்து காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் கொள்கைகள் வகுப்பீர்களானால் பிரிவினை எண்ணத்திற்கே வழி ஏற்படாது. நீங்கள் வகுக்ககூடிய கொள்கைகள் மாநிலத்தின் நலன்களுக்கு பாதகமாக இருக்கும் என்ற எண்ணம் வருமானால், அதற்காக நாங்கள் வருத்தத்தைத் தெரிவிப்பதற்காக, சில கருத்துக்களை தெரிவிக்க வேண்டி ஏற்படுகின்றதே தவிர மற்றபடி நீங்கள் துளியும் சந்தேகம் கொள்ள தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காங்கிரஸ் அரசாங்கம், காங்கிரஸ்கட்சி, காங்கிரஸ்காரன் இந்த மூன்றும் ஒன்றுபோல் தோன்றினாலும், அதிலே எத்தனையோ வேறுபாடு இருக்கின்றது.

காங்கிரஸ் அரசாங்கம் என்று சொன்னவுடன், காங்கிரஸ் சொன்னால்தான் கேட்கும் என்று சொல்வது அரசியல் ஆகாது. காங்கிரஸ் கட்சி என்று சொல்லுகிறபோது நாங்கள் சொல்வதை கேட்பீர்கள் என்று சொன்னால் சிலகட்சிக்காரர்கள், நம்முடைய நண்பரைப்போன்ற பலநல்ல காங்கிரஸ்காரர்கள் நல்லவைகளை ஒப்புக் கொள்வார்கள். சில காங்கிரஸ்காரர்கள், சில நல்ல காரியங்களைச் செய்கிறபோது இவைகள் இவர்களால் நடந்து விட்டதே என்று வருத்தப்பட்டுக் கொள்ளுவார்கள் ஆகவே இந்த மூன்றும் வெவ்வேறுதான். எனவே நான் இதிலே குறிப்பிட்டுச் சொல்லவிரும்புவது, நம்முடைய மாநிலத்தின் பொருளாதாரத்தை வலிமையாக்க வேண்டும். இதை உருக்கமாகச் சொல்லி நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், "நாங்கள் இதற்கு எல்லாம் உங்களுடன் இருக்கிறோம்" என்று சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய நல்ல உரையை வரவேற்கிறேன் ஏன் என்றால், சேலம் உருக்காலை விஷயத்தில், மத்திய அரசினருக்குத் தெரிவிக்கின்ற நேரத்தில், 'இந்த ஆலையை நீங்கள் அமைக்கிறீர்களா அல்லது முடியாதா? நாங்களே அமைத்துக்கொள்ளவா? என்று தமிழக அரசு தெரிவிக்கின்ற நேரத்தில் அதற்கு வலிவு நிச்சயம் ஏற்படும் என்று நம்பு

கிறேன். பலகாரியங்களில், தமிழக அரசில் எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தாலும், எந்தக் கட்சியினுல் கூறப்பட்டாலும், கட்சிப் பாகுபாடு இல்லாத தமிழக அரசின் கருத்துக்கள் உள்ளன என்பதை, இன்றையதினம் இந்த அவையில் நம்முடைய நண்பர் மெய்ப்பித்துக் காட்டிப் பேசினுர். இப்படி நான் ஏற்றுக்கொண்டு இருக்கிற காரியங்களில் பலவற்றில் அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை அது தருகிறது. இப்படிப்பட்ட ஒற்றுமையைக் காட்டி, எல்லாக் கட்சியின் ஆதரவையும் திரட்டி, மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற கருத்திலேதான் சேலம் இரும்பாலை விஷயத்தில் சொன்னேன், 'எந்தவித கட்சிப் பாகுபாடும் இதிலே இல்லை, தமிழக அரசும் தமிழக மக்களும் ஒன்று சேர்ந்து இந்த சேலம் இரும்பாலை அமைக்க வேண்டும்' என்று, இதை வலியுறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் ஒரு நாளைக் குறிப்பிட்டு அதற்கு "எழுச்சி நாள்" என்று பெயர் வைத்து, காங்கிரஸ் நண்பர்களையும் எங்களோடு வந்து பேசும்படி கேட்டுக்கொண்டோம். அவர்கள் வர மறுத்து விட்டார்கள். இப்போது கனிந்து இருக்கிற இந்த நல்ல எண்ணத்தை நான் கருத்திலே கொண்டு, விரைவிலே ஒரு நாள் வைத்து நண்பர் ராஜாராம் நாயுடுவையும் மற்றவர்களையும் அழைத்துப் பேசுவதற்கு நல்ல வாய்ப்புக் கிடைக்குமானுல், "சேலம் இரும்பாலை அமைப்பதில் எங்களுக்குள் பாகுபாடு இல்லை, கட்சி வேற்றுமைகள் இல்லை என்பதை அவர்களுக்குத் தெரியப் படுத்த முடியும். அவர்களும் இதை நன்கு உணர்ந்து கொள் வார்கள். ஆகையினுல் அந்தக் கட்சிகள் தனித் தனியாக நடத்தவேண்டிய கூட்டங்களை நிறுத்திவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஏதோ சில நாட்களை அவர்கள் கட்சியில் அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிருர்கள். "விடுதலை நாள், விமோசன நாள்" என்றெல்லாம் சில நாட்களை நடத்துவதாக நான் கேள்விப்பட்டேன். அவர்கள் இப்படி சில நாட்களைக் கொண்டாடுவதைப் பற்றி எனக்குக் கோபம் வருவது இல்லை. அவர்களுக்கே இது தெரியும். இதிலே கோபம் வராமல் இருப்ப தற்குக் காரணம் அதற்கு மிகப் பொறுப்பாக இருந்து, தொண் டாற்றுகிறவர்கள் என்னேடு இருந்து எனக்கு அடிக்கடி தொந் தரவு கொடுத்துக்கொண்டு இருந்தவர்கள். பரவாயில்லை, நம்மோடு இருந்தவர்கள் அங்கே போய் நம்மைக் கெடுப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ, அவற்றைச் செய்து, முடியா

மல், இப்போது இவற்றை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள் என்று மகிழ்ச்சியோடு நான் இதைப் பார்க்கின்றேனே' தவிர அதிலே எந்தவித கோபதாபம் இல்லை. எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு செய்யவேண்டிய சில வேலைகள் உண்டு. அதிலே முக்கியமானது இந்த சேலம் இரும்பாலை ஆகும். அதனால்தான் அவர்கள் கேட்டார்கள், 'எங்களுடைய அரசு முன்னாலே துணிவாகச் சொல்லிற்றே, நாங்களே நடத்துவோம் என்றுகூட சொல்லிற்றே, அதைப்போல நீங்கள் சொல்வீர்களா, சொன்னால் என்ன'' என்று கேட்டார்கள். சொல்லலாம், ஆனால் 4-வது 5-வது திட்டம் உருவெடுக்கட்டும், அந்த 4-வது 5-வது திட்டத்தில் சேலம் இரும்பாலை அமைப்பதைப் பற்றி யோசிப்போம் என்று மத்திய மந்திரிகள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். நாங்களும் வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். அது இன்னும் உருவெடுக்கவில்லை. அதில் இல்லை என்றால் அடுத்தக் கட்டம் பிறக்கும். ஏன் நாமே எடுத்து நடத்தக்கூடாது என்ற கட்டம் பிறக்கும். முன்பு இருந்த அரசு நாங்களே நடத்துகிறோம் என்று மத்திய அரசைக் கேட்டு, மனுப் போட்டு, இன்னும் கவனிக்கப்படவில்லை. அதைக் கவனிக்கும்போது மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் தொடர்பு பற்றிய பாகுபாடு இல்லாமல் நாம் கவனிக்க வேண்டும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன் தனிப்பட்ட முதலாளிகள் சில தொழிற்சாலைகள் அமைப்பதற்காக தாங்களே பணம் போட்டு, லைசென்சிற்காக மனுப் போட்டுக் கேட்பதுபோல, மத்திய அரசுக்கு எழுதி இருக்கும் அந்த மனுவிற்குப் பதில் வரவில்லை. இரண்டு மூன்று முறைகள் ரிமைண்டர்கள் அனுப்பியும் நாங்கள் வந்த பிறகும்கூட பதில் ஒன்றும் வரவில்லை. நேரில் கேட்பதற்கு அவர்கள் சொல்வது எல்லாம், 4-வது 5 ஆண்டுத் திட்டத்தில் பார்க்கலாம் என்பதுதான். அந்த 4-வது 5 ஆண்டுத் திட்டத்தில் அவர்கள் இணைக்கவில்லை என்றால், விட்டு விடுவார்களானால், நிச்சயமாக இதிலே காங்கிரஸ் கட்சியினுடைய ஆதரவும் நமக்கு இருக்கிறது என்ற முறையில், சேலம் இரும்பாலைத் திட்டத்தை தமிழக அரசு மேற்கொள்வதற்கு வேண்டிய முறையில் ஆராயப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஜப்பானில் உள்ள நண்பர்கள் மிகுந்த அக்கறை காட்டிக்கொண்டு வருகிறார்கள். அதில் சிறு சிக்கல் உள்ளது. சேலம் இரும்பாலையைத் துவக்க, ஜப்பானில் உள்ள தொழில் நண்பர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம், அதற்குத் தேவை

யான அள்விற்கு உதவி செய்ய இருக்கிறோம், என்று சொல்லி விட்டு, ஆனால் இந்தியாவிற்கு, ஜப்பான் எவ்வளவு பணம் கொடுப்பது என்ற (Aid) பிரச்சினை எழுகிறது என்றும் சொல்லி விட்டார்கள். இந்தியாவிற்குக் கொடுக்கக்கூடிய உதவிக்குள் ளேயே இருப்பதா, அல்லது அதற்கு வெளியில் இருப்பதா என்று முடிவு செய்ய வேண்டி இருக்கிறது. என்று சொல்லுகிறார்கள். எனவே பிரச்சினை அவ்வளவு சாதாரணமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் இதிலே உள்ள சிக்கல்களை எல்லாம் முழுதும் விளக்கிக்கொண்டு இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதையும் கூறிக்கொள்கிறேன். எப்படிப்பட்ட விவகாரங்கள் உள்ளன என்ற விவகாரங்களை எல்லாரும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இவைகளைக் கோடிட்டுக் காட்டினேன். ஆனால் சேலம் இரும்பாலைத் திட்டத்தைத் தமிழக அரசே ஏற்று நடத்த திட்டமிடும் காலம், 4-வது 5 ஆண்டுத் திட்டம் உருப்பெற்று அதிலே இது இடம் பெறவில்லை என்ற நிலை ஏற்படும்போதுதான் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு அந்தக் காலம் வரும்போது இந்த அரசுக்குத் துணையாக எல்லாக் கட்சிகளும் இருக்கும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

## "படியரிசித் திட்டம் பற்றி அண்ணா"

மற்றப்படி அவர்கள் படியரிசித் திட்டத்தைப் பற்றி பேசினார்கள். அவர்கள், "நாங்கள் என்ன செய்கிறோம் என்பதைக் கேட்காதீர்கள், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், அதைச் சொல்லுங்கள்," என்றார்கள். சொல்வதில் இரண்டு வகை உண்டு. ஒன்று செய்யப் போவதைச் சொல்லுவது, இன்னொன்று செய்து விட்டு "பாருங்கள்" என்று கேட்பது, நான், இரண்டாவது முறையைத்தான் படியரிசி திட்டத்திற்கு நீங்கள் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதில் பண நெருக்கடி மட்டுமல்ல, நண்பர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது, பால சுப்பிரமணிய அய்யர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைப்போல நமக்குப் போதுமான அளவுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும், எல்லா இடங்களுக்கும் படி அரிசி போடுவதானால், சென்னைக்கும், கோவைக்கும் மட்டும் தானா என்று கேட்பவர்களுக்கு அதில் இருக்கின்ற பொருளாதார தத்துவத்தை மட்டும் நான் விளக்கவேண்டும் என்று ஆசைப்படு

கிறேன். சென்னையில் உள்ளவர்களிடத்தில் எனக்கு விருப்பம் கோவையில் உள்ளவர்களிடம் எனக்கு விருப்பம், திருமங்கலத்திலும் உசிலம்பட்டியிலும் உள்ளவர்களிடத்தில் எனக்கு வெறுப்பு என்று அர்த்தம் அல்ல. நகரத்தாரிடத்தில் விருப்பம், கிராமத்தாரிடத்தில் விருப்பம் இல்லை என்று பொருள் அல்ல. ரேஷன் வைப்பது ஆனாலும், மானியம் கொடுப்பதானாலும், பொருளாதாரத்தில் Vulnerable Section என்பார்கள். அதாவது எந்தச் சமூகம், பகுதி உடனடியாக இந்தப் பிரச்சினையில் ஈர்ப்புச் சக்தி பெற்றிருக்கிறதோ அதைக் கவனிக்க வேண்டும் என்பதுதான் பொருளாதாரத் தத்துவம். அதை விளக்க ஒன்று சொல்லுவேன். இப்போது சென்னையில் படியரிசி திட்டம் இல்லாமல், ரேஷனும் இல்லாமல் எங்கிருந்தும் அரிசி வரலாம் என்ற உத்திரவு இருக்குமேயானால், செங்கற்பட்டு வடஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மூன்று மாவட்ட அரிசி முழுவதையும் எந்த விலை கொடுத்தும் சென்னையில் வாங்கிக் கொள்வார்கள். அப்படி வாங்கிக் கொள்வார்களேயானால் அந்த மூன்று மாவட்டத்திலேயும் உணவு பற்றுக்குறை ஏற்படும். அதைப்போலவே கோவையில் படிஅரிசித் திட்டம் இல்லாமல் நீங்கள் இஷ்டப்பட்ட இடத்தில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று விட்டுவிட்டால், திருச்சி, தஞ்சை இந்த இரண்டு மாவட்டங்களில் உள்ள அரிசி முழுவதும் கோவை செல்லும். அது கோயம்புத்தூரோடு நிற்காது. நமது நண்பருக்குத் தெரியும். கோவையிலிருந்து அது எந்த ரூபத்தில் எந்தெந்த இடத்திற்கு எல்லாம் போகும் என்பது எல்லாம் அவருக்குத் தெரியும். நிறைய அவருக்கு லாரிக்காரர்கள், பஸ் காரர்கள் சிநேகம் இருப்பார்கள். அவர்கள் கணக்கு பேசுகிற போது, லாரிக்கு 3,000 ரூபாய் கிடைக்கும் என்று சொல்லுவார்கள். ஆகையால்தான், வாங்கும் சக்தி மிகுந்திருக்கிற இடத்தில் கட்டுப்படுத்தினால்தான், வாங்கும் சக்தி குறைந்து இருக்கிற இடத்தில் உணவுப் பொருள் விலை குறையும் என்பது பொருளாதாரத் தத்துவம். நான் இந்த பொருளாதாரத் தத்துவப்படி நடக்கிறேன். காங்கிரஸ்காரர்களுக்கு உள்ள பொருளாதாரத் தத்துவம், நீங்கள் ஒருவருக்குப் போட்டால் எல்லோருக்கும் போடுங்கள் என்பது. அது பொருளாதாரத் தத்துவம் அல்ல. அது அன்னதான சமாஜம். எல்லோருக்கும் கொடுங்கள் என்று கேட்பது நல்ல எண்ணம். இருந்தால் கொடுக்கலாம்.

சுதந்திராக்கட்சியின் திட்டம், நீங்கள் கட்டுத்திட்டம் வைக்க வேண்டாம். அது தன்னால் ஏறி, இறங்கி சமநிலைக்கு வந்துவிடும், மழை பெய்தால் பள்ளம் இருக்கிற இடத்தில் தண்ணீர் தேங்கி, மேட்டில் தண்ணீர் உருண்டோடுமே அதைப்போல, "The Equilibrium will maturally be established" என்பதுதான் சுதந்திராக்கட்சியின் தத்துவம். சுதந்திராக்கட்சியின் தத்துவம் வியாபாரிகளையும் மற்றவர்களையும் முழுக்க முழுக்க நம்பி அவர்களிடத்தில் எல்லாவற்றையும் விட்டுவிடுகின்ற தத்துவம். எனக்கு அந்த அளவுக்கு வலிவு இல்லை. காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறபடி கிராமத்துக்கூட போடுங்கள் என்று சொல்வதானால், "Complete State Trading in Foodgrains,' அதாவது விளைகின்ற நெல் அவ்வளவையும் வாங்கி ஒவ்வொருவருக்கும் பங்கிடவேண்டும். ஆகையினால் அடுத்தத்தடவை அவர்கள் யோசனை சொல்லுகிறபொழுது "Complete State Trading in Foodgrains" அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்; ஆதரிக்கிறோம் என்று தெரிவித்துவிட்டு, Complete State Trading in Foodgrains" வைத்துக்கொண்டு எல்லோருக்கும் கொடுங்கள் என்று சொன்னால் அது logically பொருத்தமாக இருக்கும். "politically" பொருத்தமாக இருக்காது. இன்னும் கூட சொல்லுவேன், படி அரிசி எல்லோருக்கும் எல்லா இடத்திற்கும் என்பது எதுவரையில் தேவைப்படும்? அதைவிட அதிக விலைக்கு விற்கிறவரையில், நல்லவேளையாக விளைச்சல் அதிகரித்து, விலைகள் எல்லாம் குறைய ஆரம்பித்தபிறகும் "நீ படியரிசிக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும்" என்று கிராமத்தில் நான் சொல்லுவேனேயானால், நண்பர் ராஜாராம் என்ன சொல்லுவார்கள், 'இங்கே 80 பைசாவிற்கு விற்கிறபோது நீ எதற்கு ஒரு ரூபாய்க்குப் போடுகின்றாய்' என்பார்கள்.

இது கற்பனைக்காகச் சொல்லுவதல்ல, 6 திங்களுக்கு முன்னால் ஒரு நல்ல விளைச்சல் கிடைத்தபொழுது, ரூபாய்க்கு ஒருபடியரிசி என்ற திட்டம் இருந்தாலும், வடஆற்காடு மாவட்டத்தில் படி அரிசி 90 பைசாவுக்கு விற்றது. எங்களுடைய காஞ்சிபுரத்தில் படியரிசி ரூபாய் 1-30க்கு விற்றது. அப்போது முன்னால் முதலமைச்சரான பக்தவச்சலம் அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சு பத்திரிகைகளில் வந்தது. "முதலமைச்சர் காஞ்சிபுரத்தைச்சேர்ந்தவர். அதைப்பற்றி ரொம்ப பெருமையாகச்

சொல்லுகிறார்; இங்கே வந்து பேசுகிறார். ஆனால் இங்கே படி அரிசி ரூ 1-30 என்று பார்க்கிறபோது பெருமை அல்ல." ஆனால் 1965-ல் என்னவிலை கொடுத்து வாங்கினார்கள் என்று பார்க்கிற போது உள்ளபடியே பெருமைதான் என்பது புரியும். ஏனென்றால் 1965லும் 1966லும் 3 ரூபாய்க்கும் 4 ரூபாய்க்கும் விலைகொடுத்து வாங்கவேண்டி இருந்த இடத்தில், ரூ 1-30 என்ற விலைக்கு விற்பது பெருமைக்கு உரியதுதான், அதிலும் முன்னாள் முதலமைச்சர் வாய்திறந்து சொன்னதும் அது இன்னும் குறைந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவருடைய வாக்குக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன். இப்போது இன்னும் விலை குறைந்து விற்பதாகக் கேள்விப் படுகிறேன். விலை குறைப்பு விஷயத்தில் இரண்டு பொருளாதாரத் தத்துவம் இருக்கிறது. வாங்கும் சக்தியின் அளவுக்கு ஏற்ப ஏறத் தான் செய்யும். அது தவறல்ல என்பது ஒரு தத்துவம். அது காங்கிரஸ் கட்சியினுடையது. நாங்கள் வைத்திருக்கின்ற பொரு ளாதாரத் தத்துவம், எந்தப் பொருள்களினுடைய விலை ஏறினா லும் பரவாயில்லை, அன்றாடம் உபயோகப்படுத்த வேண்டிய உணவுப் பொருளின் விலை மட்டும் கட்டுக்கு அடங்கி இருக்க வேண்டும், அது base, அது அடிப்படை, அதைக்கட்டுப்படுத்தினால் மற்றவற்றை நாம் குறைத்துக்கொள்ளலாம் என்பது எங்க ளுடைய பொருளாதாரத்தத்துவம், அடிக்கடி நமது உறுப்பினர் கள் சொல்லுவார்கள். "பட்ஜெட்டில் புள்ளி விவரங்கள் தான் இருக்கின்றனவே தவிர, கொள்கை விளக்கம் இல்லையே" என்று சொல்லுவார்கள். அந்தப் புள்ளிவிவரங்களுக்குப் பின்னால் இந்தக் கொள்கை விளக்கம் இருக்கிறது என்பதை விளக்க இதைச்சொன் னேன். இந்த படியரிசி திட்டத்தை விட்டுவிடுங்கள் என்று திட்ட வட்டமாக அவர்கள் சொல்லவில்லை. எல்லோருக்கும் கொடுங்கள் என்றும் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அதைப்போலவே நானும் இது எல்லா இடத்திற்கும் வரும் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஆனால் எல்லா இடத்திற்கும் வராது என்றும் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. காரணம் என்னவென்றால், இது பயிர் வளருவதைப் பொறுத்து இருக்கிறதே தவிர, அவரு டைய ஆசை, என்னுடைய ஆசை இதைப் பொறுத்து இல்லை. ஆகையினால் இப்போது எல்லாக் கட்சியினரும் இந்த அரசோடு ஒத்துழைத்து ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய பருவமழை எதிர்ப்பார்த்த அளவுக்கு

வளமாக இல்லை. மேட்டூரில் உள்ள நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் மிகப் பயம் காட்டுகிற அளவுக்குக் குறைந்து இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் தாளடிப்பயிரில் மிகப்பெரும் பகுதியைக் காப் பாற்ற நாங்கள் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டும், சில இடத்தில் அது நாம் எதிர்பார்த்த அளவுக்கு பலன்தராது என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகையினுல் பருவமழை தவறியத னுல் ஏற்பட்டுள்ள இந்நிலையில் நாம் ஆழ்கிணறுகள் தோண்டுவது பற்றியும், இறைப்பு பாசனத்தின் மூலம் எந்த அளவுக்கு விளைச் சலை அதிகப்படுத்தலாம் என்பதைப்பற்றியும் உங்கள் நல்ல யோசனைகள் கிடைக்க வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன். இந்த வருடத்தில் நாம் முதல் காரியமாக வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்று, "Increase of Production", இன்னென்று :'avablajlity." உற்பத்தி பெருகவேண்டும். இதுதான் மிகமுக்கிய மாக இன்றையதினம் கவனிக்கவேண்டிய பிரச்சினை. அதற்கு ஏற்ற வழிகளையும், வகைகளையும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறேம். அதைப்பற்றி மிக அருமையான கருத்துக்களைச் சொன்ஞர்கள். "இப்போது விவசாயிகளுக்குத் தரவேண்டிய கடனை எல்லாம் 'Land Mortgage' பாங்கு மூலமாக வும் 'Agriculrural Refinance Corporation' மூலமாகவும் தர வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்கிறீர்கள், அதில் தாமதம் இருக்கக்கூடாது, அது விரைவாக நடக்க வேண்டும்" என்று அவர் கள் சொன்ஞர்கள்.

அவர்களுக்கு ஏற்பட்ட அந்தப்பயம் எனக்குக்கூட ஏற்பட்டது. ஆனுலும் நம்முடைய அரசு அதை எந்த அளவுக்கு விரைவு படுத் தலாம் என்ற அளவுக்கு, தகுந்த அதிகாரிகளை இணைப்பு அதிகாரிகளாக வைத்து உடனுக்குடன் கடன் கிடைக்கும்படி வழிவகை செய்ய வேண்டுமென்று, திட்டமிட்டுக் கொண்டு இருக் கிறது. அதற்கெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சியிலுள்ள நண்பர் கள் ஒத்துழைப்பு மிகத்தேவை. இது தேசியத்திற்குத் துளியும் விரோதமானது அல்ல. தேசியத்திற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்வேனே தவிர, என்னுடைய கட்சிவளர ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டால்தான் தவறுகும். நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக இதில் சொல்லப்பட்டிருக்கிற பலவற்றில், எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைக்க இடமிருக் கிறது. அதிலும் பொறுப்புமிகுந்த காங்கிரஸ்கட்சி ஒத்துழைக்கும்

என்பதில் எனக்கு சிறிதும் ஐயம் இல்லை; மிகுந்த நம்பிக்கை உண்டு. அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள், காமராஜ் அவர்கள் சொல்கிறார்களே என்று சொன்னார்கள். காமராஜ் என்னிடம் சொல்லியது மட்டுமல்ல, பொதுக்கூட்டத்திலும் சொல்லி இருக்கிறார்கள். அவர் சொல்லியது கூட, எனக்குத் தைரியம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியது அல்ல. அவருடைய கட்சியில் ஏற்பட்டுவிட்ட அவசர ஆசையை நீக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். அவருடைய கட்சி மேடைகளில் சிலர் 'இன்னும் எத்தனை நாள்' 'அடுத்த மாதம் பாருங்கள்' என்று சொல்வதைக்கேட்ட பின்னர், எங்கே அவர்களுடைய ஆசை வளர்ந்து விடுமோ என்று பயந்து அதைத் தடுப்பதற்காகவே அடிக்கடி 'இந்த அரசு நிலைத்திருக்கவேண்டும், யாராவது அதைக் கலைப்பதற்கு வந்தாலும் தடுப்பேன்' என்று சொல்லுகிறாரே தவிர வேறு பொருள் கொள்ளவில்லை; கூட உள்ளவர்களைத் தடுப்பேன் என்ற பொருளில்தான் சொல்வதாக நான் கருதுகிறேன். வால்டேர் ஒருமுறை சொல்லியதாக நினைவிற்கு வருகிறது; 'I will look after my opponents. Oh, God, save me from my friends' அந்தப் பழமொழி நினைவிற்குவருகிறது. அதைப்போல் காமராஜர் அவர்கள் அவருடையநண்பர்களை நினைவில் வைத்துத்தான் சொல்லியிருக்கிறாரேதவிர என்னைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அல்ல. என்னுடைய இயல்பு அவருக்கு நன்றாகத் தெரியும், ஆட்சியில் இருந்தே தீரவேண்டுமென்ற எண்ணம் இல்லாதவன் நான் என்பதை அவர் அறிந்துகொண்டிருக்கிறார். அவருடைய ஆலோசனைக் கிடைப்பது பாராட்டத்தக்கதாகும். அந்த அளவுக்கு காங்கிரசுக்கும் கழகத்திற்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் பகைநீங்க வேண்டும். எத்தனை தடவை நண்பர் இராஜாராம் நாயுடு அவர்கள் எதிரில் உட்கார்ந்தால்தான் என்ன, நான் காங்கிரஸ்காரனாகிவிட முடியுமா? அல்லது அவர் என் எதிரில் உட்காருவதால் கழகத் தோழனாக ஆகிவிடப்போகிறாரா? இல்லை.

இங்கிலாந்தில் ஹவுஸ் ஆம் காமன்ஸில் கூட எந்த அளவுக்கு உட்கார வைத்திருக்கிறார்கள் என்றால் இந்தப் பக்கத்தில் ஒருவர் வாளை உருவி அந்தப்பக்கத்தில் ஒருவர் வாளை உருவினால் இந்த இரண்டு வாள்களும் சந்திக்காத அளவுக்கு இருவருக்கும் இடைவெளி வைத்திருக்கிறார்கள் இங்கே அந்த இடம்கூட இல்லை.

ஒருவரையொருவர் தொட்டுக் கொண்டால் தழுவிக்கொள்ளும் அளவில் இருக்கிறோம். கட்சி மாச்சிரியங்களை விட்டுவிட்டால் நம்முடைய ஜனநாயகம் வளப்படும். வைணவர்களுக்கும் சைவர் களுக்கும் விரோதம் இருந்த காலத்தில் இரண்டு பக்தர்களும் ஒருவர் சொல்வது மற்றவர் காதில் விழக்கூடாது என்பதற்காக தங்கள் காதுகளில் மணிகளைக்கட்டிக் கொள்வார்களாம். சைவர் சிவ சிவா என்றால் இவர் மணியை ஆட்டிக்கொள்வார். வைணவர் சொன்னால் சைவர்கள் மணி ஆட்டிக்கொள்வார்கள்.

கனம் பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் சொல்வதுபோல எதை வேண்டாம் என்று சொல்லுகிறோமோ அதைத்தான் எண்ணிக்கொண்டிருப்போம். அரசியலிலே மணி எவ்வளவு மலி வான விலைக்கு விற்கிறது என்று பார்த்தப்பிறகு மணிகட்டிக் கொள்ளவேண்டுமென்று எண்ணத் தேவையில்லை. அவரவருடைய கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை, மென்மையான விளக்கம் சுமுகமான நேசம் இவை இருக்குமானால், அவரவர்களுடைய கொள்கையும் இருக்குமானால், இங்கிலாந்து நாட்டு அரசியல் இன்று எப்படி ஜனநாயக நாடுகளிலே பாராட்டப்படுகிறதோ அந்த அளவுக்குத் தமிழக அரசியல், உலகத்தில் மெச்சப்படும். அதற்கு இப்போதுதான் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதிலும் இன்றையதினம் கேள்விப்பட்டேன், நண்பர் ராஜாராம் நாயுடு அவர்கள் கூடச் சொன்னார்கள். மதிப்புள்ள நண்பர் தேனி தியாகராஜன் நேற்றையதினம் மிக உருக்கமாகப் பேசினார் என்று. அவர் உருக்கமாகப் பேசினார் என்றால் அரசியல் எவ் வளவோ மாறிவிட்டது என்று பொருள். அவர் வெளியே உட்கார்ந்து இருக்கிறார் என்று சொல்லுகிறீர்கள், இருக்கட்டும், இங்கே உட்கார்ந்திருந்தால் சிரிக்க வேண்டிய கட்டத்தில் சிரிக்கும் படியாக வந்துவிடுமே என்று வெளியே உட்கார்ந்திருக்கிறார் என்பது எனக்குத்தெரியும். அந்த உருக்கமான நிலை இருந்தால் நாம் பல பிரச்சினைகளை நீக்கிக்கொள்ள முடியும். விலைவாசி ஏற்றத்தை மாநில அரசு மட்டும் கட்டுப்படுத்த முடியாது என்பதை நம்முடைய பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் அவருடைய உரையில் மிகத் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார் கள். என்னிடத்தில் பேசியவர்களுக்கு நான் சொன்னேன், 'This is not a budget but a midget' என்று. குறுகியது என்று சொன்னேன். உண்மையானபட்ஜெட் இங்கே இல்லை என்று

சொன்னேன். மத்திய அரசில் ரூ 290 கோடிக்கு துண்டு விழுகிற பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது. எந்த அளவில் சரிக்கட்டப் போகிறார்கள் என்ற விளக்கம் தரவில்லை. வழக்கமாக செய்வதைப் போல் நோட்டை அச்சடித்தால் மறுபடியும் விலைதான் ஏறும். விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். அவர் என்னிடத்தில் அதைச் சொல்லாவிட்டாலும் மனதில் உறுத்திக் கொண்டு இருக்கும் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. திட்டங்கள் ஏற்பட்டபிறகு இரண்டாயிரம் கோடிக்குமேல் சர்க்கார்த் துறையில் பல தொழில்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாயிரம்கோடி ரூபாய் மட்டும் தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கிடைத்து இருக்குமானால் எவ்வளவு லாபம் அவர்களுக்கு வந்திருக்கும்? இந்த 2000 கோடி ரூபாய் சர்க்கார் துறையில் போட்டதால் நாம் பெற்றிருக்கிற ஆதாயம் என்ன? இரண்டாயிரம்கோடி ஆதாயம் தராமல் நாட்டில் உலாவுகிறது என்றால் விலைகள் ஏறாமல் எப்படி கட்டுப்படுத்தப்படும்? பப்ளிக் செக்டர் அண்டர்டேகிங் சரியான முறையில் பலன் தரத்தக்க வழிகளை இந்தப் பதினைந்து வருஷமாகக் கண்டுபிடிக்கவில்லை. நம்முடைய நண்பர் மூன்று லட்சம் ரூபாய் டிரான்ஸ்போர்ட்டில் நஷ்டம் வந்திருக்கிறது என்று காட்டினார். அடுத்த வருஷத்தில் லாபம் வருமென்று இருப்பதை அமைச்சர் குறிப்பிட்டதும், 'இந்த வருஷம் நஷ்டம்தானே' என்று கேட்டார்கள். இரண்டாயிரம் கோடிக்கு மட்டும் 15 வருஷங்களில் கண்ணுங்கருத்துமாக அக்கறை காட்டியிருந்தால் நாடு முன்னேறி இருக்கும். அது இல்லை. ஆகையால்தான் நம்முடைய நிதிநிலை சரிப்பட வேண்டுமென்றால், மூன்று காரியங்களில் நாம் தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு கூச்சமில்லாமல், அச்சமில்லாமல், நம்முடைய கருத்துக்களை தெளிவாக்க வேண்டும். பப்ளிக்செக்டார் அண்டர்டேகிங் மூலமாக நமக்கு ஏற்பட்டு இருக்கிற ஆதாயக்குறைவை சுட்டிக் காட்டி, அதற்கு தக்கவழிமுறைகளைக் கையாண்டு இரண்டாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ததற்கு வரவேண்டிய அளவுக்கு வருவாய் வருவதற்கு, மத்திய அரசு உடனடியாக நிபுணர்குழு ஒன்று நிறுவி நல்ல முறையில் இயங்கச் செய்யவேண்டும். முதலாவதாக தொழில் நிபுணர்களை அழைக்கவேண்டும். குறிப்பிட்ட அளவுக்குச் சம்பாதித்த பிறகு, அவர்கள் பணம் வேண்டியதை சம்பாதித்தபிறகு, புகழ்தேட வேண்டுமென்ற எண்ணம்தான்

அவர்களுக்கு வரும். அவர்களை அழைத்து, 'உத்தியோகம் என்று வரவேண்டாம், சம்பளம் கேட்கவேண்டாம், நீங்கள் சம்பளம் வாங்காத ஆலோசகராக இருந்து உங்கள் கருத்துக்களைச் சொல் லுங்கள்' என்று சொல்லலாம். கனம் பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள், இந்த ராஜ்ஜியத்திற்கு சொல்லியபடி இந்தியா முழு வதற்கும்கூட, கருத்துக்களை அறிந்து எப்படியெப்படி ஆதாயம் தேடலாம் என்பதைக்கண்டு பிடிக்கவேண்டும். பல உறுப்பினர்கள் பல தொழில்களை நடத்துகிறவர்களாக இருக்கிறார்கள். அவர் களுக்கு எப்படி லாபம் வருகிறது? அதே தொழில் சர்க்கார் செய்தால் லாபம் வராத காரணம் என்ன? காலமறிந்து பொருள் செய்வது, விலையறிந்து சந்தைக்குக் கொண்டுபோவது, நேர மறிந்து கொண்டு போவது, என்ற இந்த சாதாரண அடிப்படைக் கருத்துக்களைகூட நம்முடைய பப்ளிக் செக்டர் கடைப்பிடிப்ப தாகத் தெரியவில்லை. அதனால்தான் இரும்பு கிடைக்கவில்லை என்று சொல்லும்போது பிலாயிலும் ரூர்கேலாவிலும் இரும்பு விற்கவில்லை என்ற கூக்குரல் இருக்கிறது.

மார்க்கெட் நிலவரத்தை அறிந்து சரக்குகளை உற்பத்தி செய்து அதைச்சந்தைக்கு எடுத்துச் செல்லும் அளவிற்கு நம் முடைய 'பப்ளிக் செக்டர் அண்டர் டேகிங்ஸ்,' முறைகளை கையாளவேண்டும். அதை உடனடியாகச் செப்பனிட்டால் ஒழிய நம்முடிய பொருளாதாரம் சீர்படாது.

## "இராணுவச் செலவு குறைப்புபற்றி அண்ணா"

இன்னொன்று, அதைக்கேட்டு நண்பர்கள் திடுக்கிட்டுவிடக் கூடாது. நம்முடைய இராணுவச்செலவு நிச்சயமாக் குறைக் கப்படவேண்டும். இராணுவச்செலவைக் குறைக்கவேண்டுமென்று சொல்லும்பொழுது பாதுகாப்பு குலையவேண்டுமென்ற எண்ணத் தில் சொல்வதாக யாரும் எண்ணிக்கொள்ளக்கூடாது. பாதுகாப்பு கெடாமல், வலிவைத் தேடிக்கொண்டு, ராணுவச் செலவைக்குறைக்க நிறைய வழிவகை இருக்கிறது. அப்படி நான் சொன்னால் வருத்தமாக இருக்கும். ஆனால் இரண்டு மாதங் களுக்கு முன்னால் மொரார்ஜிதேசாய் அவர்களே சொல்லியிருக் கிறார்கள். "There is possibilty of economy without impairing our striking power" என்பதை அவர்களே கூட

குறிப்பிட்டார்கள். ஆகவே அதில் 100 கோடி ரூபாய் சிக்கனம் ஏற்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஏற்படவில்லை என்பதைப்பற்றி நாம் உள்ளபடியே வருத்தப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்னபடி சீனுக்காரன் படைக்கண்ணேடு நம்மை நோக்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் பாகிஸ்தானுக்கும் நமக்கும் இன்னும் பகை நீங்கிடாத நேரத்தில், பாதுகாப்பு வேண்டுமென்று இந்தியாவிலே பிறந்த எந்த குடிமகனும் சொல்ல மாட்டான். ஆனுல் பாதுகாப்புச் செலவு—அந்தத்தொகை ஏற ஏற வலிவு பெருகிவிடும் என்று யாரும் எண்ணக்கூடாது. உதாரணமாக பாகிஸ்தானுக்கும் நமக்கும் நடந்த சண்டையை எடுத்துக்கொண்டால், பாகிஸ்தானின் டாங் அதிகவிலையுள்ளவை. நம்மிடம் இருந்த டாங்கிகள் அவ்வளவு அதிகம் விலையுள்ள டாங்கிகள் இல்லை. ஆனுல் நம்முடைய போர் வீரர்களின் போர்த் திறமையைக் கொண்டு பாகிஸ்தானிடம் இருந்த விலையுயர்ந்த டாங்கிகள் நொறுக்கப்பட்டன. ஓர் இடத்திற்கே பெயர் ‘Grave yard of tanks’ என்று வைத்தார்கள், ஆகையால் நாட்டுப்பாதுகாப்பு என்பது, நம்முடைய போர்வீரர்களின் ஆற்றலிலும் மக்களிடத்திலே உள்ள ஒற்றுமை உணர்ச்சியிலும் கசப்பு உணர்ச்சி நீங்குவதிலும்தான் இருக்கிறது. இந்த வருடம் பாதுகாப்புச் செலவு ரூ 900 கோடி, அடுத்த வருடம் ரூ 1000 கோடி, அதற்கு அடுத்த வருடம் ரூ 1500 கோடி என்று ஏற்றிக்கொண்டு போவதால் மட்டும் பாதுகாப்பு வலுவடைந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஆகவே அதில் ஓர் அளவு குறைக்கலாம்.

மூன்ருவதாக, சிக்கன நடவடிக்கை என்பது மாநில அரசுகளிடம் மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் எந்த விதமான பலனும் இல்லை. இங்கே நான் பேசுவதற்கு முன்னுல் நம்முடைய நண்பர், முஸ்லீம் லீக் உறுப்பினர் சொன்னுர். ‘சிக்கன நடவடிக்கை காரணமாக இவர்களை நீக்கி விடாதீர்கள், அவர்களை நீக்கி விடாதீர்கள்’ என்று சொன்னுர். நாம் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் நம்முடைய சிக்கன நடவடிக்கை அதிகப் பலனைக் கொடுக்காது. ஆனுல் மத்திய அரசை எடுத்துக் கொள்ளுங்கள், எவ்வளவு சிக்கன நடவடிக்கைக்கு இடமிருக்கிறது? உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒவ்வொரு இலாக்காவிலும் அவர்கள் எதற்காக “All India Service” என்ற ஒன்றை

காரணமில்லாமல் வைத்திருக்கவேண்டும். "All India Medical Service", "All India Engineering Service", "All India Educational Service" என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் முந்திய அரசு அனுமதித்து இருக்கிறது. நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இதையெல்லாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று எழுதியிருக்கிறோம். நமக்கே முழுக்க, முழுக்க உரிமையாக இருக்கிற பல இலாக்காக்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அதனால் இரட்டிப்பு செலவு ஆகிறது. அதைக் குறைக்கவேண்டும். நீங்கள் எல்லாம் கேட்டால் வேடிக்கையாகக் கருதுவீர்கள், நம்முடைய பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கு சிரிப்பே வரும். மத்திய சர்க்காருடைய மேற்பார்வையில் நம்முடைய மாநிலத்தில் எருமை வளர்க்க பண்ணை வைக்கப் போகிறார்கள். நான்கு நாட்களாக அதற்கு இடம் தேடுகிறேன். 'நீங்கள் இடம் கொடுக்காவிட்டால் மைசூர் மாநிலத்திற்குப் போய்விடும், ஆந்திராவிற்கும்—போய்விடும்' என்கிறார்கள். எருமை ஆந்திராவிற்குப் போவதால் நமக்கென்ன என்று விட்டுவிட்டால் ராஜாராம் நாயுடு என்னை விடமாட்டார். 'அருமையான பண்ணை வர இருந்தது, பாவிகள் விட்டுவிட்டார்கள்' என்று சொல்லுவார்கள். அதற்கு நான்கு நாட்களாக இடம் பார்க்கிறேன். இவர்கள் மேற்பார்வையில் எருமைப் பண்ணை. நம்மிடம் அந்த அளவிற்குக்கூட நம்பிக்கையில்லை. எருமைகள் வளர்க்கும் பணத்தை மட்டும் கொடுக்கக்கூடாதா? ஏன் அவர்களுக்கு அது வரவில்லை.? நம்மிடம் அருமையான என்ஜினீயரிங் கல்லூரி இருக்கிறது. படித்துவிட்டால் வேலைக்கு எங்கேபோவது என்றார்கள். நிலை அப்படியிருக்கிற போது 'Regional' கல்லூரி எதற்கு? மத்திய அரசின் மேற்பார்வையில் கல்லூரி எதற்கு? நாம் செய்யாத எதை அவர்கள் செய்யப்போகிறார்கள்? ஒன்று செய்கிறார்கள். தரமான ஆசிரியருக்கு நாம் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி 500 ரூபாய் சம்பளம் கொடுத்து 'இரு' என்று வைத்துக்கொண்டு இருக்கும் போது அவர்கள் கல்லூரிகளில் 1200 ரூபாய் சம்பளம் என்றவுடன், இவர்களுக்கு நம்மைப்பார்க்கிறபோதே உடனே கோபம் வருகிறது. இதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, ஆங்கிலத்தில் சொன்னால் விளக்கமாயிருக்கும் என்று கருதுகிறேன். Why this Duplication? எதற்கு இந்த இரட்டிப்பு வேலை? இதையெல்லாம் குறைத்தால் நிச்சயமாக மாநிலத்திற்கு பங்கிடும்

தொகை அதிகமாகும். ஆகையால் இந்த மூன்று விஷயங்கள் .1. Streamlining of public sector undertakings 2. Economy in defence expenditure without impouring striking power: and 3. Eradication of the process of duplication in administrasion. இவைகளைச் செய்தார்களே யானால் என்னுடைய சாதாரணக் கணக்குப்படி 500 கோடிரூபாய் மத்திய அரசின் செலவிலிருந்து குறைத்து மாநில அரசிற்குப் பங்கிட்டுக்கொடுக்கும் வாய்ப்புவரும். அதிலே நம்முடைய நண்பர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால்—கிணறுவெட்ட வேண்டு மென்று கூறினார்கள்—அதன்படி எல்லளவு கிணறு வேண்டுமானா லும் தோண்டலாம். பள்ளத்தை மூடவேண்டுமென்று கூறினார் கள். அதையும் மூடலாம். எல்லாவற்றிற்கும் முழுஅளவில் ஒத்துழைக்க வேண்டுமெண்று எதிர்தரப்பில் உள்ள காங்கிரஸ் அன்பர்களையும் மற்றவர்களையும் விரும்பி, வேண்டிக்கேட்டுக் கொண்டு, இந்த அவையிலே எடுத்துக்கூறிய நல்லக்கருத்துக்களுக் கெல்லாம் நன்றிகூறி விடைபெறுகிறேன்.

# "மாணவர் பஸ்தொழிலாளர் கிளர்ச்சி பற்றி அண்ணா"

**மாண்புமிகு திரு. பேரறிஞர் அண்ணா :—**

தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடுக்கான கருத்தறிவிக்கின்ற நேரத்தில் சென்னை நகரத்தில் 25-ஆம் தேதியும் 26-ஆம் தேதியும் நடைபெற்ற துக்ககரமான, யாரும் கண்டும் கேட்டும், நினைத்தும், பதறத்தக்க பல சம்பவங்கள் நடைபெற்றுவிட்டதாலே பெரும்பாலான உறுப்பினர்கள் அதனைப்பற்றி பல கருத்துக்களையும் சொல்லுவது தேவையானது நியாயமானதாகும். அதிலும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவேண்டிய சில பலஅறிவுரைகளைப் பொறுப்புணர்ச்சியோடு வழங்கியிருக்கின்ற எதிர்க் கட்சியிலே உள்ளவர்களுக்கும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களில் 25-ம் தேதியும் 26-ஆம் தேதியும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை போலீஸ் தகுந்த முறையில் அடக்கியிருக்க வேண்டும்; சேதங்கள் ஏற்படாதபடி பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்பதனை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதிலும் மிகப் பொருத்தமான ஒன்றினைச் சொன்னார்கள். யாரோ ஒரு பஸ் கண்டக்டருக்கும், சட்டக்கல்லூரி மாணவர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவு, மோதலாகமாறி அது மெட்ராஸ் மெடிகல் காலேஜ் ஹாஸ்டல் இன்னும் மற்ற விடுதிகளில் தாக்குதல் நடப்பது நியாயம்தானா என்று கேட்டார்கள். அவர்கள் எடுத்துப்பேசிய அந்த உருக்கமான பேச்சின் அளவுக்கு நான் பேச முடியாதநிலை இருப்பதற்குக் காரணம் இதற்காக ஒரு நீதி விசாரணையை அமைத்து விட்டிருக்கிற இத்த நேரத்தில் முதலமைச்சர் என்ற முறையில் நான் அந்த விவரங்களையெல்லாம் எடுத்துப் பேசுவது என்பது சட்டபடி முறையானதாக இருக்காது. அதனால்தான் அந்த விவரங்களையெல்லாம் அதிகமாகச் சொல்ல

இயலாதவனாக இருக்கிறேனேதவிர நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொன்ன உணர்ச்சிமயமான பல்வேறு கருத்துக் களில் நான் ஒன்றிய கருத்தைக் கொண்டவன் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரு அரசு நியாயமான முறையில் நடக்கவேண்டுமானால் சமூகத்தில் யார் எந்தத்தவறு செய்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியை மறந்துவிடக்கூடாது என்பதனையும் போலீஸ் துறையினர் அப்படிப்பட்ட முறையில் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு இந்த அரசு ஏதாகிலும் தடைவிதித்திருக்கிறதா? உத்தரவிட்டிருக்கிறதா? என்று கேட்டார்கள் மாணவர்கள் கிளர்ச்சி செய்த நாட்களிலும் இந்த 25, 26-ஆம் தேதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மாணவர் கள் பல்வேறு கல்லூரி விடுதிகளில் தாக்கப்பட்ட சம்பவங்கள், தொழிலாளர்களுடைய கிளர்ச்சி ஆகிய எந்த நேரத்திலும் போலீஸ் துறையைப் பார்த்து நீங்கள் எதுவும் செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டு இருங்கள், வேடிக்கை பாருங்கள் என்று எந்த அரசும் சொல்லாது. அதிலும் இந்த அரசு அப்படிப்பட்ட நிலையில் எப்படிப்பட்ட உத்திரவையும் போடவில்லை; எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது, என்று கேட்டுக்கொள்ளவும் இல்லை.

காவல் துறையினருக்கு விடுக்கப்பட்டிருக்கிற யோசனைகள் எல்லாம் கூடுமான வரையில் துப்பாக்கிப்பிரயோகத்தைத் தவிர்க்க வேண்டும்; துப்பாக்கிப்பிரயோகம் ஏற்படுவதற்கு முன்னால், அதற்கு முன்னாலே இருக்கிற எல்லா முறைகளையும் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகுதான் துப்பாக்கிப்பிரயோகத் திற்குச் செல்லவேண்டுமேதவிர, எடுத்த எடுப்பிலேயே துப்பாக்கிப் பிரயோகம் கூடாது என்பதுதான்—அதுவும் இந்த நிகழ்ச்சியின்— போது கூட அல்ல—பொதுவாக அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற நேரத்திலும், சட்டக் கல்லூரி விடுதியிலானாலும்சரி, மருத்துவக் கல்லூரி விடுதியிலானா லும்சரி வந்திருந்த கும்பல் எதிரிலேயே சூழ்ந்திருந்தார்கள்; மாணவர்களையும், மாணவர்களுடைய விடுதிகளையும் அவர்களு டைய சொத்துக்களையும், அவர்களுடைய உடமைகளையும் சேதப் படுத்துகிற முறையில் நடந்துகொள்ளுகிறார்கள் என்றால் அவர் களை எந்த முறையில் சமாளிப்பது என்பதற்கான முழு அதிகார

மும் போலீசுக்கு இருக்கிறது. அவர்களை விரட்டி, அடிப்பதற்கான கண்ணீர்ப்புகைக் குண்டுகள், போலீஸ் தடியடி அவ்வளவையும் பயன்படுத்தி தொழிலாளர்களை விரட்ட போலீசார் உரிமை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அந்த உரிமைப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு இடத்தில் சட்டக் கல்லூரி விடுதிக்கு எதிரிலேயே கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டது; வேப்பேரியில் துப்பாக்கிச்சூடு கிளப்பப்பட்டது; மருத்துவக் கல்லூரி விடுதிக்கு எதிரிலேயே தடியடி பிரயோகம் நடந்தது; ஆகிய இவ்வளவும் நடந்தன என்பதே போலீஸ்காரர்களுக்கு அந்த உரிமைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட போதுமான சான்றுகளாகும். அவர்களை எதுவும் செய்யவேண்டாம் என்று கையைக் கட்டிக் கொண்டிருக்கும்படி உத்தரவிட்டிருந்தோம் என்று யாராவது கருதினால் இந்தக் காரியங்கள் நடந்திருக்குமா என்று பார்க்க வேண்டும். இப்போது நாம் ஆராய்ந்து, தெரிந்து கொள்ளவேண்டியது, எந்தெந்த இடத்திலே எந்தெந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அந்த முறையில் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா? எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலன் கொடுத்திருக்கின்றனவா? என்பனதான். இதில், எங்களை— அமைச்சர்களைப் பொறுத்தவரையில் அவர்களே குறிப்பிட்டபடி நாங்கள் அவர்களைப் போலவே வீட்டிற்குத் திரும்பிய பிறகுதான் இப்படி ஒரு கிளர்ச்சி நடைபெற்றது என்று கேள்விப்பட்டு, அந்த சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் பல தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட மோதலைப்பற்றி விசாரிக்க வேண்டும், என்று எண்ணிக் கொண்டிருந்தபோதே, சென்னை நகரத்திலே எந்தெந்த இடத்திலே பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தனவோ அவைகள் எல்லாம் அந்தந்த இடத்திலேயே நிறுத்தப்பட்டுவிட்டன என்ற தகவலும், நிறுத்தப்பட்ட பஸ்களில் சில பஸ்களை தொழிலாளர்கள் தாங்களாகவே எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற தகவலும் எங்களுக்கு அளிக்கப்பட்டது. இதை நான் கேட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலேயே அல்லது ஒரு 20 நிமிஷம் அல்லது அரைமணி நேரம் இருக்கும் என்று கருதுகிறேன், ஒரு 200, 300-க்கும் பேற்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலமாக என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். வருகிறபோதே நண்பர், ராஜாராம் அவர்கள் சொன்னபடி 'ஒழிக' கோஷங்களை அதிகமாக முழங்கிக்கொண்டே வந்தார்கள். அவர்களில் 4 பேரை மட்டும் நான் முதலில் தனியாக அழைத்துப் பேசினேன். அதற்குப் பிறகு

மொத்தமாக அவர்கள் மத்தியிலே இருந்து பேசினேன். அவர்கள் சொன்னார்கள் "எங்கள் தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள்" என்று. அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே திடீர் என்று கூட்டத்திலே ஒருவர் எழுந்து தொழிலாளர்களில் ஒருவர் இறந்து போய்விட்டார் என்று சொன்னார். இறந்துபோனவருடைய பெயர் தெரியாது என்று சொன்னார். உடனே நான் சொன்னேன் "தகவல் தெரியாமல் இப்படிப் பேசாதீர்கள்; பீதியை உண்டாக்க வேண்டாம்; நடைபெற்ற காரியங்களை குறித்து விசாரிக்க வேண்டும்; நீங்கள் எல்லாம் அமைதியாக செல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன். அப்போது ஒரு தோழர் 'வாழ்க' என்று முழக்கமிட்டார். உடனே கூடிஇருந்த இன்னும் சிலர் 'வாழ்க' என்று சொல்லாதே என்றார்கள். அதிலே இருந்து நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், வந்த தொழிலாளர்கள் பல்வேறு வகையான கருத்துக் கொண்டிருந்தார்கள். அது நடைபெற்றவுடனேதான் சட்டக் கல்லூரிச் செய்தி. அதற்குத்தகுந்த நடவடிக்கை எடுத்து, எத்தனை போலீஸ் தேவையோ அத்தனைப் போலீசையும் தவிர இன்னும் போலீஸ் தேவை என்பதற்காக உடனடியாக ஆவடியிலிருந்து எஸ். ஏ. பி. வரவழைக்க வேண்டும் என்று அவர் என்னைக்கேட்டார். தாராளமாக தருவித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன்.

வெளியூர்களிலிருந்து கூட வரவேண்டியிருக்கும், தருவிக்கலாமா என்று கேட்டார்கள். தருவித்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அதற்கு உத்தரவுவிட்டுவிட்டு காத்துக்கொண்டிருக்கும்போது எஸ். ஏ. பி. படைவந்து சேர்ந்தது. சட்டக் கல்லூரி எதிரில் பாய்ந்து வருகிற கும்பல் முதலில் 500 பேர்கள் என்றார்கள். நேரமாகமாக இரண்டாயிரம், மூவாயிரம் என்று கூட்டம் வளர்ந்தது. அந்தக் கும்பலை எதிரில் நின்று தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தபோது சென்னை நகரத்தில் பல்வேறு பகுதிகளில் அத்தகைய சம்பவங்கள் நடைபெற்றன. எங்களுக்கு முதலில் சட்டக் கல்லூரி விடுதிக்கு எதிரில் நடந்த கலவரத்தைப்பற்றி அறிவிக்கப்பட்டிருந்ததால் அடிக்கடி அதைப்பற்றியே விசாரித்துக் கொண்டிருந்தோம். உடனே மருத்துவக் கல்லூரி விடுதியிலும் கலவரம் நடக்கிறது என்று கேள்விப்பட்டதும் போலீஸ் இருக்கிறதா என்று கேட்டேன். அசிஸ்டண்ட் கமிஷனர் தலைமையில் ஒரு

போலீஸ்படை அங்கே இருப்பதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு கலவர உணர்ச்சி வளர்ந்து நண்பர் ராஜாராம் அவர்கள் சுட்டிக்காட்டியபடி மாணவர்களின் அறைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சினிமா பார்த்துவிட்டு வந்த மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தச் செய்திகள் உடனுக்குடன் அறிவிக்கப்பட்டதும் ஐ ஜி. அந்த நேரத்தில் சட்டக் கல்லூரிக்கு அருகேயிருந்து நிலைமைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஐ. ஜி. யிடம் பேசியபோது அவர் கமிஷனரை அதிகப் போலீசுடன் அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தார்; அனுப்பப்பட்டது. இந்த நிலையில் ஸ்டான்லி, கீழ்ப்பாக்க மருத்துவமனை கல்லூரிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் விவரம் எங்களுக்கு உடனுக்குடன் கிடைப்பதில் தயக்கமிருந்தது. முதலில் சட்டக் கல்லூரியைப் பற்றிய தகவல் வந்தது. பிறகு மருத்துவக் கல்லூரி செய்தி வந்தது. மிகவும் உருக்கமான நிலையில் இவைகளைப்பற்றி விசாரித்துக் கொண்டும் இன்னது செய்ய வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், நகரத்தில் பலவேறு பகுதிகளில் இப்படிப்பட்ட கலவரங்கள் நிகழ்ச்சிகள், பலாத்கார தாக்குதல்கள் நடைபெறுகின்றன என்பது எங்களுக்கு சிறிது தாமதமாகத்தான் தெரியவந்தது. செய்தி கிடைத்தவுடன் அந்தந்த இடத்திற்குப் போலீஸ் அனுப்பப்பட வேண்டுமென்று உத்தரவு இட்டுக்கொண்டிருந்தோம். போலீஸ் தரப்பிலும் எங்கெங்கு கலவரம் நடப்பதாக கேள்விப்பட்டார்களோ அங்கெல்லாம் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இத்தனைபேர் தாக்குதலுக்கு ஆளாகியிருப்பார்களா? அவர்களுடைய சொத்துக்கள் இந்த அளவுக்குச் சேதம் அடைந்திருக்குமா? அவர்கள் மனதில் இந்தக் கேள்வி பிறந்திருக்குமா என்ற நியாயமான பிரச்சனை பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நீதி விசாரனைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். ஏனென்றால் எந்த அதிகாரி எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு நீதி விசாரணை மிகவும் தேவை. அதன் மூலம், அதற்கான முழு விவரமும் கிடைக்குமானால் தவறான முறையில் நடந்து கொண்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தயக்கமின்றி நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசு உறுதி

யளிக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை நகரத்தில் ஏற்பட்டிருக்கிற அமைதிக்குலைவு, பீதி இவைகளை எல்லாம் நான் நன்ருக உணர்கிறேன். உணர்வது மட்டுமல்ல அதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன்; வேதனையடைகிறேன். குறிப்பாக அவர்கள் சொல்லியதைப்போல நான் மாணவர்களை சந்தித்த நேரத்தில் பேசிக் கொண்டதைப் பின்னர் விவரம் சொல்ல நேரிடுமே என்று நிறுத்திக் கொள்கிறேன். நீதி விசாரணை இருப்பதால் என்னுடைய உணர்ச்சி எந்த அளவுக்கு செல்கிறதோ அந்த அளவுக்குச் சொல்ல முடியவில்லை. படுகாயமுற்ற மாணவர்கள் ஆபத்தான நிலையிலிருந்து மருத்துவ நிபுணர்களால் மீட்கப்பட்டிருப்பதை நான் பார்க்க முடிந்தது. நண்பர் ராமதாஸ் பேசியதைப் போல இந்த இடம் கட்டுப்பாட்டுக்கு ஏற்ற இடம் என்பதைவிட கட்டிப்போட்ட இடம் என்றுதான் சொல்லுவேன். போலீஸ் கட்டி போடப்பட்டதா என்று கேட்கப்படுகிறது. உண்மை என்னவென்ருல் நான் கட்டிப்போடப்பட்டிருக்கிறேன். நீதிவிசாரணை முன்னேக்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் அதைப் பற்றிய விமர்சனங்களை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நண்பர் சேஷாத்திரியும் சொல்லியதைப்போல தாராளமாகச் சொல்வதற்கில்லை. ஒன்றை மட்டும் உறுதியளிக்கிறன். இந்த விசாசரணையின் மூலம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை சரியாக எடுக்கவில்லை என்று நிரூபிக்கப்படுமானுல் இந்த அரசு பரிகாரம் தேடுவதற்குமுன் பொதுமக்களிடத்தில் மன்னிப்பு கேட்டுக்கொள்வதற்கு ஒரு சிறிதும் தயங்காது. அப்படிப்பட்ட காரியங்கள் நடத்திருக்கின்றனவா என்று ஆராயப்படவேண்டும். நிகழ்ச்சிகளை கட்டுப் படுத்தியிருக்க முடியும் என்று நண்பர்கள் சொல்லியது நீதி விசாரணையில் தெரியவேண்டும். கட்டுப்படுத்தியிருக்க முடியும், ஆனுல் கட்டுப்படுத்தவில்லை என்று எடுத்துக் காட்டிக் கொள்ள சர்க்கார் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் யார் நடந்து கொண்டார்கள் என்று அறிந்து கொள்ளவேண்டிய பொறுப்பும் சர்க்காருக்கு உண்டு. அதற்குப் பிறகும் சர்க்காரோ அல்லது அமைச்சர்களோ இந்த விஷயத்தில் போதுமான பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்று காட்டப்படுமானுல் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதில் சிறிதும் தயக்கம் காட்டமாட்டேன். ஒரு திங்களுக்கு முன்பு அஸ்ஸாம் ராஜ்யத்தில் கௌஹாத்தியில் பெருத்த கலவரங்கள் நடந்ததால் பலர் இறந்தார்கள்.

கோடிக் கணக்கான ரூபாய்க்கு சேதமேற்பட்டது. பல வீடுகள் கொளுத்தப்பட்டன. இதை நான் சொல்லுவதால் இங்கே நடந்தால் என்னவென்று கேட்பதாக இதை யாரும் எண்ண வேண்டாம். அங்கே அது நடந்தவுடன் விசாரணைக்கு ஏற்பாடு செய்து விசாரணை நடைபெறும்போது, மத்திய உள்துறை பாது காக்கப்படவில்லை, பாதுகாக்கத் தவறப்பட்டு விட்டது என்று எடுத்து சொல்லியிருக்கிறார்கள். நல்லவேளையாக அந்த இடத் தில் இருந்த சூழ்நிலை காரணமாக அது உடனே அணைக்கப்பட்டு விட்டது. அது இந்தியா முழுவதும் பரவியிருக்குமானால் இந்தி யாவின் வேறு பல மாநிலங்கள் கொந்தளிப்பில் தள்ளப்பட்டிருக் கக்கூடும். அதைப் பற்றிய உணர்வு அஸ்ஸாமில் மட்டுமல்லாமல் வேறு இடத்தில் நல்ல உணர்வையும் பொறுப்பையும் ஏற்படுத்தி யிருப்பதால் இன்றைய தினம் சகஜ நிலைமை திரும்பியிருக்கிறது. இதைச் சொல்லுவதற்குக் காரணம் ஒரு அரசு தன் கடமையைச் செய்யத் தவறினால் அதற்கு வருத்தம் தெரிவித்துகொள்ளலாம் என்று உள்துறை அமைச்சர் சவான் சொல்லியதிலிருந்து நானும் கூறலாம். அதில் வெட்கப்பட வேண்டியதில்லை. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், எல்லாம் தெரிந்தவர் கள் என்பதல்ல. இந்த விஷயத்தில் நாம் அறிந்துக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. எங்களுக்கு அறிவிக் கப்பட்ட விஷயங்கள் பல இருக்கின்றன. நானாகப் பார்த்து இது சரி, இது தவறு என்று சொல்லுவது நியாயமாக இருக்காது என்று கருதித்தான், நீதி விசாரணையில் அவர்கள் பார்த்துத் தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டேனே தவிர என்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறேன் என்று நினைக்க வேண்டிய தில்லை. ஒரு தவறான கருத்து நாட்டில் பரவும் நிலை ஏற்பட்டிருக் கிறது. மாணவர்கள் மீது எனக்கு ஏதோ அருவருப்போ பகையோ ஏற்பட்டு அவர்கள் தாக்கப்பட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்றும் எங்கள் சார்பில் போலீஸ் பார்த்துக் கொண்டிருந்தது என்றும் சென்னை நகரத்திலும் வெளியிலும் பேசப்படுகிறது. அதைக் கேட்பதற்கு நான் மிகுந்த வேதனைப் படுகிறேன்.

மாணவர்களுக்கும் எங்களுக்கும் எந்த வகையிலே விரோதம் வரக் காரணம் இருக்கிறது? அவர்கள் உருக்கத்துடன் சொன்னார் கள், மெய்யப்பன் என்ற மாணவன் என்னுடைய படத்தை

வைத்துக் கொண்டிருக்கிறுன் என்று சொன்ஞர்கள். மாணவர்கள் சமுதாயத்திற்கும் எங்களுக்கும் இருக்கிற உறவு நாடறிந்த விஷயம். அவர்கள் எந்த அளவிற்கு எங்களுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பதும் நாடறிந்த விஷயம். என்னுடைய குறிப்பில் இருக்கிறது. இந்தக் கலவரம் கிளம்புவதற்கு முன்ஞல் 25-ம் தேதியன்று பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆர்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் மத்தியில் பேசிவிட்டு, அதற்குப் பிறகு வீட்டிற்கு வந்தவுடன்தான் இந்தக் கலவர செய்தியே அவருக்குக் கிடைத்து இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்ஞல் ஸ்டான்லி கல்லூரியில் அவர்கள் சென்று பேசிவிட்டு வந்தார்கள். நான் பச்சையப்பன் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் சென்று, சென்ற வாரத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வந்திருக்கின்றேன். எங்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்கிற தொடர்பு மாறுவதற்கு எந்த வகையான முகாந்திரமும் இல்லே. மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள் என்று நம்முடைய எதிர்க்கட்சி தலேவர் அவர்கள், மாணவர்கள் கருதுவதாக தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் உள்ளன்போடு தெரிவித்துக் கொள்வேன். நாங்கள் அந்த வகையான மனப்பான்மை கொள்ளக்கூடியவர்கள் அல்ல. நாங்கள் அந்த வகையான மனப்பான்மையில் இங்கே பணியாற்றவில்லே. நடைபெற்றதைப் பற்றி நீதி விசாரணே நடத்த வேண்டுமென்று விரும்பியதற்கு முக்கியமான காரணமே இந்த செய்திகளே எல்லாம் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காகத்தான். நாங்கள் அடைந்திருக்கும் வேதனேயை நாடறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இப்போது நீதி விசாரணே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் நம்முடைய நண்பர்கள் ராமதாஸ் போன்றவர்களும், தியாகராஜன் போன்றவர்களும் நீங்கள் ராஜிஞமா செய்யுங்கள் என்று சொன்ஞர்கள். நாங்கள் ராஜிஞமா செய்த, பிறகு, செய்வதை எல்லாம் செய்துவிட்டு ஓடிவிட்டார்கள்; பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் ஓடிவிட்டார்கள் என்று சொல்லக்கூடும். அதிலும், நண்பர் தியாகராஜன் நீங்கள்தான் ஐந்து வருடங்களுக்கு இருக்கவேண்டும், என்னுடைய விருப்பமும் அதுதான், எங்களுடைய தலேவர் அவர்களின் விருப்பமும் அது தான் என்று சொல்லிவிட்டு, அடுத்த நிமிடமே நீங்கள் ராஜிஞமா செய்யவேண்டுமென்று சொல்வது ஒன்ருேடுஒன்று பொருந்தாமல் இருக்கிறது. அதுபோல் நண்பர் ராமதாஸ் அவர்கள்சொன்னதற்கு

அப்போதே பதில்சொன்னேன். பொதுமக்களிடமோ, அவையிடமோ மன்னிப்பு கேட்கவேண்டுமென்றால், மன்னிப்பு கேட்பதற்கோ அல்லது வருத்தம் தெரிவிப்பதற்கோ நான் கூச்சப்படுபவனோ அல்ல. ஏனென்றால் அதற்கு சவான் அவர்களின் உதாரணத்தைச் சொன்னேன். ஆகையால் நீதி விசாரணைக்குப் பிறகு நமக்குக் கிடைக்கின்ற நியாயங்களை அறிந்து நீங்கள் எப்படி செய்யவேண்டுமென்று பணிக்கிறீர்களோ அப்படி நடந்து கொள்ள சித்தமாக இருக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நீதி விசாரணை பற்றி இன்னாரை நியமிக்காமல் இன்னாரைப்போட்டு இருக்கலாம் என்று சொன்னார்கள். உள்ளபடியே இது குறித்து பேச்சளவில் இருந்த நேரத்தில் என்னிடம் வந்து யாராவது இது பற்றி சொல்லியிருந்தால் நான் அதற்குத் தகுந்த ஏற்பாட்டை நிச்சயமாக செய்திருக்க முடியும். ஆனால் அறிவிக்கப்பட்ட பிறகு, அது சர்க்கார் அரசிதழில் பதிவான பிறகு அதைப்பற்றி நான் யோசிப்பது என்பது என்னால் முடியாத காரியமாக இருக்கிறது. ஆனால் இனி கூட சட்ட நிபுணர்கள் இது சம்பந்தமாக ஆலோசனை செய்பவர்களானால் அதைக்கூட நான் கேட்டுக்கொள்ளத் தயாராகயிருக்கிறேன்.

மற்றபடி இனிமேல் அப்படி ஆகாமல் பாதுகாக்கத்தக்க முறையில் இருக்க வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். பாதுகாப்பு நல்ல முறையில் தரப்பட ஒவ்வொரு நாள் மாலையும் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, எந்தெந்த விடுதிக்கு பாதுகாப்பு தேவையென்பதைக் கேட்டு, அதைக் கவனிப்புடன் உயர்தரப் போலீஸ் அதிகாரிக்கு தெரிவித்து, இந்த இடத்தில் பாதுகாப்பு வேண்டுமென்கிறார்கள், உடனடியாக அனுப்புங்கள் என்று பேசிக்கொண்டு இருப்பது தான் இரவு முழுவதும் நான் செய்யும் வேலையாக இருக்கிறது. நேற்றுமுன் தினம் கூட இரவு சுமார் 3 மணியிருக்கும். டெலிபோன் வந்தது. நான் படுத்துக்கொண்டிருக்கும் இடத்திற்கு பக்கத்திலேயே டெலிபோன் வைத்துக் கொண்டிருக்கிறேன். டெலிபோன் சத்தம் கேட்டவுடன் எடுத்தேன். சென்ட்ரல் பாலிடெக்னிக் மாணவர்களின் ஜெனரல் செகரட்டரி டெலிபோன் செய்கிறேன் கிண்டி என்சினீயரிங் கல்லூரிக்குப் போதுமான பாதுகாப்பு இருக்கிறது, ஆனால்

எங்களுக்கு இல்லை, கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள், இன்னும் அதிகம் வேண்டுமென்று தெரிவித்தார்கள். உடனடியாக நான் கமிஷனர் அவர்களுடன் தொடர்பு கொண்டு இன்னும் பாதுகாப்பு அனுப்பி விட்டு, நீங்களும் அந்த பகுதிக்குப் போய் விட்டு, எனக்கு டெலிபோன் செய்யுங்கள் என்றேன். அவரும் அதைப்போல சிறிது நேரத்திற்குப் பிறகு தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள். ஆகையால் அந்த காரியங்களில் நான் முழு அக்கறை செலுத்திக்கொண்டு வருகிறேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையின் மூலம் மாணவர்கள் சமுதாயத்திற்கும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இந்த நேரத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களையும், உறுப்பினர் களையும் உள்ளன்போடுகூட கேட்டுக் கொள்வது, அவர்கள் சொன்னது போல், முதலில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் அது ஏற்படுவதற்கு முதலில் இதைப்பற்றி எந்த அளவிற்கு வாதி பிரதி வாதங்களை குறைத்துக் கொள்கிறோமோ அந்த அளவிற்குத் தான் அமைதியை மறுபடியும் நாம் உண்டாக்க முடியும். அந்த அமைதி உண்டான பிறகு இப்படிப்பட்ட நிலைமைகள் என்றென் றும் ஏற்படாதபடி செய்ய என்னென்ன காரியங்கள் கொள்ளப் படவேண்டுமென்பதற்கு நான் மற்றொரு அவையில் தெரிவித்த படி எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்து பேசி ஒரு வழிவகை செய்து கொள்வதில் நான் விருப்பம் உள்ளவனாகயிருக்கிறேன். அமைதி ஏற்படுத்த வேண்டுமானால் யார் ஆட்சியில் இருப்பதாக இருந்தாலும் சரி, இந்த பிரச்சனையில் அவர்கள் எடுத்து சொன்ன உருக்கமான முறையீட்டை நான் மதிப்புடன் வரவேற்கிறேன் அதுமட்டுமல்ல, அவர்களுக்கு தொடர்புள்ள, தொழிலாளிகள், அவர்களுக்கு தொடர்புள்ள பத்திரிகை ஆசிரியர்கள், அவர் களிடம் எல்லாம் என்னிடம் நிலைமைகளைக் சொன்ன மாதிரி விளக்கச் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தை, நிலைமைகளை நன்றாக ஆராய்ந்து மற்ற நண்பர் களும் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்போடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கலவரம் நடைபெறுகிற நேரத்தில் விட்டு வைத்து விட்டேன். அதனால் அந்த இயல்பு வளர்ந்து விட்டது என்று நண்பர் ராஜாராம் நாயுடு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முன்னால் பேசுகிறபோது அவர்களே

முதலமைச்சருக்கு கொஞ்சம் இளகிய மனது, கொஞ்சம் இளகிய மனதென்ன, ரொம்பவும் இளகிய மனது என்று சொல்யிருக்கிருர்கள். அது ஒரு குற்றமானுல் நான் அந்த குற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் எடுத்துச் சொல்வதிலிருந்து அரசு கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டுமென்பதில் நான் தவறிழைக்க மாட்டேன், கண்டிப்பாக இருப்பேன் என்பதையும், நிலைமைகளை இளகிய மனதுடன் மட்டும் கவனிக்காமல் கொஞ்சம் கண்டிப்புடன் நடந்தாலும் அதற்கு இந்த அரசு பதில்சொல்லும் பல நிகழ்ச்சிகள் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பற்றிய விமர்சனங்களும் இந்த ஓராண்டு காலத்தில் இல்லாமல் இல்லை. 9 இடத்தில் துப்பாக்கி பிரயோகமா? ஐந்து மாதம் ஆகவில்லை, அதற்குள் இத்தனை சாவுகளா? என்றும் செய்திகள் வருகின்றன. எதிர்காலம் இல்லை என்பதற்காகக் கண்டிப்பாக இருக்கத் தவறுகிறோம் என்று எண்ணிக் கொண்டு உறுப்பினர்கள் சொன்ஞர்கள். அடுத்தத் தேர்தலைப் பற்றி நினைக்காமல் இந்த காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்கள். அடுத்தத் தேர்தலைப்பற்றி மனதில் வைத்துக் கொண்டு, நல்ல எண்ணம் சம்பாதிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அடுத்தத் தேர்தலைப்பற்றி மனதில் வைத்துக்கொண்டு நல்ல எண்ணம் சம்பாதிக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுப்பதனுல், தேர்தலுக்கு முந்திய வருடத்தில்தான் அவ்வாறு ஆட்சி செய்வார்களே தவிர தேர்தல் எங்கேயோ இருக்கிறபோது எதையும் செய்யாமல் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று எந்த கட்சியும் ஆட்சி செய்யாது. அடுத்தத் தேர்தலில் வெற்றி பெற்றுத் தீரவேண்டுமென்ற எண்ணமில்லை என்பதை நான் கீழவையில் சொன்னபோது காங்கிரஸ் உறுப்பினர்களுக்குச் சொன்னேன், நீங்கள் 100-க்கு 42 விழுக்காடு பெற்றிருக்கிறீர்கள். இதை 52-ஆக பெற வேண்டுமென்ருல் வெகு எளிதில் பெறமுடியும் என்று சொல்லியிருக்கிறேன். 5 வருடங்கள் இருக்க வேண்டுமென்று நண்பர்கள் குறிப்பிட்டார்கள். ஏன் ஐந்து வருடங்கள் இருக்க வேண்டுமென்று நண்பர்கள் குறிப்பிடுகிருர்கள் என்ற நோக்கம் தெரியாது என்ருலும், இந்த வருடங்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் நெருக்கடியான வருடங்களாகும். மக்கள் மனதில் அதிகமான கலவர உணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு இருக்கும் பருவமாகும். 10 வருடங்களுக்கு முன்ஞல் எதற்கு கோபம் வராதோ அதற்

கெல்லாம் இப்போது கோபம் வருகிறது. 5 வருடங்களுக்கு முன்னால் எதற்கு சச்சரவு வராதோ அதற்கெல்லாம் இப்போது சச்சரவு வருகிறது. பகை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நேரம் பார்த்து இந்த இடத்தில் வைத்து நான்கு வருடங்களுக்கு இரு என்று சொல்வது, நல்ல எண்ணம் கொண்டோ, நட்புணர்ச்சி கொண்டோ சொல்வதாக நான் எண்ணமாட்டேன், இவைகளை எல்லாம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால், இந்த பாரத்தை தாங்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர எதற்காகவும் இல்லை.

ஆனால் அடுத்த தேர்தலை மனதிலே வைத்துக் கொண்டு இந்த காரியங்கள் செய்யப்படுவதில்லை. என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்ட எந்த அளவிற்கு கண்டிப்பாக நடந்து கொள்ளவேண்டும் என்பதில் நீங்கள் வலியுறுத்திக் கூறிய கருத்துக்களை மனதிலே கொண்டு நடந்து கொள்வேன் என்று உறுதியளித்து பொதுவாக மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தேவையான எல்லா விதமான பாதுகாப்பும் அளிப்பதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், பொருள் இழப்பு ஏற்பட்டவர்களுக்குத் தகுந்த பரிகாரம் தேடிகொடுக்கப் படும் என்றும் நான் உறுதியளிக்க விரும்புகிறேன்.

பல்கலைக் கழகக் குழு பள்ளிக்கூடப் பரீட்சைகள் விஷயத்தில் வேண்டிய முடிவுகளை எடுக்கும். பள்ளிக்கூடப் பரீட்சைகள் பற்றி நான் முன்னாலேயே சொல்லி இருக்கிறன் இது பல்கலைக் கழகக் குழு முடிவு செய்யவேண்டிய விஷயம் என்று. இதை அவர்கள் கவனித்து நல்ல முடிவுகளைச் செய்வார்கள். கல்லூரி முதல்வர்கள் என்னென்ன செய்யலாம் என்று பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பல கருத்துக்களைக் கொண்டு இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடிவிடலாம், பிறகு பரீட்சைகளை நடத்தலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. பரீட்சைகளே வேண்டாம், ஏற்கெனவே பரிசோதிக்கப்பட்டதை வைத்து அவர்களின் தகுதியைப் பார்த்து நிர்ணயித்து விடலாம் என்ற கருத்தும் கூறப்படுகிறது. எனவே இவைகளைப்பற்றி எல்லாம் பல்கலைக் கழகக் குழு ஆராய்ந்து பார்த்து தக்க முடிவுகளை எடுப்பார்கள். நாம் கொண்டு இருக்கிற இந்தக் கவலையை மனதிலே

வைத்துக்கொண்டு அந்த முடிவை எடுப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. நல்ல சுமுகமான சூழ் நிலையை எடுக்கும் முயற்சிக்கு இந்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியிலே இருப்பதனாலே நண்பர் ராமதாஸ் அவர்கள் ராஜினாமா செய்யுங்கள் என்று சொல்லி விட்டு பிறகு குறிப்பிடத் தக்க ஒரு உண்மையை ஒப்புக் கொண்டார்கள். நாங்கள் ஆளும் போது நீங்கள் சொன்னீர்களே, அதனாலே இப்போது நாங்கள் சொல்கிறோம் என்றார்கள். நாங்கள் அப்போது கொஞ்சம் அனுபவம் இல்லாததால் அப்படிச் சொல்லி இருக்கலாம். இருபது வருடம் ஆட்சியிலே இருந்து அனுபவம் பெற்றவர்கள், நீங்களும் அதையே பின்பற்ற வேண்டும் என்று ஒன்றும் இல்லை. நல்ல எதிர்க்கட்சியாக நடந்துகொள்வதற்கு அவர்கள் முயன்று நடந்து கொண்டால், அவர்கள் மற்றவர்களுக்கு நல்ல வழிகாட்டியவர் களாவார்கள். இந்தியாவின் ஜனநாயகத்திற்கு அவர்கள் மிகச் சிறந்த தொண்டாற்றியவர்கள் ஆவார்கள். நண்பர் ராமதாஸ் அவர்கள் முன்னாலே இப்படி நீங்கள் சொன்னீர்களே, அதனால் நாங்கள் இப்போது சொல்கிறோம் என்றால், அது காமன் பண்டிகையிலே எரிந்த கட்சி, எரியாதகட்சி என்று சண்டைபோட்டுக் கொள்வதைப் போல ஆகிவிடும். மன்மதன் செத்துவிட்டான் என்று ஒரு கட்சி சொல்லும் இன்னொரு கட்சி மன்மதன் இன்னும் சாகவில்லை என்று சொல்லும். உண்டு, உண்டுஎன்று ஒரு கட்சியும், இல்லை, இல்லை என்று ஒரு கட்சியும் சொல்லும். அதற்கு அல்ல அரசியல் கட்சிகள் இருப்பது. ஆக நாங்கள் அப்படிச் சொன்னோம், ராஜினாமா செய்யச் சொல்லிச் சொன்னோம் என்பதற்காக இப்போது நீங்களும் சொல்லுகிறீர்கள் என்று சொல்லுவது, இதை இப்படியே திருப்பினால் என்ன ஆகும். நாங்கள் சொன்ன போது நீங்கள் ராஜினாமா செய்தீர்களா என்று இந்த பக்கத்திலே இருந்து கேட்பார்கள்.

திரு கே. ராமதாஸ் : அப்படிக் கேட்டார்கள்.

**மாண்புமிகு முதல்வர் சி. என். அண்ணாதுரை**:—இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது திரு எம். பக்தவச்சலம் அவர்களுடைய மந்திரி சபை ராஜினாமா செய்யவேண்டும் என்று எங்கள் பக்கத்திலே இருந்து சொன்னார்கள். அதற்கு பக்தவச்சலம் என்ன சொன்னார்.

நீங்கள் ராஜிஞமா செய்யச் சொல்லி விட்டதஞலே நான் ராஜிஞமா செய்து விடவேண்டுமா? எப்பொழுது ராஜிஞமா செய்யவேண்டும் என்று எனக்குத் தெரியும் என்று சொன்ஞர் கள். அந்த மாதிரி அவருக்கு இதுபோல பேச அனுபவம் உண்டு. நீங்கள் முன்ஞலே இப்படி சொன்னீர்களே, இப்போது இப்படி சொல்கிறீர்களே என்று சொன்ஞல் அதற்கு நான் எடுத்துச் சொல்லக்கூடியதெல்லாம் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப் பட்டு இருக்கிற இந்த சமயத்தில் இப்படிச் செய்வது சரியாக இருக்குமா? அனுபவப்பட்டவர்கள் இப்படிக் கேட்க்கலாமா என்று தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த விஷயங்கள் எல்லாம் எனக்கும் தெரியும். அவர்கள் சொல்லி விட்டார்கள். நான் சொல்வதற்கில்லை. நான் முதலமைச்சராக இருப்பதஞல் சில விவரங்களைச் சொல்வதற்கு இல்லை. ஆஞல் எனக்குக் கிடைத்த விவரங்கள் அனைத்தையும், பெரும்பாலானவற்றை அறிவித்து இருக்கிறேன். நீதி விசாரணை முடிந்து, அவர்கள் கொடுக்கும் தீர்ப்பை ஆராய்ந்து பார்த்து நாட்டுக்கும் நமக்கும் நல்ல பலன் அளிக்கக்கூடிய காரியங்களைச் செய்வதற்கு ஆவன செய்வேன் என்று எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

# தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் பேரறிஞர் அண்ணா

## "பொருள்"

[தாம்பரம் கிறித்துவக் கல்லூரியின் தமிழ்ச் சங்க ஆண்டு விழா 19—2'—48 அன்று, புலவர் உயர் திரு. அ. கி. பரந்தாமனார் தலைமையில் நடைபெற்ற போது, அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அரிய சொற்பொழிவு]

**தோழர்களே !**

தமிழ்ச் சங்கச் சார்பில் பேசவேண்டுமென்று இக் கல்லூரித் தோழர்கள் என்னைக் கேட்டார்களேயன்றி இன்ன பொருளைப் பற்றித்தான் பேசவேண்டும் என்று கூறினார்களில்லை. அப்படித் தான் அவர்கள் இன்ன பொருளைப்பற்றிப் பேச வேண்டும் என்று எனக்குப் பணித்தாலும், "இவனுக்கென்று" அமைந்த ஒரு பொருளைப்பற்றி வற்புறுத்தாமல் இருக்கப் போகின்றானா என்ன? என்று அவர்கள் நினைத்திருப்பார்கள்; எனவேதான் அவர்கள் இன்ன பொருளைப்பற்றிப் பேசவேண்டும் என்று கேட்காமலிருந் திருக்கலாம்; ஆகையினால் நான் 'பொருள்' என்பதைப் பற்றி இப்போது பேசுகிறேன்.

எந்த நாட்களையும்விட, இந்த நாட்களிலே இதைப்பற்றி மக்கள் நினைக்க வேண்டிய அவசியம் வந்து விட்டதனால், பொருளைப் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. எதைப்பற்றி நினைத் தாலும் அதைப்பற்றி பேசவேண்டியிருக்கிறது. அதற்கு பேச்சுக் கலை அவசியப்படுகிறது. மற்றக் கல்லூரிகளைவிட நீங்கள் நாட் டிற்குத் தேவையான ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசியிருக்கிறீர் கள். மற்றவர்க்கு நம்முடைய கருத்து உடன்பாடோ, உடன்

பாடில்லேயோ, தேவையோ தேவை இல்லேயோ அதுவல்ல பிரச்னே. நாம் செய்யவேண்டிய தொண்டு, கடமை என்ற ஆணேயிலே நடத்தப்பட வேண்டும். அந்த முறையிலே, கல்லூரி மாணவர்களாகிய நீங்கள், தொட்டும் பார்க்காததைக் கூடத் தொட்டுப் பார்த்திருக்கின்றீர்கள். கிறித்துவக் கல்லூரி மாணவர் களா? திராவிடநாடு—தமிழ்நாடு என்பதைப் பற்றி வாதித்திருக் கிருர்களா? என்று பச்சையப்பன் கல்லூரியில் படித்த நான் ஆச்சரியப்பட்டு விட்டேன். உண்மையிலே மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நாட்டுப்பற்று நாட்டின் ஆக்கத்திற்கான ஓர் அறிகுறி. அதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்; பெருமையும் அடைகிறேன்.

இந்த எண்ணம் மாணவர்களுக்கு இன்னும் வளர வேண்டும். அதற்குக் கருத்துத் தெளிவு மிகவும் இன்றியமையாதது. வெளி யிடாமல் மனத்திலே மட்டும் உள்ள கருத்து, மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல; அது காட்டிலே உள்ள ஒருமுறை. எதற்காக கூறு கின்றேன் என்ருல், நான் பேச எடுத்துக்கொண்ட 'பொருள்' என்பதற்குக் கருத்துத் தெளிவு, ஒருவருக்கு ஒருவர் மிகமிகத் தேவை. எனவே ஒருவருக்கொருவர் கலந்து பேசுவதில் தவறில்லே.

## இழந்த பொருளேப் பெறலாம்.

'பொருள்' என்பதிலே காந்தியாரை இழந்து விட்டது—நாட்டின் அரிய பொதுப் பொருளே இழந்து விட்டதாகும். நம் நாட்டின் பொதுப் பொருளாகிய காந்தியார் மறைந்தது அரசியல் துறையிலாயினும் சரி, அறிவுத் துறையிலாயினும் சரி ஒரு பெரிய நஷ்டமேயாகும். ஆனல், நாம் இழந்த பொருளேப் பிறகு பெறவும் முடியும்; அதற்குப் புதுக் கருத்துக்கள் தேவை. இது அரசியல் அரங்கில் இருப்பவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

அந்தப் புதுப் பொருள் என்ன? அது கிடைக்க நீங்களும் நானும் அம்முயற்சியில் ஈடுபடவேண்டும். அதற்கான ஒத்துழைப்பு மிகவும் தேவை. எனவே நான் அடிக்கடி கூறுவதுபோல், ஒருவருக்கொருவரிடையே கருத்துத் தெளிவு ஏற்பட வேண்டும். அதற்கு அடிப்படை பேச்சுக்கலே. பேச்சுக்கலே இல்லாத இட மில்லே. எங்கும் பேச்சு மேடை: பட்டி தொட்டிகளில் பொது

இடங்களில் எங்கும் காண்கிறோம். அச்சுத் தொழில் செய்யும் இடங்கள் பத்திரிகாலயங்களாக மாறுகின்றன. இதுவே பேச்சு மேடை வளர்வதற்கு ஓர் அறிகுறி. ஆனால் பேச்சுக் கலையைத் தவறான முறையில் பிரயோகித்தல் கூடாது. சான்றாக, சில நாட்களுக்குமுன், திருச்சிப் பத்திரிகையென்றில் 'பிள்ளை பிடிக்கும் பீதி' என்ற தலைப்பில் வந்த செய்தி. நாட்டு மக்களுக்கே ஓர் அதிர்ச்சி. எங்கும் அதைப்பற்றிப் பயமும் குழப்பமும் பரப்பி விடப்பட்டது.

உள் விஷயங்களைப் பார்க்காமலே, தாடியுடன் ஒருவன் காணப்பட்டாலும், தடுமாறி ஒருவன் வந்தாலும், தழதழத்த குரலில் பேசினாலும், குழந்தையில்லாத காரணத்தினால் அன்பினால் பார்த்தாலும் சரி, இவன் பிள்ளை பிடிப்பவன் என்ற சந்தேகம். இவ்வளவு குழப்பமும் 'பிள்ளை பிடிக்கும் பீதி' என்ற தலைப்பில் வந்த செய்தியின் காரணத்தினால்தான். ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால், ஒரே ஒரு வார்த்தையில் நாட்டு மக்களுடைய மனத்தை மாற்றிவிடக்கூடிய அளவு பிரசார மேடையைத் தவறாக உபயோகிக்கிறார்கள். அவசரப்பட்டோ, விஷமத்தனத்தினாலோ, ஆறு அங்குலத்தில் பெரிய செய்தியைப் போட்டு விட்டாரேயொழிய அது உண்மையா? உண்மையென நம்பலாமா? அதிகாரிகளைக் கேட்டறிய வேண்டாமா? என்று ஆசிரியர் யோசிக்கவில்லை. 'பீதி' என்றால் காரணமில்லாத பயம். அது கருத்துத் தெளிவுடன் வெளிப்பட்டிருந்தால், குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதற்கு இடமில்லாமல் இருந்திருக்கும். இப்படியே ஒவ்வொரு துறையிலும், கருத்துத் தெளிவற்ற முறையில் பிரசாரம் செய்கின்றார்கள். எவை பேசப்பட்டாலும் கருத்துத் தெளிவுடன் இருக்கவேண்டும். அது எந்த வார்த்தையானாலும் சரி, எந்தக் காரணத்தாலானாலும் சரி, அது யார் பேசினாலும் சரி பேசும் பொருளின் உட்கருத்தைக் கவனிக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் வேறொரு பொருளைப் பெறமுடியும், ஏன்? இழந்த பொருளையும் நாம் பெறக்கூடும். இவை அனைத்துக்கும் கருத்துத் தெளிவுதான் மிகவும் அவசியம்.

ஆரம்பத்திலே, மாணவனொருவன், பாரதியார் பாடிய நாட்டுப்பாடல் ஒன்றைப் பாடும் பொழுது 'ஆரிய நாட்டினர் சீரிய கொள்கையை' என்ற அடியைக் கேட்டதும், பல நண்பர்கள் வருந்தியிருக்கலாம். மற்றும் பலர், அண்ணாதுரை இதற்கு

என்னதான் சொல்கின்ருன் என்று பார்க்கலாமே! என என் முகத்தையே உற்றுப்பார்த்தனர். இன்னும் சிலர் வேண்மென்றே அண்ணுத்துரைக்கு எதிராகத்தான் பாடப்பட்டது என்று கருதலாம். ஆனுல் எது எப்படியாலுைம் பாரதியார் கூற வந்தது, ஆரிய நாட்டினரின் சீரிய கொள்கைபற்றியே தவிர, வேறு கொள்கைகளைப்பற்றி அல்ல. அது எந்த நாட்டார் செய்தாலும் ஆரிய நாட்டினர் மட்டும் அல்ல—சீரிய கொள்கை யாயிருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டும் என்னும் கருத்துடன் தான் பாரதியார், "சீரியகொள்கை" என்று கூறினுர். அப்படிப் பட்ட சீரிய கருத்துக்களைத்தான் அவரவர்கள் நாட்டிலே பரப்பிக் கொண்டு வருகின்ருர்கள். கருத்துக்கள் எதுவாயினும் உண்மைப் பொருள் என்னவென்பதைக் கவனித்தாக வேண்டும்.

## பொருள் இரு வகை

பொருள் என்பதை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று, வஸ்து. மற்ருென்று கருத்து. இதைப் பிரிக்கின்ற நேரத்தில், இவை மெய்ப்பொருள், அவை அநித்தியப் பொருள், இவை மாயப் பொருள் என்றெல்லாம் பிரிக்கின்ருர்கள். இதில் வஸ்து என்பது தேவைக்குரிய பொருளாகும். ஆனுல் தேவைக்குரிய பொருளைத்தான் அழியக்கூடியவை, அநித்தியமானவை, மாயம் என்றெல்லாம் கூறுகின்றனர். மற்ருென்று மேலுலகப் பொருள்; அது எப்பொழுதும் அழியாத தன்மை வாய்ந்தது. அதை அடைவதற்கான மார்க்கம், இகத்திலுள்ள பொருள்களின் மீது இச்சை கொள்ளாதிருத்தலே. ஆனுல் இது வாழ்வில் அவசிய மற்றது, தேவையில்லாதது.

இத்தகைய மெய்ப்பொருளை அடைவதற்கு, உட்பொருளை உணர்வதற்கு வேத வேதாந்தங்கள் பேசி, யாகயோகாதிகள் செய்து, கஷாயம் தரித்து கையிலே ஜெபமாலை ஏந்தி, அதற்கேற்ற வெண்ணீறு அணிந்து, அமர்வதற்காக புலித்தோல், படுத்துறங்கு வதற்காகப் பரணசாலை, அதைப் பார்த்துக் கொள்வதற்காக ஓர் ஆள், அந்த ஆளுடன் பேசுவதற்கு மற்ருெரு ஆள் தேவைப்படு கின்றன. நாகரிக உலகம் ஏற்பட்டது எப்படி என்ருல், பர்ண சாலை ஒன்று, இரண்டாகி அவைகள் குடிசைகளாக மாற, பிறகு ஆற்ருேரத்தில் குடியேற, ஆற்ருேரம் கிராமமாக அமைய, கிராமங்கள் சேர்ந்து நகரமாகி, இப்பொழுது நாகரிக அளவில் பெரிய நகரங்களாக ஏற்பட்டு விட்டன.

ஆரியர் காலத்தில்தான், பொருள் என்று ஒன்று இருந்தால், அருள் என்று மற்ருென்று ஏற்படுத்தப்பட்டது. பிறகு பொருளைப் போகப் பொருள் என்று பேசப்பட்டது; அநித்தியம், மாயை என்றெல்லாம் பேசப்பட்டது; மாடு, மனை, மனைவி, மக்கள் இவை, ஆத்மார்த்தத் துறையிலே நம் நாட்டு மக்கள் ஈடுபட்டனர் என்ருல், மேல்நாட்டிலுள்ள மக்கள், போகப் பொருள்களிலே நாட்களைச் செலவழித்தனர். மேல் நாடுகள் வியாபாரத்தில் ஈடுபட்டு இறுதியாக இந்நாட்டில் வைசிராய் மாளிகை ஏற்படுத்தும் அளவிற்கு வரும்வரை, மேல் நாட்டானின் ராஜதந்திரம் சென்றது. இதற்கெல்லாம் காரணம், ஆத்மார்த்தத் துறையிலே நம்மவர்கள் ஈடுபட்டார்கள். ஆனுல் அவர்களோ...?

## அவர்களும் நாமும்

அவர்கள் காரில் சென்ருல், நாம் கால் நடையிலே செல்கிருேம் "அது என்ன கார், அந்த கார் மிகவும் அதிசயமோ; கார் கெட்டுவிட்டால் அவன் இறங்கித் தள்ள வேண்டும். ஆனுல் நம்முடைய காலோ! பேசுகின்ருன் நம்மவன். ஏன் அப்படிக் கூறுகின்ருனென்ருல், இவனுக்குக் கார் கிடையாது. இப்படிப்பட்ட சபலபுத்தி நம்மவரிடத்தில். அதுமட்டும்மல்ல; வீடு ஒருவனுக்கு இருக்கும்; வீடற்றவன் அவனிடத்தில் வாடகைக்கு இருப்பான். இருவருக்கும் ஏதாவது சச்சரவு ஏற்பட்டால் வாடகைக்கிருப்பவன் மிகவும் கோபமாக "கட்டினவனுக்கு ஒரு வீடு என்ருல் கட்டாதவனுக்கு ஆயிரம் வீடுகள் உண்டு." என்பான். இப்படிப்பட்ட அற்பப் புத்திதான் நம்மவர்களிடத்தில் காணக் கிடைக்கின்றது. துப்பாக்கி இல்லை; அதிகாரம் இல்லை; சட்டப் புத்தகம் துவக்கப்படவில்லை; அரசாங்க அனுபவம அணுவளவும் கிடையாது. ஆனுல் அரசாங்கத்தை இழந்த அனுபவம் இருக்கிறது. காரணம் வரட்டுத் தத்துவ வேதாநதம் நம்மை இக்கதிக்கு ஆளாக்கியது—அதுமட்டுமா! அவனிடத்திலேயுள்ள துப்பாக்கியைப் பார்த்து, "இது என்னப்பா ஆட்கொல்லிதானே! இது ஆளைத்தானே கொல்லும்! ஆத்மாவைக் கொல்லாது—? இது என்ன? மோட்டார் கார்! எவ்வளவு வேகம்—! மணிக்கு 60 மைல். அது என்ன பிரமாதம்! எம்முடைய மனுே வேகத்தை கணக்கெடுக்கவே முடியாது. கணக்கெடுத்ததே கிடையாது" என்கிருன் நம்மவன்.

"உம்முடைய ராஜ்யம் எவ்வளவு தூரம் பரவியுள்ளது?—அமெரிக்காவிலே ஒரு பாகம் உம்முடைய ஆட்சியின்கீழ்; நியூஜீலண்ட் உம்முடைய பாதுகாப்பில், உம்முடைய ராஜ்யம், ஆஸ்திரேலியாவின் பரப்பு; இந்திய உபகண்டத்திலே—தென் ஆப்பிரிக்காவிலே உம்முடைய ஆட்சி; இவ்வளவும் உம்முடைய ராஜ்யத்தின் பரப்பு—இவ்வளவுதானு? இது அவ்வளவு பிரமாதமல்ல; ஆனுல் எங்களுடைய ராஜ்யமோ அதல, விதல, பாதாள—என்று இப்படிப் போய்க் கொண்டேயிருக்கும். உம்முடைய ராஜ்யங்கள் கண்ணுக்குக் எட்டியவைகள் என்ருல், எம்முடிய ராஜ்யங்கள் கண்ணுக்குக் காணுதவைகள்; கணக்கெடுக்க முடியாதவைகள். உங்களிடத்திலே நாணயங்கள் என்னென்ன? 'பொன்—பொன்—ரூபிள்ஸ்' இவ்வளவுதானு? எங்களுடைய தேவலோகத்திலே ஒரு மரம்; பெயர் கற்பக விருக்ஷம். எது கேட்டாலும் கிடைக்கும், அதனிடத்தில். "கோஹினூர்" கேட்டால் கோஹினூர் கொடுக்கும; ஸ்டர்லிங் கேட்டால் ஸ்டர்லிங் கொடுக்கும்; டாலர் கேட்டால் டாலர் கொடுக்கும்" என்கிருன் நம்மவன்.

இப்படி நம்மவர்கள் பேசிக்கொள்வதில் ஓர் அலாதித் திருப்தி ஏற்பட்டு விட்டது. சொல்லும் போதோ நம்பிக்கையுண்டாகும். சொல்லச் சொல்ல நாம் நம்பினேம். அவன் பார்த்துப் பார்த்து நம்பினுன். ஆகஸ்ட் 15ந் தேதிக்குப் பிறகு இந்த ஏமாற்றம் இருக்கக் கூடாது என்பது என் எண்ணம். இந்த நிலைமை நீடித்தால், நாம் அவனை இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்பதுதான் பொருள்.

அங்கே ஏழை—பணக்காரன் என்ற பேதம். அதிலே ஏழைகள் தான் எதிலும் வெற்றி பெறுவர். அவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் விடுதலை நிச்சயம், ஏன்? ஏசுநாதர்கூட, தம் சீடர்களை நோக்கி, "ஊசித்துவாரத்திலே உடல் பெருத்த ஒட்டகம் நுழைய முடியும்; ஆனுல் பணக்காரர்கள் பரம மண்டலத்திலே நுழைய இடமிராது" (It is possible for a Camel to enter into the eye of the needle, than for rich man to enter into the Heaven) என்று கூறியுள்ளார்.

**பாவையர் பக்கத்திலே வீற்றிருக்க...**

அந்த நாடுகளில் மாத்திரம்தான் என்ன? வேதாந்திகளுக்குப் பஞ்சமா? அறிவாளிகளில் பிளாட்டோ விளங்க வில்லையா?

பைசோசா ஒரு வேத வித்தகன் ஆயிற்றே! வேதாந்தத்தில் சிறந்தவனுக மார்ஸ்முல்லர் விளங்க வில்லையா? அவர்களையும் அவர்களுடைய தினசரி வாழ்க்கையையும் பாருங்கள்? நம்முடைய சங்கராச்சாரியாரையும் பாருங்கள்! ரிஷிமார்களையும் பாருங்கள்! கைலாச பரம்பரையில் உதித்த தம்பிரான்களையும், திருவண்ணு மலை ரமணரிஷியையும் போய்ப் பாருங்கள்! புதுச்சேரி அரவிந்த யோகியையும் போய்ப் பாருங்கள். இவர்களைப் பார்க்க வேண்டு மென்ருல 4, 5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப் பரப்பில்தான் இவர்களைக் காணமுடியும். சுற்றிலும் சாலைகளும், சோலை களுமிருக்கும்; பாதையோரத்தில் புஷ்பச் செடிகள் உண்டு; நிழல் தரும் மரங்கள் இருமருங்குமுண்டு; இவைகளையெல்லாம் கடந்து சென்ருல் அழகிய மண்டபம் விளங்கும்; மண்டபத்திலே அழகிய சிற்ப சித்திரங்கள் விளங்கும்; பலவகைக் கோலாகலத்துடன் இருக்கும் பலவிதக் கோலங்கள்; ஒரு புறம் வெள்ளிக் குத்துவிளக்கு விளங்கும்; திரியைத் தள்ளுவதற்குத் தங்கத்திலைான குச்சி இருக்கும்; தங்கத்தைவிட ஜொலிப்புடன் பளபளப்பாக விளங் கும் பாவையர்கள் பக்கத்திலே வீற்றிருப்பார்கள்.

புராணத்திலே, விஸ்வாமித்திரைப் பற்றிய ஒரு கதையுண்டு. அவர் காமதேனுவைக் கட்டி வைத்துத் தேவ அரசர்களுடன் சண்டைக்குச் சென்ருராம். பிறகு அது மாடுபிடி சண்டையாக மாறியது. இராமாயணத்திலே முன்ேனுர்கள், முனிவர்கள், வேதாந்திகள், இவர்கள் அத்தனை பேரும் பொருளோடுதான் வாழ்ந்தார்கள். பொருளிடத்திலே இச்சையில்லாமல் எந்த முனி சிரேஷ்டரும் வாழவில்லை. உலகம் மாயை, அநித்தியம் என்று பேசியவன் கூடப் பொருள்கள் தரும் போகத்திலே புரண்டுதான் வாழ்கிருன்.

## ஆத்மார்த்தவாதிகளின் சொல்லும் செயலும்

மேல் நாட்டினர் பொருளைத் தேடிக்கொள்வதிலும் அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதிலும் காலங் கழித்தார்கள். ஆனுல் நம்மவர்களோ பொருளை அநித்தியமென்று கூறிக் கொண்டு, அதே பொருள் தரும் சுகத்திலே வாழ்ந்தார்கள்; வாழ் கின்ருர்கள். நம்மவர்கள் வீடுகளிலே உள்ள பாத்திரங்கள் எல்லாம் 400, 500 ரூபாய் மதிப்பிடக்கூடிய அளவிற்கு வெள்ளிச் சாமான்களாகவே இருக்கும். வெளிப்புறத்திலே தங்கமுலாம்

பூசப்பட்டவையாகவே காணமுடியும், எல்லா வகைச் சாமான் களும். வெள்ளைக்காரன் வாழும் வீடுகளிலே போய்ப் பார்த்தால், வெள்ளிச் சாமான்களே காணமுடியாது. குடிப்பதற்காகச் சாதா ரண கப்—சாசர்; அவ்வளவுதான் காணமுடியும். அவன் பொருளை உபயோகத்திற்காக வைத்திருக்கிறான். ஆனால் நாமோ உயர்வதற்காகப் பொருளை வைத்திருக்கின்றோம். நண்பர்கள் சிலர் வீட்டிற்குப்போய், "இந்தப் பொருளைப் பார்த்தாயா! உங்கள் வீட்டில் உண்டா?" என்று கேட்டால் உண்டு என்பர்; ஆனால் "பெட்டியிலிருந்து கல்யாணத்தின் போதுதான் அதை எடுப்பேன்" என்பர். நம்மவர்கள் பொருளை உபயோகிக்கும் முறைக்கு இந்தச் சான்றே போதுமானது. ஒருவனுக்கு 10,000 ரூபாய் சொத்து இருந்தால் 8000 ரூபாய் பெறுமானமுள்ள நகைகளாக அவன் மனைவி மீது காணலாம். ஒருவர் மாதம் 200 ரூபாய் சம்பாதித்தாலும் வெளியே அவருடைய மதிப்புத் தெரி யாது. அவருடைய மனைவி கோவிலுக்குப் போகும்போது விலை யுயர்ந்த சேலை கட்டிக்கொண்டு போவதிலிருந்துதான் அவரு டைய மதிப்புப் பெருகித் தெரியும். லேடி மவுண்ட்பேட்டனைப் பாருங்கள்! அவர்மீது ஒரு நகைகூடக் காண முடியாது. மேல் நாடுகளிலே ஒவ்வொருவரிடத்திலும் பொருள் இருக்கிறதென் றால் அதை வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள், ஆனால் நாமோ? ஆத்மார்த்தத்தில் மதிப்பு வைத்துப் பொருளிடத்தில் மதிப்பு வைக்காதவர்கள் என்கின்றோம் சொல்லளவில்; செயலிலோ...?

ஆண்டவன் நம்மையம் படைத்தான்; பொருளையும் படைத் தான்; கடலையும் படைத்தான்; கடலுள்ளே முத்தையும் படைத் தான்; முத்தைக் கொண்டுவர மனிதனுக்குத் திறமையும் படைத்தான்; பூமி பொன்னைப் படைத்தான்; அதை வெட்டி எடுப்பதற் ஆளையும் படைத்தான். "கல்லூரியிலே நீ படிக்க வேண்டும் ஆனால் நீ பரிட்சைக்குப் போகக்கூடாது" என்று ஆசிரியர் ம ணவனைப் பார்த்துக் கூறுவாரா! மணம் செய்து வைத்துத் திடீரென்று தம்பதிகளைப் பிரித்து வைத்தால் எப்படியிருக்கும்? அதுபோலவே படைக்கப்பட்ட பொருள் ஒவ் வொன்றும் உபயோகத்திற்காகவேதான். பொருளை அலட்சியப் படுத்துவது படைப்பை அலட்சியப் படுத்துவதாகும். பொருள் ஒன்றின்மீது பற்று வைத்து, அதைக் கைப்பற்ற முயற்சித்து,

கிடைக்கத் தவறி, அதனுல் கோபப்பட்டு, அப்பொருள் நமக்குத் தேவையில்லை, வேண்டாம் என்பது அலட்சிய சுபாவத்தை வளர்க்கும் தத்துவ ஞானிகள் என்று கூறப்படுவர்களின் வெறும் போக்காகும்.

நம் நாட்டிலே 100க்கு 75 பேர் பொருள் குறைவு உள்ளவர்கள். ஆகஸ்ட் 14 வரை நமக்குப் பொருள் கிடைக்காததால், "சுரண்டுவதற்கு ஆங்கிலேயன் இருக்கிறுன், அவன் சென்றபின் நாடு வளமடையும்" என்ற சாக்குப்போக்குக் கூறினர். அதற்குப் பிறகு பொருள் கிடைக்காவிட்டால், அது நம்முடைய திறமையின்மையைக் குறிக்குமேயன்றி வேறென்றும் குறிப்பிட இயலாது.

## ஆண்டவன் கோயிலில் அநித்தியப் பொருள்கள் ஏன்?

பொருளின்மீது பற்று வையுங்கள் என்று கூறுகின்றேன் நான். பொருள் அழியக்கூடியது என்பார்கள் அவர்கள். அழியக் கூடிய வரையில் பொருளை உபயோகியுங்கள் என்று கூறுகின்றேன் நான். ஆத்மார்த்தத் துறையில் பற்றுக்கொண்டிருக்கும் அன்பர்கள் நம்நாட்டு ஆண்டவன் இருக்கும் கோயில்களில் போய்ப் பார்க்கவேண்டும்! அங்கே உள்ள பொருள்கள்! அப்பொருள்களின் அளவு! உண்மையிலேயே அதற்கு ஒரு D.S.P. ஆபீஸரைக் காவல் வைக்கவேண்டும். பள்ளிகொண்ட கோலத்திலே விளங்கும் ஸ்ரீரங்கநாதன் எப்போதும் படுத்துக்கொண்டே இருப்பார். அவர் போட்டுக் கொண்டுள்ள நகைகளை எழுந்து பார்க்கக்கூட அவருக்குத் தோன்றுது. அவர் மீதுள்ள நகைகளைக் கணக்கிடவே முடியாது. வைரத்திலே வெள்ளை நாமம் என்றுல், கெம்புக் கல்லினுல் ஆக்கப்பட்டது சிவப்பு நாமம். மூலஸ்தானம் முதற் கொண்டு மடைப்பள்ளி வரை கையாளப்படும் சாமான்கள் அத்தனையும் வெள்ளி. வெள்ளி அண்டாக்கள், வெள்ளியாலான குத்துவிளக்குகள் எண்ணில; ஆத்மார்த்தத் துறையிலே ஈடுபடும் அன்பர்கள் இதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும் "பொருள் அழியக் கூடியது. பொருள் மீதுள்ள பற்றை அகற்றுங்கள்: பொருள் தேவையில்லை. பற்றறுப்பதே ஆண்டவனை அடையும் வழி" என்று பேசிவிட்டு அதே ஆண்டவனிருக்கும் கோயில்களில் இவ்வளவு பொருள்களா? சாதாரணப் பொருள்களல்ல! இலட்சக் கணக்கில் மதிப்பிடக்கூடிய திருவாவடுதுறை ஆதீனத்திற்கு 2000

வேலி நிலங்கள் ஏன்? திருப்பதி வெங்கடேசுவரனுக்கு பல இலட்சங்கள் பெறுமானமுள்ள கிரீடங்கள் எதற்காக? தீராத வல்வினையைத் தீர்க்கும் வைத்தீஸ்வரனுக்கு எதற்காக அத்தனை சொத்துக்கள்? எந்த ஆண்டவனும், மக்களுக்காக அத்தனைப் பொருள்களையும் திருப்பிக் கொடுத்ததாக இதுவரையில் இல்லை. இந்தக் காட்சிகளெல்லாம் ஓர் புறம் என்றால், வயிறொட்டி, கண்குழிந்து, வாயுலர்ந்து, வரண்ட தலையனாய், வாடிய நெஞ்சனாய்க் காணப்படும் ஏழை மற்றொரு புறம்.

## நம்நாடு ஏழை நாடா?

நம்நாடு ஏழை நாடு என்று கூறுகின்றார்கள். ஏழை நாடு என்பது பொய். இரண்டாவதாகப் பற்றற்று வாழ் என்கிறார்கள்; இதுவும் பொய். இந்தப் பொய்யுரைகளை நிலைக்க வைக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றார்கள்.

ஏழை நாடு என்றால், ஏழை நாட்டிலே வைர நாமங்கள் படைத்த ஸ்ரீரங்க வரதனோ, வைரக்கிரீடம் தரித்த வெங்கடாசலபதியோ, எந்த மார்வாடியாலும் அளவிட்டு மதிப்பிட முடியாத மதிப்புப்பெறும் மூக்குத்தியுடைய மதுரை மீனாட்சியோ இருக்க முடியாது.

நம் நாட்டிலே 100க்கு 88 பேருக்குப் படிப்பில்லை. வாழ்விலே சுகமில்லை; வசதியும் இல்லை. தொழிலாளர் நிலைமையோ சொல்லொணாத் துயரம். நகரத்திலே வேலை செய்யும் தொழிலாளி—அவனுடைய வேலை நிறுத்தம்—அவனுடைய புரட்சிக் குரல்கள்—அவனுடைய வீடு—வீட்டிற்குள் நுழைய வேண்டுமென்றால் அவன் குனிந்துதான் செல்லவேண்டும்—வீட்டினுள் நுழைந்தாலோ சுருண்டு படுத்துக்கொண்டிருக்கும் அவன் மனைவி காட்சியளிப்பாள்.

இன்னும் இதைவிட மோசமான நிலைமையில் இருக்கிறான் நாட்டுப்புறத்துத் தொழிலாளி. வரப்பு ஓரம்தான் அவனுக்கு 'டின்னர் டேபிள்'; நண்டுவளை வயல்கள்தான் அவன் குழந்தைகள் விளையாட்டு மைதானம்; எருமைகள்தான் அவனுக்கு ஓடும் குதிரைகள். இருசு ஒடிந்த இரட்டை மாட்டு வண்டிதான் அவனுக்கு 'ரோல்ஸ்ராய்ஸ்' கார். காளி கோயில் விளக்குதான்

அவனுக்குக் இரவிலே வெளிச்சம்; நல்லதங்காள் கதைதான் அவனுக்குச் சிறந்த இலக்கியம்; அவனை முன்னேற வொட்டாமல் தடுப்பதெல்லாம் தத்துவமும் ஆத்மார்த்தமும்தாம் அவன் செய்யும் போரிடை. அதுதான் தடையாக நிற்கின்றது—தத்துவம் பேசும் ஆத்மார்த்த ஜார் ஒருபுறத்தில்—கூலி போதவில்லை என்று கூக்குரலிடும் தொழிலாளர் மற்றோர் புறத்தில். இருவர்க்கும் இடையே ரஸ்புட்டீன்.

வேகமாக வருகின்ற பாட்டாளி, முன்னால் நிறுத்தப் பட்டுள்ள தடையைப் பார்த்துப் பின்னால் போகின்றான். குறிப் பாக நம் நாட்டில் வேதாந்தம் சொல்வதெல்லாம் ஏழைகளிடத் தில். "பொருள்மேல் ஆசை வைக்காதே; பொருள் மாயை. அழிந்துவிடக் கூடியது; அநித்தியம்; பொருள் மாத்திரம் என்ன?—நீ கூடத்தான் அழியக்கூடியவன்—நீ மாத்திரம் என்ன?—உன்னைப்படைத்த இவ்வுலகம்" என்று இவ்வளவும் பேசிவிட்டு ரிசர்வ் பாங்க், 'காதரஜ் சேப்,' 'நேஷனல் பாண்டு'களாக வாங்கிப் பணம் சேமித்தல் முதலியவற்றில் 100க்கு 20 பேர் ஈடுபடுகின்ற னர்; 100க்கு 80 பேர் ஏழைகளாக்கப் படுகின்றனர்.

## உடைத்தெறியுங்கள்

கல்லூரியில் பயிலும் மாணவர்களாகிய நீங்கள் இடையிலே உள்ள தடையை உடைத்தெறிய வேண்டும். அவர்கள் வாழ்வது போல், வாழ்வு இவர்களுக்கும் தேவை. அவர்களுக்குப் பொருள் இருப்பதுபோல் இவர்களுக்கும் பொருள் தேவை. அதற்கான பணியை ஆற்ற நீங்கள்தான் முன்வரல் வேண்டும் இடையே நிற்கும் தடை எதுவானாலும் உடைத்தெறிய வேண்டும். ஆம்; ஜெபமாலை—பர்ணசாலை—வேதாந்தம்—தத்துவம்—யோகயாகம்—இவைகள்தான் அந்தத் தடைகள். அந்தத் தடைகளை உடைத் தெறிய முற்படுகையில் அதிருப்தி ஏற்படும். ஆசையை அவர் களுக்கு கிளறிவிட்டுப் போய்விடக் கூடாது. 100க்கு 20 பேரிடத் திலிருந்து பறித்துக் கொண்டுவா என்றும் சொல்லக் கூடாது.

ஆனால் இவற்றைப் பெறுவதற்குரிய மார்க்கம் என்ன? தொழிலாளர் தொகை அதிகம்; முதலாளிகள் தொகை குறைவு என்று காட்டினால் போதுமா? முதலாளிகள் 100க்கு 20 பேர்; நாமோ 100க்கு 80 பேர் என்று காட்டினால் போதுமா!

"We are many, they are few" என்று காட்டினுல் போதுமா! ராஜா ஸர். அண்ணுமலை செட்டியாரிடத்தில் உள்ள பணத்தைப் பங்கு போட்டால், நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொர் அணுக்கூட வராது. பிர்லா, டாட்டா இவர்களுடைய பணத்தைப் பங்கு போட்டால் ஆளுக்கு 4 அணுவாவது கிடைக்கும். எல்லாம் மக்களுக்கான பொருள்—எல்லாருக்கும் எல்லாம்—என்றிருத்தல் வேண்டும். இயந்திர சாதனங்கள் எல்லாருக்கும் ஏற்படல் வேண்டும். தொழிற்சாலைகள்— இயந்திரங்கள் எல்லாரிடத்தும் இருக்க வேண்டும். எல்லாரிடத்தும் என்ருல், தொழிற்சாலைகள், இயந்திரசாலைகள். இவைகளனைத்தையும் சர்க்கார் ஏற்று நடத்தினுல் எல்லாரிடத்தும் இருக்கும், பங்கீட்டு முறையினுலே.

## நேருவின் மக்கள் பணி

இந்தியா பார்லிமெண்டிலே நண்பர் ஒருவரால் "விவசாய நிலங்களையெல்லாம் கூட்டுப் பண்ணையாக அமைக்க வேண்டும்; தொழில் வகைகளை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும்" என்று சமதர்ம முறைப்படி ஒரு திட்டம் கொடுக்கப்பட்டது. இந்த முறை எல்லோர்க்கும் எல்லாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தும். ஆனுல் இது நிறைவேறிற்ரு? அதுதான் இல்லை. பண்டித நேரு அவர்களே இதை மறுத்து விட்டார். பண்டித நேரு இதை மறுத்தாரா என்ற சந்தேகம் எழலாம் பலருக்கு. ஏன்? எனக்கே அப்படிப்பட்ட சந்தேகம்தான் ஏற்பட்டது. எப்படிப்பட்ட நேரு "மாஸ்கோவை இந்தியாவிற்கு அழைத்து வந்து உங்கள் கண்முன் காட்டுகிறேன்" என்று கூறிய நேருவா, இங்ஙனம் நேர்மாருகப் பேச நேரிட்டது? அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, "புதிய தொழிற்சாலைகளைச் சர்க்காரே ஆரம்பிக்கும்; தொழில் முறைகள் அனைத்தையும் சர்க்காரே நடத்துமே தவிர, தனிப்பட்டவர்கள் கையில் தொழில் முறைகளைக் கொடுக்காது" என்று ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் முதலாளிகளை மிகவும் பாதித்தது. எனவே ஜனவரி 30ந் தேதி பல முதலாளிகள் ஒன்ருகக் கூடினுர்கள். மோடி, பிர்லா, ஷராப் இவர்களனைவரும் ஒன்ருகக்கூடிப் பண்டித நேருவைப் பிப்ரவரி 4ந் தேதி சந்தித்தார்கள். எப்படிப்பட்ட சமயம் அது? இழந்த உத்தமர் காந்தியடிகளைப்பற்றி உலகமே வருந்திச் சோகத்தில் ஆழ்ந்திருந்த நேரம்!

எப்படிப்பட்ட பேட்டி! கமிட்டித் தீர்மானத்தைக் கண்டிப்பாக அந்த பேட்டியில் நேருவிடம் முதலாளிகள் கூறினார்கள். "அத்தீர் மானம் எங்கள் மனத்திலே பயத்தை உண்டாக்கி இருக்கிறது; அதோடு மட்டுமல்லாமல், இந்த நாட்டுப் பொருளபிவிருத்தி யைப் பாதிக்கும்—மூலதனத்தையே பாதிக்கும்" என்று அவர்கள் கூறினார்கள் அதற்கு நேரு, "நான் யோசனை செய்து பிறகு கூறு கின்றேன்" என்று சொல்லிவிட்டார். அந்த நேரத்தில் மாத்திரம் நான் நேரு அவர்களுக்கு அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த தால், அந்த ஐந்து பேர்களையும் படம் எடுத்து, 'கோட்ஸே' படத்தின் பக்கத்தில் பிரசுரித்திருப்பேன். பேட்டி கண்ட முதலாளிகள் அத்தனை பேரும் என்னைப்போல் ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாதவர்களா? புராணத்தை நம்பாதவர்களா? அவர் கள் கடவுளை நம்பினவர்கள்; புராணத்தை நம்புவார்கள்; கீதையே அவர்கள் பாராயணம்; ராமபஜனையே அவர்களுக்கு வழிபாடு; காந்தியார் மீது அன்பும் உண்டு; அப்படிப்பட்ட அவர்கள்தான், உலக உத்தமர் காந்தியார் இறந்து 15 நாட்கள் ஆவதற்குள், "வரும் லாபம் போய்விட்டால் என்ன செய்வது?" என்று ஏங்கிய வர்கள்.

## குதிரைப் பந்தயப் புத்தி

"இப்போது எந்தத் தொழிலையும் சர்க்கார் ஏற்று நடத்தப் போவதில்லை!" என்று டொமினியன் பார்லிமெண்டில் நேரு கூறினார். இதனால் எச். எம். மோடி, பண்டித நேருவைப் புகழ்ந் திருக்கிறார். ஏன் புகழமாட்டார்! பேசுவது ஒன்று; செய்வது மற்றொன்று. இப்படி நேரு சொல்லியிருக்கலாமா? ஸர். ஏ. இராமசாமி முதலியார் சொன்னால் பாதகமில்லை—ஆர். கே. சண்முகம் செட்டியார் சொல்லலாம்; அப்படிச் சொல்லியும் இருக்கிறார் ஒரு காலத்திலே. ஆனால் கோடிக்கணக்கான மக்களின் இலட்சியவாதியான நேரு இப்படிச் சொல்லலாமா? சொல்லும் படியான நிலைமை ஏற்பட்ட காரணம் என்ன? ஏன் என்றால் பண மதிப்பு அதிகம். "இப்பொழுது எந்தத் தொழிற்சாலைகளையும் சர்க்கார் கைப்பற்றி நடத்தப் போவதில்லை." என்று ஆங்கிலேயர் கள் கூறி, மக்களை ஏழ்மை நிலையில் வைத்திருந்தார்கள்—இப்போ துள்ள ஜனநாயக சர்க்கார், தொழிற்சாலைகளைக் கைப்பற்றி நடத்துமானால் மக்களுடைய வருவாய் உயரும்; வருவாய் உயர

வாழ்வு உயரும்; வாழ்வு உயருமானல், வாங்கும் சக்தி உயரும் என்று நம்பினேம். "இனிப் புதிதாகத் துவக்கப்படும் தொழில் களை சர்க்காருடையதாக்குவதே உசிதம். கையிலிருக்கும் பணத்தை வீண் விரயம் செய்ய மாட்டோம். சோஷலிஸம் பேசு கிருேம்; 15 ஆண்டுகளுக்குப் பிறகு, விஞ்ஞானம் உயரும், அது புதிய புதிய சக்திகளைத் தரும்." என்று பண்டித நேரு கருதுவாரா ஞல், அது கிண்டி குதிரைப் பந்தயம் கைகொடுக்காதா என்று எனது நண்பர் ஒருவர் கருதி என்றைக்காவது ஒரு நாளில் தாம் இழந்த 30,000 ரூபாயையும் எடுத்து வந்து காண்பிக்கிறேன் என்று கூறுவது போலாகும். இந்த எண்ணம் இருவருக்கும் ஒன்றுதான். ஆனல் இடையே இருக்கும் இடம் வேறு. கடவுள் அவதாரத்திற் குக் குறைவில்லை; ஆனல் குறைகள் தீர்ந்தபாடில்லை.

நம் நாட்டிலே வந்த அவதார புருஷர்களுக்குக் குறைவே யில்லை. மற்ற நாட்டைவிட நம்முடைய நாட்டில்தான் கடவுள் கள் அவதாரம் எடுத்த வண்ணமாகவே இருந்தனர். பகவான் பத்து அவதாரம் எடுத்தார் என்று வேதம், புராணம் ஸ்மிருதிகள் கூறுகின்றன. பாவத்தைப் போக்குவதற்குக் கடவுள் அடிக்கடி அவதரித்தார் என்று கூறப்படுகிறது. நம்முடைய வீட்டிற்கு டாக்டர் அடிக்கடி வந்து சென்ருல் என்ன நினைக்க முடியும்! நோயாளிகள் அதிகம்—நோய் பரவுகிறது என்றுதான் நினைக்க முடியும்—அதைப்போல் கடவுள் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்று கூறினல் என்ன நினைப்பது!... அப்படியும் நம் குறைகள் தீர்ந்தபாடில்லை...

முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணவர்களாகிய நீங்கள், முதன் முதலாகச் செய்யவேண்டிய கடமை, மனிதத் தன் மைக்கு மாருன கருத்துக்கள் நாட்டிலே பரவவொட்டாமல் தடுக்கவேண்டும். மனிதத் தன்மைக்கு மாருன கருத்துகள் இசை யிலே புகுந்துள்ளன; நாடகக் கலையிலே புகுந்துள்ளன; இதிகாசங் களிலே புகுத்தப்பட்டிருக்கின்றன. புராணங்களாக புனையப் பட்டிருக்கின்றன; காவியங்களிலே நுழைக்கப்பட்டுள்ளன; ஓவியங்களிலே காணப்படுகின்றன. மனிதத் தன்மைக்கு மாருன கருத்துக்கள், கலையிலே புகுத்தப்பட்டால் கலைக்கே களங்கம் விளைவிப்பதாகும்.

## இரட்டை மனப்பான்மை

மேனுட்டுச் சாமான்கள் நமக்குக் கூடாது என்று சொல்வதில் அர்த்தமில்லை. ரயில்வண்டி நின்றுவிட்டால் எவ்வளவு தவிதவிப்பு! சினிமாவில் படம் திடீரென்று நின்றுவிட்டால் எவ்வளவு சீட்கை! ரேடியோவிலே திருப்பின ஊர் வராவிட்டால் எவ்வளவு கோபம் பிறக்கிறது' இவைகளிலே ஒன்றுகூட நாம் கண்டுபிடிக்காதது. உதாரணமாக, -நாமும் கிராமபோன் ஒன்றைக் கண்டுபிடித்ததாக வைத்துக்கொள்வோம். நம்முடைய கிராமபோனை வைத்துக்கொண்டு ஓர் ஜெர்மன்காரர் ரேடியோ கண்டுபிடிப்பதாக வைத்துக்கொள்வோம் அப்பொழுது நாம் கூறலாம், இதிலென்ன அதிசயம், நம்முடைய கிராமபோனை வைத்துக் கொண்டேதான் அவன் ரேடியோ கண்டுபிடித்தான். ஆகவே அது நமக்குத் தேவையில்லை. அதை நாமே கண்டு பிடித்துக் கொள்வோம் என்று கூறுவதிலே அர்த்தம் உண்டு. ஆனல் நாமோ ஒன்றுகூடக் கண்டுபிடிக்கவில்லை. அது மாத்திர மல்ல அதிசயம். மேனுட்டுப் பொருளே தேவையில்லை என்று கூறி, தினசரி வாழ்க்கையிலே அவைகளையே உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். நம்மவர்களுக்குள்ள இந்த இரட்டை மனப்பான்மை போகவேண்டும்.

மேனுட்டுச் சாமான்கள் தேவையில்லை என்று கூறினல் சரி; அப்படியானல் மின்சார விளக்குகள் இருக்கக்கூடாது; பழைய குத்துவிளக்குத்தான் இருக்கவேண்டும். விமானம் பறக்கக்கூடாது; அதற்குப் பதிலாகக் கருடன்தான் பறக்கவேண்டும். "பறக்கும் கோட்டை" விமானங்கள் பறக்கவே கூடாது; சாரங்கதாரன் விட்ட புறுதான் பறக்கவேண்டும். ரயில் வேண்டாம்—காசி ராமேஸ்வரம் போகக் கால்நடையே போதும். மாளிகைகள் வேண்டாம்—பர்ணசாலைகளே போதும். புத்தகங்களா? தேவை இல்லை. பழைய செல்லரித்த சுவடிகளே போதும்—துப்பாக்கியா? வேண்டாம்; எங்கள் இராமன் கையிலுள்ள கோதண்டமே போதும். எழுத்தாளர்களா? தேவை இல்லை நம்முடைய அ. கி. பரந்தாமனுர் அவர்கள் காளிகோயிலுக்குப் போக, காளி உடனே பிரசன்னமாக, இவர் நாக்கை நீட்ட, அம்மை தன் சூலத்தால் 'ஓம்' என்று எழுத இவர் வெண்பா பாடினல், மேனுட்டுச் சாமான் கள் நமக்குத் தேவையேயில்லை.

## நன்றிகெட்ட செயல்

இரயிலிலே ஒருவன் சென்று கொண்டிருப்பான். ஜன்னல் வழியாக ஒரு மலை அவன் கண்ணுக்குத் தென்படும்; அந்த மலைமீது ஒரு கோபுரம் தெரியும்—உடனே அவன் பக்கத்திலுள்ளவனைப் பார்த்து அந்த கோயிலைக் கட்டியது யார் என்று கேட்பான். அதற்கு அவனும் பதில் சொல்லாமல் இருக்க மாட்டான். ஆனால் அவர்களிருவருக்கும், அவர்கள் செல்லுகின்ற இரயிலைக் கண்டுபிடித்தது யார் என்று தெரியாது. ஆனால் யாரோ கண்டு பிடித்த ரயிலில் பிரயாணம் செய்யலாம். எவ்வளவு நன்றி கெட்டத்தனம் பாருங்கள்! கண்டுபிடித்தவனுக்கு நன்றி செலுத் தினேமா? காளிதாசன் கவிதைகள் இயற்றினன்; மிகவும் கடின மான செயல் என்று கூறலாம்—காளியின் வரப்பிரசாதம்கூட இருந்தது—ஆனால் மின்சாரத்தை கண்டுபிடித்தவனே இரயிலைக் கண்டுபிடித்தவனே, எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள். தங்கள் வாழ்நாளில்—இராப்பகலாக சிந்தித்துச் சிந்தித்து நித்திரையும் இல்லாமல் மக்களினுடைய தேவைக்காகப் பல பொருள்களை அவர்கள் உண்டாக்கினர்கள். அவர்களை நாம் மறந்தோம். ஆனால் நம்நாட்டில் எவருக்கும் அத்தகைய வரப்பிரசாதம் அளிக் காத ஆண்டவனை மாத்திரம் மறக்கவில்லை.

## இராமனுக்குக் கிடைக்காத வசதி நமக்குண்டு

அன்று உத்தமர்கள் இருந்திருக்கலாம்—இன்றுள்ளவர்கள் உலுத்தர்கள் என்று உதாசீனம் செய்யப்படலாம்; ஆனல், உத்த மர்கள் காலத்திலேயும், 'அவதார புருஷன்' இராமன் காலத்தி லேயும், நளன் காலத்திலேயும், அரிச்சந்திரன் காலத்திலேயும் தண்டவாளம் இல்லை—இரயில் ஓடியதாகக் காணேம்—ஆனல் உலுத்தர்கள் என்று கூறப்படுகின்ற நம்முடைய நாசகாரக் காலத்திலே இரயில் ஓடுகின்றது. அந்த உத்தமர்கள்—அவதார புருஷர்கள்—காலத்திலே சீதை காணமற் போனவுடன் இராமன், 'ஏ மரமே, கொடியே, மலரே, வண்டே பறவையே, புள்ளினமே, முகிலே, முகிலூரும் வானே, நிலவே என் சீதையைக் கண்டீரா' என்று கேட்டானேதவிர, டெலிபோனை எடுத்து அயோத்தியை அழைத்து, "சீதை அவ்விடம் வந்தாளா?" என்று கேட்டு, "இல்லை" என்றறிந்ததும் ஜனகருக்குத் தந்தியடித்துக் கேட்டு, இல்லையென அறிந்ததும், டிரங்காலில் "என் சீதையைக்

கண்டீரோ?'' என்று இராவணைக் கேட்டாரா? வேண்டுமானுல் இராமன் அவதார புருஷனுக இருக்கலாம்; ஆனுல் அவன் காலத்தில் 'வயர்லெஸ்' கிடையாது. இராமனுக்குத் தெரிந்ததெல்லாம், அயோத்தி, கிஷ்கிந்தா, தண்டகாரண்யம், ராமேஸ்வரம், சேது, இலங்கை இவ்வளவுதான். ஆனுல் நமக்கோ, நம்முடைய காலத்திலே, உலகத்தையே ரேடியோ மூலம் அறைக்குள் அழைக்கின்ருேம். லண்டன் வைத்தால் லண்டன்; வியன்ன வைத்தால் வியன்ன; பாரிஸ் வைத்தால் பாரிஸ். உலகத்தில் எந்தப் பாகத்தில் வைத்தாலும் சரி, உலகமே நம்முடைய அறைக்குள் வருகிறது. தேவலோகத்திலே நாரதருக்குத்தான் முழுவேலை. ஈரேழு பதினுலு லோகமும் சுற்றிக் கொண்டிருப்பார். ஆனுல் நம்முடைய காலத்தில் ரேடியோவைத் திருப்பி விட்டால் உலகம் முழுவதும் நம் கண்முன் வருகிறது. வியாசர் கூப்பிட்டபோது உலகம் வரவில்லை—வசிட்டர் கூப்பிட்டபோது வரவில்லை—நாம் கூப்பிட்டபோது உலகம் நம்முன் இருக்கிறது. நம் நாட்டில் எத்தனை பேருக்கு விஞ்ஞானியாகிய ஸர். சி. வி. இராமனைத் தெரியும்? ஒரு போலிப் பகல்வேஷச் சாமியாரைப் பற்றித் தெரிந்த அளவிற்குக்கூட ஸர். சி. வி. இராமனை பற்றித் தெரியாதே!

யாரோ ஒரு சாது வந்தார். பூமிக்கு உள்ளே போனுர்; 4 அடிப் பள்ளத்தில் 12 மணிநேரம் இருந்தார்; வெளியே வந்தார். இதை நம் மாகாண முதல் மந்திரியார் முன் நடத்திக் காண்பித்தாராம். இதை ஓர் அதிசயம் என்று—அற்புதம் என்று மாகாணப் பிரதமர் வரை போய்ப் பார்த்திருக்கின்றனர். தெருக்கோடியில் ஜால வித்தைக்காரன் இதைவிட அதிசயமான அற்புதங்களைக் காண்பிக்கவில்லையா? பெட்டிக்குள்ளே பலமணி நேரம் படுத்திருந்து வெளியே வருகிருளே ஜால வித்தைக்காரி! சாமியார் செய்து காட்டியது என்ன அதிசயம்? இது மாத்திரம் என்ன? முகத்தை எடுப்பதற்குப் பல மணி நேரம் மூச்சையடக்கி நீருக்குள் மனிதன் மூழ்கவில்லையா? கடலின் அடி ஆழத்தில் சப்மரைன்கள் செல்கின்றனவே? கேவலம் ஒரு சாமியார் செய்ததைப் பார்த்து அற்புதம் என்று கூறுகிருர்கள்; மாகாணப் பிரதமரும் போய்ப் பார்த்தார்; போதும் இந்த அற்புதம் செய்ததெல்லாம்; இனித் தேவையில்லை இந்த அற்புதங்கள்.

ஞானசம்பந்தர் அளித்த விபூதியினுல் எலும்பைப் பெண் ணுக்கியதாகக் கூறட்டும். நாம் இன்ன இஞ்செக்ஷன் கொடுத்த தால் எலும்புருக்கி நோய் தீர்ந்து எலும்பு பெண்ணுனுள் என்று கூறுவோம். 'எங்கள் விரிசடைக் கடவுள் முக்கண் விரித் தார்—திரிபுரமெரிந்தது' என்று அவர்கள் கூறட்டும். இதைக் கேட்டவுடன் இது நம்மால் முடியாது—ஆனுல் ஒரு மூலையில் ஒரு சுவிட்சை அழுத்தினுல் ஊரெங்கும் ஒளிவீசச் செய்யமுடியும் என்று நாம் கூறுவோம். ரேடியோ கண்டுபிடித்தவர் அதுபற்றி நூல் எழுதி உள்ளே இன்னின்ன சாமான்கள் இருக்கின்றன— இது என் சொத்தன்று; எல்லோருடைய சொத்து, என்று எழுதி நூலை வெளியிட்டு விடுவார். ஆனுல் நம் கிராமத்தில் ஒருவனுக்குத் தேள் கொட்டிவிட்டால் சில பச்சிலைகளை எடுத்து வந்து போடு வார்கள். இது என்ன இலை என்று கேட்டால், "அதை சொல்லக் கூடாது; சொன்னுல் பலிக்காது," என்பார்கள் அயல் நாட்டு டாக்டர், மருந்து கொடுக்கும்போது இன்னின்ன மருந்து இன்னின்ன சதவிகிதம் என்று எழுதிப் புட்டியின் மேலேயே ஒட்டிக் கொடுப்பார்.

நம்மிடம் லிங்கக்கட்டு இருந்தால் இதைச் செய்யும் விதத்தை மகன் இல்லாதவர்களுக்குச் சொல்லக் கூடாதென்பர். அவர் களோ எல்லாவற்றையும் எல்லாருக்கும் சொல்லிக் கலையைப் பரப்புகின்றனர். ஆகையால், இவற்றையெல்லாம் நீங்கள் நன்கு உணர்ந்து, உண்மையான பொருள்களைக் கிராம மக்களுக்கு உங்கள் கல்லூரிக் கழகத்தின் வாயிலாக—எடுத்துச் சொல்ல வேண்டும் என்று உங்களனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் இலக்கியப் பேரவை
சிறப்பு மலர் 1963—64-ல் வெளியான
அண்ணா அவர்களின் சொற்பொழிவு

# ஆட்சிமொழி இந்தியானால் — அடிமையாவோம் நாம்!

ஆட்சிமொழி குறித்து, மாணவர்கள் எத்தகைய கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ளவும், எங்கள் கருத்தை அவர்கள் அறிந்து கொள்ளவும், எங்கள் கருத்தை அவர்கள் கேட்கவும் இந்தக் கருத்தரங்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

ஒவ்வொரு நாளும் பேசிக்கொண்டிருக்கும் எங்களுக்கு ஒரு நாளைக்காவது மற்றவர்கள் பேச்சைக் கேட்கவேண்டும் என்று ஆவல் ஏற்படுகிறது. அந்த ஆவலை நிறைவேற்றும் வகையில் இன்றைய நிகழ்ச்சி எங்களுக்குப் பயன்பட்டிருக்கிறது.

மாணவர்களிடத்தில் நல்ல வாதத் திறமையும், உற்சாகமும் இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். இங்கு பேசிய அனைவரும் நல்ல தமிழிலும், தமிழ்ப் பண்போடும் பேசினார்கள்; பிரச்சினையை நன்கு அணுகியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருடைய கருத்தும் ஒன்றாகவே இருந்தது. அவர்கள் நன்கு சிந்தித்துப் பேசியிருக்கின்றார்கள் என்பதுடன், செயலாற்றவும் தயாராயிருக்கின்றார்கள் என்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியை எதிர்ப்பவர்கள் அரசியல்வாதிகள்தாம் என்பதைவிட, மாணவர்களும் மிகத் தெளிவாகப் பிரச்சினையை அறிந்திருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளர்கள் அறிந்து, தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பாசறை அமைத்துக் கொண்டிருக்கும் நான், மாணவர்கள் மிக்க ஆர்வத்தோடும் உணர்ச்சி வயப்பட்டும் போராட்டத்தில் ஈடுப்படவும் தயார் என்று கூறியதைக் கேட்டு மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் மாணவர்களை ஈடுபடுத்துவது நான் சார்ந்துள்ள கழகத்தின் மரபல்ல! எனவே, மாணவர்கள் தீவிரக் கருத்துத் தெரிவித்தது குறித்து மட்டுமே மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் இக் கருத்துக்களை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லித் தெளிவுப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆச்சாரியார் உள்ளபடியே இந்தியை எதிர்க்கிறாரா என்று அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வமும்—பத்து இருபது ஆண்டு காலத்திற்கு இந்தித் திணிப்பை ஒத்திப்போட வேண்டும் என்ற திட்டத்தை ஆதரிக்கிறாரா என்பதை அறிய ஆவலும், மொழித் துறையிலே மட்டும் நின்று போராடினால் இந்தப் பிரச்சினை வெற்றி பெறுமா? அரசியல் பிரச்சினையானால் வடநாடு தென்னாடு என்று பிரித்துப் பேசும் நிலைமை ஏற்படவேண்டிய அவசியம் நேர்ந்தால் அதை ஆச்சாரியார் ஒப்புவாரா? என்ற எண்ணத்தையும், இங்கு பேசிய மாணவர் சந்தேகங்கள் என்ற பெயரிலே குறிப்பிட்டார். இவை சந்தேகங்களல்ல, இயற்கையாகவே இதயத்திலிருந்து எழும் ஆசையின் அலைகள்.

இந்த ஆசை அலை எனக்கும் ஆறு ஆண்டுகட்கு முன்பு எழுந்து, ஆச்சாரியார் அவர்களிடத்திலே இதே வினாக்களை எழுப்பினேன்.

இலட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் நானும் ஆச்சாரியார் அவர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் நான் எழுப்பிய வினாவுக்கு ஆச்சாரியார் அவர்கள் பதிலளிக்கிறபோது, "திராவிடநாடு பிரிய வேண்டும் என்றால் அதற்கு இது (இந்தி) ஒன்றுதானா இருக்கிறது? இன்னும் எத்தனையோ காரணங்கள் இருக்கின்றனவே?" என்று, என்னைவிட ஒரு படி மேலாகவே சென்று சொன்னார்கள். அது இன்னும் எனக்கு அப்படியே நினைவிருக்கிறது.

அவர் இன்னும் சொன்னார்—"இந்தியைத் திணிக்காதிருந்தால் டில்லி ஜெயிக்கும்; திணித்தால் அண்ணாதுரைதான் ஜெயிப்பார்" என்று!

ஆச்சாரியார் அன்று சொன்னதை டில்லி ஏற்கவில்லை—நமக்கு ஆச்சாரியார் அன்றே பச்சைக்கொடி காட்டி விட்டார்!

பச்சைக் கொடி காட்டினால் சில இரயில்கள் வேகமாக வரும்! சில மெதுவாகவும் வரும். வருகின்ற வேகம் எப்படி இருந்தாலும் தண்டவாளத்தின் மீதுதான் இரயில் வரும்—அதில் சந்தேகமில்லை.

எனவே, நாம் சொல்லுகின்ற கருத்து நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறதா என்று நன்கு அறிந்து கொண்டு தான் போராட்டச் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்.

இந்தி ஆட்சிமொழியாக்கப்பட்டால் நமது தமிழ் மொழி அழிவது மட்டுமல்ல—அரசியலில் ஏதேச்சதிகாரம் புகுந்துவிடும்!

இந்தி மொழியின் வளத்தைக் காட்டி அவர்கள் அதைப் புகுத்தவில்லை! அவர்களே தெளிவாகச் சொல்லுகிறார்கள்—'இந்தி இப்போதுதான் வளர்ச்சியடைந்து வருகிறது' என்று! மிக்க அடக்கத்தோடுதான் அவர்கள் பேசுகிறார்கள்!

"எங்கள் தமிழ் எவ்வளவு சிறந்தது தெரியுமா?" என்று நாம் கேட்டால், "உங்கள் மொழியின் சிறப்பையும் சொல்லுங்கள்—கேட்கிறோம்; எங்களுக்கும் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தான் ஆசையாக இருக்கிறது" என்கிறார்கள்!

அவர்கள் இந்தியை உயர்த்தி, தமிழைத் தாழ்த்திப் பேசவில்லை; 'இந்தியை அதிகமக்கள் பேசுவதால்தான் அதை ஆட்சி மொழியாக்கினோம்' என்கிறார்கள்!

அவர்கள் கூறும் இந்த வாதமே உண்மையல்ல! வடக்கே உள்ளவர்களுக்குள்ளேயே ஒருவர் பேசும் இந்தி மற்றொரு இந்திக்காரருக்குப் புரியவில்லை!

இதையும், இந்தி ஆட்சிமொழியானால் இன்னின்ன வகையில் ஆபத்து என்பதையும் நாம் எல்லா மக்களுக்கும் எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது?

தமிழ்நாடு முழுவதிலும் நான் சுற்றிப் பார்த்தவரை, இந்த ஆபத்தை எல்லோரும் உணர்ந்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இன்னும் மக்கள் உள்ளத்தில் எழுச்சியூட்ட வேண்டும்.

இங்கு பேசிய மாணவர்கள், இந்தியை எதிர்த்துப் போராடி ஞல் "அரபு நாட்டு குதிரைகளின் குளம்புகள் நம்முடைய மார்பிலே பாயும்" என்று கூறிஞர்கள். இந்தியை எதிர்த்தால், அடேயப்பா, இப்படிப்பட்ட தொல்லேகளா விளேயும் என்று நினைக்காதீர்கள்.

நமது போராட்டத்தில் இப்படியெல்லாம் நடக்கும் என்று நான் நம்பவில்லே. ஆட்சியாளருக்கு இது ஒன்று மட்டுமல்ல— இன்னும் ஆயிரம் பிரச்சினேகள் இருக்கின்றன; இப்படிப் பேசுவது கேட்டு பயந்துவிட வேண்டாம்.

இங்கு மாணவர் பேசியது. நாளே பத்திரிகைகளில் எல்லாம் பேசியவரே வியக்கும் வகையில், "ஆச்சாரியாருக்கு மாணவர் களிடையே எதிர்ப்பு" என்ற தலேப்பிட்டு வரும். இங்கு பேசிய மாணவர், தீவிரத்திற்காகப் பேசிஞர். அதை நமது பத்திரிகை யாளர் அப்படி எழுதிவிடுவார். அந்தப் பத்திரிகையைப் பற்றி நான் சென்னேக் கூட்டம் ஒன்றிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

'இந்தி ஆட்சிமொழி ஆகமுடியாது' என்பதில் எத்தனே பேர் கருத்து ஒருமித்திருக்கிருர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நானும், ஆச்சாரியார் அவர்களும் இந்தப் பிரச்சினேயில் ஒன்றுபட்டிருக்கிருேம். எங்களுக்குள் வேறுபல பிரச்சினேகளில் கருத்து வேற்றுமை இல்லே என்பது வெறும் உபசார வார்த்தை யாகும். அப்படிச் சொல்வது, நாங்கள் ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்வதாகும்.

'இந்தி ஆட்சிமொழியாகக் கூடாது; ஆங்கிலம் நீடிக்க வேண்டும்!' என்பதில் எங்களுக்குள் கருத்து வேற்றுமை இல்லே.

இந்தியை புகுத்துவோரிடையேயும் கருத்து வேற்றுமைகள் பல இருந்தாலும், இந்த ஒரு விஷயத்தில் கருத்து ஒருமித்து இருக்கிருர்கள்

இந்தியைப் புகுத்துவதில் தீவிரம் காட்டக்கூடாது என்று பேசுகிருர் நேரு; லால்பகதூர் சாஸ்திரியோ, 'என்னே இந்தி வெறியர்கள் இந்த நிலேக்குக் கொண்டுவந்து விட்டார்கள்— என்ன செய்வது?' என்கிருர்.

இன்னும் சிலர், இந்தி வெறியைக் காட்டாமல் காட்டிக் கொள்கிறார்கள்!

'இந்தி பேசாதவர்கட்கு எவ்வித இடையூறும் ஏற்படாது!' என்று சாஸ்திரியார் சொல்லிக் கொண்டே இருக்கிறார்; ஆனால் அவரது துறையினரோ, இந்தியைத் திணிக்க உத்தரவுகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்!

இது பற்றிக் கேட்டால், இதையெல்லாம் நேரு கவனிக்க வில்லை என்றும் இங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள்.

காமராசரைக் கேட்டால் 'சோறு முக்கியமா—மொழி முக்கியமா?' என்று கேட்கிறார்!

கல்வியமைச்சர் பக்தவச்சலத்தைக் கேட்டால், 'காமராசர் இருக்கும்வரை பயமில்லை' என்கிறார்!

பின்னால் நடக்கப் போவதை முன் கூட்டியே அறிந்துதான் அவர் இப்படிச் சொன்னாரோ என்னவோ!

காட்டாமல் காட்டுகிற தீவீரம் போல், இந்தியைத் திணிக்க அவர்கள் ஆடும் நாடகம் நம்மைப் புதை குழிக்கனுப்புவதைப் போல இருக்கிறது. ஒரு முறை நீங்கள் இதை நேரிடையாகப் பார்த்தால் புரியும்.

இந்தியை ஆட்சி மொழியாக்குவது எப்படி என்பதில், அவர்களிடையே பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும், ஒன்று பட்டிருக்கிறார்கள். அதுபோல இந்தி ஆட்சி மொழியாகக் கூடாது என்பதிலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் கொண்ட நாம் ஒன்றுபட்டாக வேண்டும்.

எந்தப் பிரச்சினையானாலும், அதை எல்லோரும் தெளிவாகப் புரிந்து கொண்டால், பின்னால் அதற்குப் பரிகாரம் தேடுவது மிகவும் எளிது; புரிந்து கொள்வதுதான் கடினம்! பரிகாரத்தில் ஈடுபடுவோரைக் கணக்கெடுப்பது அதைவிட எளிது!

'இந்தியால் ஆபத்து இல்லை?' என்று காங்கிரசுத் தலைவர்கள் சொல்வதைப் பலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை மாணவர்கள் தமது பிரச்சாரத்தின் மூலம் போக்க வேண்டும்.

ஆகையினால்தான், நாம் புள்ளி விவரங்களையும் வாதங்களை யும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இது காலத்தை வீணாக்குவதாகாது—தக்க விதத்தில் பயன் படுத்துவதாகும்.

நான் சந்தித்த ஒவ்வொரு காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினரும், இந்தித் திணிப்பைக் கண்டு கண்ணீர் சிந்துகிற வகையில் என்னிடம் பேசினார்கள்!

காங்கிரசு மேலிடத்தார், கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, 'இப்படி இருந்தால் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடமுடியாது' என்று எடுத்துச் சொல்லிக் கண்டிப்பான உத்தரவு போட்டதனால் தான், இரண்டு நாள் கழித்து ஆட்சி மொழி மசோதாவுக்கு ஆதரவாக வாக்களிக்கின்ற நிலை தென்னாட்டுக் காங்கிரசு உறுப்பினர்கட்கு ஏற்பட்டது.

கட்சிக் கூட்டத்தில் இந்திப் பிரச்சினை வந்தபோது, பண்டித நேரு எழுந்து நீங்களே இந்தியை, எதிர்க்கிறீர்களே என்று அறிவுரை கூறியதும், காங்கிரசு உறுப்பினர்கள் அடங்கி விட்டார்கள்.

மசோதா நிறைவேறுகிற கட்டத்தில் 'தமிழால் எல்லாம் முடியும்' என்று எழுதிய தமிழ்நாட்டைச் சார்ந்த அமைச்சர் ஒருவர், பாராளுமன்றத்தில் இல்லாமல் மேற்கு ஜெர்மனிக்கு அவசர அவசரமாகப் புறப்பட்டு விட்டார். அவர், அதற்கு அடுத்த வாரம் சென்றிருக்கலாம்! இன்னொரு அமைச்சர் தமிழ் நாட்டுக்கு வந்து விட்டார்!

சில தமிழ் நாட்டு உறுப்பினர்கள், 'எங்களுக்குப் பேச வாய்ப்பளிக்கப்படவில்லை; அளித்திருந்தால் நாங்களும் இந்தியைக கண்டித்துப் பேசியிருப்போம்' என்று என்னிடத்திலே சொன்னார் கள்.

அவர்களெல்லாம், கடைசியில் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி இந்தியை ஆதரித்து வாக்களித்தார்கள்!

ஒருநாள் மாநிலங்கள் அவைத் தாழ்வாரத்தில் நான் அமர்ந் திருந்தேன்; அப்போது என்னுடன் ஓர் அமைச்சர்—தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் இருந்தார். அவரிடம், காங்கிரசுக் கட்சித் தேர்தலில், தன்னை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்று இந்தி வெறியரான காங்கிரசு உறுப்பினர் ஒருவர் வந்து கேட்டார். அதற்கு அந்த அமைச்சர், 'நான் எனது வாக்கை அளிக்கிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை—இனி என்னிடம் நீங்கள் கேட்கும் கேள்வி களை இந்தியில் கேட்பதில்லை என்று வாக்குறுதி கொடுக்க

வேண்டும்' என்ருர்; அவரும் அப்படியே வாக்குறுதியளித்தார்—இவரும் வாக்களிப்பதாக உறுதியளித்தார்.

அதன் பிறகு அந்த அமைச்சர், என்னிடம், 'இந்த உறுப்பினர் என்னிடம் இதுவரை இந்தியிலேயே கேட்டுத் தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்தார்: இனி ஒழிந்தது சனியன்' என்று மகிழ்ச்சியோடு கூறினுர்.

அந்த அமைச்சரின் பெயரை நான் இங்கு சொல்வது நாகரிகம் இல்லை என்று கருதுகிறேன். ஒருக்கால், பத்திரிகை மூலம், 'அப்படியெல்லாம் நடைபெறவில்லை' என்று மறுக்கப்படுமாஞல், நான் அடுத்தக் கூட்டத்தில் அந்த அமைச்சரின் பெயரை வெளியிடுகிறேன்.

இந்தி, சட்டப்படி இப்போது ஆட்சி மொழியல்ல; எனினும், இப்போதே இந்தி வெறியர்கள் இந்தியிலேயே பேசுகிருர்கள்.

ஜனசங்கத்தைச் சேர்ந்த வாஜ்பாயி என்னும் உறுப்பினர், ஆங்கிலத்தில் நன்ருகப் பேசக் கூடியவர்; அவர், மாநிலங்கள் அவையில் பேசும்போதெல்லாம் இந்தியிலேயே பேசுகிருர். அவரிடம் நான்—நண்பர் என்ற முறையில் கேட்டேன்—'நீங்கள் பேசுவதை நாங்களெல்லாம் புரிந்து கொள்ள வேண்டாமா? ஆங்கிலத்தில் பேசக்கூடாதா?' என்று. அதற்கு அவர், 'நான் வெளியில் வந்ததும் உங்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கிச் சொல்கிறேன்; உள்ளே இந்தியில் தான் பேசுவேன்' என்ருர்.

இங்குள்ளவர்கட்கு, இது இந்தி வெறியாகப் படவில்லை! போலீசு நிலையத்தைக் 'காவல் நிலையம்' என்று சொன்ஞல், அது தமிழ் வெறியாகப்படுகிறது!

பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 400 சம்பளம் தரப்படுகிறது; ஒவ்வொரு நாளும் 'படி'யாக ரூ. 21 தரப்படுகிறது. இவ்வளவு செலவு செய்து நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத்தில், ஒரு மணி நேரத்தில் முக்கால் மணிநேரம் இந்தியில்தான் எல்லாம் நடைபெறுகின்றன; மிச்சமுள்ள 15 நிமிடத்தில் 5 நிமிடம் நல்ல ஆங்கிலத்திலும், 10 நிமிடம் அவர்களுக்குத் தெரிந்த ஆங்கிலத்திலும் பேசுகிருர்கள்! இந்தி தெரியாதவர்கள் எதுவும் புரியாமல் வீணுக உட்கார்ந்திருக்க வேண்டியுள்ளது!

காங்கிரசு உறுப்பினரான சேத்கோவிந்ததாஸ், 'ஆட்சிமொழி மசோதாவை ஆதரித்து வாக்களிக்க மாட்டேன்' என்று கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி நடந்து கொண்டார்! அன்று மாலைப் பத்திரிகையிலேயே அவருடைய தீரத்தைப் பாராட்டி டில்லிப் பத்திரிகைகளிலே செய்தி வந்தது!

டாக்டர் லோகியா இந்தியில் பேசியதும், அவரை இந்தி வெறியர்கள் ஆரத் தழுவி வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள்!

இப்படி இந்தியைத் திணிப்பவர்கள்—அவர்களுக்குள் அரசியலில் எவ்வளவு கருத்து வேற்றுமை இருந்தாலும்—இந்தித் திணிப்பில் ஓரணியில் இருக்கின்றார்கள்!

டாக்டர் லோகியா காங்கிரசை அடியோடு எதிர்ப்பவர்! ஆனால், இந்தித் திணிப்பில் ஒன்றியிருக்கிறார்!

அகில இந்தியாவிலுமுள்ள இந்தி வெறியர்கள்—அவர்கள் ஆட்சிக் கட்சியானாலும் சரி—வேறு கட்சிகளானாலும்சரி—சுயேச்சைசளானாலும் சரி—இந்தி விஷயத்தில் ஒரே அணியிலிருக்கிறார்கள். வடநாட்டிலே இந்தி வெறியர்களைக் கண்டுதான் நான் இந்தியை எதிர்க்கும் விஷயத்தில் ஆச்சாரியாருடன் சேர்ந்திருக்கிறேன்.

ஆச்சாரியார், திராவிடநாடு பிரச்சினையை ஆதரிக்கிறாரா என்று கேட்கிறார்கள். நல்ல காரியத்திற்கு நல்லவர்கள்—நல்ல நேரத்தில் ஒன்று சேருவார்கள்.

இன்று வடக்கிற்கும்—தெற்கிற்கும் இணைப்பாக இருக்கும் ஒரே ஒருவர் ஆச்சாரியார் அவர்கள்தான். நானும் நண்பர் அப்துல் சமத் அவர்களும், இந்தியை எதிர்ப்பது வேறு—ஆச்சாரியார் வேறு!

"நமது ஞானசிரியரான இராஜாஜியே அல்லவா எதிர்க்கிறார்" என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்!

"நீங்கள்தான் இந்தியை எதிர்ப்பவர்கள்; இராஜாஜி எப்படி எதிர்க்கிறார்?" என்று என்னிடம் பல வடநாட்டுக்காரர்கள் வியப்போடு கேட்கிறார்கள்!

இன்று காலை பத்திரிகையில் பார்த்தேன்—'அண்ணாதுரையும் இராஜாஜியும் ஒரே மேடையில் பேசுகிறார்கள்' என்ற செய்தியை!

ஏதோ, நாங்கள் இருவரும் கூண்டுக்குள் தனித்தனியே இருந்து திடீரென ஒரே மேடையில் கொண்டு வந்து விடப்படுவது போலச் செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

நானும், ஆச்சாரியாரும் ஒன்று சேருவது இங்கேயே அதிசயம் என்றால், வடக்கே ஆச்சரியப்படுவதில் வியப்பில்லை!

'இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும்' என்றார் ஆச்சாரியார். ஆனால் அவர், 'இந்தி கூடாது' என்கிறபோது வடவர் நினைக்கிறார்கள்—'இராஜாஜியே காரணம் இல்லாமல் இந்தியை எதிர்க்க மாட்டார்' என்று! இந்தியைப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பதனால்தான் வடக்கே பயம் ஏற்பட்டிருக்கிறது!

'சுதந்திராக் கட்சியின் தலைவர் என்ற முறையில் ஆச்சாரியார் இந்தியை எதிர்க்கிறார்' என்று நான் கருதவில்லை, 'அனுபவத்தில் முதிர்ந்த ஆச்சாரியார் எதிர்க்கிறார்' என்பதால்தான் அதற்கு—அவருடைய எதிர்ப்புக்கு மதிப்பிருக்கிறது!

சுதந்திராக் கட்சி தோன்றுவதற்கு முன்னமேயே, அதைத் தோற்றுவிப்பதற்கான எண்ணமே தோன்றியிராத காலத்திலேயே ஆச்சாரியார் இந்தியை எதிர்த்தார்.

ஆறாண்டுகட்கு முன்பு இலட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் ஆச்சாரியாரும் நானும் பேசியபோது, சுதந்திராக் கட்சி இல்லை. அப்போதெல்லாம், காங்கிரசைத் திருத்த வேண்டும் என்ற கருத்தைத்தான் ஆச்சாரியார் கொண்டிருந்தார்.

அப்போது ஆச்சாரியார் அவர்கள் பி. சி. ஜி. ஊசி குத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருந்தது எல்லோருக்கும் நினைவிருக்கலாம் என்று கருதுகிறேன்.

அதற்கு முன்னாலே, தமிழ்ச் சங்கம் நடத்தி வருகிற திரு. சுப்பையா அவர்கள் வீட்டில் கூடிய கூட்டத்தில் ஆச்சாரியார் அவர்களும், பெரியார் அவர்களும், மா. பொ. சிவஞானமும், நாவலர் நெடுஞ்செழியனும், நானும். மற்றும் பலரும் கலந்து கொண்டோம். அப்போது ஆட்சிமொழி பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. அப்பொழுதும் சுதந்திராக் கட்சி கிடையாது.

நானும், நண்பர் அப்துல்சமத்தும் இந்தியை எதிர்ப்பதில் 'அரசியல்' இருக்கலாம்—இருக்கிறது. ஆனால் ஆச்சாரியாரோ,

அரசியல் கட்சிகளுக்குக்கெல்லாம் அப்பாற்பட்டவராக நின்று எதிர்க்கிறார்.

என்னுடைய எதிர்ப்பில் அரசியல் இருக்கிறது என்று நான் ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை; காரணம் அரசியல் என்பது, 'பஞ்சமா பாதகங்'களில் ஒன்றல்ல!

ஏதோ, மற்றவர்களெல்லாம் அரசியலைத் துறந்து ஆசிரமத்துக்குப் போய்விட்டது போலவும், நான் ஒருவன்தான் அரசியலில் இருந்து கொண்டிருப்பது போலவும் சிலர் பேசுகிறார்கள். ஆசிரமத்துக்குப்போக வேண்டிய நிலையிலும் நான் இல்லை—அந்தப் பருவமும் எனக்கில்லை—அந்த விருப்பமும் கிடையாது!

அரசு ஒரு காரியத்தைச் செய்யும்போது மக்கள் பீதியடைகிறார்கள் என்றால், அந்தப் பீதியைப் போக்கும் வகையில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும், அல்லது மக்களுக்குத் தெளிவு ஏற்படும் வரை அந்தக் காரியத்தை ஒத்திப்போட வேண்டும்; அதுதான் ஜனநாயகம்.

சில காங்கிரசுக்காரர்கள் சொல்லுகிறார்கள்—"இந்தி மிகச் சாதாரண மொழி, அதை மூன்றே மாதத்தில் கற்றுக்கொள்வார்கள்" என்று.

மிரட்டல் பேச்சைவிட இந்த மயக்குப் பேச்சு ஆபத்தானது! இந்தியைப் படிப்பது வேறு—இந்தியில் பழகுவது வேறு!

நாம் இந்தி படித்தால் அது நமக்கு படித்த மொழியாகத்தான் இருக்க முடியுமே தவிர, பழக்க மொழியாக இருக்க முடியாது!

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளவர்களைப் போல் நாம் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க முடியாது!

ஆங்கிலத்தை எவ்வளவுதான் நமக்குள்ளேதான் போட்டியிட முடியும். ஆர்க்காட்டு இராமசாமியும்—சர். சி. பி. இராமசாமியும் லண்டனிலே போய் ஆங்கிலேயருடன் போட்டியிட முடியாது!

அதைப் போல இந்திக்காரர்களுடன் நாம் போட்டியிட முடியாது!

கிளியும், நாக்கு உரிக்கப்பட்ட மைனுவும்கூட, சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும்—அதற்கு மேல் அதனுல் பேச முடியாது!

அதைப் போல்தான், இங்கே தியாகராய நகரில் உள்ள இந்திப் பிரசார சபையில்—மைனுவுக்கு நாக்கு உரித்துப் பேசச் சொல்லிக் கொடுப்பது போல்-இந்தி சொல்லிக் கொடுக்கிருர்கள்!

பள்ளியில் இந்தி படித்தால், பள்ளிக் கூடத்திலே உள்ளவர் களிடம்தான்—அதுவும் பள்ளி செல்லும் போதுதான்—இந்தியில் பேசலாம்; வீட்டிலும் இந்தியில் பேசமுடியாது—தாய்மொழி யில்தான் பேசவேண்டும். இந்திக்காரர்கள் அப்படியல்ல; பள்ளி யிலும் இந்தியில் பழகுகிருர்கள்!

இப்போது டில்லியில் உள்ள அரசாங்க அதிகாரிகள் பலரும், டில்லிக்கு எவ்வளவு ஆவலுடன் போனுர்களோ, அவ்வளவு ஆவலுடன் திரும்பி இங்கு வருவதற்கு இருக்கிருர்கள்! இந்தித் திணிப்பினுல் அவர்கள் படுகின்ற தொல்லே தாங்க முடியாததாக இருக்கிறது!

அரசு அலுவலகங்களில் மட்டும் அல்ல-தனிப்பட்ட நிறுவனங் களில் வேலே செய்வோர்கூடத் திரும்ப வேண்டிய நிலே ஏற்பட்டு விட்டது!

இந்தி ஆட்சிமொழியாக்கப்படுகிறது என்றவுடனேயே இந்தியில் அக்கறை காட்ட ஆரம்பித்து விட்டனர்!

இன்னும் 10-15 ஆண்டுகளில் அரசாங்க உத்தியோக மண்ட லம் மட்டுமல்ல—வணிகக் கோட்டங்களும், மற்ற துறைகள் அனைத்தும் இந்திக்காரர்கள் மயமாகும்!

காமராசர் சொல்லுகிருர்—'இந்திப் பிரச்சினே படித்தவர்கள் பிரச்சினே' என்று!

அவரைப் படிக்காதவர் என்று நாம் குற்றஞ் சொல்வதற்குப் பதிலாக அவர், படித்தவர்களேக் குற்றஞ்சாட்டுகிருர்!

அவர் படிக்காததால் நாம் குற்றஞ் சொல்லவில்லே; 'படிக்காதவராக இருந்தே அவர் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிருரே—இன்னும் படித்திருந்தால் எவ்வளவு

பெரிய காரியங்களை யெல்லாம் அவரால் செய்யமுடியும்?' என்று தான் வருந்துகிறேம்.

எனவே, படித்தவர்கள் மீது குற்றஞ் சுமத்துவது சரியல்ல! இது படித்தவர்கள் பிரச்சினை என்றால், படிக்காதவர்களை இது பாதிக்காதா?

அரசியல் சட்டத்தில், 'எல்லோரும் கட்டாயம் படித்தாக வேண்டும்' என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இதன்படி பார்த்தால்—இப்பொழுது 100-க்கு 25 பேர் படித்தவர்கள் என்றால்—இன்னும் 10 ஆண்டில் 100-க்கு 40 பேர்—பின்னர் 60 பேர் என்றுதான் படித்தவர்கள் தொகை உயருமே தவிர, குறையாது!

100-க்கு 100 பேரும் படித்து விட்டால், அப்போது இந்திப் பிரச்சினை எல்லா மக்களையும் பாதிக்கக்கூடிய பிரச்சினையாகி விடாதா? எனவே, இது, படித்த—சிறுபான்மையினரின் பிரச்சினை யல்ல என்பதை உணர வேண்டும்.

இப்போது படிக்காதவர்கள் கூட தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். எனவே இது ஒரு சமுதாயப் பிரச்சனை ஆகும்.

மொழியை திணித்ததிஞலே எத்தனை அரசுகள் கவிழ்ந்தன என்பதை மானவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

இந்தியைத் திணித்தால் அதனால் விளையும் தீமைகளை புரியக் கூடிய விதத்தில் நாம் எடுத்துக் காட்டினால் வடநாட்டுக்குக் காங்கிரஸ்காரர்களுக்கு மனம் மாறுது என்று நான் எண்ணவில்லை. இந்த வாதங்களைக் கூறும் முறைகளை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மராட்டியம் வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்ட வுடன் பண்டித நேரு இசைந்து, பிரித்துத் தருகிறேன் என்று கூறினார்? ஆந்திரம் தமிழகத்தை விட்டுப் பிரிய வேண்டும் என்று போராடிய மக்களுக்கு சரி என்று விடை கொடுத்துப் பிரித்துக் கொடுத்தார்?

பண்டித நேரு மிகவும் நல்லவர். முன்னால் பிடிவாதம் காட்டுவார். பின்னால் அதற்கு சம்மதமளிப்பார். முதலிலே

பிடிவாதத்தைக் காட்டி விட்டோம் என்பதற்காக பின்னுலும் பிடிவாதம் காட்டுபவரல்ல. வேண்டுமானுல், சிறிதுகாலம் பிடிக்கும். இந்தியை நாம் எதிர்ப்பதைக் கண்டு, பின்னுல் ஒருவேளே அவர் மனம் மாறினுலும் மாறலாம்.

இந்தியை எதிர்க்க வேண்டுமென்ருல் நாம் இரண்டு முறைகளேப் பின்பற்றியாக வேண்டும். ஒன்று நேரடிக் கிளர்ச்சி மூலமாக இந்தியை எதிர்க்க வேண்டும். இரண்டாவதாக, நம்மை நாமே வருத்திக் கொள்வது மூலம், எதிர்க்க வேண்டும். காந்தியார் கையாண்ட போராட்ட முறைப்படி நாம் போராடியாக வேண்டும்.

காங்கிரஸ்காரர்களுக்கு இப்போது தேர்தல் என்ருலே ஒரு அச்சம் ஏற்பட்டு விட்டது. முன்பெல்லாம் தேர்தல் என்ருல், மக்களே ஏறெடுத்தும் பார்க்காதவர்கள், இப்போது மக்களே நாடி வரும் நிலே ஏற்பட்டிருக்கிறது. இந்தியை எதிர்க்கின்ற பொது மக்கள்—அரசியல் அறநெறிப்படி அடுத்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சியை வீழ்த்திக் காட்டினுல்தான் காங்கிரஸ்காரர்கள் மக்களின் சக்தியை உணருவார்கள். தேர்தல் காலங்களில் எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டு காங்கிரசை வீழ்த்த வேண்டும்.

இந்தியை எதிர்க்கின்ற நமது இரு திட்டங்களில் ஒரு திட்டத்தைக் கைவிட்டு மறு திட்டத்தை மட்டும் ஏற்று நாம் போராட்டத்தை நடத்தக்கூடாது. அப்படி நடந்தால் அது நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டதற்கு சமமாகும். தி. மு. கழகம் இரு திட்டங்களேப் பின்பற்றிப் போராடத் தயாராகி விட்டது.

நாம் போராடுகின்ற நேரத்தில் நம்மை சிறையிலே தள்ள புதுப்புது சிறைகளேக் கட்டி, அதற்கு அமெரிக்காவிடமிருந்து பணம் வாங்கும் நிலேயும் ஏற்படலாம். தி. மு. கழகத் தோழர்கள் சிறைக்குப் பயந்து போராட்டத்தைக் கைவிடுபவர்கள் அல்ல.

"காமராஜர் பதவியிலிருந்து விலகினுலும், சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்து, அதே தொகுதியில் உப தேர்தலில் போட்டியிட்டு தி. மு. கழகத்தின் எதிர்ப்பைச் சமாளித்து வெற்றி பெறட்டும். அப்போதுதான் அவருடைய அனேத்திந்தியப் புகழ் உறுதிப்படும். இப்போது அவருக்கு அளிக்கப்பட்டி

# அரசுக்கு மக்கள் துணை நிற்பது அவசியம்...அதுவே சீரணி...

சீரணி அமைப்புப் பற்றி சட்டமன்றத்தில் அறிவித்த போது, இது கட்சி வளர்ச்சிக்காக அமைக்கப்படுகிறது எனச் சிலர் தவருகப் புரிந்து கொண்டு வாதம் எழுப்பினர். அது தவருன கண்ணேட்டம் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அடிப்படை நோக்கம்

அரசு மேற்கொள்ளும் தூய, நல்ல திட்டங்களுக்குத் துணை நிற்பது, உதவுவது, ஒத்துழைப்பது நாட்டுக் குடிமக்கள் அனைவரது பொறுப்பு. ஆனுல் எல்லா மக்களும் இதில் நேரடியாக ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள் அதற்குக் குறுக்கே நிற்கும். எந்த காலத்திலும், எந்த நாட்டிலும் மக்கள் அனைவரும் நேரடியாக இக் கடமையைச் செய்வது கடினம். எனவே அதற்கென்று சிலராவது அவசியம். பொதுப் பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க இதயம் படைத்தவர்கள், தங்களது குடும்பக் காரியங்களை கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை, வெறும் பொழுது போக்குக் களியாட்டங்களில் வீணடிக்காமல், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கவர் தம் ஆற்றலையும் அளித்து நாட்டுக்கு உதவுவது போல, மற்றவர்கள் தங்கள் நேரத்தில், ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும் என்பதே சீரணியின் அடிப்படை நோக்கம்.

## நல்ல அறிகுறி

சீரணி பற்றி அறிவித்ததும், அதை யாரும் அலட்சியப் படுத்தவோ, அதில் அக்கறை காட்டாமல் இருக்கவோ முடிய

ருக்கும் புகழ் கண்ணுடிப் பாத்திரம் போன்றது. அதைக் கீழே போட்டால் உடைந்துவிடும்,''

தி. மு. க. வில் உள்ள எல்லோரும் சிறை சென்ருல், கழகக் கருத்தை எடுத்துக் கூற யாரிருக்கிருர்கள் என்று சிலர் எண்ணு கிருர்கள்.

## நமக்குப் பின்னே மாணவர் பெரும்படை!

இங்கே பேசிய மாணவர் பெரும்படையின் பேச்சைக் கேட்டேன். இவர்கள் மாணவர்கள்தாஞ? அல்லது வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களா? என்ற நிலையிலும்--ஆர்வத்தோடும், தீவிரத்தோடும்—தீவிரத்தோடு மட்டுமல்ல—நாங்களெல்லாம் ஏதோ மெதுவாகப் போவதாகக் கருதி—எங்களுக்கே தீவிரம் ஊட்டுவதைப் போலவும் பேசிஞர்கள். தி. மு. கழகத்திற்கு இது போன்ற ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து வாரிசுகள் உண்டு.

இந்தியை எதிர்த்து வரும் கழகம் போராட்டத்தை நடத்திஞல் இந்தியிஞல் வரும் ஆபத்துகளை மாணவர்கள் மக்களுக்கு விளக்கவேண்டும். நாம் நடத்தும் போராட்டம் தாய்மொழியைக் காக்கும் போராட்டம்—இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெறும் போராட்டமாகும்.

★

வில்லை. அதுபற்றி கவனித்து உடனே கருத்தும் தெரிவித்துள்ள னர். கருத்து தவருக இருப்பினும், எல்லோர் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பதை அது காட்டுகிறது. "ஏதோ ஒரு சீரணி யாம், அது எந்த அளவுக்கு வளருமோ, எப்படிப் பயன்படுத்தப் படுமோ" என்று பேசுகின்றனர். ஆக இது வளரத் தகுதியுடை யது, வளரத்தான் போகிறது என்பதற்கு இதுவே நல்ல அறிகுறி. வளருவது நல்லதற்கே அன்றி, கெடுப்பதற்கு அல்ல.

## வன்முறை அல்ல; தூய தொண்டு

சீனத்துச் செங்காவல் படையுடன் சீரணியை ஒப்பிட்டுப் பேசுவது தவறு. வன்முறை, குழப்பம் ஏற்படுத்துவது சீரணியின் எண்ணமல்ல. வன்முறை, ஒழுங்குபடுத்தப்பட்ட படைகளால் எப்போதும் ஏற்படுவது இல்லை. சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல; தூய தொண்டாற்றவும், தோழமை வளர்க்கவுமே அது அமைக்கப்பட்டுள்ளது. சாதாரண, சராசரி மக்களாலும் தங்களது ஆற்றலை, தூய தொண்டினை—நாட்டுவளத்தைக் கூட்ட மக்களின் வாட்டத்தைப் போக்க அளித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்திற்கு ஆயிரம்பேர் சீரணியில் சேர்ந்தால் போது மெனக் கணக்கிட்டு இருந்தோம். மாவட்டங்களிலிருந்து கிடைக் கின்ற தகவல்களைப் பார்த்தால் பலதரப்பட்டவர்களும்—வாலிபர் கள், மாணவர்கள், தாய்மார்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர் கள் கட்சிகளியே சேராதவர்கள், பல்வேறு வகுப்பினர், வகுப்புக்களே வேண்டாம் என்ற முற்போக்கு எண்ணம் கொண்டோர், இப்படிப் பல தரத்தவரும்—சீரணியில் பெருமளவு சேர முன்வந்திருக்கின்றனர்.

## தாங்கும் இதயம்; இலட்சிய உறுதி

சீரணியின் பத்துக் கொள்கைகளில் எந்தக் கொள்கைக்கும் யாரும் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள். ஏனெனில், அத்தனை யும் நல்ல கொள்கைகளே. அவற்றைச் செயல்படுத்தும் போது தான் சிக்கலும் சங்கடமும், சில வேளிகளில் சஞ்சலங்கூட வரலாம். எனவே இந்தப் பணியில் ஈடுபடுவோருக்கு, தொல்லை களைத் தாங்கும் இதயமும், எடுத்த இலட்சியத்துக்கு ஏற்பப் பாடுபடும் உறுதியும் வேண்டும்.

பழம்பெரும் நாடு, நம்நாடு; என்றாலும் ஏழ்மை இருளில் ஆழ்ந்துள்ளது. நம் நாட்டில் இயற்கை வளம் நிரம்ப இருக்கிறது. ஆனால் அந்த வளத்திற்கு உரிய செல்வ வளத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இங்கு இல்லை. நாடு வளம்பெற, மக்கள் வாழ்வு செம்மையுற, சீர்பட, தமிழக அரசு மட்டும் முயன்றால் போதாது.

## அண்ணாதுரை அல்ல; அரசுதான் முக்கியம்

இங்கு பாடப்பட்ட சீரணிப் பண்ணில் முதலமைச்சர் அண்ணாத்துரை ஆணைக்குக் கட்டுப்படுவோம் என்று பாடப் பட்டது. அதில் அண்ணாதுரை என்ற சொல்லை அகற்றி விட்டு, வெறும் 'முதலமைச்சர்' என்று இருக்கும்படிச் செய்யலாம். யார் முதல்வரானாலும், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அதன் நல்ல திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உதவ வேண்டும். அரசினரால் மட்டும் எதுவும் செய்துவிட முடியாது.

சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித் தலையீட்டில் வராத, ஊதியம், பணம், உத்தியோக உயர்வு கோராத ஒருவித படை பலம், ஒவ்வொரு நாட்டுக்கும் நிச்சயம் தேவை.

## சீரணி பெயர் ஏன்?

இத்தகைய படைக்கு என்ன பெயர் வைப்பது என்று பல இரவுகள் சிந்தித்தேன்; பல பகல்கள் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தேன். நாட்டைச் சீர்படுத்த, சிக்கல்கள் நீக்கிச் செப்பனிட, சமுதாயத்தை—மக்கள் வாழ்வைச் சீரமைக்க ஓர் அணி தேவை என்று உணர்ந்தபோது, அத்தகைய சீரிய செயல்களைச் செய்யும் அணிக்குச் 'சீரணி' என்ற பெயர் பொருத்தமாயிருக்கும் என எனக்குத் தோன்றிற்று; மற்றவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தனர்.

**மஞ்சள்: தங்க மனம்.**
**பச்சை: வளம் பெருக்கும் பணி.**

இங்கு தொண்டர்கள் அணிந்திருக்கும் சீரணி சின்னத்தில் பச்சை நிறமும், பொன்னிறமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. பச்சை வண்ணம், பசுமையை—வளத்தைக் காட்டுகிறது. பொன்னிறம் எங்களுக்குத் தங்கமான இதயம் உண்டு என்பதைக் காட்டுகிறது. இத்தகைய சின்னத்தைத் தொண்டர்கள் தங்கள்

மார்பில் குத்திக் கொள்வது மட்டுமல்ல, இதயத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.

## நகரில் இரு பணிகள்

நாட்டுக்காகச் செய்யவேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றன. சென்னை மாநகரைப் பொருத்தவரை குறிப்பாக துப்புரவு பணியிலும், முதியோருக்குக் கல்வி அறிவூட்டுவதிலும் சீரணித் தொண்டர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

## மகனைப் பெற்ற எந்த மாதாவும்

நகர வீதிகளில், ஏழைகள் வாழும் பகுதிகளில், வீடுகளைச் சுற்றிலும் அசுத்தம் அகற்ற—அசுத்தமாக்கும் பழக்கத்தைப் போக்க—துப்புரவுப் பணி அவசியம். கையிலே ஒரு கூட்டுக் கோலுடன், குப்பையை வாரிப் போட்டுக் கொள்ள ஓலைச்சாதனம் ஒன்றையும் கையில் ஏந்தி, சீரணித் தொண்டர்கள் துப்புரவு பணியில் ஈடுபடுகின்ற காட்சியைக் காணுகின்ற மக்கள் நிச்சயம் தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள். மகனைப் பெற்ற மாதாவும் மறுநாள் தெருவிலே குப்பையை கொட்டமாட்டார்கள்.

குப்பை என்று நான் சொல்லும்போது, குழந்தைகளைத் தெரு ஓரத்தில் விட்டுக் கழிக்கச் செய்யும் மலஜலத்தையும் சேர்த்தே சொல்லுகிறேன். 'அதை நாங்கள் சுத்தம் செய்வதா?' என்று நினைக்கக் கூடாது. அதை எடுக்கக் கூசுவோர், எதிரி நாட்டார் வீசும் குண்டை அப்புறப்படுத்தும் வீரனாக முடியாது. அருவருக்கத் தக்கவற்றையும் சகிப்பதுதான், அந்த அளவுக்கும் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வதுதான் சிறப்பு.

## முதியோர் கல்வி—புதிய முறை

அடுத்தது முதியோர் கல்வி. சென்னையில் எழுத்தறிவு பெற்றவர்கள் நிரம்ப இருந்தாலும், ஏடு படிக்க இயலாது—உலகை அறியாத பலர் உள்ளவர். அவர்களுக்கு அ, ஆ, 'படம், பட்டம்' சொல்லித்தர வேண்டாம். அப்படிச் சொல்லித்தருவதானால் அவர்களில் பலர் அதைக் கற்குமுன் காலமாகிவிடக்கூடும். எனவே மாநகராட்சியின் அனுமதி பெற்று, அதன் பள்ளிகள் சிலவற்றில் இரவு நேரங்களில் அப்பகுதி முதியோரைக் கூட்டி, செய்தித்தாள்,,

நல்ல நூல்களைப் படித்துக் காட்டி விளக்கினால், அவற்றைப் புரிந்து கொண்டு விரைவில் உலக அறிவு பெறுவர். முதியோர் கல்வியில் இம்முறையைக் கையாள வேண்டும். எழுத்தின் மூலமாக அல்லாமல், எண்ணத்தின் மூலம் அறிவு புகட்ட வேண்டும்.

## மக்கள் பாராட்டு—அதுவே பரிசு

சீரணித் தொண்டர்கள் மகத்தான பணிகள் புரிய வாய்ப்பிருக்கிறது. சென்னை நகரிலே ஓடுகின்ற கூவத்தைச் சுத்தப்படுத்தி, உல்லாசப் படகுகள் செல்லத் தக்கதாக ஆக்கவேண்டும் என்று அமைச்சர் கருணாநிதி திட்டமிட்டிருக்கிறார். அதற்கென ஆட்கள் நியமிக்கப்படுவார்கள். என்றாலும் சீரணியினர் விரும்பினால் 'நாங்கள் 500 பேர் இப்பணியில் ஈடுபட விரும்புகின்றோம்' என அதிகாரிகளுக்குத் தெரிவித்து, ஒரு நாளை ஏற்பாடு செய்து கொண்டு பணி புரியலாம். அப்படி, நல்ல கட்டுடல் படைத்தவர்கள், வசதியோடு இருப்பவர்கள், எந்த பலனும் கேட்காதவர்கள், கண்ணியமான வாழ்க்கை நடத்துபவர்கள் ஒரு 500 பேர், 600 பேர் கூட்டமாச் சென்று பாடுபட்டால் அந்தக் காட்சியைக் காணுகின்ற மக்கள், 'இவர்களல்லவா சீரணித் தொண்டர்கள்!' என்று வியந்து பாராட்டுவர். அதுதான் உங்களுக்குப் பரிசு. அந்த ஒரு பரிசைத் தவிர என்னிடமிருந்தோ, நாட்டு அரசிடமிருந்தோ வேறு பரிசை எதிர்பார்க்கக் கூடாது.

சென்னைப் புறநகர்களில், சுற்றுப்புற கிராமங்களில் உள்ள ஏரி, குளங்களைச் சீரமைக்கவும், சீரணி மெத்தப் பயன்படும்.

அரசாங்க நிதியைக் கொண்டு, அதிகாரிகளைக் கொண்டு மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. தொண்டர்கள், மக்களது நிரந்தர ஒத்துழைப்பும் முக்கியம். தொண்டாற்றும் எண்ணம் வளரவேண்டும். வளரும் என்ற நம்பிக்கை உண்டு.

சீரணி மிகுந்த வெற்றியினைப் பெறும் என்ற நம்பிக்கை வீண் போகாத அளவுக்குப் பணியாற்றுவார்கள் என்பதால், சீரணியை மெத்த மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் துவக்கி வைக்கிறேன்.

★

# தமிழகத்தின் முதன்மையான பிரச்சினைகள் மூன்று

## பேரறிஞர் அண்ணா

### சட்டமன்றத் தலைவர் அவர்களே !

கவர்னருடைய உரையின் பேரில் இங்கே மாண்புமிக்க உறுப்பினர்கள் பலரும் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிற எங்களுக்கு, நாங்கள் எப்படியெப்படி எங்களுடைய முறைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று சிந்திப்பதற்கு உதவியாக அமைந்திருக்கிறது. அதற்கு நான் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவராக அமைந்திருக்கிற மதிப்பிற்குறிய நண்பர் வெங்கடராமன் அவர்கள் மிக நல்ல முறையில், அவர்களுடைய பண்புக்கு ஏற்றவகையில் நல்லக் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். எங்கோ படித்ததாக நினைவு வருகிறது, 'எதிர்க்கட்சித்தலைவரின் சிறந்த திறமை ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு எந்த ஆயுதமும் இல்லாமல் செய்துவிடுகிறது' என்று. இன்று அவர்கள் எடுத்துச் சொன்ன எநதக் கருத்தும் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நாங்கள் மறுப்பதற்குரிய முறையில் அமையாமல் யாருமே ஏற்றுக் கொள்ளத்தக்க நல்லுரைகளை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஒன்று அவர்கள் சொன்னதில் 'நான் எந்தெந்த துறையில் தோல்வி அடைந்திருக்கிறேனோ, அந்தந்த இடத்திலே நீங்கள் வெற்றிபெற வேண்டும்' என்று அவர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள். தோல்வி கண்ட இடம் என்று சொல்வதற்குப் பதிலாக, செய்து முடிக்காத இடம் என்று திருத்திக்கொண்டால், அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு அவர்கள் துணையிருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு

அந்தக் காரியங்களில் நாங்கள் ஈடுபடுவோம் என்று உறுதி கூறுகிறேன்.

நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் இரு வகையாக இருக்கிறார்கள். வழக்காடுகிறவர்கள் ஒருவர் என்றால் அவர்களுக்கு வழக்காடுவதற்கான நுணுக்கங்களைக் கற்றுத்தருகிற வழக்கறிஞர்களும் இருக்கிறார்கள். அந்த முறையை நம்முடைய நண்பர் அறிவார்கள். அதைப்போல இந்த முறையில் மத்திய சர்க்காரிடத்தில் பல்வேறு பிரச்சினை குறித்து வாதாடுகிற பொறுப்பை எங்களிடத்திலே விட்டுவிட்டு, எந்தெந்த முறையில் அதை நடத்த வேண்டுமென்று சொல்கிற பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்ல முறையில் இந்தக் காரியம் அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று அரசியல் நடக்கிற போக்கைப் பார்த்தால் இன்றைய தினம் யார் யார் எந்த அரசியல் கட்சிக்கு உரியவர்கள் என்று கருதிக்கொண்டிருந்தாலும் அதை மறந்து இந்த மாநிலத்தின் உரிமையைப் பெறுவதற்காக எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஈடுபட வேண்டிய கட்டம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது என்று நான் உள்ளூர உணர்கிறேன். அந்த முறையில் இந்த மாநிலத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; பொருளாதார முயற்சி முறைப்படுத்தப்பட வேண்டும். நாம் எடுக்கிற எல்லா முயற்சிகளிலும் கட்சி பாகுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு பயனடைய வேண்டுமென்ற கருத்தை எந்தக்கட்சியில் உள்ளவர்களுக்கும் உணர்த்தும் முறையில் நம்முடைய எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சில பிரச்சினைகளை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அதற்கு நான் உடனடியாக பதில் அளிக்காமல் விட்டுவிட வேண்டியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம், பஸ்களை தேசிய மயமாக்குவதா இல்லையா என்பதைப் பற்றி சொல்லும்போது, 'செய்வதைச் செய்யுங்கள், முன்னாலேயே சொல்லாதீர்கள்' என்று சொல்லியதை நினைவில் வைத்து அதை விட்டு விடுகிறேன் என்பதை அறிவார்கள் என்று கருதுகிறேன்.

ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாட்டு மக்கள் எங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிற பொறுப்பை நல்ல முறையில்

நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சி எடுத்துக் கொள்கிற நேரத்தில், நாட்டுப் பற்றில் நாட்டம் வைத்திருக்கின்ற எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு—அந்த அடிப்படையில்—தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த முறையில் சட்டமன்றத்தில் பணியாற்றுகிற சுவை குறைவாக விருக்கலாம். மதிப்பிற்குரிய நண்பர் ராமதாஸ் போன்றவர்கள் ஒத்துக்கொள்கிற முறையில் சுவையிருக்கும். வீட்டுக்குப் போனவுடன் இந்த இடத்தில் திணற அடித்தோம், அந்த இடத்தில் சூடு கொடுத்தோம் என்று எண்ணுகிறபோது சுவையாக இருக்கும். அது உடனடியாகக் குறைந்துபோக வேண்டுமென்று கூறவில்லை. எனக்குக்கூட அந்தச் சுவையில் விருப்பம் உண்டு. அந்தச் சுவையில் தயாராக வேண்டுமென்று கருதாமல் அரை மணி நேரம் அவையில் பேசினேமே, எதிரில் உள்ளவர்கள் எடுத்துக்கொள்கிற கருத்துக்கள் அதில் இருக்கிறதா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வது முதிர்ந்த அனுபவம் பெற்ற பாராளுமன்றத் தலைவர்களின் கருத்தாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பேச்சில் நாங்கள் எடுத்துக் கொள்ளத்தக்கக் கருத்துக்கள் அதிகமாக இருந்தன; தள்ளிவிடத் தக்கக் கருத்துக்கள் இல்லை. அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துச் சொன்னக் கருத்துக்களை அக்கறையோடு இன்னும் எண்ணிப் பார்க்கிறேன்; அதில் எடுத்துக்கொள்ளத் தக்கதாகவோ எண்ணிப் பார்க்கத்தக்கதாகவோ எதுவும் இல்லை; பதில் சொல்லாமல் விட்டு விடுவதாகவும் இல்லை. இது முதல் முறையாக இருப்பதால், புதிதாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வந்திருக்கிறார்கள், இந்த முறையில் காரசாரமாகப் பேசவேண்டுமென்று பேசியிருந்தால் அடுத்த முறையில் அந்த முறையை விட்டு விலக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்யாண இடத்தில் பெண்ணுக்கு நலுங்கு வைக்கும்போது கன்னத்தில் நெற்றியில் சந்தனம் தடவுவார்கள். அதற்குப் பிறகு படிப்படியாக அதைக் குறைத்துக் கொள்வார்கள். கழகம் பற்றியும் கொள்கை பற்றியும் நாங்கள் சொல்வதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிற வாக்குறுதிகளைப் பற்றியும் அதை நிறைவேற்றப்படாமல் போனால் என்னென்ன நடக்கும்

தெரியுமா என்று சாபமிடுவது, கல்யாண நலுங்கு போல்தான் இருக்கும்.

திருமண வீடுகளில் பன்னீர் தெளிக்கப்படும்பொழுது தவறி கண்ணில் ஒரு சொட்டு விழுந்தால் கண் எரிகிறது. அதற்காக பன்னீர் தெளித்தவர்களைக் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. அந்த முறையில் எதிர்தரப்பில் இருப்பவர்கள் கொஞ்சம் எரிச்சல் ஊட்டத்தக்க முறையில் பேசியிருப்பார்கள் என்றாலும் அதைப் பன்னீர் தெளிக்கின்ற அவசரத்தில் கண்ணில் பட்டுவிட்டது என்ற முறையில் எடுத்துக்கொள்வேனே தவிர, அதற்காக வருத்தப்பட்டுக் கொள்பவன் அல்ல. அதிலும் நான் 25 வருடங்களாகப் பொது வாழ்க்கையில் கேட்டிருக்கின்ற பழிச்சொற்களும் இழிச்சொற்களும் என்னுடைய நினைவிற்கு வருகிறபோது இது ஏதோ குளிர்ந்த காற்றில் வருவதுபோல் இருக்கிறது. அவ்வளவு கேட்டிருக்கிறேன். ஆகையினால், இதனால் எல்லாம் பாராளுமன்ற நடவடிக்கைகள் செம்மைப்படும் என்று கருதாமல் நல்ல பல கருத்துக்களை அளிக்கவேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய நல்ல கருத்துக்களை அளித்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் அவரைப் போலவே பொறுப்பை உணர்ந்து நல்ல கருத்துக்களைக் கொடுத்திருக்கின்ற எல்லா நணபர்களுக்கும் நான் மீண்டும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சில உறுப்பினர்கள் கவர்னர் உரையில் இன்னின்ன இல்லை என்று குறிப்பிட்டு, இதில் தொழிலாளர்களைப் பற்றி இல்லை, தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி இல்லை, கைத்தறி நெசவாளர்களைப் பற்றி இல்லை, இப்படி ஒரு உரையைத் தயாரிப்பதா? கவர்னர் அவர்கள் மறந்து விட்டார்களா இவைகளை? என்றெல்லாம் சொன்னார்கள். கவர்னர் உரையில் விடுபட்டுப்போன விஷயங்கள் எல்லாம் சர்க்காருடைய நினைவிலிருந்து விடுபட்டுப்போனது என்று பொருள் அல்ல. அவைகள் எல்லாம் சர்க்காருடைய நினைவில் இருந்தாலும், இரண்டொரு விஷயங்களைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம் மற்ற விஷயங்களைப்பற்றி எண்ணிப் பார்த்துக் கொள்ளவேண்டுமென்ற கருத்தில் தயாரிக்கப்பட்டதே தவிர, அதில் சில விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படாததால் அவைகளில் சர்க்காருக்கு நாட்டம் இல்லை

என்று யாரும் அவசரப்பட்டு முடிவுக்கு வரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் தடவை கவர்னர் உரையில் முக்கியமானவைகளை மூன்றாக நான் பிரித்துப் பார்க்க விரும்புகிறேன். ஒன்று இந்த நாட்டில் இன்றையதினம் உள்ள உணவு நெருக்கடிப் பிரச்சினை; அதைச் சரிக்கட்ட இந்த சர்க்கார் என்ன முறைகளை கையாள இருக்கிறது என்பதைப்பற்றி கோடிட்டுத் காட்டுகிற பிரச்னை, இரண்டாவது, இந்த மாநிலத்தின் நிதிப் பிரச்சினை; அதில் என்ன மாதிரியான இக்கட்டுகள் ஏற்படலாம் என்று கோடிட்டுக்காட்டி, அவைகளை எப்படியெப்படி தீர்க்கலாம் என்பதைப்பற்றி ஓரிரு கருத்துக்களை இங்குமங்கும் தெரிவித்திருப்பது. மூன்றாவதாக மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இருக்கிற தொடர்பால் அது செம்மைப்படத்தக்க நிலைமை ஏற்படவேண்மென்பது. இந்த மூன்று அடிப்படைக் கருத்துக்களைத்தான் மிக முக்கியமான தாக கவர்னர் அவர்கள் உரையில் அமைக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கருத்துக்கள் எல்லாம் இவைகளுக்கிடையே இணைக்கப் பட்டிருக்கின்றன.

இந்த மூன்று கருத்துக்களில் முதல் கருத்தான உணவு நெருக்கடிப் பிரச்சினைப்பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் எல்லாம் கேட்டார்கள். இந்தப்புறத் திலும் கேட்டார்கள், அந்தப் புறத்திலும் கேட்டார்கள். யாரோ ஒருவனைப் பிடித்து இழுத்துவந்து நடுக் கூடத்தில் நிற்கவைத்துக் கொண்டு சுற்றிலும் 10 பேர் நின்றுகொண்டு கிராமத்தில் கேட்பார்கள், 'நீ ஆலமரத்தடியில் வெள்ளிக்கிழமை சாயந்திரம் இந்தப் பெண் கழுத்தில் தாலிக்கட்டுவதாக ஒப்புக்கொண்டாயா, இல்லையா? அப்படியானால் இந்தா தாலிக்கயிறு கட்டு' என்று கேட்பார்கள். அதைப்போல் என்று எண்ணிக்கொண்டு சில நண்பர்கள், 'நீ மூன்று படி அரிசி போடுவதாகச் சொன்னாயா? இல்லையா? போடு' என்றார்கள். கேட்கிறேன் அவர்களை, எங்கள் தேர்தல் அறிக்கையில் எந்த இடத்தில் ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி போடுவதாகக் குறித்திருக்கிறது? எந்த இடத்திலும் இல்லை. அது ஆரம்பம் ஆனதே வேடிக்கையான கதை.

1967-ஆம் ஆண்டு தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபட்ட நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள். 'நாங்கள்

நாட்டை நல்லமுறையில் ஆண்டுகொண்டிருக்கிறபோது எங்களை எதிர்ப்பானேன்' என்று பேசினார்கள். அதற்கு நான் பதில் சொல்கிறபோது சொன்னேன், "ஜனநாயகத்தில் ஆளுங்கட்சி என்றும் எதிர்க்கட்சி என்றும் இரண்டு கட்சி இருந்து தீர வேண்டும் என்ற முறையில் எதிர்க்கிறேன். அப்படித்தான் நீங்கள் செய்யக்கூடிய காரியம் இல்லாமலா போய்விட்டது? அரிசி விலை ஏறியிருக்கிறதே. இப்போதுகூட சொல்லுகிறேன். ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுவதாக ஒப்புக் கொள்ளுங்கள். என்னுடைய கழகம் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும்" என்று சொன்னேன். இந்த மூன்று படி ஆரம்பம் ஆனது இதிலிருந்துதான், உடனே காங்கிரசில் உள்ள பிரச்சாரத்துறையில் வல்லவர்கள்—அவர்களில் சிலர் என்றால் தயாரிக்கப்பட்டவர்களும்கூட—அவர்கள் காங்கிரஸ் வேடையில் ஏறி, 'மூன்று படி அரிசி போடுவதாக முன்னேற்றக் கழகத்தினர் சொல்லுகிறார்கள்; அது முடிகிற காரியமா?' என்றார்கள். அது இரண்டாவது கட்டம். அடுத்த காங்கிரஸ் மேடையில், 'அது முடிகிற காரியம் என்றால் போடட்டுமே' என்று வளர்ந்தது.

எங்கள் தேர்தல் அறிக்கையிலோ மாநாட்டுத் தீர்மானங்களிலோ ரூபாய்க்கு மூன்று படி போடுவோம் என்று இல்லை. ஆனால் அதே நேரத்தில் இன்னொன்றையும் அவசரமாகச் சொல்ல விரும்புகிறேன். மூன்றுபடி அரிசி போடவே முடியாது என்று நான் செல்லவில்லை. மூன்றுபடி அரிசி போடுவதென்பது சாத்தியமானதுதான். ஆனால் அதற்கு சில சூழ்நிலைகள் அமைய வேண்டும், அமையுமானால் ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி என்பது இயலாத காரியம் அல்ல. 8 படி அரிசி 12 படி அரிசி என்றெல்லாம் இருந்த நிலைமைக்கு போக முடியாவிட்டாலும், யுத்தத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமைப்படி ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்ற அளவுக்கு போகமுடியும் என்பதுதான் இன்னமும் எனக்கு இருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல; முன்னால் இருந்த காங்கிரசு அமைச்சர் அவையில், அவர்கள் மதுவிக்கு வந்த ஒரு வருடத்திற்கெல்லாம் படி அரிசி 14 அணுவாக வந்தது. அப்போது அமைச்சராக இருந்த ஜோதி அம்மையார் சொன்னது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. இன்னும் 6 மாதத்திற்குள் எங்களால் ரூபாய்க்கு 2 படி அரிசி போடமுடியும் என்று சொன்னார்கள். அப்படி உற்பத்தி நல்ல

முறையில் பெருகி, அது பகிரும் அளவுக்குப் பெருகி, பகிர்ந்து போடுவதும் சரியான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டு, பதுக்கல், கள்ளக்கடத்தல் தடுக்கப்பட்டால், உணவு உற்பத்தி வளர வளர நிச்சயமாக ரூபாய்க்கு 3 படி அரிசி போட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால் அந்த நம்பிக்கையை வைத்துக்கொண்டு, கதைகளில் பிரகடனப்படுத்துவதுபோல இன்ன மாதம் இன்ன தேதியில் இருந்து ரூபாய்க்கு 3 படி அரிசி போடப்படும் என்று அறிக்கை கொடுக்கவில்லை அல்லது தேர்தல் பிரகடனத்தில் இல்லை. ஆனால் மூன்று படி அரிசி போடமுடியுமா என்று காங்கிரஸ் மேடையில் உள்ளவர்கள் கேட்ட நேரத்தில் போடமுடியும் என்று சொன்னோம். இந்த மன்றத்திலும் கூட மாண்புமிகு நடராசன் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் சொன்னார்: 'லட்சியம்' என்றார். லட்சியம் என்பதற்கும் அதை நடைமுறைக்குக்கொண்டு வருவதில் படிப்படியாகச் செல்ல வேண்டும் என்பதற்கும் நிரம்ப வித்தியாசம் இல்லை. 1966-ஆம் ஆண்டோடு இந்தியா உணவு பிரச்சினையில் தன்னிறைவு அடையும் என்று யார் சொன்னது? காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னது. 1966-ல் இந்தியா உணவு பிரச்சினையில் தன்னிறைவு அடையும் என்று ஜவஹர்லால் நேரு அவர்கள் சொல்லிவிட்டார்களே, இப்போது நீங்கள் அமெரிக்காவை நாடுகிறீர்களே என்று யாராவது அரசியல்வாதிகள் கேட்பார்களானால், அவர்கள் அவசரப்பட்ட அரசியல்வாதிகள் என்று நான் கருதுவேன். அது அவருடைய லட்சியம். அதுமட்டுமல்ல, 1967-68ல் நமது நண்பர் கனம் வெங்கடராமன் அவர்களுக்கு நினைவிற்கு வரும் என்று நினைக்கிறேன்—ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராளுமன்ற கூட்டத்தில் சொன்னார், இன்னும் சில ஆண்டுகளில் இந்தியா வெளிநாடுகளிலிருந்து உணவுதானியங்கள் வரவழைப்பதை நிறுத்திவிடும் என்பதோடு அல்ல, "We will export food grains to foreign countries" "வெளிநாடுகளுக்கு நாங்கள் அனுப்புவோம்" என்று சொன்னார். அவர்களுக்கு அன்றைய தினம் இருந்த நம்பிக்கை, லட்சியம் அப்படிப்பட்டது. இப்போது யாராகிலும் மேடையில் ஏறி 1966-ல் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் என்று சொன்னீர்களே அது எப்போது நிறைவேறும் என்று கேட்டால், அது கட்சி அரசியலுக்கு வேண்டுமானால் கொஞ்சம் காரம் காட்டிக்கொள்ள உதவலாம். ஆனால், நடைமுறைக்கு எடுத்துப் பார்த்தால் அது

சரியான முறை அல்ல. நான் சென்ற தடவை பேசிய பொழுதுகூட அதில் அதிகமான அளவுக்கு நம்பிக்கை வைத்துக் கொண்டு இருப் பவர்களுக்குச் சொன்னேன்: இதைச் சொல்லி உங்களால் இதைக் கொடுக்க முடியவில்லை, ஆகையால்...என்று இழுத்தால் ஆகையால் என்னநடக்கும்? நாங்கள் பதவியை விட்டு விலகுகிறோம். விலகி என்ன நடக்கும்? குடியரசுத் தலைவர் ஆட்சிவரும். அதற்குப் பிறகு என்ன நடக்கும்? மறுபடியும் தேர்தல் வரும். மறுபடியும் தேர்தல் வந்தால் இப்போது உங்களிடம் மக்களுக்கு இருக்கிற கோபம் அடங்கிவிட்டது என்று கருதுகிறீர்கள். மிகவும் பரிதாப நிலையில் பேசுகிறீர்கள். உங்களுக்கு மக்களுக்கு வந்திருக்கிற கோபத்திற்கு அரிசி மட்டுமல்ல காரணம் எல்வளவோ இருக்கிறது. அது தவருக இருக்கலாம்; சரியாக இருக்கலாம். நமது நண்பர் வெங்கடராமன் சொன்னார்: 'நாங்கள் நிரம்ப செய்திருக்கிறோம் என்பதை மக்கள் உணராத காரணமாக இருக்கலாம்' என்று. எதுவாக இருந்தாலும், ரெயிலில் ஒருவன் ஏறிவிட்டால், அவனை உடனே கீழே இறக்க வேண்டுமென்று, 'அதோ பார், அதோ பார்' என்று காட்டியவுடன் அவன் இறங்கிவிடுவான். நாம் இடத்தைப் பிடிக்கலாம் என்று ரெயில்வே பிரயாணிகள் பேசுவது போல அரசியலை சாதாரணமாகக் கருதவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். 3 படி அரிசி, ஒரு படி அரிசி, 2 படி அரிசி என்று போடமுடியுமா என்பது அல்ல கேள்வி. நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன் விலை குறைய வேண்டுமா? வேண்டாமா? அதற்கு யாராகிலும் பாடுபட வேண்டுமா? வேண்டாமா? அரிசி விலை இதே அளவுக்கு ஏறிக்கொண்டு போனால், நாட்டுப் பொருளாதாரம் அரிசியின் அடிப்படையில் கட்டுப்பட்டு இருக்கு மானல், அதற்குப்பிறகு நீங்கள் பொருளாதாரத்தை எந்த இடத்தில் சீர்திருத்த முடியும்? ஆகையால்தான் யாராகிலும் ஒருவர் எந்த இடத்திலாவது துணிந்து இந்த விலையைக் கட்டுப் படுத்தவேண்டும் என்பதில்தான் என்னுடைய நாட்டம் செல்கின்றதே தவிர 3 படி அரிசியா 2 படி அரிசியா என்பது அவ்வளவு முக்கியமல்ல என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மறுபடியும் விரைந்து சொல்லுகிறேன். 3 படி அரிசி போடவே முடியாது என்று கருதாதீர்கள். நிலைமைகள் சரியா ஞல் போடமுடியும். அதற்கு ஏற்ற வகையில் என்ன என்ன

செய்யவேண்டும் என்று பார்க்க வேண்டும். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு வெங்கட்ராமன் அவர்கள் சொன்னார், 'உற்பத்தி பெருகவேண்டும்' என்று, அதைத்தானே காங்கிரசும் சொல்லுகிறது என்று கேட்கலாம். காங்கிரசும் அதைத்தான் சொல்லுகிறது. ஆனால் உற்பத்தி பெருக வேண்டும் என்பதற்காக அவர்கள், இந்த நான்காவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகளை, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டு திட்டங்களில் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால்தான் உணவு நெருக்கடி அதிகமானது என்பது எதிர் தரப்பில் உள்ளவர்கள் வாதம். இடையிலே ஜனத்தொகை பெருகி விட்டதைப்பற்றி நம்முடைய நண்பர் வெங்கட்ராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள் அதையே எங்கள் தரப்பிலிருந்து திரு. சி. பி. சிற்றரசு அவர்களும் குறிப்பிட்டார்கள். நான் இதைக்கூட கேட்கிறேன். ஒரு சர்க்காருக்கு உணவு எவ்வளவு உற்பத்தியாகும் என்பது தெரிவது போலவே, ஜனத்தொகை எப்படி வளருகிறது என்ற கணக்கும் தெரியும். அந்தக் கணக்கைப் பார்த்து இந்த ஐந்து வருஷத்தில் ஜனத்தொகை இவ்வளவு வேகமாக வளரும், ஆகையால் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் என்று அந்தத் திட்டத்தை நாம் போடத் தவறிவிட்டோம். அப்படித் தவறிவிட்டதன் பலனாகத் தான் இன்றையதினம் நாங்கள் விவசாயத்திற்கு முதலிடம் தருகிறோம் என்று பேசவேண்டியிருக்கிறது. ஆகையால் குற்றம் சாட்டிக் கொண்டே போவது என்றால் தாராளமாகச் சொல்லலாம்.

விலைவாசி ஏற்றத்திற்கு என்ன காரணம்? பணப் புழக்கம் காரணம். பணப்புழக்கம் அல்லது பணவீக்கம் எதனால் ஏற்பட்டது? உற்பத்திக்கும் பணத்திற்கும் சம்பந்தம் பார்க்காமலே ஏராளமான பணத்தை அச்சடித்தது. அதைச் செய்தவர்கள் யார்? காங்கிரஸ் சர்க்கார். அப்படியானால் என்னுடைய கடமை என்ன? நீங்கள் நோயை முற்ற விட்டீர்கள். நான் ஏதோ என் கையில் கிடைத்த பச்சிலையைத் தருகிறேன். அதிலே இன்னும் குணமாகவில்லையே என்றால், நோய் அவ்வளவு முற்றி இருக்கிறதே? அவ்வளவு சுலபத்தில் தீர்க்கக்கூடியதா? ஏதோ இந்தப் பச்சிலையையாவது கொடுப்பதற்கு நான் வந்திருக்கிறேன் என்பதற்காக வாழ்த்த வேண்டும்—கனம் வெங்கட்டராமன் அவர்

கள் சொன்னபடி—அல்லது முடியவில்லை என்றால் வேறு ஏதாவது கட்டு மாத்திரை வைத்தியர் இருந்தால் நீங்களாவது ஒரு கை பார்க்க வேண்டும் என்று சொல்ல வேண்டுமே தவிர, சரி, சரி இந்தப் பச்சிலை பிரயோசனம் இல்லை; இது நோயைப் போக்கவில்லை; ஆகவே ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கிழக்குப் பக்கத்திலே நிறுத்தி உன்னை தூக்குப் போடப்படும் என்றால் இதுவா அரசியல்? அரசியலும் அல்ல, இந்த முறையில் ஒரு கட்சி இன்னொரு கட்சியை அணுகுவது என்றால் அதற்குப் பெயர் ஒத்துழைப்பும் அல்ல. இருபது வருஷமாக நடைபெற்று வந்த காரியங்களில் மகிழ்ச்சியடையத்தக்கக் காரியங்கள் நிறைய இருக்கின்றன. யார் அதை மறுக்க முடியும்? பம்பாயில் அமைக்கப்பட்டிருக்கிற டிராம்பே அணு மின்சாரக் கூடத்தின் பெருமையை யார் உணராமல் விட்டுவிடுவார்கள்? அல்லது மதிப்பிற்குரிய வெங்கட்ராமன் அவர்கள் எல்லாவிதமான தொழிற்சாலைகளுக்கும் வழி செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பாராட்டாது இருப்பார்களா? அப்படிப்ய பாராட்டும்போதும் அவருக்கே ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒருநாள், சென்னையில் உள்ள இவ்வளவு தொழிற்சாலைகளும் தனி ஆட்களின் சொந்தமாகத்தானே இருக்கிறது, சர்க்காருக்கும் சொந்தமாகவில்லையே என்று தோன்றும். நான் எப்படி சில பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு இருக்கிற காரணத்தினால் சில விஷயங்களை வெளிப்படையாக பேச முடியவில்லையோ அதேபோல் அவரும் சில விஷயங்களை வெளிப்படையாகப் பேச முடியவில்லை. வேறு சிலருக்கு இருக்கிற சில சலுகைகள் எங்களுக்கு இல்லாததற்காக வருத்தப்படுகிறேன். ஆனால் நம்முடைய குறைபாடுகள் நீங்கி எந்த அளவுக்கு முன்னேற்றம் காணவேண்டும் என்று கருதினோமோ அந்த அளவுக்கு காண முடியவில்லை; அதை வேறு யாராவது செய்யட்டும் என்பதைத் தவிர வேறுவிதமான முறையில் அணுகக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் ஒன்று, நம்முடைய நண்பர் தேனி தியாகராஜன் அவர்கள் இந்த அறிக்கைப் புத்தகத்தைப் பக்கம் பக்கமாகப் பார்த்தார். வரி வரியாகப் பார்த்துவிட்டு இதில் விலைக்குறைப்பைப்பற்றி இல்லை, உணவு உற்பத்தி பற்றியில்லை, சட்டம் இல்லை, சமாதானம் இல்லை, எதுவும் இல்லை என்றார்கள். அதன் சுருக்கம் என்னவென்றால் இதை வெளியிடுகிறவர்கள் எங்கள் கட்சிக்காரர்

ரொம்பவும் நன்றி. எனக்கு எப்போதும் குழப்பங்கள் போக்குவது என்றால் நிரம்ப ஆசை. அதைத்தான் கடந்த 25 ஆண்டுகளாக நான் செய்து வருகிறேன். அதிலே ரசீது இல்லாத சாமான்கள் எதுவும் இல்லை என்று கண்டுபிடிக்கப் பட்டதே தவிர வரி கொடுக்காமல் ஏற்பட்டுள்ள சாமான்கள் இருந்து, சுமார் ரூ 500 முதல் 700 வரை அந்தச் சாமான்களுக்கு கமர்ஷியல் டாக்ஸ் வசூலிக்கப்பட்டதாகத் தகவல். ஆகவே ஒரு பயனும் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது என்று நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நாம் இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பொதுமக்கள் இந்தச் சர்க்காரிடம் இவைகளைப்பற்றியெல்லாம் சொல்லலாம் என்று கருதுகிறார்கள், சொல்லுகிறார்கள். நாங்களும் உடனே அவைகளை அதிகாரிக்கு முறைப்படி தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இதைப்பற்றி அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆக நியாயச் சக்கரம் சுழலுகிறது. தலை கீழே உருளவேண்டும் என்றுதான் ஆசை. இங்கே தலை கீழே உருளாமல் கூட இருக்கலாம். ஆனால் நியாயச் சக்கரம் உருண்டால்தான் நியாயம் ஏற்படும் என்றுதான் இவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே சரியான தகவல் அறிந்து நீங்கள் சொல்லவேண்டும் என்றால் அது நடக்கிற காரியம் அல்ல. ஒரு சர்க்காருக் கிடைக்கிற தகவல் எல்லாம் சரியா தப்பா என்று ஆராய்ச்சி செய்வதற்குள் அந்த லாரி பம்பாய் போய்ச் சேர்ந்திருக்கும்.

இன்னொன்று, இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை இந்த அரசு விடுதலை செய்ததைப்பற்றி குறிப்பிட்டு—கண்டிக்கக்கூட வில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். இது வேறு பல மாதிரியான தவறான சூழ்நிலையை நாட்டில் உண்டாக்குமோ, கொலை, கொள்ளை இவைகளில் ஈடுபட்டவர்கள் எல்லாம் சரி, சரி, நாம் கொலை செய்தாலும் கொள்ளையடித்தாலும் ஏதாவது ஒரு சர்க்கார் வந்து விடுவித்து விடுவார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு அந்தத் தீய காரியங்களில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்வார்களோ என்ற நல்ல எண்ணத்தோடு நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். நான் அதில் எடுத்துக்கொண்ட முறைக்குள்ள காரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

ரொம்பவும் நன்றி. எனக்கு எப்போதும் குழப்பங்கள் போக்குவது என்ருல் நிரம்ப ஆசை. அதைத்தான் கடந்த 25 ஆண்டுகளாக நான் செய்து வருகிறேன். அதிலே ரசீது இல்லாத சாமான்கள் எதுவும் இல்லை என்று கண்டுபிடிக்கப் பட்டதே தவிர வரி கொடுக்காமல் ஏற்பட்டுள்ள சாமான்கள் இருந்து, சுமார் ரூ 500 முதல் 700 வரை அந்தச் சாமான்களுக்கு கமர்ஷியல் டாக்ஸ் வசூலிக்கப்பட்டதாகத் தகவல். ஆகவே ஒரு பயனும் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது என்று நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனுல் நாம் இதில் கவனிக்க வேண்டியது என்னவென்ருல் பொதுமக்கள் இந்தச் சர்க்காரிடம் இவைகளைப்பற்றியெல்லாம் சொல்லலாம் என்று கருதுகிருர்கள், சொல்லுகிருர்கள். நாங்களும் உடனே அவைகளை அதிகாரிக்கு முறைப்படி தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிருேம். இதைப்பற்றி அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புகிருர்கள். ஆக நியாயச் சக்கரம் சுழலுகிறது. தலை கீழே உருளவேண்டும் என்றுதான் ஆசை. இங்கே தலை கீழே உருளாமல் கூட இருக்கலாம். ஆனுல் நியாயச் சக்கரம் உருண்டால்தான் நியாயம் ஏற்படும் என்றுதான் இவை கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே சரியான தகவல் அறிந்து நீங்கள் சொல்லவேண்டும் என்ருல் அது நடக்கிற காரியம் அல்ல. ஒரு சர்க்காருக்கிடைக்கிற தகவல் எல்லாம் சரியா தப்பா என்று ஆராய்ச்சி செய்வதற்குள் அந்த லாரி பம்பாய் போய்ச் சேர்ந்திருக்கும்.

இன்னென்று, இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை இந்த அரசு விடுதலை செய்ததைப்பற்றி குறிப்பிட்டு—கண்டிக்கக்கூட வில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். இது வேறு பல மாதிரியான தவருன சூழ்நிலையை நாட்டில் உண்டாக்குமோ, கொலை, கொள்ளை இவைகளில் ஈடுபட்டவர்கள் எல்லாம் சரி, சரி, நாம் கொலை செய்தாலும் கொள்ளையடித்தாலும் ஏதாவது ஒரு சர்க்கார் வந்து விடுவித்து விடுவார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு அந்தத் தீய காரியங்களில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்வார்களோ என்ற நல்ல எண்ணத்தோடு நண்பர்கள் எல்லாம் சொன்னுர்கள். நான் அதில் எடுத்துக்கொண்ட முறைக்குள்ள காரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இதைப்போல காங்கிரஸ் சர்க்கார் செய்தார்கள் என்று சொல்லவில்லை. ஏனென்றால் அது அவர்களுக்கே தெரியும். நான் சொல்லாதற்கு முன்னால் நம் மாண்புமிகு வெங்கடராமன் அவர்கள் சொன்னார்கள். அதே போல் ஆந்திரத்தில் விடுதலை செய்திருக்கிறார்கள், அ தை யு ம் சொல்ல விரும்பவில்லை. வங்காளத்தில் இப்போது விடுதலை செய்துள்ளார்கள், அதையும் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் ஒரு தவறு இன்னொரு தவறுக்கு சமாதானம் ஆகாது. ஆனால் அதைப் பற்றி என்னுடைய கருத்து என்னவென்றால் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி நடைபெற்ற நேரத்தில் மக்களுடைய மனம் மிகவும் குழம்பி போயிருந்தது. நல்லது எது, தீயது எது என்று மக்கள் அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் ஆத்திர உணர்ச்சியால் பீடிக்கப்பட்டு என்ன செய்கிறோம் என்று தெரியாமல் பல்வேறு வகையான குழப்பங்கள் நாட்டில் மூண்டு விட்டன. நடைபெற்று விட்ட அக்கிரமங்கள் அத்தனையும் அன்றைய தினம் கண்டித்ததைப் போலவே இன்றைய தினமும் நான் கண்டிக்கிறேன். சட்டமும் சமாதானமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறாயா? அல்லது கொலையும் கொள்ளையும் இருக்கவேண்டும் என்கிறாயா? என்றால் சட்டமும் சமாதானமும் பாதுகாக்கப்படவேண்டும். கொலை, கொள்ளை மூலம்தான் ஒரு நியாயத்தினை வெற்றி பெறச் செய்ய முடியும் என்ற நோக்கம் இருக்கக்கூடாது என்று நான் அன்றிலிருந்தே கூறி வந்திருக்கிறேன்; இன்றும் அதைத் தான் கூறுகிறேன். ஆனால் ஏன் விடுதலை செய்யும்படி சொன்னேன் என்றால் அந்தக் குழப்பமான சூழ்நிலையில் பிடிபட்டவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று நீங்கள் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். யார், யார் பிடிபட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று கருதுவது நியாயம் அல்ல. இரண்டு போலீஸ் அதிகாரிகள் அதிலே கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அதில் ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அதிலே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் குழந்தைகளில் ஒருவனுக்கு இளங்கோவன் என்று பெயரிட்டிருக்கிறார். இன்னொரு குழந்தைக்குப் பெயர் மணிமேகலை. இதன் பொருள் தெரிகிறதா? ஏறக்குறைய அவர்கள் எங்களுடைய மனப்பான்மையில் வளர்ந்திருக்கிற குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இல்லையென்றால் இளங்கோவன் என்றும் மணிமேகலை என்றும் பெயரிட்டு இருக்க மாட்டார்கள்.

நெஞ்சு உருகும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இருந்தாலும் பிடிபட்டு தண்டிக்கப்பட்டதினுலேயே அவர்கள்தான் குற்றவாளி கள் என்று நாம் அறுதியிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு குழப்பங்கள் இருந்தன. ஆகையால் செய்தவர்களோ, செய்யாத வர்களோ அந்த நேரத்திலே பிடிபட்டு தண்டிக்கப்பட்டவர்களை இந்த நேரத்திலே விடுதலை செய்யலாம் என்ற எண்ணத்தில் செய்தோம். கொலை செய்தாலும் விடுதலை, கொள்ளை அடித் தாலும் விடுதலை என்ற முறையிலே செய்யப்பட்டது அல்ல. ஆகையால் முறை தவருக இருக்கிறது என்று நண்பர்கள் வருத்தப்படத் தேவையில்லை. நண்பர்கள் சொன்னுர்கள், 'பதறக் கொன்ருர்கள்' என்று. நான் உள்ளபடி வருத்தப்படுகி றேன். அப்பொழுது நான் வெளியிட்ட அறிக்கையை அன்று படித்திருக்க மாட்டார்கள், இன்று தயவுசெய்து படித்துப் பாருங்கள்.

[திரு. கே. ராஜாராம்: படித்துப் பார்த்தோம். அதனுலே தான் கேட்கிறேன்.]

நண்பர் இராஜாராம் போன்றவர்கள், அவர்கள் நிலையிலே யுள்ள காங்கிரஸ்காரர்கள் இதைப் படித்ததற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பொழுது இருந்த அதே மனப்பான்மை இப்பொழுதும் இருக்கிறது. நான் மிகுந்த பரிதாபப்படுகிறேன்.

நண்பர்களோடு கலந்து பேசினேன். அந்தக் குடும்பத்திற்கு ஏற்கெனவே கொடுத்திருக்கிற தொகையைவிட இன்னும் சற்று கூடுதலாகக் கொடுக்கலாமா என்று கூட நான் கேட்டேன். அப்பொழுது உடனே நண்பர் திரு. வெங்கடராமன் சொன்ன எச்சரிக்கை கவனத்திற்கு வந்தது. செய்வதைச் சொல்லாதே என்று. ஆகையால் அதைக்கூட இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். ஆனுல் திருப்பூரில் போலீஸ் அதிகாரிகளைக் கொலை செய்ததான வழக்கு—இவை மிகப் பயங்கரமான வழக்கு கள்—அதிலே கொடுக்கப்பட வேண்டிய தண்டனை, 2 வருடங்கள், 3 வருடங்கள், 5 வருடங்கள் அல்ல. ஆனுல் இன்று இந்தத் தண்டனைகள்தான் அளிக்கப்பட்டு இருக்கின்றன. இவர்கள் தான் அந்தப் போலீஸ் அதிகாரிகளைக் கொன்ருர்கள் என்று நிரூபிக்கப்பட்டு இருக்குமானுல் ஒன்று தூக்குத்தண்டனை

அல்லது ஆயுள் தண்டனை தரப்பட்டு இருக்கும். இப்படி ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டு இருக்கிற ஒரு பயங்கரமான நிகழ்ச்சியில் ஒரு பத்துப் பதினைந்து பேரைப் பிடித்துக் கொண்டுவந்து இவர்கள்தான் குற்றவாளிகள் என்று நிறுத்திவிட முடியாது. நிறுத்த முயன்றால் அது மிகக் கடினமான காரியமாகும். அப்படியே பிடித்துக் கொண்டு வந்து நிறுத்திவிட்டாலும் கீழ்க் கோர்ட்டிலே மெய்ப்பிக்கப்பட்டிருந்தாலும், மேல் கோர்ட்டில் மெய்ப்பிக்கப்படுவது கடினம். இந்த வழக்கில் கீழ்க் கோர்ட்டிலே தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் என்று கருதப்படுகிறவர்கள், மேல் கோர்ட்டிற்கு, ஹைகோர்ட்டிற்குச் சென்றிருந்தால் இந்த வழக்கு தோல்வி அடைந்திருக்கும். என்று என்னுடைய வக்கீல் நண்பர்கள் அறிவிக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பண வசதி இல்லாததினால் மேல் கோர்ட்டிற்குப் போக முடியவில்லை. இந்த வசதி இருந்தது அவர்கள் மேல் கோர்ட்டிற்குச் சென்றிருந்தால் விடுதலை செய்யப்பட்டு இருப்பார்கள் என்று வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். இப்படி அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபிக்கக்கூடியதுதானா என்று வழக்கறிஞர்களைக் கலந்து ஆலோசித்த பிறகுதான் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களே தவிர, கொலை செய்தாலும் கொள்ளை அடித்தாலும் விடுதலை என்ற முறையில் செய்யப்பட்டது அல்ல. கொலை செய்தான் என்று போட்டிருக்கிறார்கள், கொள்ளை அடித்தான் என்று போட்டு இருக்கிறார்கள். ஐயோ பாவம் இவன் செய்து இருக்க மாட்டான்; கொள்ளை அடித்து இருக்க மாட்டான்; ஐயோ பாவம் இவைகளைச் செய்து இருக்கமாட்டார்கள் என்று கருதியதனாலே விடுதலை செய்யப்பட்டது. ஆம்னெஸ்டி (Amnesty) என்று சொல்வதன் முழுப்பொருள் இதுதான். ஆம்னெஸ்டி என்பது கொடுக்கப்பட்ட தண்டனை ரத்து ஆவது மட்டுமல்ல, அவன் பேரிலே போடப்பட்ட குற்றச்சாட்டும் ரத்து ஆகிறது. இதையெல்லாம் மறந்து விடலாம்; இனி புதிய அத்தியாயம் துவக்கலாம் என்ற முறையிலே கொடுக்கப்பட்டது. கனம் வெங்கட்டராமன் அவர்களுக்குத் தெரியும்., பாராளுமன்ற முறை அறிந்தவர் மட்டுமல்ல நல்ல வழக்கறிஞர். குற்றவாளி என்று ஒருவனைத் தண்டிப்பதற்கு முன்னாலே குற்றம் செய்கிற மனப்பான்மை இருந்ததா என்று பார்க்க வேண்டும். நம்முடைய

வழக்கறிஞர்கள் மென்சுரி (Mensrea) இருக்கிறதா என்று பார்ப்பார்கள். நான் மேலேழுந்த வாரியாகப் பார்ப்பது அந்த திருப்பூர் இன்ஸ்பெக்டர் கொலை வழக்கில், கொலை செய்யவேண் டும் என்ற எண்ணம் அந்த வெற்றிலை பாக்குக் கடைகாரருக்கு ஏற்பட்டு இருந்ததா என்பது. இந்த எண்ணம் அவருக்கு ஏற்பட்டு இருக்காது. இந்த எண்ணம் அந்தச் சுருட்டுச் சுற்றுகிற தொழிலாளிக்கு ஏற்பட்டு இருந்ததா என்று பார்த்தால் அவருக்கு ஏற்பட்டு இருக்காது. மனதிலே குற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு இருக்காது. சந்தர்ப்பச் சூழ்நிலைகள் குற்றவாளிகளாகப் பலரை ஆக்கிக் காட்டியிருக்கிறது. ஆகையால் இதோடு விட்டுவிட வேண்டும் என்ற முறையிலே விடுதலை செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்பற்றி நண்பர் வெங்கட்ராமன் அவர்கள் சொல்லும் பொழுது திரு. கருணாநிதியின் வழக்கை விட்டு இருக்கலாம்; அவரைவிட்டு இருக்கலாம் என்றும்; மற்றவர்களை விட்டது அவ்வளவு சரியல்ல என்றும் அவரை விட்டாலும் இவர்களை விடலாமா என்றார்கள் Question of moral turpitude. அவருக் காக நான் சொல்கிறேன் கருணாநிதியின் வழக்கும் moral turpitude.

[திரு. ஆர். வெங்கட்ராமன்: Moral turpitude இருந்தாலும் விட்டுவிடலாம்; Violenc குற்றம் சாட்டப்பட்டவர்களைத்தான் விடக்கூடாது. கருணாநிதியின் வழக்கில் கலகம் இல்லை; அவரை விடலாம் என்று சொன்னேன்.]

இந்தக் குறிப்பு இப்போது பேசுவதற்காக எழுதப்பட்டது அல்ல. இதிலே Moral turpitude என்று எழுதியிருக்கிறேன். அவர் பேசும் போதே எழுதப்பட்டது

[திரு. ஆர். வெங்கட்ராமன்: நான் சொன்னது Moarl turpitude ஐ பார்க்காமல் Violene இல்லாமல் இருந்தால் விட்டு விடலாம் என்பது.]

Moral turpitude என்பதில் உயர்நீதி மன்றத்திலேயே ஒரு நீதிபதியின் கருத்துக்கும் மற்றொரு நீதிபதியின் கருத்துக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் வரையிலே போகவேண்டும் என்றுதான் ஆர்வத்தோடு கருணாநிதியின் வழக்கு ஹைகோர்ட்டிற்கு போகப்பட்டது. ஆகையினாலே

இதிலே (Violence) பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் என்று கருதத் தேவையில்லை. இப்படி விடுதலை செய்யப்பட்டவர்கள் அவர்கள் தான் இந்த பலாத்காரக் காரியத்தைச் செய்தார்கள் என்று நன்ருகத் தோன்றிஞலும் அவர்கள் செய்யத்தக்க நிலைமைகள் மட்டுமல்ல, அவர்களைச் செய்யத் தூண்டிய நிலைமைகள் இருந்த தற்கு சமூகம் முழுவதும் பொறுபபு ஏற்கவேண்டும் என்பதற் காக, குழப்ப நிலைமைகள் இருந்தன என்பதாலும், கொள்ளை, கொலை செய்யப்பட்டது என்ருலும் தனிப்பட்ட ஆட்கள் பேரிலே தவறு இல்லை என்பதால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இதனுடைய தொடர்பாக இரண்டொரு விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். இப்போது அவர்கள் சொன்ஞர்கள் விடுதலை செய்வதாக இருந்தாலும் சிலபேரை விடுதலை செய்துவிட்டு மற்றவர்கள் விஷயமாக ஒரு குழு போட்டு இவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள் என்று விசாரணை நடத்தி இருக்கலாம் என்று. Judicial Enquiry என்று சொன்ஞர்கள். இதையே தான் நான் முன்ஞல் இருந்த முதலமைச்சரிடத்திலே சொன்னேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பல்வேறு வகையான இடங் களில் துப்பாக்கியால் சுடப்பட்டு, பலபேர் சாகடிக்கப்பட்டார்கள். இதற்கு ஒரு Judicial Enquiry வைக்கலாம் என்று சொன்னேன்; அதை அவர்கள் கேட்கவில்லை. அது தேவையில்லை என்று சொன்ஞர்கள். இப்போது நான் அதைப்போல கேட்கவில்லை என்று நண்பர் கனம் வெங்கட்ராமன், என்னையும் முன்ஞல் முதலமைச்சர் அவர்களையும் ஒரே ஜில்லாக்காரர் என்பதாலேயே ஒரே இயல்பு என்று தள்ளிவிட வேண்டாம். கொஞ்சம் காலம் கடந்துவிட்டது; அதஞல் செய்வதற்கில்லை, செய்ய முடியவில்லை. அவர் கூறிய யோசனை அருமையானது, நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் வியப்பு அடைகிறேன். இவ்வளவு அருமையான யோசனையை வைத்துக்கொண்டு இருக்கிற கனம் வெங்கட் ராமன் அவர்கள் ஏன் முன்ஞள் முதலமைச்சருக்குச் சொல்ல வில்லை? சொல்லி இருந்தால் அவரால் எப்படி இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை? என்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் நடை பெற்ற நிகழ்ச்சிகளுக்கு Judicial Enquiry வைக்கப்படவில்லை. இருந்தாலும் நடந்தது நடந்துவிட்டது. அதைப்பற்றி பேசத் தேவை இல்லை.

இந்த சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் இருக்கவேண்டிய தொடர்புகள் பற்றி நாங்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து சில முறைகளில் பல்வேறு விதமான ஐயப்பாடுகள், அச்ச உணர்ச்சிகள் இருக்கின்றன. இதற்குத் துளியேனும் ஆதாரம் இல்லை, காரணம் இல்லை, தேவையில்லை என்பதை மறுபடியும் விளக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விளக்கமாகச் சொல்லுகிற அதே நேரத்தில் மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் சரியாக நடக்கிறதா என்று பார்த்துக் கொள்வதற்காக இருக்கிறது, சட்டாம்பிள்ளை என்ற மனப்பான்மையை விட்டு விடவேண்டும்.

மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் என்று நிர்வாக வசதிக்காக இப்படி ஒரு அமைப்பை ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் என்பதினாலேயே அது எல்லைப்பற்றி மத்தியிலே இருக்கிறது என்று அர்த்தம் இல்லை. அது ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. மத்தியிலே ஒரு சர்க்கார் இருக்க வேண்டுமானால் நியாயப்படி அது ஹைதராபாத்தில் இருக்க வேண்டும். அது மையம். அல்லது நிர்வாகத்தெளிவு உள்ள இடம் என்ற கணக்கை எடுத்துக் கொள்வீர்களானால் மத்திய சர்க்கார் சென்னையிலே இருக்கவேண்டும். இது அவ்வளவையும் விட்டு விட்டு மத்திய பாகத்திலும் இல்லை, அறிவு தெளிவு உள்ள இடத்திலும் இல்லை.

அரசியல் சட்டத்தின் பேரால் மத்தியில் உள்ள அதிகாரம் Concurrent list இரண்டு பேருக்கும் சொந்தம். ஆகையால் மத்திய சர்க்கார் என்பது மாநில சர்க்கார் சரியாக நடக்கிறதா என்று மேற்பார்வை பார்க்கிற சர்க்கார் என்ற மனப்பான்மை இருக்கிறது. இந்த மனப்பான்மை இருக்கிற வரையில் மாநில சர்க்கார் உள்ளத்திலே அருவருப்பு உணர்ச்சி நிச்சயமாகத் தோன்றும். மத்திய சர்க்காரிடத்தில் இருந்து ஏதோ பணம் வாங்கி நம்முடைய மக்களுக்கு உபயோகப் படுத்துவதாகக் கூறினார்கள். அவர்களுக்கு என்று தனியாகப் பணம் ஒன்றும் இல்லை. நாட்டு மக்கள் உபயோகப்படுத்துகிற பணம். இந்தியா முழுவதும் கொடுக்கிற வரி பணத்தில் மத்திய சர்க்கார் நடக்கிறது. இதுதானே தவிர மத்திய சர்க்காருடைய பணம் என்று நாம் கருதுவதில் பிரயோசனம் இல்லை. ஆனால் உலக வாடிக்கை அப்படி. நம்முடைய மாமியார் வீடு வாடகை வீடாக இருந்தாலும் பெருமையாக அதை மாமியார் வீடு என்று

சொல்லுகிறோம். அது மாத வாடகை 30 ரூபாய் கொடுத்து அமர்த்தப்பட்டு இருந்தாலும் மாமியார் வீடு என்கிறோம். அதேபோல இது மத்திய சர்க்கார் நிதி என்று சொல்லுகிறோம். மத்திய சர்க்கார் நிதி என்று ஒரு பேச்சுக்காகச் சொல்லுகிறோமே தவிர உண்மையில் அது மக்கள் நிதி. மக்கள் தந்திருக்கிற பணம். அந்த மக்களுக்குச் செய்யவேண்டிய வசதிகளை மத்திய சர்க்கார் மூலமாகச் செய்வதைவிட மாநில சர்க்கார் மூலமாக செய்வது தான் இன்றியமையாதது; அவசரமானது; அதிகமானது.

திருச்சியில் காலரா வந்து இருக்கிறது என்றால் உடனடியாக நிவாரணம் கொடுக்க வேண்டிய வேலை மத்திய சர்க்காருடைய தல்ல, மாநில சர்ககாருடையது. மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து, அங்கிருந்து நமக்கு நிவாரணம் கிடைத்து அதற்குப் பிறகு திருச்சிக்குப் போய் யாருக்குக் காலரா வந்தது, ஊசி போடலாம் என்றால், அவருடைய மகன் வந்து நிற்பான்; எங்கள் அப்பாவுக்குத்தான் காலரா, போன வெள்ளிக்கிழமைதான் கண்டது என்பான். எங்கே உன் அப்பா என்று கேட்டால், ஞாயிற்றுக்கிழமை எல்லாம் முடிந்து விட்டது என்பான்.

மாநில சர்க்கார் தங்களுடைய கடமையை நிறைவேற்ற வேண்டியதற்காக வருவாய்த் துறையை, பணவசதித்துறையை, அதிகாரத்துறையை போதுமானதல்ல என்று உணர்ந்திருந்தால் அதை அதிகப்படுத்தத் தயங்கக் கூடாது. இருப்பது போது மானதுதான் என்று வெங்கட்ராமன் சொல்லுவாரா? ஒவ்வொரு துறையிலும் ஆராய்கிறபொழுது இன்று இருக்கிறதுபோது மானதுதானா என்று பார்க்க வேண்டும். காங்கிரஸ் அல்லாத சர்க்கார் கேரளாவிலும், தமிழ்நாட்டிலும் வந்திருப்பதால் மத்திய சர்க்காரிடமிருந்து மிகவும் பாசம் நிறைந்த அன்புரைகள்தான் கடிதங்களாகவும் ரேடியோ பேச்சுக்களாகவும் பத்திரிக்கை அறிக்கையாகவும் வந்து கொண்டிருக்கிறது. பொது மனப் பான்மை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால் அதை போற்றி வரவேற்பேன். கல்யாண நேரத்தில் எல்லோரும் பாராட்டுவதுபோல, தேர்தல் முடிந்து புதிய ஆட்சி ஏற்பட்ட நேரத்தில் பேசப்படுகிற உபசார மொழிகளாக அவை அமைந்து விடுமானால் பிரயோஜனமில்லை. ஆகையால்தான் மாநில சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் இருக்கிற தொடர்பு ஒரு புதிய அத்தியாயத்தை அடைகிறது.

இருக்கவேண்டிய தொடர்புக்கு, இந்த தொடர்பிலிருந்து மாறி ஒரு புதிய அத்தியாயத்தை அடைகிறது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைச் சொல்லுகிற பொழுது சிலர், இவன் விட்டு விட்டதாக வெளியே சொல்கிற திராவிட நாட்டை மறைத்து இப்பொழுது கொண்டு வருகிருன் என்று நினைக்கிருர்கள். அவர்கள் அதைப் பற்றி சந்தேகப் படுகிருர்கள். எதைப் பற்றியும் சந்தேகப்படுகிறவர்கள் அவர்கள். நிலைக்கண்ணுடிமுன் நின்று கொண்டு இது என்ன பயங்கர உருவம் என்றுகூட அவர்கள் சொல்லிக் கொள்ளக் கூடும். மறைத்து வைத்து, அதைக் கொண்டு வர வேண்டு மென்ற எண்ணத்தில் பேசவில்லை. அதே நேரத்தில் திராவிட நாடு தேவை என்பதற்காக நான் என்னென்ன காரணம் காட்டினேனே அவை இன்றைய தினம் நிறைவேற்றப்பட முடியும் என்ற உறுதிப்பாடு, இந்திய யூனியனுக்குள்ளேயே இருந்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற உத்திரவாதம் இருப்பதால் அவற்றை நாம் நிறைவேற்றிக் கொள்ளலாம். நாங்கள் மட்டுமல்ல, நண்பர் வெங்கட்ராமன் அவர்கள் அதை விட்டுவிட முடியாது. Regional imbalance, Linquistic imperialism இருந்தால் அதை அவர் ஏற்றுக் கொள்வாரா? ஏற்றுக் கொள்ள மாட்டார். இதையும் சேர்த்து இப்படிப்பட்ட கேடுகள் இல்லாமல் இருக்கும்; ஆனால் தனி திராவிட நாடு வேண்டுமென்று சொல்லாலமே தவிர, அது வந்தால் நாங்கள் என்னென்ன செய்வோம் என்ற கற்பனையில் பறக்கவில்லை. திராவிடநாடு தனிநாடு என்ற கோரிக்கையை நாங்கள் நிச்சய மாக விட்டு விட்டோம். அதே நேரத்தில் Over-centralisation என்பதில் முன்பைவிட அதிக உரிமையோடு வலிவோடு வற்புறுத்த வேண்டிய கடமை இன்று உள்ளது, Regional imbalance விஷயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் வெங்கட்ராமன் அவர்கள் சேலம் எஃகாலேக்காக எடுத்துக் கொண்ட முயற்சியில் ஏதாவது குறைவு இருந்ததா? இருக்கிறதா? காட்டிய ஆதாரங்கள் தவருனதா? நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பேசுகிற நேரத்தில் இவர்கள் எதிர்த்து சொன்ன வாதத்தில் சமாளிக்க முடியாமல் வந்தாரா? அப்படியிருந்தும் ஏன் நமக்கு சேலம் இரும்பாலை வரவில்லை. நாம் இன்னொரு இடத்தில் கேட்டுப் பெறுவது என்ற நிலை—

அவல நிலை இருப்பதால் அதைப்பெற முடியவில்லை என்பதைத் தவிர நியாயமில்லை என்பதிஞலா வரவில்லை?

Regional imbalance என்பது பொருளற்ற வார்த்தை அல்ல. மிகச்சின்ன விஷயம் என்று கருதலாம். நம் நாட்டில், தமிழகத்தில் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. P. W. D. மூலம் டிராவலர்ஸ் பங்களா கட்டி இருக்கிருர்கள்; சர்க்கார் மூலம் கட்டியிருக்கிருர்கள். என்ன காரணத்திஞல் மத்திய சர்க்கார் அதைப்போல டூரிஸ்ட் ஹோம் கட்ட வேண்டும்? அது எனக்குத் தெரியவில்லை. காஞ்சிபுரம் P. W. D. பங்களா இருக்கிறது. கலெக்டர் பங்களா என்று அதைக் சொல்லுவார்கள். எந்தக் காரணமும் இல்லாமல் ரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் ஒன்று இருக்கிறது. ஊர் மக்களைக் கேட்டால் சொல்லுவார்கள். இரவு எட்டு மணிக்குமேல் அங்கே புளியந்தோப்பு பிசாசு இருக்கிறது என்று. அந்த இடமாகப் பார்த்து பல இலட்சம் செலவழித்து சென்ட்ரல் கவர்ன்மெண்ட் டூரிஸ்ட் பங்களா கட்டியிருக்கிருர்கள். திருச்சியில் எந்தக் கோடி கிடைக்குமோ அதைப் பார்த்து சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பங்களா கட்டி யிருக்கிருர்கள். என்ன நோக்கத்தோடு இவற்றை கட்டியிருக்கிருர்கள்? ஒரு பெரிய சர்க்கார் நோக்கமற்ற காரியத்தை செய்வார்களாஞல் பெரிய சர்க்கார் என்ற பெயருக்கு அதைக் காட்டிக்கொள்வதற்காக உரிமையை நிலைநாட்டுகிருர்கள். வேறு நோக்கத்தோடு செய்திருக்கிருர்கள் என்ருல் அதை நமக்குத் தெரிவிக்க வேண்டும்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் இருப்பதால் ஒன்றை சொல்லத் தயக்கப்படுகிறேன். இருந்தாலும் சொல்லவேண்டியவஞகிறேன். கிண்டியில் இஞ்சினியரிங் கல்லூரி இருக்கிறது. அதை விரிவுபடுத்தி நேர்த்தியாக்க வேண்டுமென்ருல் அதற்கு இன்னும் பணவசதியைக் கொடுத்து வளரச் செய்யலாம். ஆஞல் பக்கத்தில் மத்திய சர்க்கார் நிறுவனம் என்று சொல்லி அதைப்போல இன்ஞென்றை ஆரம்பித்து நடத்துவது என்ன நோக்கத்தோடு? இன்னும் கொஞ்சம் நாளில் அவர்கள் செய்யலாம் என்று கருதிஞல் இங்கே ஒரு தொழில் அமைச்சர் இருக்கிருர். மத்தியில் ஒரு தொழில் அமைச்சர் இருக்கிருர். மேலும் ராஜ்ஜியங்களில் மத்திய தொழில் அமைச்சர் என்று ஒருவரை ஏற்படுத்தி இங்கே அமரச் செய்வார்கள். ஆகையால்

இதையெல்லாம் புத்திசாலித்தனமாகச் செய்கிறார்கள் என்று அர்த்தம் இல்லை. செய்திகளைச் சேகரிக்கிறார்கள் என்று அர்த்தம்.

இண்டெலிஜென்ஸ் சர்வீஸ் மாநில சர்க்காருக்கு ஒன்று மத்திய சர்க்காருக்கு ஒன்று இருக்கிறது. ஒரு சமயம் இந்த சர்க்காருக்கும் ஒன்று அந்த சர்க்காருக்கும் சேர்த்து வேறுயாராவது ஒரு இலாகா வைத்திருக்கிறார்களோ என்னவோ தெரியாது. ஒவ்வொ துறைக்கும் கவனித்தால் மத்திய சர்க்கார் பக்கத்திற்குப் பக்கம் வந்து நிற்பதன் பொருள் என்ன? அதில் கிடைக்கும் பலன் என்ன? அதனால் நமக்கு வரக்கூடிய வாய்ப்பு என்ன என்று ஆராய்ந்தால் அது நாடு பிரிவதற்கு என்று கருதக்கூடாது. மறுபடியும் எனக்கு வெங்கட்ராமன் அவர்களுடைய "செய்; சொல்லாதே" என்ற வார்த்தைகள் கவனத்திற்கு வருகிறது, ஆகையால் இந்த அளவோடு பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

# தமிழ் நாடு பெயர் மாற்று மசோதாவில் அண்ணா

தலைவர் அவர்களே இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்ற பெயர் அமைய வேண்டும். ஏற்கெனவே நாம் நிறைவேற்றிய தீர்மானம் டில்லிப் பேரரசிற்கு அனுப்பப்பட்டு அவர்கள் அரசியல் சட்டரீதியாக அதற்காக ஒரு மசோதா தயாரித்து அதை நம் கருத்து அறிய என்று அனுப்பியிருக்கிறார்கள். அதை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்ற முறையில் இன்றையதினம் இந்த அவையிலே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய ஒப்புதலை அளித்ததற்காக முதலில் நான் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே ஒரு திருத்தத் தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் திரு சண்முகம்கூட இந்தத் தீர்மானத்தை வரவேற்று நம்முடைய திருத்தத்தை வலியுறுத்தப் போவதில்லை என்று தெரிவித்தார்கள். மற்றபடி 'தமிழ் நாடு' என்ற பெயர் ஏன் முன்னாலே வைக்கவில்லை. இப்போதுதான் அமைந்திருக்கின்றது. இதற்கு யார் காரணம் என்பதையெல்லாம் எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கிற நேரத்திலே நாம் விவாதித்துக் கொண்டிருப்பது அவ்வளவு தேவையல்ல என்று நான் கருதுகிறேன். உண்மையிலேயே நாம் ஒன்றுபட்டு நிறைவேற்றக் கூடிய தீர்மானங்கள் இப்படி ஒன்று இரண்டாகிலும் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கிடைக்குமானால் உண்மையிலே ஜனநாயகப் பண்புகளை வளர்ப்பதற்கு அவை உறுதுணையாக இருக்கும். தமிழ் ஒன்றுதான் இப்படி நம்மை இணைத்து வைத்து இருக்கிறது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எதிர்கட்சித் தலைவர் திரு. தியாகராஜன் அவர்கள் இவ்வளவு தமிழ் செய்யுட்களைச் சொல்லி இதுவரை நான் கேட்டதில்லை. சட்டசபையில் நானும் அவர்களும் ஒன்றாக இருந்தபோது

நம்முடைய மாண்புமிகு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் திருவாய் மொழியில் செய்யுட்களைச் சொல்லுவார்கள். நம் முடைய திரு. தியாகராஜன் அவர்களுடைய தமிழ், வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இருக்கும். இன்றையதினம் தமிழ் என்ற உணர்ச்சி அவரை சங்க இலக்கியத்திலிருந்து, தொல்காப் பியம், லெமூரியா கண்டம் வரைக்கும் கொண்டு போய் கடைசி யாக அவர் தமிழ் நாட்டிற்கு திரும்பி வந்து இது ஏற்றதுதான் என்று சொன்னார். தமிழ் என்பது எல்லோருடைய உள்ளத்திலே யும் இத்தகைய அரிய உணர்ச்சியை ஏற்படுத்துகிறது என்ற உண்மையை இது எடுத்துக் காட்டுகிறது. அதிலிருந்து தமிழ் நாடு என நம் மாநிலத்திற்கு பெயர் வைப்பதும் ஒரு நல்ல உணர்ச் சியை ஏற்படுத்தும் என்றும் தெரிகிறது. அது சோறு போடுமா, துணி கொடுக்குமா, என்றெல்லாம் அவர் சொன்னது வேடிக்கைக் காக என்று நான் கருதுகிறேன் பெயர் மாற்றத்திலேயே நிலை மாறிவிடும் என்று யாரும் கருதுவதில்லை. திடீரென்று ஒருவர் தன்னுடைய பெயரை மஹாராஜா என்று மாற்றிக் கொள்வதா லேயே அவர் மஹாராஜாவாக ஆகிவிட மாட்டார். அதனாலே திரு. தியாகராஜன் அவர்கள் பெயரில் தியாகம் என்று இருப்ப தால் அவர் தியாகம் செய்யவில்லை என்று பொருள் அல்ல. அவர் இந்த நாட்டின் விடுதலைக்காக உழைத்தவர், தியாகம் செய்தவர் என்று எல்லோருக்கும் தெரியும், புரியும். ஆனால் அவர் பெற்றோர் கள் இந்த பெயர் சாமி பெயராக இருக்கின்றதே என்று வைத்தி ருப்பார்கள். அவர் தம்முடைய செய்கையால் அந்தப் பெயருக்கு பொருத்தமாக தம்மை ஆக்கி கொண்டார்கள். அதைப்போல நம்முடைய இடத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர் வைப்பதின் மூலம் நாம் அந்த தமிழுக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும். தமிழ் நாட்டுக்குள்ள பண்புகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எதிர்கால உணர்ச்சிக்குக்கூட நாம் எடுக்கும் முடிவு துணை செய்யும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே தமிழ் நாடு என்ற பெயரை எந்த அரசியல் கட்சியும் உபயோகிக்கத் தவறவில்லை.

தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி, தமிழ் நாடு சுதந்திராக் கட்சி என்றுதான் அழைத்து வந்தார்கள். ஆனால் அதற்கு இந்திய அரசியல் சட்டத்தில் தமிழ் நாடு என்ற பெயர் பட்டியலில் அமையும் நிலைமையை

உண்டாக்கி உறுதி அளிக்கப்படவில்லை. இந்த அரசு வந்தபின் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதும் இந்திய பேரரசு பெரிய மனது வைத்து அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், முன்னால் இருந்த தொழில் அமைச்சர் இதற்கு ஒப்புதல் அளித்து ஆதரித்து பேசியதாகச் சொன்னார்கள். அவர்கள் நினைவு சரியாக இல்லாமல் அப்படி சொன்னார்கள் என்று கருதுகிறேன். அந்த தொழில் அமைச்சர்கள்தான் மெட்ருஸ் என்றுதான் இருக்கவேண்டும் என்றும், தமிழ்நாடு என்றிருந்தால் சர்வதேச ஒப்பந்தங்கள் எல்லாம் திருத்தி எழுதவேண்டியதிருக்கும் என்றும், ஜெர்மனியை ஜெர்பனி என்றும் Deutsch land என்றும் அழைப்பார்கள் என்றும் ஆகையால் நாம் தமிழ்நாடு என்று அழைக்கலாம், வெளியே உள்ளவர்கள் மெட்ருஸ் என்றே அழைக்கட்டும் என்று சொன்னார். ஆனால் இன்றையதினம் எல்லாக் கட்சியினராலும் தமிழ்நாடு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது காலத்தின் மாறுதல் என்று கருதுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை. நாங்கள் வந்திருக்கும் நேரத்தில் அது நிறைவேற்றப்பட்டிருப்பதை வைதீக பாஷையில் குறிப்பிட வேண்டுமென்றால் நாங்கள் கொடுத்து வைத்தவர்கள். அந்த பெயர் எனக்கு வரவேண்டுமென்பதற்காக முன்பிருந்தவர்கள் அதைவிட்டு கொடுத்திருக்கலாம் என்று கருதுகிறேன். அவர்கள் பல விஷயங்களில் நல்ல பெயர் எடுத்த காரணத்தால் இந்தப் பெயர்வைப்பதை விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசு நடத்துகின்ற நேரத்தில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் எல்லாக் கட்சியினரும் இதில் ஒத்துழைத்தது வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாகும். அதற்காக நன்றியறியதலை தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் முழுமனத்தோடு தமிழ்நாடு என்ற பெயரை இந்த இராஜ்ஜியத்திற்கு ஏற்றுக்கொள்வதில் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதை இந்திய பேரரசுக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். 'ழ' கரம் பற்றி குறிப்பிட்டார்கள். 'ழ' கரத்தை ஆங்கிலத்தில் எழுதும் போது ஏற்படும் சிக்கல்களை அறிந்தவர்களோடு பழகுகிறவர்களும் ஆங்கிலம் பேசுகிற நாட்டிற்கு சென்றவர்களும் நன்றாக உணருவார்கள். 'ழ' என்பதற்கு ஆங்கிலத்தில் zh என்ற எழுத்துக்களை போட்டாலும் அதை 'ழ' என்று உச்சரிக்க முடியவில்லை பலருக்கு.

நான் டெல்லி சென்றிருந்தபோது அங்குள்ள பல தலைவர்களிடத்தில் 'ழ' எப்படி உச்சரிக்க வேண்டுமென்பதற்காக அது எப்படி வரும், நாக்கை எப்பக்கம் தொட்டும், விட்டும் வைக்க வேண்டுமென்றும் அப்போதுதான் 'ழ' உச்சரிப்பு வருமென்றும் சொல்லிப் பார்த்தேன். அது வரவில்லை. முன்னேற்ற கழகத்தைப் பற்றி அவர்கள் சொல்லும் போது கழகம் என்று சொல்லாமல் 'கஜகம்' 'கஜகம்' என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, கழகம் என்று வரவில்லை. வெளியே உள்ளவர்களுக்கும் அந்த நிலையிருக்கிறது. வெளியே உள்ளவர்கள் உச்சரிக்க முடியாத காரணத்தால்தான் 'ழ' வராமல் போனது. இப்போது நாம் அடைந்திருக்கிற வெற்றி இதுவரையில் சென்னை இராஜ்ஜியம் என்றும் மெட்ராஸ் ஸ்டேட் என்றும் இருந்தது, இப்போது தமிழ்நாடு என்ற சிறப்புப் பெயரை, அரசியல் சட்ட ரீதியாகப் பெறுவதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இந்த மகிழ்ச்சியில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கு கொள்ளுவார்கள். அதில் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இருக்கிறார்கள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு புதிய உற்சாகத்தை கொடுக்கும். நல்லவற்றிற்கு இவர்கள் ஒன்று கூடுவார்கள் போலிருக்கிறதே என்ற நம்பிக்கை ஏற்படும். ஆகவே நல்ல காரியங்களில் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இணைத்து, இந்த தீர்மானத்தை முழு அளவில் ஏற்றுக்கொண்டு முழுமனதோடு ஏற்று நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

★

# நிதி ஒதுக்கீடு மசோதா பற்றி அண்ணு

**மா**ண்புமிகு தலைவர் அவர்களே, 1968, 1969ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். மானிய கோரிக்கைகளை விளக்குகின்ற விரிவான விவர அறிக்கையொன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணைமானிய கோரிக்கையின் மதிப்பு மொத்தம் 6 கோடியே 40 இலட்சம் ரூபாயாகும். இதில் 3 கோடியே 32 இலட்சம் ரூபாய் வருவாய் கணக்கின்பாற்படும். கடந்த பிப்ரவரித் திங்களில் சட்டமன்றத்தின் முன் நடப்பு ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் வைக்கப்பட்ட பின்னர் ஒப்பளிப்பு வழங்கியுள்ள "புதுப்பணித்" திட்டங்களும் இத்துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியங்களின் கீழ் முதற்கண் வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த செலவினங்களுக்கு மேல் இப்போது அதிகமாய்ச் செலவாக கூடுமென எதிர்பார்க்கப்படுவதால் அந்த மானியங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம். நடப்பு ஆண்டில் ஜூன் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி வீதங்களை உயர்த்தி ஒப்பளிப்பு வழங்கியிருப்பதுவே தற்போதைய துணை மதிப்பீடுகளில் எதிரொலிக்கின்ற மிகப் பெரிய கூடுதல் செலவினப் பொறுப்பாகும். இந்த உயர்வு காரணமாக நமது பணியாளர்களுக்குரிய அகவிலைப்படி வீதங்கள் அதே தரங்களில் உள்ள மத்திய அரசுப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் ஒத்திருக்கின்றன. வழக்கம் போல் இந்த அகவிலைப்படி வீத உயர்வு உள்ளூராட்சிப் பணியாளர்க்கும், மானியம் பெரும் பள்ளி ஆசிரியர்கட்கும் பொருந்தும். இதன் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாயென மதிப்பிடப்படுகின்றது. நடப்பு ஆண்டில் ஆகும் கூடுதல் நிகரச் செலவு 2கோடியே 70 இலட்சம் ரூபாயாகும். இதற்கென வெவ்வேறு

மானியங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் அளவிற்கு கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. ஐந்தாம் நிதி ஆணைக்குழு நமது மாநிலத்தின் நிதி தேவைகளைப் பற்றி முடிவு செய்கையில் இன்றியமையாத இச்செலவு பொறுப்பினைக் கருத்தில் கொண்டு செப்டம்பர்த் திங்களில் வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகின்ற இதன் இடைக்கால அறிக்கையில் நமது மாநிலத்திற்குப் போதிய நிதி வசதி கிட்டுவதற்கு வகை செய்யுமென நாம் எதிர்பார்க்கின்றோம். இப்போது செயல்படுத்தப்பட்டுவரும் மிகப் பெரிய உணவு உற்பத்தி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பெருமளவில் நிறுவனக் கடன் வசதி பெற வேண்டுமென்று அரசாங்கம் மேற்கொண்ட பெருங்கொள்கை முடிவைப்பற்றி எனது வரவு செலவுத் திட்ட உரையில் நான் தெரிவித்திருந்ததை மாண்புமிகு உறுப்பினர்களின் நினைவிற்கு கொண்டுவர விழைகிறேன். உழவர்களின் கடன் தேவைகளை நில அடமான வங்கிகளின் வாயிலாக எளியமுறையில் திறம்பட நிறைவுசெய்யும் வகையில் புதிய திட்டத்தைக் செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவில் சிறப்புப் பணியாளர்களை நியமித்துள்ளோம். இதற்காக 16, 19 வது கோரிக்கைகளின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களுக்கெனச் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் நாம் மேற்கொண்டிருப்பதால், 16வது கோரிக்கையின் கீழ் அவற்றிற்கு நிதி ஒதுக்கம் வேண்டப்படுகின்றது. இத்திட்டங்களின் கடன் பகுதியை மத்திய நில அடமான வங்கி வழங்கும். இத்திட்டங்களுக்கான மொத்த முதலீடு 2 கோடி ரூபாய்க்கு மேல் ஆகுமென மதிப்பிடப்படுகிறது. இத் திட்டங்களின்படி, தென் ஆற்காடு மாவட்டத்தில் 2000 தனியார் குழாய்க்கிணறுகளும் 1000 வடிமுனைக் குழாய் கிணறுகளும் செங்கற்பட்டு மாவட்டத்தில் 2000 தனியார் குழாய்க் கிணறுகளும் மூன்றாண்டு கால அளவில் தோண்டப்படும். புதிய பெரும் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புக்கள் நமது மாநிலத்தில் குறைவாதலின் நிலத்திற்கடியிலுள்ள நீர்வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான இவ்வகைத் திட்டங்களையே இயல்பாக நம்பியிருக்க வேண்டியுள்ளது. இவற்றோடு இணைந்து, இறைவைப் பாசனத்திற்கு மின்சக்தி வசதியை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டங்களையும், நாம் விரைந்து செயல்படுத்த வேண்டியுள்ளது. தஞ்சாவூர்

மாவட்டத்தில் தனியார் துறை மின்சார உரிமைதார்கள் பற்பல காரணங்களினால் கிராம மின்சாரத் திட்டங்களில் போதிய அக்கறை காட்டிவிடவில்லையென்றும், அதன் விளைவாக நமது மாநில வேளாண்மைப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிற இப்பகுதி இறைவைப் பாசனத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் நமது மாநிலத்திலுள்ள எஞ்சிய பகுதிகளை விட பின்தங்கிய நிலையில் உள்ளதென்று இடைவிடாமல் புகார்கள் வந்த வண்ணமிருக்கின்றன. எனவே இம் மாவட்டத்தில் செயல்பட்டு வந்த தனியார் உரிமைதார்களின் நிறுவனங்களை மேற்கொள்ள நாம் அறிவிப்புகள் விடுத்திருந்ததை இப் பேரவையினர் அறிவர். இவற்றில் மாயூரம்—மன்னார்குடி—திருவாரூர் உரிமை நிறுவனம் ஏற்கெனவே மாநில .அரசின் கைவசம் வந்துவிட்டது. சட்டப்படி அதற்குச் சேரவேண்டிய இழப்பீட்டுத் தொகையில் 75 சதவீதம் விரைவில் செலுத்த வேண்டியுள்ளது. எனவே அதைக் கையகப்படுத்திக் கொண்டதற்காகச் செலுத்தவேண்டிய மதிப்பீட்டுச் செலவின் நிமித்தம் இத்துணை மதிப்பீட்டில் 74 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கும்படி வேண்டப்பட்டுள்ளது.

சிறுபாசன வசதிகளை முழுமையாக பயன்படுத்துவதற்குச் சிறப்பிடம் அளிப்பது சரியே என்றாலும், அதேநேரத்தில் பெரும் பாசனத் திட்டங்களை தக்கவாறு பேணி வருவதும் முக்கியம் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. தஞ்சைக் கழிமுகப் பகுதியில் புதிய பயிர்முறை செயல்படுத்தப் படுவதிலிருந்து கிடைத்துள்ள அனுபவத்தையொட்டி, இப்புதிய பயிர்முறை உறுதியாக வெற்றியளிக்கும் பொருட்டு, அரசு கல்லணைக்கும் காவேரிப் பாசன ஏற்பாடுகளுக்கும் 66 லட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேம்பாடுகள் செய்வதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் எதிர்பார்க்கப்படுகிற செலவினத்திற்காக 26வது மானியத்தின் கீழ் 26 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. உரவகைகளை வாங்குவதற்கென உழவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கு 50 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்துள்ளதையும் இம்மன்றத்தினர் வரவேற்பார்களென உறுதியாக நம்புகிறேன். இந்த நிதி ஒதுக்கத்தைச் சேர்த்து, நடப்பு ஆண்டில் இதற்கென வகை செய்யப்பட்டுள்ள மொத்த தொகை 2 கோடி ரூபாயாகிறது.

மணலியில் பல் வகைத் தொழில்கள் விரைந்து வளர்வதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு முனைப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காண இம் மன்றம் மகிழ்ச்சியடையுமென நம்புகிறேன். சென்னை எண்ணெய் தூய்மைத் தொழிற்சாலைக்காக ஏறத்தாழ 88 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிற நீர் வழங்குத் திட்டம் விரைவாக நிறைவேறி வருகின்றது. மணலியில் நிறுவப்பட்டுவரும் சென்னை உரத் தொழிற்சாலைக்கு அன்றாடம் 60 இலட்சம் காலன் தண்ணீர் வழங்குவதற்காக ஒரு கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு திட்டத்திற்கு இப்போது ஒப்பளிப்பு வழங்கியுள்ளோம். இதற்கென நடப்பு ஆண்டில் ஏற்படக்கூடிய செலவினத்திற்காக இதில் கணிசமான தொகையான ஒருகோடியே 5 இலட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கும்படி 42 வது மானியத்தின் கீழ் வேண்டப்படுகின்றது. இத் திட்டத்திற்காகும் முழுச் செலவும் இந்திய அரசிடமிருந்து பெறப்படும் சிறப்புக் கடனுதவியின் மூலம் ஈடு செய்யப்படும். இலங்கையில் இருந்து விரைவில் ஏராளமான அகதிகள் தாயகம் திரும்பவிருக்கின்றனர். தங்கள் திறனுக்கேற்ற தொழில்களை அவர்கள் மேற்கொள்ளுவதற்கான திட்ட மொன்றைத் தீட்டி யுள்ளோம் இத் திட்டத்திற்கென 47 வது மானியத்தின் கீழ் 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கும்படி வேண்டப்பட்டுள்ளது. நடைமுறை தேவைகளுக்கிணங்க நாளடைவில் இந்த நிதி ஒதுக்கத்தை உயர்த்த வேண்டியிருக்கும். முக்கியமான இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ள நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக் கையை உயர்த்தவும், நடைமுறைகளை செம்மைப் படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். இதற்கென 33-வது மானியத்தின் கீழ் நிதி வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் ஆளுகையிலும், ஏனைய நகராட்சிகளின் ஆளுகையிலும் இயங்கி வருகிற உயர்நிலைப் பள்ளிகள் மீதான செலவினம் குறைத்து அவைகட்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைகளைத் தாராளமாக வழங்குவதற்கிணங்க உரிய விதி முறைகளைத் திருத்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்களென உறுதியாக நம்புகின்றேன்.

இதுவரை அவற்றிக்கு ஏற்பட்ட நிகர பற்றுக்குறைத் தொகையில் 50 சதவீதம் மட்டுமே ஈடு செய்து வந்ததற்கு

மாருக, மாநில அரசு இப்போது அத் தொகையில் 66-2/3 சத வீதத்தை ஈடு செய்யக் கருதுகிறது என்பதை அறிய இம் மன்றத்தினர் களிப்படைவர். மற்றும், தனியார் பொறியியற் கல்லூரிகளிலும் பல் தொழிற் பள்ளிகளிலும் துண்டு விழும் நிகர தொகைகளை அரசு பெருமளவில் ஈடு செய்ய வேண்டியிருப்பதால், அதற்கான நிதி ஒதுக்கமும், அதே மானியத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. 1967-68 முதல் இது குறித்த மாநில அரசின் பங்கு 66-2/3 சத வீதத்திலிருந்து 75 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

உயரிய கலைத்திறனும், தொழில் நுட்பத் தரமும் வாய்ந்த தமிழ்ப் படங்களை தயாரிப்பதற்கு ஊக்க மளிக்கும் வகையில் முழு நீளத் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிய இம் மன்றத்தினர் களிப்படைவார்களென நம்புகிறேன். 1967-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திரைப்படங் களுக்கு நடப்பு ஆண்டில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அளவிற்கு சிறுசேமிப்பு பத்திரங்கள் வடிவில் பரிசுகள் அளிக்கப் படும். இதற்கிணங்க 12 வது கோரிக்கையின் கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்ற செய்திக்கதிர் ஒன்றை திங்கள் தோறும் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றையும் அரசு தொடங்கியுள்ளது. 9 வது மானியத்தின் கீழ் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் பற்றி சிறப்பான எந்த விளக்கமும் தேவையில்லை என்று கூறி 1968-69ம் ஆண்டிற்குரிய இந்த முதல்துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்கும்படி வேண்டுகிறேன்.

★

# பச்சையப்பன் கல்லூரியில் அண்ணா

**அன்புள்ள தலைவர் அவர்களே!**

**அருமைத் தோழர்களே!**

பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் சார்பில் இன்றைய தினம் இரு தமிழ்ப் பேரறிஞர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவும் அதை ஒட்டி ஒரு மலர் வெளியீட்டு விழாவும் நடைபெறுகின்றன. இந்த விழாவிலே கலந்துகொள்வதற்கான வாய்ப்பும், டாக்டர் மு. வ. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்கின்ற பேறும் எனக்கு அளிக்கப்பட்டதைப் பற்றி நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனக்கும் பச்சையப்பன் கல்லூரிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பற்றிக் கல்லூரி மாணவர் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆண்டுக்கு ஒரு முறையாகிலும் பச்சையப்பன் கல்லூரிக்கு வந்து செல்லுகின்ற ஒரு மரபு பன்னெடுங் காலமாக ஏற்படுத்தப்பட்டு இருப்பதை ஒட்டி இந்த ஆண்டும் ஒரு சீரிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

டாக்டர் மு. வ. அவர்கள் இதே பச்சையப்பன் கல்லூரியிலே பெரும்பணி ஆற்றியவர்கள். தொடர்ந்து அவருடைய தமிழ்ப் பணி பல்கலைக் கழகத்தின் மூலமாகத் தமிழ்நாட்டிற்கும் தமிழ் கற்ற எல்லா இடங்களுக்கும் இன்றைய தினம் கிடைத்துக் கொண்டு வருகின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் பிறந்த அவர் முறையாகத் தமிழ் பயின்று பல்வேறு பள்ளிகளிலே பணியாற்றிப் பச்சையப்பன் கல்லூரியிலே பெரும் பேராசிரிய ராகப் பணியாற்றி ஆராய்ச்சித் துறையிலும் கட்டுரைகள், கதைகள் இவைகளைத் தீட்டுவதிலும் தன்னிகரற்ற புலமை

பெற்று இன்றையதினம் பல்கலைக் கழகத்தின் மூலம் தமிழ் ஆராய்ச்சி திறம்பட நடத்திக்கொண்டு வருகின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு பெரும் புலவர் பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியராக இருந்தார்கள் என்பது பச்சையப்பன் கல்லூரிக்கும் அதிலே பயின்றவர்களுக்கும் மிகுந்த பெருமை தருகின்ற ஒரு செய்தியாகும். அவருடைய தனித் தமிழ்த் தன்மையைப் பற்றித் தமிழ் உலகம் மிக நன்றாக அறியும்.

சிலருடைய எழுத்துக்களையும் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்வார்கள் மிக ஆர்வத்தோடு! அதைப்போலவே சிலர் மறுப்பார்கள் மிக வேகத்தோடு! ஆனால் டாக்டர் மு. வ. அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்றவர்கள், மறுப்பவர்கள் என்று பிரித்துப் பார்க்க முடியாத வகையில் தமிழ்க் கருத்துக் கொண்ட அத்தனை பேரும் மிக இனிமையாகவும் எளிதாகவும் ஏற்றுக் கொள்ளத் தக்க முறையில் தம்முடைய கருத்துக்களைப் பக்குவப்படுத்தி, பதப்படுத்தி பலருக்கும் நல்லவிதத்திலே புரியும் படியாகச் செய்து கருத்துக்களை அளித்துக்கொண்டு வருகின்ற ஒரு பெரும் எழுத்தாளர்.

சிலர் பேசுகின்றபொழுதும் எழுதுகின்றபொழுதும் சிந்திக்காமலே கூடப் பேசிவிடுவது உண்டு; பேசிவிட்டுப் பிறகு சிந்திப்பவர்களும் உண்டு, ஏன் இதைப் பேசினோம் என்று! சிலர் பேசிப் பிறரைச் சிந்திக்கச் செய்வது உண்டு! ஆனால் டாக்டர் மு. வ. அவர்கள் தம்முடைய எழுத்தின் மூலம் பேச்சின் மூலம் தாமும் சிந்திப்பார். அவருடைய பேச்சையும் எழுத்தையும் பெற்றவர்கள் தாமும் சிந்திக்கத் தொடங்குகின்ற வகையில் அந்தப் பேச்சுக்கும் எழுத்துக்கும் தனிச் சிறப்பு இருக்கின்றது.

உள்ளபடி இறவாப் புகழை ஓர் எழுத்துப் பெறவேண்டுமானால் வெறும் உணர்ச்சிகளை மட்டும் தட்டிவிடுகின்றதாக இருக்குமானால் அந்த எழுத்துக்கு நீண்டகால மதிப்பு இருக்காது. இங்கிலாந்து நாட்டுக்கும் செருமன் நாட்டுக்கும் முதல் உலகப் பெரும்போர் ஏற்பட்ட நேரத்தில் கெய்சரைக் கண்டித்து இரண்டு வரி யார் பாடினாலும் அவர்கள் இங்கிலாந்து நாட்டில் பெரும் கவிஞர்களாக மதிக்கப்பட்டார்கள். செருமன் நாட்டுக்காரர்களை ஏசி நாலு கடினமான வார்த்தைகளை யார் பேசினாலும் அவர்கள் சிறந்த பேச்சாளராகக் கருதப்பட்டார்கள். ஆனால்

நிரந்தரமான புகழ், நிலைத்திருக்கக்கூடிய புகழை எழுத்தாளர்கள் பெறவேண்டுமானால், அன்று உலாவிக் கொண்டிருக்கின்ற உணர்ச்சிகளைத் தட்டிக் கொடுக்கக் கூடிய வகையிலே அல்லது கேட்ட உடனே உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் ஏற்பட்டுவிட்டாற் போதும் என்ற முறையிலே அமைவதைவிடக் கேட்டவுடன் முதலிலே திகைப்பு, அதற்குப் பின் தெளிவு, அதற்குப் பிறகு சிந்தனை, அதற்குப் பிறகு அதே கருத்தினை நாம் ஏற்றுக் கொண்டோம் என்ற உறுதி, அதற்குப் பிறகு அந்தக் கருத்தினை மற்றவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும் என்ற ஓர் ஆர்வம், இவ்வளவும் எழ வேண்டும் ஒருவருடைய பேச்சிலும் எழுத்திலும்! டாக்டர் மு. வ. அவர்களுடைய எழுத்துக்களில் அந்தப் பேராற்றலை நான் காணுகின்றேன்.

அவருடைய எழுத்திலே காணப்படுகின்ற கருத்துக்களைப் படித்துப் பார்க்கின்ற ஒவ்வொருவரும், படித்தவுடனே நியாயந் தானே என்று சொல்வர்; இவ்வளவு நியாயமான இந்தக் கருத்தை ஏன் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற திகைப்பு அவர்க்கு; ஒரு கணம் வரும், அவ்வொரு கணம் வந்த திகைப்பு மறுகணம் மறைந்து இந்த உண்மையை மற்றவருக்குச் சொன்னால் அல்லவா மற்றவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற ஆர்வத்தைப் பெறுவர்; திருக்குறளைப் பற்றியும் சங்க நூற்களைப் பற்றியும் இன்றைய வாழ்க்கை முறை பற்றியும் அவர் தமது எழுபதற்கும் மேலான நூல்களில் இந்த அரிய கருத்துக்களை அழகுற வடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

பெரும்புலவர்கள் தமிழிலே ஏடு எழுதுவார்களானால் அவர்களையே அழைத்துக் கேட்டால்தான் அதனுடைய பொருள் விளங்கும் என்று எண்ணிக்கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. பிறருக்குப் பொருள் விளங்காத முறையில் பலவற்றை மறைத்து வைத்திருப்பதில் தமிழர்கள் பன்னெடுங் காலமாகத் தங்களுடைய வல்லமையைக் காட்டி வந்திருக்கிறார்கள். பாம்புக் கடிக்கும், தேள் கடிக்கும் தரப்படக்கூடிய பச்சிலையைக் கூட மறைத்து வைக்கக்கூடிய ஒரு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருந்த சமூகத்தில், தமிழ்ப் புலவர்கள் தங்கள் புலமையினைத் தங்களுடைய புலமையினாலேயே மறைத்துப் பிறருக்கு அதை எளிதில் புலப்பட முடியாத வகையில் அரும்பெரும் காப்பியங்களை நமக்குத் தந்து சென்றிருக்கின்றார்கள்.

நமக்குள்ள குறை காப்பியங்கள் இல்லை என்ற குறை அன்று. வேறு பல நாடுகளுக்கும், வேறு பல மக்களுக்கும் இந்த அளவுக்குக் காப்பியங்கள் இல்லை; இலக்கியங்கள் இல்லை; பண்பாடுகூட இல்லை! ஆனால் நமக்குக் கிடைத்திருக்கின்ற இலக்கியத்தின் அளவுக்கு அதை உணர்ந்து கொள்ளக்கூடிய தனித் திறமை பெறத்தக்க அளவுக்கு நம்முடைய சமுதாயம் இன்றைய தினம் வளர்ந்தில்லை. ஆகையால்தான் டாக்டர் மு. வ. போன்றவர்கள் பழந்தமிழர்கள் தந்து சென்ற கருத்துக்களை—இலக்கியத்திலே காணக் கிடைக்கக்கூடிய கருத்துக்களை—காப்பியத்திலேயுள்ள கருவூலக் கருத்துக்களை எளிய நடையில், இனிய முறையில் எவரும் விரும்பி வரவேற்கத்தக்க வகையில் ஏடுகள் ஆக்கித் தந்திருக்கிறார்கள். அதன் மூலமாக நாம் பழந்தமிழருடைய காப்பியப் பெருமையை, கருத்துக் கருவூலத்தை எளிதிலே பெற்றுக்கொள்ள முடிகின்றது. அந்தச் சிறந்த தொண்டினை டாக்டர் மு. வ. அவர்கள் தமிழகத்திற்குத் தந்திருக்கின்றார்கள். அவர் செய்திருக்கின்ற பெருந்தொண்டுக்கு நாம் காட்டக்கூடிய கைம்மாறு, அவருக்கு நாம் ஆற்றக்கூடிய நன்றிக் கடன் திருவுருவப் படங்களைத் திறந்து வைப்பதன்று. அவர் பெயராலே மன்றங்களை அமைப்பது மட்டுமன்று. அவர் எவ்வழித் தமிழை வளர்த்தாரோ அவ்வழியிலே நின்று நாமும் நம்மாலான அளவுக்குத் தமிழை வளர்ப்போம் என்று உறுதி கொள்வதும் அத்தத் தமிழ் மொழி மூலமாகப் பெறத்தக்க கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அதனைப் புகுத்த வேண்டும் என்பதும் நாம் மேற்கொள்ள வேண்டிய உறுதியாகும்.

அந்த உறுதியினை மாணவர் சமுதாயம் பெற்றுவிடுமானால், மாணவர் சமுதாயம் அந்த உறுதியின்படி நடக்கவும் பழகிவிடுமானால் தமிழருடைய எதிர்காலத்தைப் பற்றி யாரும் அச்சப்படத் தேவையில்லை. தமிழருடைய எதிர்காலத்தைப் பற்றி யாரும் அச்சப்படத் தேவையில்லை என்று அண்ணாத்துரையே சொல்லி விட்டான், ஆகையினால் இங்கே எந்த மொழி ஆதிக்கம் செலுத்தினாலும் தமிழ்மொழி கெடாது என்று என்னுடைய வாதத்தை எனக்கு எதிராகவே திருப்புவதற்கு இன்றைய தமிழகத்திலே திறமைசாலிகள் நிரம்ப இருக்கின்றார்கள். ஆகையினாலே நான் சொல்வது, தமிழ் அழியாது என்று சொல்லுகின்ற நேரத்தில் எப்படிப்பட்ட அழியாப் பொருள் ஆனாலும் அதை அழிக்க

வேண்டுமென்ற நோக்கத்தோடு எடுத்துக்கொள்ளப்படுகின்ற முயற்சிகளை முறியடித்துத் தீரவேண்டியது தமிழ் கற்றோருடைய நீங்காத கடமையாகும். ஆகையினால் தமிழ் மொழி வளத்தோடு இருக்க வேண்டும்; தமிழர்களுக்கு அது வாழ்விக்கின்ற மொழியாக இருக்க வேண்டும், என்ற குறிக்கோளோடு தமிழ்மொழியினைப் பயிலுவதன் மூலமாக அதிலேயுள்ள கருத்துக் கருவூலங்களை மற்றவர்களுக்கு அளிப்பதற்கு நாம், நம்மை நாமே பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

பிற மொழிகளிலே இல்லாத அளவுக்குத் தமிழ் மொழியிலே என்ன தனிக் கருத்துக்கள் இருக்கின்றன என்று எவரேனும் என்னைக் கேட்பார்களானால் அவர்களுக்கு நான் ஒன்றைமட்டும் எடுத்துக்காட்டுக்குச் சொல்லுவேன். இன்றைய தினம் இந்தியா முழுவதிலேயும் பெரும் பெரும் தலைவர்கள், பெரிய சமூக சீர்திருத்தவாதிகள் தற்காலக் கருத்துக்களை மக்களிடத்திலே புகுத்தியாக வெண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்கள், தெளிவாகச் சொல்லுகின்றார்கள், சாதி முறை கூடாது என்று! சாதி முறைகள் நீக்கப்பட வேண்டுமென்று! சாதி முறை இருக்கின்ற வரையில் நம்முடைய நாட்டு மக்களிடையில் சமூக ஒற்றுமை கிடைக்காது என்றும், சமூக ஒழுக்கம் நிலைக்காது என்றும், ஒருவரையொருவர் வஞ்சிக்கின்ற தன்மையும், ஒருவர்க்கொருவர் தாழ்த்தப்படுகின்ற கொடுமையும் மறைந்துவிடா என்றும், பல பெரியோர்கள் சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் அந்தச் சாதிக்கு வித்தூன்றத் தக்க கருத்துக்கள் தமிழ் மொழியிலே உண்டா என்று பார்த்தால் சாதி என்ற சொல்லே கூடத் தமிழ் மொழியிலே இல்லை. சாதி என்ற சொல் இல்லாதது மட்டுமல்ல அந்தச் சொல்லுக்கு முதலெழுத்தாக இருக்கின்ற 'ஜ' என்ற எழுத்தே கூடத் தமிழ் மொழியிலே இல்லை. ஏனென்றால் தமிழரிடத்திலே சாதியில்லை.

அதைப் போலவே நம்முடைய தமிழ் மொழியில் இருக்கின்ற 'அறம்' என்ற சொல்லுக்கும் பிற மொழியிலே இருந்து தமிழ் மொழியிலே வந்து சேர்ந்திருக்கின்ற 'தருமம்' என்ற சொல்லுக்குப் நிரம்ப வேறுபாடு இருக்கின்றது. அறம் என்பதற்குரிய பொருளை நம்முடைய தமிழ்ப் பெரும் புலவர், அ. மு. பரமசிவானந்தம் அவர்களை நாளைய தினம் வகுப்பறையிலே விரிவாகக் கேட்பீர்களானால் எடுத்துச் சொல்லுவார்கள்.

"இம்மைச் செய்தன மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்"

என்று நம்முடைய வள்ளலைப் பற்றித் தமிழ்ப் பாடல் சொல்லுகின்றது. அறம் என்பது இங்குக் கொடுத்துவிட்டு அந்தக் கணக்கைக் கவனமாக வைத்துக்கொண்டிருந்து இறந்த பிறகு அங்கே போய்ப் பெரிய ஏட்டைப் புரட்டுகின்ற நேரத்தில், ஆறும் பக்கத்திலே, பதினாறுவது வரியிலே பாருங்கள். தைமாதம் வெள்ளிக்கிழமை வந்த ஒரு பிச்சைக்காரனுக்கு நான் ஒரு பிடி அன்னம் படைத்திருக்கின்றேன். அந்தத் தருமம் அதிலே குறிக்கப்பட்டிருக்கும் என்று சொல்லுவதன்று, அறம் என்பது· நல்லோர்கள் சென்ற வழி எது என்ற அடையாளத்தைக் கண்டு பிடிப்பதற்கு அறம் என்ற நெறியைத் தமிழர்கள் வகுத்தார்கள் ஆகையினால் அறம் என்ற தமிழ்ச் சொல், தருமம் என்ற மற்றச் சொல்லைப் பார்த்து விட்டு ஒரு புதிய சொல்லைப் புகுத்த வேண்டுமென்ற ஒரு மயக்கத்திலே ஏற்பட்டதன்று. சொல்லுக்குப் பின்னாலே கருத்து இருக்கின்றது; கருத்தோடு ஒட்டிய மரபு இருக்கின்றது; அந்த மரபுக்குச் சங்க இலக்கியம் ஆதாரம் அளிக்கின்றது; ஆகையால்தான் தமிழ் மொழியின் மூலமாக மட்டுமே நாம் சில கருத்துக்களைப் பெற முடியும்; அதனுடைய அருமை பெருமைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டுமானால் இன்றைய தினம் தமிழிலே இருந்து நமக்குக் கிடைக்கின்ற கருத்துக்களை இன்று இருக்கின்ற தற்கால உலகக் கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிக எளியனவாகவும் சாதாரணமாகவும் கூடத் தோன்றும்.

நான் அமெரிக்காவுக்குச் சென்றதைப் பற்றி நம்முடைய மாணவ நண்பர் குறிப்பிட்டார்கள். நான் அங்கே ஐக்கிய நாடுகள் மன்றத்தில் வெளியிலே இருந்து கண்குளிர ஒரு காட்சியைக் கண்டேன். ஐக்கிய நாடுகள் மன்றத்திலே உறுப்பினராக இருக்கின்ற பல்வேறு நாடுகளுடைய கொடிகள் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாகப் பட்டொளி வீசிப் பறந்திடக் கண்டேன். அதைப் பற்றி அந்த ஐக்கிய நாடுகள் மன்றத்தினுடைய பெருஞ் செயலாளர் ஊதாண்ட் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்த பொழுது அவரிடத்திலே நான் சொன்னேன் "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற அடிப்படையில் நீங்கள் எல்லாம் நம்முடைய ஊர்தான்; எல்லோரும் நம்முடைய மக்கள்தான்

என்பதை விளக்குகின்ற வகையில் இங்கே பன்னெடு நாடுகளின் கொடிகளைப் பறக்கவிட்டிருக்கிறீர்கள். ஆனால் உள்ளே உட்காருகின்றபொழுது தத்தமது கொடி உயரவேண்டும்; மற்றவர் கொடி தாழவேண்டும் என்ற எண்ணத்தோடு கூடச் சிலர் உள்ளே அமர்ந்திருப்பதாக நீங்கள் சில வேலைகளில் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இந்த நல்ல கருத்தை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எங்கள் தமிழர்கள் தங்கள் புலவர்கள் மூலமாக "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று தெளிவாகச் சொல்லி இருக்கின்றார்கள். உங்களால் முடிந்தால் அதை ஐக்கிய நாடுகள் மன்றத்தில் அந்தத் தமிழ் மொழியையும் அதனுடைய மொழிபெயர்ப்பையும் பொறித்து வைப்பீர்களானால் இன்று தாழ்ந்திருந்தாலும் ஒரு காலத்தில் வாழ்ந்திருந்தோம் என்பதை உலகம் ஒப்புக்கொள்ளும் என்று ஊதாண்ட் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

அப்படிப்பட்ட நல்ல பல கருத்துக்கள் நம்மிடத்திலே இருந்தாலும் அந்தக் கருத்துக்கள் எல்லாம் மங்கிய காரணம் என்ன? எனக்குள்ள திகைப்பு அது! அந்தக் கருத்துக்களை எல்லாம் தமிழர்கள் கைவிட்ட காரணம் என்ன? நான் கேட்டு பதில் கிடைக்காத வினா அது.

நாம் விரும்பி ஏற்றுக்கொண்ட கருத்துக்கள் நம்முடைய மரபுக்கு ஒத்தனவாக இருந்தும் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற கருத்தைத் தமிழர்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்றுக் கொண்டிருந்தும் அதைப் பிற்காலத்திலே பாரதிதாசன் புரட்சிக் கவிதை மூலமாகவும், டாக்டர் மு. வ. அவர்கள் உணர்ச்சி தரும் கட்டுரைகள் மூலமாகவும் விளக்கிச் சொல்லவேண்டிய வகையில் இடையில் நம்முடைய சமூகத்தில் சாதிகள் புகுந்த காரணம் என்ன? பேதங்கள் ஏற்பட்ட வகை என்ன? எந்த ஆதாரத்தின் பேரில் அந்தச் சாதிகளும் பேதங்களும் இருக்கின்றன! அவைகளை நீக்க வேண்டுமானால் நமக்கு அதற்கு ஏற்ற தெளிவும் துணிவும், ஆர்வமும், எழுச்சியும், எதிலிருந்து நமக்குக் கிடைக்கும் என்று பார்த்தால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய கவிதைகளிலேயும், டாக்டர் மு. வ. போன்றோரின் எழுத்துக்களிலேயும் நாம் அந்த எழுச்சியையும், ஆர்வத்தையும், உணர்ச்சியையும் பெறலாம். ஆகையால்

அவர்கள் எழுதி இருக்கின்ற எழுத்து இக்காலத்திற்கு மட்டுமன்றி எந்தக் காலத்திலே தமிழர்கள் சோர்ந்தாலும், எந்தக் காலத்தில் தமிழ்க் கருத்துக் கொஞ்சம் நிலைகுலைந்து போக நேரிட்டாலும் அவருடைய கவிதைகளும், இவருடைய கட்டுரைக் கருத்துக்களும், தமிழருக்குத் தமிழனை எடுத்துக் காட்டி நிமிர்ந்து நிற்கச் சொல்லும். அப்படிப்பட்ட சிறந்த தொண்டினை டாக்டர் மு. வ. அவர்கள் தம்முடைய பேச்சின் மூலம் எழுத்தின் மூலம் காட்டியிருக்கின்றார்கள்.

டாக்டர் மு. வ. வுக்கும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கும் ஓர் ஒற்றுமையும் உண்டு; ஒரு வேற்றுமையும் உண்டு. புரட்சிக் கவிஞரைப் பார்க்கின்ற பொழுதே அவருடைய துள்ளுகின்ற மீசையையும், குறு குறுப்பான கண்களையும், பேசுகின்ற பொழுதே கோபம் கொந்தளித்து வருவதையும் பார்த்தவுடன், 'ஆம் இவர் உண்மையில் புரட்சிக் கவிஞர் தாம்' என்று பாட்டைக் கேட்காமலேயே கூடப் பலர் தீர்மானித்து விடுவார்கள். ஆனால் டாக்டர் மு. வ. அவர்களைப் பார்த்துவிட்டு அவர்களுடைய ஏடுகளைப் படித்தால், இந்த சாந்த புருஷரா இவ்வளவு புரட்சிகரமான கருத்துக்களை எழுதி இருக்கிறார்? உண்மை தானா? என்று எண்ணிப் பார்ப்பார்கள். அப்படித் தோற்றத்திலேயும் நடைமுறையிலேயும் தன்மையிலேயும் அமைதியே உருவாக இருந்துகொண்டு அந்த அமைதியைத் துணைக் கொண்டு, ஆர்வத்தை உடன் வைத்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு வழி காட்டியாகப் பல அரிய கருத்துக்களை அவர் தந்திருக்கின்றார். அந்தப் பெரியாருடைய திருவுருவப் படம் இந்த இடத்திலே திறந்து வைக்கப்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தம்பி கருணாநிதி படங்கள், சிலைகள், இவைகளெல்லாம் இறந்தவர்களுக்கா, இறவாதவர்களுக்கா என்று எடுத்துச் சொன்னார்கள். உங்களைப் பொறுத்தவரையில் இரண்டு கட்சிக்கும் சமமாக, இறந்த ஒருவருக்கும், இறவா ஒருவருக்கும் நீங்கள் திறந்து வைத்திருக்கின்றீர்கள். மாணவர்களிடத்திலே உள்ள அந்த நேர்த்தியான இராசதந்திர முறையை நான் பெரிதும் மகிழ்ந்து பாராட்டுகிறேன். ஆனால் இருவரும் இறவாப் புகழ் படைத்த தமிழ் மொழியின் காவலர்கள். தமிழ்ச் சமுதாயம் இறவாப் புகழ் பெற்று விளங்க வேண்டுமானால் அப்படிப்பட்ட பெரியார்களின் கருத்துக்கள் என்றென்றும் நம்முடைய உள்ளத்

திலே ஊடுருவிப் பாய்ந்து கொண்டிருக்க வேண்டும். அதற்கு இந்தத் திருவுருவப் படங்கள் துணை செய்யும் என்பதில் எள்ளள வும் ஐயப்பாடு இல்லை.

இந்த இலக்கிய விழாக்கள், படத்திறப்பு விழாக்கள் இவை களிலே கலந்து கொள்ளுகின்ற நேரத்திலேதான் நான் இலக்கியப் பணியில் எந்த அளவிற்கு ஈடுபட வேண்டும் என்று எனக்கு ஆர்வம் இருக்கின்றதோ அந்த அளவிற்கு ஈடுபட முடியாத நிலையினை நான் உணர்கின்றேன். உள்ளபடி என்னுடைய இயல்புக்கும் எனக்கு இருக்கின்ற பல்வேறு வகையான சுற்றுச் சார்புகளுக்கும் அரசியலில் நான் சிக்கிக்கொள்ளாமல் இருந் திருப்பேனேயானால் இலக்கியத் துறையிலேதான் என்னுடைய முழுநாட்டமும் சென்றிருக்கும். ஆனால் அரசியல் துறையிலே யும் யாரேனும் சிலபேர் இருந்து தீரவேண்டும். நல்லவர்கள் வருகிற பாதையிலேனும் நாங்கள் இருந்து தீரவேண்டும். வல்லவர்கள் வருகிற வரையிலேனும் நாங்கள் இருந்து தீரவேண்டும். ஏன் என்றால் அரசியல் என்பது யாருமில்லாத வெற்றரங்கம் அன்று. நமக்கு விரும்பாதவர்கள் சில வேளை களிலே இருக்கலாம். நாம் விரும்புவோர்கள் வரலாம், ஆனால் அவர்கள் செய்கின்ற எல்லாக் காரியமும் நாம் விரும்புகிற காரியமாக இல்லாமல் சில விரும்பாத காரியமாகிவிடலாம். இது அரசியலுக்கே உரிய சில தனித் தன்மைகளாகும். ஆனால் அரசியல் மூலமாகவோ அரசு மூலமாகவோ சாதிக்கக் கூடியதை விட, இலக்கியத்தின் மூலமாகப் பல்வேறு வகையான நல்ல காரியங்களைச் சமூகத்திற்கு ஆற்றமுடியும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை உள்ளவன்.

இலக்கியத்திலே அதிகமான அளவிற்கு ஈடுபாடு கொள்ள முடியாவிட்டாலும் அதில் ஈடுபாடு கொண்ட பெரியோர்களை நான் மதிப்பதில் தவறிழைப்பவன் அல்லன். இலக்கியத்திலே என்ன இருக்கிறது? இலக்கியம் கற்றால் போதுமா? என்ற முறையிலே பேசிக் கொண்டிருக்கக் கூடிய அரசியல்வாதிகளில் நான் ஒருவன் அல்லன். நான் கற்க முடியவில்லையே என்ற வருத்தமும், பிறர் கற்றிருக்கிறார்களே என்ற மகிழ்ச்சியும் அவர்கள் இலக்கியத் துறைக்கே நல்ல முறையில் பணியாற்று கிறார்கள் என்பதிலே பெருமிதமும் மிகுதியாகக் கொண்டவன்; அந்த முறையிலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு

இருபதாண்டுகளுக்கு முன்னாலே பரிசளிப்பு நடத்தி, அவரிடத்திலே பணமுடிப்பு கொடுத்தான பிறகு, அந்தப் பணமுடிப்பை எடுத்துக்கொண்டு அவரோடு நான், ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு திருவல்லிக்கேணியில் அவர்கள் தங்கி இருந்த இடத்திற்கு போய்க்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் எனக்கும் பெரியாருக்கும் ஓரளவுக்குச் சிறு மனத்தாங்கல். அதைப் போலவே பாரதிதாசன் அவர்களுக்கும் பெரியாரிடத்திலே ஓரளவு மனத்தாங்கல் இருந்த நேரம். அந்த இரண்டு சூழ்நிலைக்கு இடையில் பாரதிதாசன் அந்த வண்டியிலே போய்க் கொண்டிருந்த நேரத்தில் என்னிடம் சொன்னார்கள். நீ கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நாம் தமிழர்களுக்கென்று ஒரு அரசியல் கட்சி தொடங்கலாம், நீயும் நானும் இருந்து நடத்தலாம் என்று என்னிடத்திலே சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே சொன்னேன், "ஐயா! நீங்கள் அரசியலுக்கு வரவேண்டாம் நீங்கள் கவிதை உலகத்திலே நடமாடுங்கள். கவிதை உலகத்திலே நீங்கள் நடமாடுகின்ற உயரத்திற்கு எந்த அரசியல் வாதியும் வர முடியாது! அரசியல்வாதிகளின் மத்தியில் வந்து இருந்து கொண்டு கவிதை எழுதுவது என்றால் அது அரசியல் கவிதையாகத்தான் இருக்கும்: அதற்கு வயது ஆறு மாதமாகத்தான் இருக்கும். ஆகையினாலே நீங்கள் இந்த அரசியல் காரியத்தில் ஈடுபட வேண்டுமென்று கருதாமல், நீங்கள் நாங்கள் கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இந்தியாவிலே உள்ள பெரு மலைகளுக்கெல்லாம் சென்று வாருங்கள்; நதிகளுக்கெல்லாம் சென்று வாருங்கள்; பொழிலெல்லாம் கண்டு வாருங்கள்; மக்களையெல்லாம் பார்த்து வாருங்கள்; அவைகளையெல்லாம் பார்த்துப் பார்த்து நீங்கள் பெறுகின்ற நல்ல கருத்துக்களைக் கவிதை வடிவத்திலே கொடுங்கள். அதற்குத்தான் இந்த விழா நடந்தது" என்று நான் சொன்னேன். என்னை அரசியலுக்கு வரவேண்டாம் என்று அண்ணாத்துரை தடுத்துவிட்டானே என்று அவர்கள் வருத்தப்பட மாட்டார்கள். இந்த அரசியலிலே இருந்துகொண்டு நான் படுகின்ற அல்லலை அவர் பார்த்திருப்பாரானால் அவருக்குச் சொன்னதை—அது எவ்வளவு நல்லது என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆனால் அதற்குப் பிறகும் அவர்கள் 'பாண்டியன் பரிசு' போன்ற பல அரிய ஏடுகளை நமக்குத் தந்து சென்றிருக்கிறார்கள். அவர் கொடுத்

திருக்கின்ற கவிதைகளை மேலும் கவிதைகளாக்கித் தருவதற்கு நம்முடைய தம்பி கருணாநிதி போன்றவர்கள் நிரம்ப இருக்கின்றார்கள்.

கல்லூரிகளிலே உள்ள மாணவர்கள் நடத்துகின்ற கையேட்டுப் பிரதிகளை நான் அடிக்கடி பார்க்கிறேன். மாணவர்கள் எவ்வளவு அழகிய முறையில் கவிதை நடையைக் கையாளுகின்றார்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்தில் எனக்கு முப்பது வருடத்திற்கு முன்னாலே, இருபத்தைந்து வருடத்திற்கு முன்னாலே நான் என்ன பேசிகொண்டிருந்தேனோ அது நினைவிற்கு வருகின்றது. ஆனால் பேச இயலவில்லை. ஆனால் இன்றைய தினம் அந்தக் கவிதை நடை கல்லூரிதோறும், உயர்நிலைப் பள்ளி தோறும், தமிழ் உள்ளந்தோறும் நடமிட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகையினால் அப்படிப்பட்ட தமிழ் மொழிக்கு ஒரு நல்ல ஆர்வம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில் தமிழ்ப் பெரியார்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும், படத்திறப்பு விழாக்கள் நடத்துவது, நாம் அவர்களுக்குக் காட்டுகின்ற மரியாதை அன்று. அவர்கள் தம்முடைய எழுத்தின் மூலமாகவே இறவாத மரியாதையைப் பெற்றவர்கள். ஆனால் நாம் அவர்களோடு ஒன்றிப் போவதிலே இன்றைய தினம் விழித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை உலகத்திற்கு அறிவித்துக் கொள்ளத்தான் இந்தத் திறப்பு விழாக்கள் நடக்கின்றன.

இந்தத் திறப்பு விழாவில் நீங்களும், புரட்சிகரமான எண்ணங்களைப் புரட்சிகரமான முறையிலே பேசியும் எழுதியும் வருகின்ற தம்பி புரட்சிக் கவிஞர் படத்தையும், கொஞ்சம் அமைதியாகவும் ஆனால் அதே நேரத்தில் ஆர்வத்தை இழந்து விடாமலும் இருக்கின்ற என்னை டாக்டர் மு. வ. வின் படத்தையும் திறந்து வைக்கும்படி பொருத்தம் பார்த்து ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள்.

பச்சையப்பன் கல்லூரி தமிழ் மொழிக்கு ஓர் அரண்போல் விளங்கி வருவது. நான் இந்தப் பச்சையப்பன் கல்லூரியிலே தமிழை முறையாக எடுத்துப் படித்தவன் அல்லேன். இண்டர் மீடியட் வகுப்போடு என்னுடைய தமிழ் நின்றுவிட்டது. அதற்குப் பிறகு நான் ஆனர்சு வகுப்பிற்குப் போனதும் தமிழ் கிடையாது. ஆனால் நான் படித்த இரண்டாண்டுகளில்

அப்பொழுதிருந்த இரண்டு தமிழ்ப் பெரும் புலவர்கள், எனக்கு ஊட்டிய தமிழார்வம், நான் அதற்குப் பிறகும் தொடர்ந்து தமிழ் மொழியிடத்திலே பற்றுவைத்துப் பயிலும்படியான நிலையை எனக்கு உண்டாக்கிற்று. ஆகையினுலே இந்த நேரத்தில் எனக்குத் தமிழ் ஆர்வத்தைத் தந்த இந்தக் கல்லூரியினுடைய தமிழ்ப் பேராசிரியர்களாக இருந்த மோசூர் கந்தசாமி முதலியார் அவர்களையும், மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களையும் மறப்பதற்கு இல்லை. மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கள் ஆசிரியராய் இருந்த காலம் இப்போதிருக்கின்ற காலம் போன்ற தன்று.

நாங்களெல்லாம் மாணவர்களாக இருந்த காலத்தில் எனக்கு நன்ருக நினைவு இருக்கின்றது, நான் படித்த ஐந்து வருடத்தில் என்னுடைய கல்லூரி முதல்வரை நான் மொத்தத்தில் மூன்று தடவை பார்த்திருக்கின்றேன். அதுகூட முன்னுலே இரண்டு பேர் வர, பின்னுலே இரண்டுபேர் தைரியம் கொடுக்க முதல்வரைப் போய்ப் பார்த்தேன். அப்பொழுதெல்லாம் முதல்வரைப் பார்ப்பதென்ருல் மாணவர்களுக்கு அந்த அளவுக்குத் தயக்கம்.

அப்படிப்பட்ட காலத்திலே நான் படித்தபோது எனக்கு நன்ருக நினைவிருக்கின்றது. முதல் வகுப்பு. நான் உட்கார்ந்தும் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். உங்களிலே பலர் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களைப் பார்த்திருக்க முடியாது. அவருடைய படத்தைப் பலர் பார்த்திருக் கலாம். நல்ல கன்னங்கரிய மேனி; காதிலே ஒரு வெண்ணிறமான கடுக்கன்; நெற்றியிலே மஞ்சள் நிறச் சந்தனம்; ஒழுங்காகப் பளபளப்பாக உள்ள பற்கள். அவர் சிரிக்க ஆரம்பிக்கின்ற நேரத்தில் கரு நிறத்திற்கும் வெள்ளைப் பற்களுக்கும் மிகப் பொருத்தமாக இருக்கும். அதை எண்ணித்தானே என்னவோ ஆனுல் ஆண்பாலுக்கல்ல, பெண்பாலுக்காகப் பாடி வைத்தார்கள் 'கறுப்பில் அழகியடா' என்று! ஆனுல் இது ஆடவரிலேயே கறுத்த உருவமாக இருந்தாலும் மிகப் புன்னகை ததும்புகின்ற ஒரு உருவம். முதல் வகுப்பறையிலே எங்களுக்குச் சொன்னுர்கள். உங்களை நான் 'அவன்' என்றுதான் அழைப்பேன் 'அவர்' என்று அழைக்கமாட்டேன். நீங்கள் அதற்குக் கோபித்துக்கொள்ளக் கூடாது. ஏனென்ருல் அவன், அவர், அது இந்த மூன்று சொற் கள்தாம் உள்ளன. 'அது' என்று அழைப்பது அஃறிணையாகும்.

அஃறிணை இல்லையென்றாலும் அது, அடுக்களைக்குப் பக்கத்திலே அது வந்ததா? அது போச்சா? என்று பேசிக்கொள்கின்றதிலே முடியுமே தவிர வகுப்பறைக்கு வராது. 'அவர்' என்று நான் சொல்லுவதானால் வயதிலே உங்களைவிடப் பெரியவன் என்ற முறையில் நான் உங்களை 'அவர்' என்று கூப்பிட்டால் நீங்கள் என்னை என்ன என்று கூப்பிடுவீர்கள்? ஆகையினால் 'அவர்' என்ற சொல்லும் பயன்படாது. ஆகையினால் 'அவன்' என்று தான் அழைப்பேன் என்று சொன்னார். அந்தச் சொல் எங்களுக்கு அன்றையதினம் ஒரு செல்லச் சொல்லாகவே இருந்தது. காதில் விழுகின்றபொழுதே அது ஓர் இனிமை கொடுத்தது.

அதுபோல் மோசூர் கந்தசாமி முதலியார் அவர்கள் ஒரு மணி நேரம் தமிழ் வகுப்பு நடத்துகின்றாரென்றால் அதிலே அரைமணி நேரந்தான் தமிழிருக்கும். மற்ற அரைமணி நேரம் ஆங்கிலம்தான் இருக்கும். அவ்வளவு ஆங்கிலத்திலேயும் புலமை பெற்றவர்கள். தமிழ்க் கவிதைகளை அவர்கள் மேற்கோளுக்காக எடுத்துச் செல்லுகின்ற நேரத்தில் (Shelley) செல்லியைச் சொல்லுவார். பைரனை மேற்கோளுக்குக் காட்டுவார்; சேக்சுபியரை விரிவாகக் காட்டுவார். இப்படி இரண்டையும் கலந்து அவர் எங்களுக்குத் தமிழ் அறிவை ஊட்டினார். இப்பொழுதும் அந்தத் தமிழ்ப் பண்பாடும், தமிழ் ஆற்றலும் பச்சையப்பன் கல்லூரியில் நிரம்ப இருக்கின்றது. அதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர்தாம் நம்முடைய டாக்டர் மு. வ. அவர்கள். அவருடைய மரபையொட்டி வழி வழியாக உங்களுக்குச் சிறந்த தமிழ்ப் பெரும்புலவர்கள் கிடைத்திருக்கிறார்கள். ஆகையினால் தான் பச்சையப்பன் கல்லூரி தமிழ் மொழிக்கு ஓர் அரண் என்று நான் குறிப்பிட்டேன். அந்த அரணில் இரு பெரும்புலவர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்படுவது மிகப் பொருத்தமானதாகும். இந்த அரணிலே திறந்துவைக்கப்படுகின்ற இந்தத் திருவுருவப் படங்கள் அவர்கள் கொண்டிருந்த கருத்துக்களை உங்கள் உள்ளத்திலே செம்மையாக இருக்கச் செய்யும். அதன் மூலமாக இவைகளைச் சமூகத்திற்குத் திருப்பித் தருவதற்கு ஏற்ற ஒரு நல்லார்வத்தை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகின்றேன்.

இன்றையதினம் தமிழர்களுடைய கருத்துக்களிலே பல கருத்துக்கள் உலகத்திலே பல்வேறு நாடுகளுக்குத் தேவைப்

படுகின்றன. அவைகளையெல்லாம் அளிக்க வேண்டுமானல் தமிழ் நாட்டு அளவிற்காயினும் முதலில் தமிழருக்கு ஏற்றம் இருக்கவேண்டும். அந்த ஏற்றம் எப்படி ஏற்படவேண்டுமென்று மாணவர் தலைவர் செல்வராசு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத நேரத்தில் தாராளமாகப் பேசுவ தென்பது சுவையான காரியம்; எளிதான காரியம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு அதை நிறைவேற்றிக் கொடுப்பதிலே உள்ள பல்வேறு சிக்கல்களை நான் உணருகின்றேன். சிக்கல்கள் இருந்தால் என்ன என்று நம்முடைய நண்பர்கள் சொல்லலாம். சிக்கல்கள் இருந்தால் என்ன என்று சிக்கிலிலே சிக்காதவர்கள் சொல்லலாம். ஆனல் சிக்கலிலே சிக்கிக்கொண்டவர்கள் சிக்கல் இருந்தால் என்ன என்று சொல்லுவார்கள் என்று நீங்கள் கருதமாட்டீர்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

ஆனல் எவ்வளவு சிக்கல் இருந்தாலும் என்னிடத்திலே உள்ள முழுவல்லமையும், என்னிடத்திலே உள்ள திறமையும், என்னிடத்திலே உள்ள ஆர்வமும், என்னுடைய நாட்களில் கிடைத்திருப்பதைவிட அதிகமான அளவிற்குத் தமிழ் மொழிக்கு வாய்ப்பும், ஏற்றமும் கிடைப்பதற்கே பயன்படுத்தப்படும் என்பதை உறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின் றேன். அதைப்போலவே தமிழ் மொழியை அழித்தொழிக்கக் கூடிய எந்தவிதமான வலிவுகள், எந்தவிதமான வன்முறைகள், எந்தவிதமான சுற்றுச் சார்புகள் வந்து சேர்ந்தாலும், புகுத்தப் பட்டாலும் அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு என்னுடைய முழு வலிவும் பயன்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத் தில் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். ஆனல் இதன் மூலமாக மட்டும் நாம் மேற்கொள்ளுகின்ற காரியம் வெற்றி பெற்றுவிட முடியாது.

சென்ற கிழமை தில்லியிலே இருந்து ஒரு பெரிய அதிகாரி என்னிடத்திலே வந்து பேசிக்கொண்டிருந்தார்கள், என். சி. சி. விடயமாக! என். சி. சி. யிலே இருக்கின்ற இந்திச் சொற்களை நீக்கினல் ஒழிய அந்தப் படைப் பிரிவை இங்கே நாங்கள் அமைப் பதற்கு இல்லை என்று நான் அறிவித்திருப்பது உங்களிலே அனைவருக்கும் நினைவிலே இருக்கும் என்று கருதுகிறேன். நான்

அறிவித்த நாளிலே இருந்து மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இது சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்துக்கள் நடந்தபடி இருக்கின்றன. அவர்கள் பத்துச் சொற்கள்தாமே என்று எழுது கின்றார்கள். நான் திருப்பி, பத்தே சொற்கள்தாமே நீக்கிவிடுங் களேன் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இன்னும் அதற்கொரு முடிவு வரவில்லை. ஆனால் இதற்கிடையில் இதைப் பற்றிப் பேச வந்த தில்லியிலே உள்ள பெரிய அதிகாரி சொன்னார் கள், மாணவர்களிலே பலபேர் இந்தி இருந்தால்கூடப் பரவாயில்லை என். சி. சி. வேண்டுமென்று கேட்கிறார்கள் உங்களுக்குத் தெரியுமா? என்றார்கள். எனக்குத் தெரியாது என்றேன். அது எப்படித் தெரியமுடியும் என்றார். நான் சொன்னேன், நான் புகுத்தி இருக்கின்ற இரு மொழிக் கொள்கையையும், இந்திச் சொற்களை நீக்கிவிட்டால்தான் என். சி. சி. இங்கு இயங்கும் என்பதையும் மாற்றுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு என்றேன். என்ன என்றார். என்னை மாற்றிவிடுங்கள் என்றேன். என்னுடைய அரசு இல்லை என்றால் இந்தியை விரும்புகின்ற அரசு வரும் என்று பொருள். என்னுடைய அரசு இல்லையென் றால் இந்தி இருந்தாலும் என். சி. சி. இருக்கும் என்று சொல்லு கின்ற அரசு வரும் என்று பொருள். அந்த அரசு வருகிறவரையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; வரும் என்ற நம்பிக்கை இருந்தால்! அது வருவதற்கு எவ்வளவு காலதாமதம் ஆனாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் இருபது வருடம் பொறுத்துக் கொண்டுதான் இந்த நிலைக்கு வந்தோமே தவிர எடுத்த எடுப்பி லேயே நாங்கள் வந்துவிடவில்லை. ஆகையினால் என்னைப் பொறுத்தவரையில் அந்த இரண்டு உறுதியில் இருந்து என்னை நீக்குவதற்கு உங்களுக்கு அரசியல் சட்டத்திலே உள்ள அதிகாரத் தின்படி இதைச் செய்கிறாயா? வெளியே போகிறாயா? என்று கேட்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கின்றது. நீங்கள் அப்படிக் கேட்கின்ற நேரத்தில் நான் போகிறேன் என்று சொல்லமாட் டேன்! என்னை அனுப்புங்கள் என்றுதான் நான் சொல்லுவேன். என்னை நீங்கள் அனுப்பச் சம்மதித்தால் அனுப்புங்கள் என்று நான் சொன்னேன். ஏனென்றால் அந்த அதிகாரி எனக்கு மிகவும் வேண்டியவர். ஆகையினாலே அவரிடத்திலே தாராளமாகப் பேசினேன்.

எதற்கு இதைச் சொல்லுகிறேன் என்றால் அரசு நடத்துகிற வர்களாலே மட்டும் இந்தக் காரியத்திலே உறுதியாக இருப்பதன்

மூலம் மட்டும் வெற்றி கிடைத்துவிடாது. தேர்ச் சக்கரம் நன்ருக இருக்கலாம்; இலாவகமாக உருளலாம்; கட்டப்பட்ட புரவிகள் புயல் வேகத்தில் செல்லக் கூடியவைகளாக இருக்கலாம்; அதை ஓட்டக்கூடிய சாரதியும் திறமைசாலியாக இருக்கலாம்; ஆனுல் பாதையில் ஒரு பள்ளம் வந்துவிடுமானுல் எவ்வளவு பெரிய தேராஞலும், ஓட்டுபவன் எவ்வளவு திறமைசாலியாஞலும், புரவிகள் எவ்வளவு ஆற்றல் உள்ளவையாஞலும் பள்ளத்திலே சக்கரம் இறங்கிஞல் கவிழுமே தவிர நடை போடாது. அதைப்போல் சமூகம் முழுவதும் இந்த உறுதியில் நிலேத்து நின்ருல் ஒழிய இந்தக் காரியங்களிலே வெற்றி பெற்றுவிட முடியாது.

தமிழ் மொழியிலே நாம் காட்டுகின்ற ஆர்வத்தின் அளவுக்கு உலகத்திலே பல்வேறு நாடுகளிலே மொழி விடயத்திலே இருக்கின்ருர்களா என்ற கேள்வியைச் சிலர் கேட்கின்ருர்கள். மொழிப் பிரச்சினே என்பது மிகச் சிறிய பிரச்சினே. பெரிய பிரச்சினே சோற்றுப் பிரச்சினே; வேலேயில்லாத பிரச்சினே; பொருளாதார முன்னேற்றப் பிரச்சினேயே தவிர மொழிப் பிரச்சினே அல்ல முக்கியமான பிரச்சினே என்று சொல்லுகின்ருர்கள். அது உண்மைக்கு நேர்மாருனது.

நான் பிரான்சு நாட்டிற்குச் சென்றிருந்த நேரத்தில் பிரெஞ்சு நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களிலே பலரிடத்தில் பேசியபொழுது அவர்கள் ஆங்கிலம் அறிந்திருந்தாலும் பிரெஞ்சு மொழியில்தான் பேசுகிருர்கள். ஏனென்று கேட்டதற்குச் சொன்ஞர்கள். ஒரு காலத்தில் ஆங்கிலம் அகில உலக மொழியாக மாறுவதற்கு முன்ஞலே சிறந்த மொழியாக எங்களுடைய பிரெஞ்சு மொழிதான் இருந்தது. இன்றைய தினம் அது தாழ் நிலேக்குச் சென்றுவிட்டிருக்கிறது. நாங்கள் மறுபடியும் அந்தப் பிரெஞ்சு மொழிக்கு உரிய ஏற்றத்தைக் கொண்டுவர விரும்புகின்ருேம். பிரெஞ்சு மொழியில்தான் பேசுகிருேம் என்று சொன்ஞர்கள், என்னேப் பார்த்து இங்குள்ளவர்கள் சொல்லுகின்ற வாதத்தைச் செல்லுமென்று எண்ணிக்கொண்டு நான் அவரிடத்திலே சொன்னேன், It is a very small problem என்றேன். இது மிகச் சின்ன விடயமாயிற்றே என்றேன். To those who do not understand the connection between a nation and its langnage என்று அவர்கள் சொன்ஞர்கள்.

ஒரு தேசிய இனத்திற்கும் அதனுடைய மொழிக்கும் உள்ள தொடர்பு தெரியாதவர்களுக்குத்தான் இது சின்ன விடயமே தவிர அறிந்தவர்களுக்கு அது சின்ன விடயமன்று என்று அவர்கள் சொன்னுர்கள்.

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த நேரத்தில் கனடா நாட்டி லிருந்து வந்திருந்த பலரை நான் பார்த்தேன். கனடா நாடு என்பது இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக Federal Constitution என்று ஆங்கிலத்திலே சொல்லுகின்ருர்களே கூட்டாட்சி (கூட்டாட்சி என்பதைவிட நமக்குப் பழக்கப்பட்டுவிட்ட சொல், சமஷ்டி அரசு) அந்தச் சமஷ்டி அரசிலேதான் இருநூறு ஆண்டு களுக்கு மேலாக கனடா இருந்திருக்கிறது. அங்கே பிரெஞ்சு மொழி பேசுகின்றவர்களும் ஆங்கில மொழி பேசுகின்றவர்களும் தங்களைக் கனடா நாட்டு மக்கள் என்றுதான் அழைத்துக்கொள் ளுகின்ருர்கள். கனடா நாட்டு அரசுக்குத்தான் அவர்கள் கட்டுப் பட்டு இருக்கிருர்கள். ஆனுல் இந்த இரண்டு மொழிகளுக்கும் ஒருமித்த உரிமை தரப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி கனடா நாட்டிலே கிளம்பி, அது பெருத்த கிளர்ச்சியாக வலுத்தது. இத்தனைக்கும் அந்தக் கிளர்ச்சியை அதிகமான அளவிற்கு ஊக்குவித்தவர்கள் கனடா நாட்டிலே ஒரு மாநிலமான கியூபெக் என்ற ஒரு மாநிலத்தார்தாம். அங்குப் பிரேஞ்சு மொழி பேசு கிறவர்கள் அதிக அளவிலே இருக்கின்ருர்கள். அதற்குப் பிறகு அந்தக் கனடா நாட்டு அரசியல்வாதிகள் அதற்கென்று ஒரு தனிக் குழுவை நிறுவி, ஆய்வு நடத்தி இரண்டு மொழிக்கும் ஒருமித்த உரிமை தருகிறேம் என்று பேசி அரசியல் சட்டத்திலே அதைப் புகுத்தி ஓரளவிற்கு அந்தக் கொந்தளிப்பை அடக்கி இருக்கிருர்கள். ஓரளவுக்குத்தான் முழு அளவுக்கு அன்று!

ஐரோப்பாக் கண்டத்திலேயும் பெல்சியம் என்ற நாடு மிகச் சிறிய நாடு. அந்தப் பெல்சிய நாட்டிலேயும் இரண்டு மொழி களுக்குள்ளே போட்டி. இரண்டு மொழிக்காரர்களுக்குள்ளே யார், யாரை ஆதிக்கம் செலுத்துவார்களோ என்ற அச்சம். அதன் காரணமாக இரண்டு மாதத்திற்கு முன்னுல் வரையில் அங்குத் தேர்தல் முடிந்து தேர்தலிலே வெற்றி பெற்ற பிறகும், குறைந் தது எட்டுத் கிழமைகள் அமைச்சரவை அமைக்க முடியாமல் நிர்வாகம் நடைபெற முடியாமல், நிர்வாகம் நடத்த விடாத ஓர் இக்கட்டான நிலைமை ஏற்பட்டு இப்பொழுதுதான் அங்கு

ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அமைச்சரவை அமைத்திருக்கின்றார்கள். ஆகையினால் மொழிப் பிரச்சினை என்பது யாரோ சிலர் வேண்டுமென்றே கிளப்பிவிட்டிருக்கின்ற சின்னஞ் சிறு விடயமென்று சொல்லுபவர்கள், உண்மையில் மொழி என்றால் என்ன என்பது பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும், டாக்டர் மு. வ. அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கின்ற கருத்துக்களை ஒருமுறை, எங்களுக்காக அல்ல என்றாலும், அந்தப் பிரச்சினைக்காக அல்ல என்றாலும், இந்தப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்ட நிலையை அடைந்திருக்கின்ற தமிழ்ப் பெரும் புலவர்கள் என்ற காரணத்திற்காக அந்தக் கருத்துக்களை அருள் கூர்ந்து பார்க்க வேண்டுமென்று அவர்களை நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளுகிறேன்.

அப்படிப்பட்ட மொழிப் பிரச்சினையில் மாணவர்களுக்கு இன்றைய தினம் மிகப் பெரிய பங்கு இருக்கிறன்து; மிக நல்ல ஆர்வம் இருக்கின்றது. அந்த ஆர்வத்தை நான் மிகுதியாகப் பாராட்டுகின்றேன். நாங்கள் கல்லூரியிலே படித்த காலத்தில் இந்த அளவிற்குத் தமிழ் ஆர்வம் இருக்க வேண்டுமென்ற எண்ணம்கூடத் தோன்றியதில்லை. ஆனால் மிக வேகமாகக் கடந்த இருபது ஆண்டுகளில் இருநூறு ஆண்டுகள் பாடுபட்டால் மட்டுமே பெறக்கூடிய ஒரு பெரிய வளர்ச்சியைத் தமிழ் ஆர்வத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் நாம் பெற்றிருக்கின்றோம். அதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் மிக முன்னணியிலே வைத்துப் போற்றப்படத்தக்கவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும், டாக்டர் மு. வ. அவர்களும்.

தமிழ் மொழியைப் பற்றியும் அந்த இரு பெரியவர்களைப் பற்றியும் பேசத் தொடங்கியதாலே உடல் நிலையை மறந்து நான் பேசவேண்டுமென்று கருதியதைவிடக் கொஞ்சம் நீண்ட நேரம் பேசிவிட்டேன். கடந்த ஒரு திங்களாக எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதை நீங்கள் ஓரளவுக்கு அறிந்து கொண்டிருப்பீர்கள். இன்னமும் மருத்துவருடைய மேற்பார்வையிலே இருந்துகொண்டு தீரவேண்டிய நிலையில் இருக்கிறேன். நான் மறுபடியும் நல்ல முழு வலிவு பெற்ற பிறகு அமெரிக்காவுக்கும் மற்ற இடங்களுக்கும் போய் வந்ததைப்பற்றி என்னுடைய கருத்துக்களைப் பிறிதொரு கூட்டத்தில் சொல்லுவதற்கு நீங்கள் அனுமதியளிப்பீர்கள் என்று கருதி இந்த அளவிலே உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.